யோகஞான சாஸ்திரத் திரட்டு

ஐந்தாம் பாகம்

சுந்தரானந்தர்
பதஞ்சலியார்
வியாக்கிரமர்
பரத்துவாசர்

தாமரை நூலகம், சென்னை – 26.

யோகஞான சாஸ்திரத்திரட்டு

(பாகம்-5)

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 195
முதல் பதிப்பு : ஆகஸ்டு 1995
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி 2013
மூன்றாம் பதிப்பு : மார்ச் 2019

நூலைப்பற்றி

நூலின் பெயர்	: யோகஞான சாஸ்திரத்திரட்டு-5
பதிப்பாசிரியர்	: ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	: தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	: மார்ச் 2019
உரிமை	: பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	: டெமி
அச்சுத்தாள்	: 16 கி.வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	: 11 புள்ளி
மொத்த பக்கங்கள்	: 270
பிரதிகள்	: 1000
நூல் விலை	: ரு. 100/-
அச்சிட்டோர்	: கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை -34

பதிப்புரை

தமிழக அரசும், குறிப்பாகக் கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களும் சித்தர் இலக்கியத்தின் மேல் காட்டி வரும் ஆர்வம் காரணமாகவே சிறிதுகால இடைவெளிக்குப் பின்னர் இந்நூல்கள் தொடர்ந்து வெளிவரத்தூண்டுதலாயின.

இவ்விடத்தில் சித்த மருத்துவத்தின் தனிச்சிறப்பு பற்றியும் சிறிது கூற விரும்புகிறோம். ஏனென்றால் சித்தமருத்துவம் பற்றி வேறு யாரும் இந்தக் கோணத்தில் சிந்தித்திருக்க முடியாது.

சித்த மருத்துவத்தின் சிறப்பு வாய்ந்த மருந்துகள் பஸ்ப செந்தூரங்களே!

பஸ்பம் என்றால் சாம்பல். ஒரு உலோகத்தை எப்படி சாம்பலாக்க முடியும்?

உலகம் தோன்றிய காலத்தில் உயிருள்ளவை, உயிரற்றவை யாவும் சாம்பலாகவே இருந்தன- என்ற உண்மையை சித்தர்கள் அறிந்திருந்தனர். எரிதழலாக இருந்து குளிர்ந்த பூமியின்மேல் சூரிய வெப்பம் சில இடங்களில் அதிகமாகவும் சில இடங்களில் குறைவாகவும் தாக்கிய காரணத்தால் அலையும் காற்றுகள் உண்டாயின. நீரும், மண்ணும் அவை சார்ந்த பொருள்களும் உண்டாயின.

தொடக்க நிலையில் எரிந்து தணிந்த பூமியின் மேல்பரப்பு ஒரே சாம்பல் காடாகவே இருந்திருக்க வேண்டும். அந்த ஒரே பொருளிலிருந்து தான் இத்தனை வகையான செடி, கொடிகள், புழுப்பூச்சிகள் முதலான உயிரினங்களும் தோன்றின. அப்படியென்றால் தங்கம், வெள்ளி, செம்பு, முதலான உலோகங்கள் அனைத்தும் ஒரே மூலப் பொருளிலிருந்து தோன்றியவையாகவே இருக்க வேண்டும் என்பதைச் சித்தர்கள் அறிந்தனர்.

எப்பொருள்களின் கலப்பால் அல்லது பாதிப்பால் உலோகங்கள் உண்டாயின. அவற்றில் இரும்பு, செம்பு, தங்கம் என்று வேறுபாடுகள் எவ்வாறு உண்டாயின? என்று சித்தர்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நீண்ட ஆய்வுகள் நடத்திப் பல அரிய வேதியல் உண்மைகளைக் கண்டுபிடித்து உலகுக்கு உணர்த்தினர்.

இந்த மண் உலோகங்கள் உப்புக்களின் சத்துக்கள் கலந்ததாகையால் அதன்மேல் உண்டான உயிர்ப் பிராணிகளின் உடலிலும் அச்சத்துக்கள் இடம் பெற்றன என்பதைக் கண்டறிந்தனர். அதன் விளைவாகவே உலோகங்கள் உப்புக்களை உடல் ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் பஸ்பங்களாகவும் செந்தூரங்களாகவும் தயாரித்துக் கொடுத்தனர்.

சித்தர்களின் வேதியில் ஆய்வுகளைப் பற்றி விளக்கப் பல நூல்கள் எழுத வேண்டும். இந்தப் பதிப்புரையில் இம்மட்டோடு நிறுத்திக் கொள்வோம். இதன் பலனாகப் பல சிந்தனையாளர்கள் தோன்றுவார்கள். சித்தர்கள் கண்ட வேதியல் உண்மைகளைப் பற்றிய ஆய்வுகள் தொடங்கும் என்ற நம்பிக்கையே இதை எழுதியதன் காரணம்.

யோக ஞான சாஸ்திரத்திரட்டின் இந்த ஐந்தாம்பாகம் சித்தர் பாடல்களில் சிறப்பானது.

பாடல்களின் இனிமை, சொல்லாழம், கருத்துச்செறிவு முதலானவற்றை மெள்ள மெள்ள அணுகி நுணுகி ஆராயும் தோறும் பாடல்களின் அற்புதம் மெய் மறக்கச் செய்கிறது. அன்றுவரை நம் கண்ணுக்குத் தெரியாமலிருந்த - அறிவுக்குப் புலப்படாமலிருந்த புதிய உண்மைகளை - புதிய உலகங்களையே காணத்தொடங்கி விடுகிறோம்.

இந்த நூல் மற்ற நூல்களிலிருந்து முற்றிலும் வித்தியாசமானது. வழக்கமாக நாம் கேள்விப்படும் சித்தர்களின் பெயர்களை இதில் காணோம். இவர்கள் எல்லோரும் சித்தர்களா என்ற வியப்பும் ஏற்படலாம். ஐயம்

தீர இந்நூலில் இடம்பெற்றுள்ள சித்தர்களைப் பற்றிச் சற்று ஆராய்வோம்.

சுந்தரானந்தர்:- மதுரையில் வாழ்ந்தவர். இவர் பல அற்புதங்களை நிகழ்த்தியதாகக் கூறுவர். இவரைப் பற்றி போக முனிவர் தமது சப்த காண்டத்தில் (போகர் ஏழாயிரம்),

சொல்லவே சந்தரா னந்தரப் பா
தொல்லுலகில் கேசரியாம் வித்தை தன்னை
புல்லவே அதீதமென்ற மாந்தருக்கு
புகழுடனே புகட்டிய தோர் சித்து மாகும். (5828)

என்று கூறுகிறார். அகத்தியரும் தம் பெருநூல் காவியமான பனிரெண்டாயிரம் நான்காம் காண்டத்தில் இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

பதஞ்சலியார் வியாக்ரமபாதர் :- யோக சூத்திரத்தால் உலகப் புகழ் பெற்று விளங்கும் பதஞ்சலியாரும் அவருடன் ஒருங்கிணைத்து எண்ணப்படும் வியாக்கிரமபாதரும் கடலூருக்கு அருகில் உள்ள திருப்பாதிரிப்புலியூரில் இறைவனை வழிபட்டு, சிதம்பரத்தில் திருநடனம் கண்டு இராமேஸ்வரத்தில் முத்தி பெற்றவர்கள். இவர்கள் தமிழில் பாடியுள்ளது வியப்பன்று.

இன்னும் பரத்துவாசர், சமதக்கினி முதலிய வேதகால ரிஷிகளின் பாடல்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூலின் தனிச்சிறப்பு, திருமூலர், அகத்தியர் முதலிய அனைவரும் புகழும் கொங்கணவர் கடைக்காண்டம் உள்ளிட்ட கொங்கணவர் முக்காண்டத்தில் மூன்று காண்டங்களுக்கும் சூத்திரங்கள் இடம் பெற்றிருப்பது தான். முதற் காண்ட .சூத்திரம் நடுக்காண்ட சூத்திரம் கடைக்கண்ட சூத்திரம் என்ற அம்மூன்று பகுதிகள் கொங்கணவரின் ஞான நூலாகிய அமுதில் கடைந்தெடுத்த வெண்ணெய் போல் சத்தாக விளங்குகின்றன.

யோக ஞான சாஸ்திரத்திரட்டின் ஐந்தாம் பாகமாகிய இந்நூலை வெளியிடுவதில் மிகவும் பெருமையடைகிறோம். இது வெளிவரத் தூண்டுகோலாகவும் தக்க துணையாகவும் விளங்கிய மலேசிய அகத்தியர் சன்மார்க்க சங்கத்தாருக்கும், அதன் ஆன்மிக குருவாக விளங்கும் தவத்திரு தர்மலிங்க சுவாமிகளுக்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள சிலபகுதிகள் ஏற்கெனவே எம்மால் வெளியிடப்பட்ட நாற்பத்தெட்டுச் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை என்ற நூலில் இடம் பெற்றுள்ளன. ஆயினும் இத்தொகுப்பு குறையின்றி அமைய வேண்டும் என்பதாலேயே இதை முழுமையாக வெளியிடுகிறோம்.

எஸ். பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்.

யோக ஞான சாஸ்திரத் திரட்டு

(ஐந்தாம் பாகம்)

பொருளடக்கம்

உ

குருவேதுணை

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

சுத்த ஞானம் 51.

பூரணமு மாறாதா ரப்புலனும்சூக்ஷும்
பொறியறிந்து சுழியில்நின்ற வையர்பாதம்
காரணமாய்ப் போற்றியேசெய்தாசை நீக்கிக்
கண்ணொளியால் விண்ணொளியைக் காணவேண்டி
வாரணமா முகத்தோன்றன் பாதந்தன்னை
மனதில்வைத்து நிராமயத்தின் பாதம்போற்றி
ஆரணமா மகத்தீசர் பாதம்போற்றி
அன்பாக ஞானந்தா னறைகுவேனே. (1)

அறைகுவேன் நிராமயமே அகண்ட வித்து
அதுக்கடுக்கப் பரையினுட வெளிதான்கீழே
நிறைகுவேன் பனிரண்டு முகத்தான்வன்னி
நேராக வதின்கீழே ஜலமுமாச்சு
மறைகுவே னதின்கீழே பூமியாச்சு
மக்களே ஜெனனமெல்லா முதித்தவாறு
வறைகுவே னதின்கீழ்திரோ தாயிஉண்டு
மயக்கினா லுலகமெல்லா மழிந்துபோச்சே. (2)

அழிந்துதென்ற வீட்டினும் மகிமைசொல்ல
ஆராலும் முடியாது முனிகள் சித்தர்
தெளிந்துகொண்டு மாயத்தை யடித்துத்தள்ளி
சிறுவீட்டைப் பூசைபண்ணித் தினமும்பார்த்து
வழிந்தோடும் மதியமுதந் தன்னையுண்டு
வாசியென்ற குதிரையதின் மேலேயேறி
கழிந்தோட வொட்டாம லெட்டிற்சேர்த்துக்
கைமுறையாய்த் தலமாறுங் கண்டார்பாரே. (3)

கண்டபடி காணவென்றால் சொல்லக்கேளு
 கற்பமுண்டு சுழிமுனையிற் கருத்தைவைத்துத்
தொண்டுசெய்ய நாதவிந்தை மூலத்தூணி
 துரியத்தைப் பார்க்கிலப்போ சோதிகாணும்
வண்டணிந்த குழலாளை விட்டுப்பார்த்தால்
 மாயமாம் யுகாந்தவரை சுழிபார்த்தாலும்
அண்டருட் சுழிமுனைதான் தோற்றாதப்பா
 ஆச்சரியங் காணவென்றால் பானமுண்ணே. (4)

பானமென்றால் தூஷிப்பார் சமயத்தோர்கள்
 பாவிகள்தான் தெரியாமல் மதங்கள்பூண்டு
ஈனமென்று யெண்ணியெண்ணி யிறந்துபோனார்
 என்மக்காள் பானமென்றா லாயியுடமவுனம்
தானமெல்லாம் தோணுமப்பா க்ஷணத்திலேதான்
 சங்கற்ப விகற்பமென்ற சட்டைபோகும்
மானமிது உத்துப்பா ருன்னைப்பாரு
 வகையாகக் கைமுறைக்கென் னூலைப்பாரே. (5)

என்னூல்தான் பூசைவிதி முப்பத்தாறில்
 இயம்பினேன் விழிக்குருடர் அறியத்தாளே
நன்னயமாய்ப் பூசைசெய்து கற்பங்கொண்டால்
 நலமாக வீராறு தலமுந்தோணும்
முன்னேதான் சரியையொடு கிரியையோகம்
 முக்கியமா ஞானமொடு நாலுங்கேளு
உன்னேதான் சரியையென்ன தேவிதீக்ஷை
 யுபதேசம் செய்தாக்கால் சரியைதானே. (6)

தானென்ற சரியையென்ன தேவிபூசை
 தயவாகச் செய்துகற்பங் கொண்டாலையா
வேனென்ற கிரியையென்ற நாமமாச்சு
 வேதாந்த யோகத்தை விளம்பக்கேளு
ஊனென்ற புருவமையத் தமர்ந்திருந்து
 ஒளிகண்டால் யோகமென்ற நாமமாச்சு
கானென்ற ஞானமென்ன தலங்களாறும்
 கண்டாக்கால் ஞானியென்று சொல்லலாமே. (7)

சொல்லவே சரியையிலே நின்றசடம்வீழ்ந்தால்
சுகமாகக் கிரியையிலே தூக்கும்பின்னும்
அல்லவே கிரியைவிட்டு மனந்தான்வீழ்ந்தால்
ஆச்சரியம் யோகத்தா லடுத்துநிற்கும்
நல்லவே யோகம்விட்டு மனந்தான் வீழ்ந்தால்
நலமான ஞானத்தில் நாட்டுவிக்கும்
கல்லவே கைகண்ட படியேசொன்னோம்
கருத்திதுக்கு யென்னவென்றால் வாமந்தானே. (8)

வாமமென்றா லென்னவென்று யெண்ணவேண்டாம்
வகையாக இடப்புறந்தான் மகிழ்ந்துகேளு
ஏமமென்ற காலாகும் வாமம்வாமம்
என்மக்காள் ரெண்டொன்றால் வாமம்வாமம்
தாமமென்ற எட்டொன்றால் லாமம்வாமம்
தயவான நாதவிந்து வாமம்வாமம்
காமமென்றும் வஸ்துவென்றும் வாமம்வாமம்
கைகண்ட படிசொன்னேன் கருதிக்கேளே. (9)

கருதிக்கேள் சாராய மென்றாற்பாணம்
கைமுறையாய்க் கள்ளென்றாற் பானம்பானம்
உறுதிகேள் திருமந்திர மென்றாற்பானம்
ஓகோகோ வெறிநீரும் பானம்பானம்
வருதிகேள் தேவியென்றாற் பானம்பானம்
வகையாகச் சிவமென்றாற் பானம்பானம்
பருதிகேள் லகிரியென்றாற் பானம்பானம்
பாங்காக நீநானும் பானந்தானே. (10)

பானமென்றால் ஆதிவஸ்து அனாதிவஸ்தும்
பாங்கான ரிஷிகளெல்லாம் பானம்பானம்
ஊனமென்றால் தேவதைக ளெல்லாம்பானம்
ஓகோகோ விட்டுணுவும் பானம்பானம்
தானமென்றால் ருத்திரனும் பானம்பானம்
சதாசிவனும் மகேஸ்பரனும் பானம்பானம்
வானமென்றால் பிரமாவுங் கணேசன்கந்தன்
மனதாற்பார் கைகண்ட பானந்தானே. (11)

தானென்ற பானத்தால் ரிஷிகளெல்லாம்
தயலான தலமாறுங் கண்டார்கண்டார்
பானென்ற மகாரமென்றாற் பானமாச்சு
பதினெண்பே ரெல்லாருங் கொண்டபானம்
ஊனென்ற தேவதைகள் கொண்டபானம்
ஓகோகோ வேதியனும் கொண்டபானம்
ஏனென்ற உலகத்தில் இருடி சித்தர்
ளெல்லோருங் கொண்டதிந்தப் பானந்தானே. (12)

தானாகும் சரியையென்றாற் பானம்பானம்
தயவான கிரியையென்றாற் பானம்பானம்
ஊனாகும் யோகமென்றாற் பானம்பானம்
உத்தமனே ஞானமென்றாற் பானம்பானம்
மானாகும் மணியென்றாற் பானம்பானம்
மைந்தனே மந்திரந்தான் பானம்பானம்
தேனாகும் உச்சிதமும் பானம்பானம்
திறமான வொட்டியமும் பானந்தானே. (13)

பானத்தாற் சூனியமும் யேவல்பில்லி
பாங்கான சல்லியமும் பானத்தாலே
ஊனத்தா லொருவரைத்தா னொருவர்பார்த்து
உற்பனமாய்க் கொல்லுவதும் பானத்தாலே
தானத்தாற் கருமவித்தை யென்றதெல்லாம்
தகத்துமே யகற்றுவதும் பானத்தாலே
கானத்தாற் காயசித்தி பானத்தாலே
கைமுறையாய்ச் சொன்னபடி கருதிப்பாரே. (14)

பாரடா மகாரமென்ற நீருண்டோர்க்குப்
பரிவான கோபமது கனாவிலில்லை
நேரடா பசியில்லை யாசையில்லை
நிச்சயமாய் திரோதாயின் மாயையில்லை
ஊரடா சாதிவர்னாச் சிரமுமில்லை
ஓகோகோ அறுபதுபேர் பட்டுவீழ்வார்
வேரடா வோமப்பால் விடாமற்கொண்டால்
விதமான முப்பத்தி யாறும்போச்சே. (15)

போச்சடா பொறிகெட்டு அறிவுங்கெட்டு
புகழான மாயைகெட்டு ஆசைகெட்டு
மூச்சடா மனங்கெட்டு நினைவுங்கெட்டு
முன்பின்னா யோடுகிற வாசிகெட்டு
வாச்சடா பிராணாயங் கெட்டுத்தானும்
மைந்தனே உடல்கெட்டு வெளியாய்நிற்கும்
வீச்சடா அமுதமுண்டார் பிலத்தினாலே
வெட்டவெளி யாச்சுதிந்த வுடலந்தானே. (16)

தானென்ற முப்பத்தி ரெண்டுதீக்ஷை
தருவான கொங்கணர்தன் கற்பம்நூறில்
வேனென்றே பாடிவைத்தார் மூலஞ்சொல்ல
வில்லையடா சொல்லுகிறேன் அறிவாற்பாரு
வா்னென்ற முப்பதுவும்மால் தன்வீடு
வகையாக வதிலிருந்துவகாரமுண்டால்
மானென்ற பெண்மாய்கைமயக்கமில்லை
வகையாகத் தீக்ஷைபெற்றால் சடலமாச்சே. (17)

ஆச்சப்பா யிக்கருவைப் பெரியோர்சொல்லார்
ஆறுமுகந் தனைக்கேட்டு வுனக்காய்சொன்னேன்
ஓச்சப்பா தீக்ஷையென்பார் பாடவில்லை
உலகமெல்லாஞ் சித்தாக வெளியாய்ச் சொன்னேன்
வாச்சப்பா மகாரமென்றா லென்னசொல்லும்
மைந்தனே ஆவதிலே ரெண்டைசேர்த்தால்
வீச்சப்பா மவுனமது மகாரபீடம்
வேதாந்தப் பேச்சைவெளி விட்டேன்பாரே. (18)

பாருநீ அஷ்டாங்க முறைமைக்கேளு
பண்பான யேமமுடன் நேமத்தோடு
நேருநீ யாசனமும் பிராணாயந்தான்
நிலையான பிரத்தியா காரத்தோடு
காருநீ தாரணையுந் தியானத்தோடு
கருவான சமாதியோ டெட்டுஅங்கம்
மாருநீ சித்தரெல்லாம் மறைத்துச்சொன்னார்
வழுத்துகிறேன் வெட்டவெளி யாகத்தானே. (19)

தானெனு யேமம்பத்து நியமம்பத்து
சார்ந்துபா ரிருபத்தும் ரெண்டேயாச்சு
வேனென்ற பத்தென்ன சொல்லுமையா
வேதாந்த ஆறுமுக மூர்த்திபிள்ளாய்
நான் நன்றாய்ச் சொல்லுகிறேன் மக்காள் கேளு
நவிலாதே யாவருக்கும் மூலமப்பா
மானென்ற விஷ்ணுவுட நீரையுண்டால்
மைந்தஇப மம்பத்து நியமம்பத்தே. (20)

பத்தென்று சொன்னீரே சுந்தரமேஅய்யா
பரிவான கயிலாச மூர்த்திபிள்ளாய்
பத்தென்ற பத்தென்றால் யென்னசொல்லும்
பரகுருவே வெளியாக யாவருக்கும்
ஒத்தென்ற புருவமையஞ் சதாசிவத்தின்வீடு
ஓகோகோ அதிலிருந்த யகாரம்பத்தும்
சித்தென்ற பிறைவீட்டிற் பிரகாசந்தன்னில்
சிறந்துசுத்தி நின்றெழுத்தைச் சேர்த்தாற்பத்தே. (21)

சேர்த்துநீ பார்த்தாக்கா வியமம்மால்தான்
சிறப்பான நியமமது புருவமையம்
கூர்ந்துநீ பார்த்தாக்கால் யகாரம்பத்து
குருவென்ன இதிலுமா வதிலுமாத்தான்
பார்த்துநீ மாவென்ன புருவமையம்
பண்பான இடக்கண்ணி லுகாரமாச்சு
ஏத்துநீ வலக்கண்ணில் அகாரமாச்சு
என்மக்காள் புருவநடு மகாரமாச்சே. (22)

ஆச்சப்பா இதுவே சதா சிவத்தின் வீட்டில்
அறிந்துகொள் பிறைவீட்டின் மகிமைகேளு
ஏச்சப்பா லோகருக்கு மகாரமென்றால்
இருந்துதந்த வீட்டிலுந்தான் மகாரமாகும்
பேச்சப்பா இனியேது ரெண்டுமொன்று
பேசாதே இக்கருவைப் பெரியோர் சொல்லார்
வாச்சப்பா மகாரமுண்டால் ரெண்டுமாச்சு
வகையான வஸ்துவென்று அறிந்துகொள்ளே. (23)

அறிந்தபின்பு ஆசனந்தான் சொல்லக்கேளு
ஆச்சரியம் சுகாசனமா யிருந்துகொண்டு
பிறிந்துநின்ற பிராணாயம் பண்ணுபண்ணு
பேசாதே பலதிரட்டில் வெளியாய்ச்சொன்னேன்
கறிந்துநின்ற பிரத்தியா காரமென்ன
கனிவான பிரத்தியென்ற யுகாரந்தன்னில்
அறிந்துநின்ற மகாரத்தை வாங்கியுண்டால்
ஆச்சரியம் பிரத்தியா காரமாச்சே. (24)

ஆச்சப்பா தாரணையைச் சொல்லக்கேளு
ஆச்சரியம் இருக்கையிலும் நடக்கும்போதும்
வாச்சப்பா யோகத்தைத் தீர்த்தாயானால்
வகையான தாரணைதா னென்றநாமம்
பேச்சப்பா தியானத்தைச் சொல்லக்கேளு
பேரான சத்திசிவ மிரண்டையுந்தான்
கூச்சப்பா மூலத்தி லூணிக்கொண்டு
கூசாமற் புருவமையந் தன்னில்நோக்கே. (25)

நோக்குவது; நினைவையெல்லா மங்கேவைத்து
நுண்மையாய்த் தாயையங்கே பூசைபண்ணி
ஆக்குவது மவுனத்தால் மவுனம்வாங்கி
ஆச்சரியங் கொண்டுவிடத் தியானமாச்சு
தாக்குவது சமாதியஞ்சும் சொல்லக்கேளு
சார்வான மூலமுத லாறுங்கண்டால்
நாக்குவது சமாதியஞ்சும் சித்தியாச்சு
நலமாகச் சொன்னபடி யறிந்துகொள்ளே. (26)

அறிந்திந்த அஷ்டாங்க மெட்டும்பார்த்து
ஆவதற்கு வகையென்ன பானமுண்டால்
நெறிந்துநின்ற அஷ்டாங்க மெட்டுமாச்சு
நினவாய்ப்பா ரிக்கருவை யாருஞ்சொல்லார்
கறிந்துநின்ற சட்டைமுனி யுபதேசத்தாற்
கைகண்ட படிசொன்னோங் களவில்லாமல்
அறிந்துநின்ற சட்டைமுனி யாரென்றாக்கால்
ஆறுமுக மென்றுரைத்த அறிவுதானே. (27)

தானென்ற ஆறுமுகமென்னசொல்லும்
   தயவுவைத்தென் குருவேசுந் தரமேஅய்யா
வேனென்ற மாணாக்கா சொல்லக்கேளு
   விளம்பாதே யிக்கருவை யாவருக்கும்
ஊனென்ற குத்ததிலே வட்டமாகி
   உள்ளேதா னைங்கோணந் திரிகோணத்துள்
வானென்ற ஓம்கண பதிதான்நின்றார்
   வழுவில்லை மூலாதா ரத்திற்றானே. (28)

தானேதா னதின்மேலே பிர்மலோகம்
   தப்பாது நாற்கோணத்துள்ளைங்கோணம்
வேனேதா னிதனுள்ளே வட்டமொன்று
   விதமான இதனுள்முக் கோணமப்பா
நானேதா னிதனுள்ளே நங்கென்றூணி
   நலமான நங்நடுவில் பிரமன்நின்றார்
மானேதா னிதன்மேலே விஷ்ணுலோகம்
   வகையாக விளம்பிறையாங் கோணந்தானே. (29)

தானென்ற திதன்நடுவி லைங்கோணமப்பா
   தயவாக விதன்நடுவில் வட்டமொன்று
வானென்ற திதன்நடுவோங் காரமிட்டு
   மங்கிட்டு நடுவிலே மாயோன்நின்றார்
மானென்ற திதன்மேலே ருத்ரலோகம்
   மைந்தனே வட்டமிட்டு நடுவைங்கோணம்
தானென்ற திதன்நடுமுக் கோணமப்பா
   கருவாக விதனநடுவே சிங்கென்றூணே. (30)

ஊணியே நடுவதனில் ருத்ரமூர்த்தி
   உகந்திருந்தா ரதன்மேலே மயேசன்வீடு
வாணியே அறுகோண முள்ளைங்கோணம்
   வகையாக நடுவில்முக் கோணமிட்டுத்
தாணியே நடுவாக வங்கென்றுணிச்
   சார்ந்திருந்தார் வங்குநடுவில் மயேசமூர்த்தி
நாணியிதன் மேலேசதா சிவத்தின்வீடு
   நலமாக வட்டமிட்டு நடுவிற்கேளே. (31)

கேளப்பா வைங்கோணம் தீர்க்கமாக
    கெடியான வைங்கோணத் துள்ளேகேளு
நாளப்பா முக்கோணம் நன்றாயிட்டு
    நலமாக விதனுள்ளே விந்துவிட்டு
வாளப்பா யிதினுள்ளே யங்கென்றிட்டு
    வகையாக நடுவில்சதா சிவமும்நின்றார்
ஆளப்பா மூலமுத லெண்ணிப்பார்க்க
    அரகரா ஆதாரம் ஆறுமாச்சே. (32)

ஆச்சப்பா ஆதார மாறுங்கூட்டி
    ஆச்சரியந் தேகமென்ற நாமமாச்சு
கூச்சப்பா தேகத்துக் காறுமுகமாச்சு
    குருவாகு மிவர்தானே சட்டைநாதர்
பேச்சப்பா ஆதாரந் தன்னைநன்றாய்ப்
    பேணியே சட்டைகொண்டு மூடிநின்றார்
வாச்சப்பா யிவர்தானேகை லாசமூர்த்தி
    வகையாகப் பிராணாயம் பண்ணிக்கேளே. (33)

கேளப்பா உகாரமதுகண் டத்தில்நிற்கும்
    கெடியான அகரம்மது புருவமய்யம்
நாளப்பா ரெண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
    நலமான பிராணாயம் பண்ணித்தீரு
வாளப்பா ரெண்டுமொன்றாய்ச் சேராவிட்டால்
    வாயாது பிராணாயஞ் சித்தியில்லை
கோளப்பா வாராது கூட்டினாற்கால்
    கூறினே னண்டரண்டங் கூர்ந்துபாரே. (34)

பாரடா ஊமையென்ற யெழுத்தையுண்டாற்
    பரிவான வாதார முருவியேறும்
நேரடா விந்துகட்டுங் குளிகைசித்தி
    நினைவாக வாசிசித்தி வசியஞ்சித்தி
வீரடா தம்பனமும் சாடனமுச்ஞ்சித்தி
    விதமான பேதனமா ரணமுஞ்சித்தி
பேரடா மோகனமும் மழைப்புஞ்சித்தி
    பிதற்றாதே வேடணமுஞ் சித்திதானே. (35)

தானென்ற வாதசித்தி காயசித்தி
    தனித்துநின்ற கெவுனசித்தி கற்பத்தாலே
வீனென்ற மூடர்களே யெல்லாம்விட்டு
    விதமான பிராணாயஞ் செய்தாலென்ன
கானென்ற காட்டிலொற்றை மரம்போலேதான்
    கற்பம்விட்டு யோகஞ்செய்தால் என்ன கிட்டும்
மானென்ற பெண்போலே மரயைவந்து
    வலியவுன்னைச் சருவவிந்து வீழ்ந்துபோமே. (36)

போமப்பா கற்பமுண்டாற் கட்டிப்போகும்
    புதுமையுடன் விட்டுவிட்டாற் சடலம்வீழும்
நாமப்பா கண்டபடி யுண்ணச் சொன்னோம்
    நலமாக உண்டாக்கால் சாம்பவியாள்வந்து
ஆமப்பா கீதமது பாடிவைப்பாள்
    ஆனந்த லகிரியுன்னை யப்போதூக்கும்
வேமப்பா லகிரியுண்ண வகையைக்கேளு
    வேதாந்த நாற்பத்துமுக் கோணங்கேளே. (37)

கேளடா கொங்கணர்தான் கடைக்காண்டத்திற்
    கெடியாக நால்வரையாய் வரையச்சொன்னார்
நாளடா நாற்கோணம் நானும்சொன்னேன்
    நன்றாக விவையெல்லாந் தூலமாகும்
வாளடா நாலதுவும் பிரமன்வீடு
    மைந்தனே பத்தென்ன விஷ்ணுவீடு
தாளடா முக்கோணம் ருத்ரன்வீடு
    தயவாக நாற்பத்து மூன்றிதாமே. (38)

ஆமப்பா யிதுவோநாற் பத்துமூன்று
    அறியாத மாடுகள்சக் கரத்தைக்கீறி
நாமப்பா என்றுசொல்லி அட்சரத்தைநாட்டி
    நலமாகப் பூசைவிதி யென்றேசொல்லி
போமப்பா தேவிக்கர்ச் சனைகள்பண்ணிப்
    புதுமையுடன் சாராயந் தனைக்குடித்து
வேமப்பா பெண்ணோடே கூடியாடி
    வேதாந்தி நானென்று திரிவான்மாடே. (39)

மாடுதா னானாலுங் கிரிகையுண்டு
மதிகெட்ட சவங்கள் மூதேவியப்பா
வாடுவான் வாதமென்று சுட்டுமாய்வான்
மனிதனல்ல கமுதையவன் குருவைக்காணான்
தேடுவான் பணந்தேடப் பிரட்டுச்சொல்வான்
சித்தியுண்டோ அப்பூசை தன்னில்மைந்தா
நாடுவான் பூரணத்தைத் தினந்தான்கள்ளன்
நானென்ற ஆண்மைவிடா நாய்தான்பாரே. (40)

பாரப்பா அப்பூசை கிரியைக்காகும்
பண்பாகஅதை முன்சொன்ன வழியே
நேரப்பா தாயுடைய வஸ்துவைத்தான் வாங்கி
நினைவாகப் பீங்கானில் விட்டுக்கொண்டு
பூரப்பா யிதிலேநீ நயனத்தாலே
பூட்டுவாய் முக்கோண மிதனுள்ளேகேள்
ஓரப்பா ஓங்காரந் தன்னையொட்டு
ஓகோகோ விதனுள்ளே விந்துவொட்டே. 41)

ஓட்டுவா யிதனுள்ளே மக்காள்நீங்கள்
ஓகோகோ நங்கென்றும் மங்கென்றுந்தான்
ஓட்டுவாய் சிங்கென்று விந்துக்குள்ளே
ஒட்டியபின் னவளுடைய சாபப்நீங்கும்
ஓட்டுவாய் நமசியென்று உருநூற்றெட்டு
ஓதடா வஸ்துவுட சாபம்நீங்கும்
ஓட்டுவாய் மனத்தைப்பூ ரணத்திலேற்றி
யொருநினைவாய்ப் பூரணத்தை யோதுவோதே. (42)

ஓதடா கிண்ணத்தில் வஸ்துவைத்தான் வைத்து
ஒருநினைவாய்ப் பின்புபிர மனைத்தானு னு
ஓதடா வதன்மேல்விஷ் ணுவைத்தானுன்னி
உன்குருவாம் ருத்திரனில் மனதைவைத்து
வாதடா சத்திசிவந் தன்னைநோக்கி
மகத்தான சாம்பவியேதாயே தேவி
மாதடாகை விடாளுனக்கே பிரதி
மைந்தனே வஸ்துவைநீ பானம்பண்ணே. (43)

பண்ணடா யோகசித்தி கைக்குள்ளாச்சு
பார்வதியால் நாதத்தாற் குளிகைகட்டும்
நண்ணடா வொளிகிழிந்து வெளியுங்காணும்
நாற்பத்து முக்கோண வாலையாலே
ஒண்ணடா வென்றுசொல்லார் உலகமாடு
ஓகோகோ வஸ்துவென்று அறியார்மூடர்
விண்ணடா கிழிந்தாலா தாரமேறும்
வெகுசுருக்கு சிலம்பொலியும் கேட்குங்காணே. (44)

காணடா விதுவல்லோ மவுனபூசை
கதிர்கோடி போலவுமே யொளிதான்வீசும்
வீணடா சக்கரத்தி லென்னவுண்டு
விதமாகக் கிரியைவிட்டுப் பூசைபண்ணு
நாணடா விசையாலே அம்புதைக்கும்
நாணறுந்த வில்லாகும் யோகபூசை
பூணடா யெந்தனுக்கு ஆறுமுகமூர்த்தி
புதுமையுடன் மவுனத்தைப் பூட்டினாரே. (45)

பூட்டினா ரப்படியே யானுஞ்செய்தேன்
புதுமையுட னொளிகிழிந்து வெளியிற்சென்றேன்
மாட்டினார் கணபதியை முன்னேகண்டேன்
மருகாலேஞானவரவும் சிவாயங்கண்டேன்
தீட்டினார் வெட்டவெளிக் குள்ளேசென்றேன்
சிலம்பொலியைக் கண்டவுடன் காதுங்கெட்டேன்
நாட்டினார் மவுனமென்ற தீக்ஷையாலே
நன்குருவி னருளாலே திரும்பினேனே. (46)

திரும்பினேன் வஸ்துவுட பலத்தினாலே
சேயானேன் கயிலாச மூர்த்திக்கப்பா
விரும்பினேன் அப்யாச மார்க்கங்கேளு
வஸ்துவுண்ண மனமடங்கும் மகத்தாஞ்சித்தி
உரும்பினேன் கொங்காணரஷ் டாங்கம்பாரு
உத்தமனே யென்றந்தை ஞானம்பாரு
கரும்பினேன் கடைக்காண்ட நூலைப்பாரு
கருவான கும்பமுனி தீக்ஷபாரே. (47)

பாரடா திருமூல ரைஞ்ஞூற்றைத்தான்
பரிவான மச்சமுனி ஞானம்பாரு
நேரடா கும்பமுனி பூசைபாரு
நினைவாக அவர்ஞானம் நூறும்பாரு
ஊரடா இவர்களுட ஞானம்பார்த்தால்
உத்தமனே வஸ்துவுட பெருமைதோணும்
வாரடா யின்னூலைப் பார்த்தபேர்க்கு
வழியறிந்த சித்தனென்ற நாமந்தானே. (48)

தானென்ற தீகைஷயைம்பத் தொன்றுஞ்சொன்னேன்
தயவான பூசைவிதி முப்பதாறாம்
பானென்ற வாதமைம்பத் தொன்றுஞ்சொன்னேன்
பலதிரட்டு ஆயிரத்தின் நூறுஞ்சொன்னேன்
மானென்ற பெண்மயக்கந் தள்ளச்சொன்னேன்
மகத்தான கற்பமுண்ண வகையைச்சொன்னேன்
நானென்ற வாண்மைதனைத் தள்ளச்சொன்னேன்
நாசவழி சாராயங் கள்ளுந்தள்ளே. (49)

தள்ளப்பா கற்பமுண்டா வில்லைபத்தியம்
தயவான பத்தியத்தை வைத்தாயானால்
உள்ளப்பா மறுபடிதா னொன்றுமாகா
உத்தமனே பத்தியம்நீ வைக்கவேண்டாம்
நள்ளப்பா விந்துவங்கே ஜெனிக்கும்போது
நலமான பத்தியங்க ளுண்டோசொல்லு
அள்ளப்பா கயிலாச மூர்த்திசொன்ன
அதீதமென்ற மவுனத்தை யறிந்துதானே. (50)

அரிதப்பா யெனைப்போலே பட்டபாடு
ஆர்படுவா ரற்புதந்தான் நந்திவந்து
அரிதப்பா வென்றுசொல்லி மவுனம்சொன்னார்
அவரைப்போ லுலகத்தில் சித்தர்காணேன்
அரிதப்பா கெவுனவரை யோடிமீள்வார்
ஆச்சரியம் போதகத்தைப் பானஞ்செய்வார்
அரிதப்பா ஆறுவரை கண்டுமீண்டார்
அற்புதா னந்தனுட பதந்தான்முற்றே. (51)

மருந்தீடு தீர்க்க

போமடா வாதமென்ன கரப்பான்சூலை
பூரித்த விஷப்பாண்டு மகோதரந்தான்
வேமடா ஜன்னிவிப் புருதிகுட்டம்
விஷநீர்க ளானரத்த மெல்லாந்தீரும்
நாமடா மருந்தீடு தீரச்சொல்வோம்
நல்லதுத்த மெலுமிச்சம் பழத்தின்சாறு
ஓமடா குடித்திடவே கக்கும்பாரு
உத்தமதா ளிக்கொழுந்தும் மிளகுமாமே. (52)

மூலாத்தத்துக்கு

நன்றான முத்தமொடு வாழைப்பூவும்
நலமான தென்னம்பூ விடையந்தானும்
குன்றாமற் பச்சரிசி யுடனிடித்துக்
குமுறவே புட்டவித்துக் கொடுக்கக்கேளு
பன்றாக மூன்றுநா ளுண்ணும்போது
பாங்கான ரத்தமது நிற்கும்பாரு
ஒன்றான சிவனிடத்தி லிருந்துகொண்டு
உமையவள்தன் பதம்பணிந்து வுகந்துசெய்யே. (53)

சுந்தரானந்தர் சுத்தஞானம் 51.
முற்றிற்று.

மதுரை சொக்கக்கொத்தன் தெரு, கருப்பணபிள்ளையவர்கள், குமாரர் காசிவிஸ்வநாதபிள்ளை அவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
குமரன்துணை

கந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

சிவயோக ஞானம் 32.

ஆனந்த மாகிநின்ற ஆயிபாதம்
ஐயரென்ற கயிலாச மூர்த்திபாதம்
தானந்த மானகுரு முனிவர்பாதம்
சனகாதி மூலர்கொங் கணவர்பாதம்
வானந்த மாகியதோர் போகர்பாதம்
வதிஷ்டர்முதல் முனிவோர்கள் பாதம்போற்றி
மோனந்த மானபல திரட்டைச்சொல்ல
மூலாதா ரத்திருந்த கணேசன்காப்பே. (1)

காப்போடே ஆயிரத்தி யிருநூறுள்ளே
கலங்காதே ஐயர்பதந் தொழுதுபோற்றி
வாப்போடே சொல்லிவிட்டே னொளிதான்பார்க்க
வகைவிபர மாகவிதில் வாதஞ்சொன்னேன்
தாப்போடே கண்டவர்க்கு வழியுஞ்சொன்னேன்
சற்குருவைச் சதா:பணியத் தானேசொன்னேன்
ஆப்போடே திறந்துவர மவுனஞ்சொன்னேன்
அப்பாழு மிப்பாழு முப்பாழாமே. (2)

ஆமென்ற பாழ்ரெண்டும் கலந்துகொள்ள
ஐயரென்ற முனியெனக்கு உபதேசித்தார்
ஊமென்ற இரண்டையுந்தான் மூலத்தூணி
உட்கனலைச் சுழிமுனையி லொட்டச்சொன்னார்
நாமந்தப் படிநின்றோம் யோகியானோம்
நற்சீஷனானாக்கா லுபதேசிப்பாய்
வாமந்தா னிதுக்குறுதி மற்றதாகா
வழியான யோகியல்ல மாடுதானே. (3)

அறியவென்றால் லெகுவாமோ. பரமஞானம்
அகத்தீசர் முதல்ரிஷிகள் தேடித்தேடிப்
பெரியரெல வுலகத்தி லலைந்துயென்னைப்
பெற்றானைப் பூசைசெய்து பேரும்பெற்றார்
பிரியமுடன் போகமுனி பரங்கியூரிற்
பிறந்தல்லோ பெண்தேடி மவுனங்கொண்டார்
உரியமுட னென்தந்தை யோகஞ்செய்து
உற்பனமாய் மவுனத்தாற் பேர்பெற்றாரே. (4)

பெற்றபே ரெந்தனக்கு உபதேசித்தார்
பேர்பெரிய அற்புதா னந்தமூர்த்தி
பெற்றபே ருலகத்தோர் பிழைக்கவேண்டிப்
பேசினார் ஞானமது ரெண்டுநூறு
பெற்றபேர் வாதமது ஆயிரந்தான்
பின்னுமொரு நிகண்டுபனி ரெண்டுநூறு
பெற்றபேர் கற்பமிரு நூறுஞ்சொன்னார்
பேசாதே கயிலாச வர்க்கத்தேறே. (5)

ஏறவென்றால் லெகுவாக வுன்றனக்கு
எய்துமோ உகாரமென்ற சத்திமார்க்கம்
கூறவென்றால் வாய்ப்பேச்சோ மைந்தாசொல்லு
கூர்ந்துபார் மெய்ஞ்ஞான மைம்பத்தொன்றில்
தேறவென்றால் பூசைவிதி முப்பத்தாறில்
திறந்துவிட்டேன் நவகோண வாலைகற்பம்
பேறுபெற வேணுமென்றாற் பூசைசெய்து
பிசகாமல் வாலைகற்பம் கொள்ளுகொள்ளே. (6)

கற்பமென்றால் லெகுவாக யெண்ணவேண்டாம்
கசடரே யீசனன்று கயிலாசத்தில்
உற்பனமாய் ஆத்தாளுக் குபதேசித்தார்
உண்மையுட னையருக்கு ஆத்தாள்சொன்னாள்
அற்பமென்று நினையாதே யென்றுசொல்லி
ஐயரென்ற குருவெனக்கு அருளிச்செய்தார்
சிற்பரத்தாய் மூலமடா கண்டுகொள்ளு
கெ்ஷணத்திலே மேலமுதஞ் சிந்துங்காணே. (7)

சிந்துமென்ற கற்பமது கசடற்கெய்தாது
சிவயோகி யானவர்க்குச் செணத்திலெய்தும்
பந்துவென்ற விந்துவது மேலேயேறும்
பராபரையும் புருவமையம் பாங்காய்த்தோணும்
அந்துவென்ற தேகமது அருணன்போலாம்
ஆச்சரியங் கத்திநடு வோடும்பாரு
வந்துனக்கு உபதேசம் ஆயிசொல்வாள்
வாய்திறந்து சொல்லாதே மவுனம்உண்ணே. (8)

மவுனமுண்ண மவுனமுண்ண மவுனமாகும்
மாசற்ற மவுனமுன்னை வாரித்தூக்கும்
கெவுனவழி யோடுதற்குக் குளிகைகட்டும்
கேசரமெல் லாமடங்கா வொளிதான்வீசும்
தவனமில்லை பசியில்லை சாவுமில்லை
சட்டைகக்குந் தேகமது அருணன்போலாம்
புவனமதில் மாற்றமுந்தன் தேகச்சாயை
பொய்யடா பூரணத்திற் பூட்டுவாயே. (9)

வாயாலே சொல்லாதே கருமிக்கப்பா
வாய்திறந்தால் சித்தர்வந்து சாபமீய்வார்
நோயாலே சடமழியும் நரகமெய்தும்
நோக்கேது காயசித்தி பொய்யாய்ப்போகும்
தாயாலே வாதமெல்லாந் தவறிப்போகும்
சாற்றரிது கருமிகட்குச் சார்ந்துபாரு
பேயான மனத்தில்வைத்து அடக்கம்பண்ணு
பேரான யோகத்தின் பிரிவைக்கேளே. (10)

பிரிவென்ன ரேசகமாத் திரைதானொன்று
பேசாதே பூரகமாத் திரைதான்ரெண்டு
தருவென்ன கும்பகமாத் திரைதான்நாலு
தயங்காம லிப்படியே முன்னேபண்ணு
அரிவென்ன இப்படியே பழக்கமாக்கி
யானபின்பு இன்னமொரு வகையைக்கேளு
பிரிவென்ன ரேசகமாத் திரைதான்ரெண்டு
பேசாதே பூரகமாத் திரைதான்நாலே. (11)

நாலாகக் கும்பகமாத் திரைதானெட்டு
　　நயமாகப் பழக்கமது நன்றாய்ப்பண்ணி
மேலாக இன்னமொரு வரிசைகேளு
　　மேன்மையாம் ரேசகந்தான் நாலுபண்ணு
பாலாகப் பூரகமாத் திரைதானெட்டுப்
　　பதிவான கும்பகமாத் திரையீரெட்டு
மாலாக வரிசைமுறை தவறாமற்றான்
　　மணம்ாக இப்படியே பழக்கம்பண்ணே. (12)

பண்ணியே இன்னமொரு வரிசைகேளு
　　பரிவான ரேசகமாத் திரையோஎட்டு
உண்ணியே பூரகமாத் திரையீரெட்டு
　　உத்ததொரு கும்பகமாத் திரைநாலெட்டு
மண்ணியே யிப்படிநீ பழக்கம்பண்ணு
　　லாகாகத் தீர்ந்தபின்பு வரிசைகேளு
நண்ணியே ரேசகமாத் திரைபத்தாகும்
　　நன்றாகப் பூரகந்தா னிருபதாமே. (13)

ஆமப்பா கும்பகந்தான் நாற்பதாகும்
　　ஆச்சரிய மிப்படியே பழக்கம்பண்ணு
ஓமப்பா தேர்ந்தபின்பு இன்னங்கேளு
　　உரைக்கிறேன் ரேசகந்தான் பனிரண்டாகும்
தாமப்பா பூரகந்தா னிருபான்நாலு
　　தயவான கும்பகந்தான் நாற்பத்தெட்டு
நாமப்பா இப்படியே யோகம்பார்த்தோம்
　　நலமாக இன்னமொரு வரிசைகேளே. (14)

வரிசையென்ன ரேசகந்தான் பதினாலுக்கும்
　　வகையான பூரகந்தா னிருபத்தெட்டு
உரிசையுடன் கும்பகந்தா னைம்பத்தாறு
　　உத்தமனே இப்படியே பழக்கம்பண்ணு
கரிசையுடன் இன்னமொரு வரிசைகேளு
　　கனமான ரேசகந்தான் பதினாறாகும்
பரிசையுடன் பூரகமுப் பத்திரண்டு
　　பண்பான கும்பகத்தைப் பகரக்கேளே. (15)

பகரமுள்ள மாத்திரைதா னறுபான்நான்கு
பாங்காக இப்படியே பழக்கம்பண்ணு
உகரமுள்ள திதுக்காதி யுண்ணுவுண்ணு
உரைக்கிறேன் ரேசகத்தை உங்களுக்குத்
தகரமுள்ள மூச்சுவெளி விடுவதற்குத்
தப்பாது பூரகத்தைச் சாற்றக்கேளு
அகரமுள்ள மூச்சையுள்ளே வாங்கலப்பா
ஆச்சரியங் கும்பகத்தை அறையக்கேளே. (16)

கேளப்பா மூச்சையுள்ளே வாங்கிக்கொண்டு
கெடியாகத் தம்பித்து யிருந்தலாச்சு
வாளப்பா மூன்றுக்கும் வரிசைசொன்னேன்
வகையாக இப்படியே யோகம்பாரு
நாளப்பா வருஷமொன்றிற் சித்தியாகும்
நாதாக்க ளிப்படித்தான் சொல்லவில்லை
ஆளப்பா சொன்னவழி தவறாமற்செய்
ஆச்சரியம் யோகவிதி யறைந்திட்டேனே. (17)

விதியாக யீசனுட மொழியைப்பார்த்து
விளம்பினோ மாயிரத்தி யிருநூறுக்குள்
திதியாக யோகவிதி செய்வோர்க்கொல்லாம்
செயகண்டி போட்டுவிட்டேன் திறந்துமக்காள்
கெதியாக மாத்திரைக்கு அடையாளங்கேள்
கிருபையுடன் யென்தீட்சை ஐம்பத்தொன்றில்
மதியான தீட்சையொன்று மறைத்துச்சொன்னேன்
வாகாக மறையாம லறைகுவேனே. (18)

அறைகுவேன் அகரமது சிவமதாச்சு
ஆச்சரியம் உகரமது சத்தியாச்சு
திறைகுவேன் சிவசத்தி யிரண்டுங்கூடிச்
சேர்ந்துதடா மகரமென்ற மவுனமக்காள்
பறைகுவேன் அகாரமுடன் உகாரமவ்விற்
பாய்ந்தொன்றாய் கலக்கபிர ணவமுமாச்சு
மறைகுவேன் தீட்சையேர்ங் காரந்தன்னை
மாசற்ற நாதாக்கள் மறைத்திட்டாரே. (19)

மறைத்திட்ட சிவதீட்சை சத்திதீட்சை
வாகாக முப்பத்தி ரண்டாகத்தான்
உறைத்திட்ட நூல்களட் சரங்கள்பாரு
ஒடுங்கிற்று மூன்றெழுத்தி லுரைத்தமூன்றும்
அறைத்திட்ட ஓங்காரத் துள்ளாய்ப்போச்சு
அம்மம்மா மாத்திரையை அறையக்கேளு
துறைத்திட்ட ஊமென்று ஒருக்காற்சொன்னால்
துடியான மாத்திரைதா னொன்றதாச்சே. (20)

ஆச்சப்பா பூரகமுப் பத்திரண்டு
ஆச்சரியம் மூச்சையுள்ளே வாங்குவாங்கு
வாச்சப்பா கும்பகந்தா னறுபான்நான்கு
வளமாக மூச்சையுள்ளே தம்பிதம்பி
தாச்சப்பா ரேசகமோ யீரெட்டாகும்
தவிடுதா னாடாமல் விடுநீமூச்சைப்
பேச்சப்பா பின்னையுமிப் படியேபண்ணிப்
பிரளாமற் றினமொன்று லெகுவாய்ப்பண்ணே. (21)

பண்ணுகிற வரிசையைத்தான் கேளுகேளு
பங்குனியாம் மாதத்தைத் தொட்டுப்பண்ணு
நண்ணுதற்கு மாத்திரைதான் நூற்றீராறு
நலமான பிரதமையில் நயந்துபண்ணு
துண்ணுதற்குத் துதிகையிலே யோகம்பண்ணச்
சொல்லுகிறேன் இருநூற்றோ டெண்மூன்றாக
முண்ணுதற்குத் திரிதிகையிற் சொல்லக்கேளு
முந்நூற்றி முப்பத்தா றாகும்பாரே. (22)

பாரேநீ யிப்படியே வாசியோகம்
பாங்காகத் தினம்தினமும் யேத்தியேத்தி
நேரேநீ ஒருநூற்றிப் பனிரண்டானால்
நிச்சயமாய்ப் பிராணாயம் ஒன்றதாகும்
காரேநீ பிரதமைக்கு ஒன்றுபண்ணு
கைமுறையாய்த் துதிகைக்கு இரண்டுபண்ணு
மாரேநீ திரிதிகைக்கு மூன்றுபண்ணு
வாகான சதுர்த்திக்கு நாலுபண்ணே. (23)

பண்ணடா திதியேற ஒவ்வொன்றேத்திப்
பண்ணிவரப் பவுரணைச்குப் பதினைந்தாகும்
முண்ணடா அமாவாசைத்திதிவரைக்கும்
முப்பதுதான் பிராணாய மேறும்பாரு
எண்ணடா பதினாறு மாதமாகில்
இரட்டிலறு நூற்றிருபான் பிராணாயத்தை
வண்ணடா புரியட்டத் துள்ளேகாலு
வாங்குமடா பாழில்லை சாவும்போச்சே. (24.

போச்சப்பா பிராணாயம் பண்ணும்போது
புதுமையாய் முந்திமுந்தி வேர்வைகாணும்
ஆச்சப்பா சுக்கதனைப் பொடியாய்ப்பண்ணு
ஆச்சரியம் வேர்வையிலே தேய்த்துப்போடு
மாச்சப்பா முதலிலிப் படியேகாணும்
மைந்தனே தப்பிக்கு மிரண்டாம்பக்ஷம்
பாச்சப்பா மூன்றான பக்ஷத்துள்ளே
பசிமெத்த வுண்டாகும் பாருபாரே. (25)

பாரடா நாலான பக்ஷத்துள்ளே
பதிவாகும் லெகுவாகும் யோகம்பார்க்க
நேரடா அஞ்சான பக்ஷத்துள்ளே
நிச்சயந்தா னொளிவீசுங் கண்ணாற்பாரு
கூறடா ஆறான பக்ஷத்துள்ளே
குண்டலிதான் பிரகாச மாகும்பாரு
ஆரடா யேழான பக்ஷத்துள்ளே
ஆச்சரியம் பராபரையைக் காணலாமே. (26)

காணவே யெட்டான் பக்ஷத்துள்ளே
காமமது மேலேறுங் கீழ்நோக்காது
பாணவே பக்ஷமென்ன அதுதான்ரெண்டும்
பதினாறு திங்களுக்குப் பருவம்பாரு
ஆணவே மூதண்டக் கியாழந்தன்னை
அந்திசந்தி மறவாமற் றினமுங்கொள்ளு
பூணவே யோகமது செய்யும்போது
பொய்யல்ல கண்கடுத்தாற் புகலுவோமே. (27)

புகலுமே ஆவின்நெய் கலசப்பாலும்
   போட்டுநன்றாய்க் கலந்துள்ளங் காலிற்பூசு
அகலுமே கண்கடுப்பு அன்னங்கொள்ள
   அறையுகிறேன் பூரணா னந்தாகேளு
துகலுமே அன்னத்தைக் குறைத்துவுண்ணு
   சொல்லுகிறேன் சாதகமாய்த் தொடர்ந்துதானே
மகிழுமே கையான்றன் இலையைவாங்கி
   மைந்தனே உதயாதி பிடிதான்கொள்ளே. (28)

கொள்ளவே அந்தியிலே யிலையைக்கேளு
   கொடிக்கட்டும் கொடியிலையை ஆவின்பாலில்
பள்ளவே மண்டலந்தான் காய்ச்சிக்கொள்ளப்
   பசிகட்டும் அன்னமது குறைந்துபோகும்
நள்ளவே பச்சரி யொருசேர்வாங்கி
   நயமாகப் பொங்கியதை ஆவின்பாலில்
தெள்ளவே போட்டுண்ண யோகஞ்சித்தி
   தீனியிலே ஆசைவைத்தாற் சிதறிப்போமே. (29)

போகாமல் அன்னமரை தண்ணீர்காலாய்ப்
   புசித்துநீ தினந்தினமுங் குறியில்நில்லு
தாகாமற் பதினாறு மாதந்தன்னில்
   தப்பாது யோகமது சித்தியாகும்
வாகாமற் புரியஷ்ட மெட்டும்பாழாய்
   மாண்டுடனே நாலுமெட்டிற் கலந்துபோகும்
ஆகாத விந்துவது கட்டிப்போகும்
   அடையாளம் யோகசித்தி அறைகுவேனே. (30)

அறைகுவேன் யெட்டதிலே நாலுஞ்சேர்த்தால்
   அப்பவல்லோ யோகமது சித்தியாச்சு
பறைகுவேன் சாவென்ற பேச்சும்பேச்சு
   பண்பாகத் தன்நிழலின் சாயையில்லை
மறைகுவேன் தீபமதின் சாயையில்லை
   மக்களே தண்ணீரின் சாயையில்லை
தறைகுவேன் இவ்விதமாய்ச் சாதித்தோர்க்குச்
   சட்டைகக்கித் தேகமது அருணனாமே. (31)

அருணனா யிருக்குமடா உந்தன்தேகம்
ஆச்சரிய மிருக்கையிலும் நடக்கும்போதும்
வருணமுள்ள யோகமதைத் தீர்ப்பதற்கு
வகைசொல்வேன் பூரணா னந்தாகேளு
தருணமுள்ள பூரகந்தா னிரண்டுவாங்கு
சதாநித்தம் கும்பகந்தான் நாலுகும்பி
கருணமுள்ள ரேசகத்தை யொன்றேரேசி
கைமுறையாய்ச் சொன்னபடி கருதிச்செய்யே. (32)

சுந்தரானந்தர் சிவயோக ஞானம் 32.
முற்றிற்று

மதுரை திண்டுக்கல்ரோட் சிவராஜயோகி பங்காருசாமியார் ்வர்கள் குமாரர் முத்தியாலு நாயுடு அவர்களிடம் வாங்கிய ட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
குருவேதுணை

சுந்தரானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

அதிசய காரணம் 36.

சீரான வுமாதேவி பாதம்போற்றிச்
செகமகிழச் சுந்தரா னந்தன்றானும்
பேரான அதிசயநூல் முப்பத்தாறைப்
பிரியமுடன் பாடுதற்குக் குருவைப்போற்றித்
தாரான பட்சியுட கூட்டில்வேர்கள்
தனையறிந்து தொழில்வகைகள் தானேசெய்யக்
காரானை முகத்தோனே வுமையாளானைக்
கருமுறைக ளிதுபோலு மில்லைப்பாரே. (1)

பாரென்றேன் கல்லெலியின் கூட்டிலப்பா
பதிவான வேருண்டு விரல்போல்நீளம்
வாரென்றே னிருபுறமுஞ் சிவந்துகாணும்
வரும்போது அசனத்தை வைநீயுள்ளே
தாரென்றேன் வேரதனைப் போட்டுத்தள்ளும்
தான்துரத்தி வேரதனை யெடுத்துக்கொண்டு
ஓரென்றேன் வசியநம வென்று நூறு
உருவேத்திச் செபிக்கத்தாழ் விடுகுந்தானே. (2)

தானான மணத்தவளை யிருப்பிலப்பா
சார்வாக நாலுமுழங் கெல்லிப்பாரு
கானான விரல்தண்டி வெள்ளையாகக்
கருப்பான வரியுண்டு வேரைவாங்கி
நானான யெழுபதொடு அறுபதென்று
நாடிலட்சம் உருச்செபித்துக் கொண்டுநீயும்
போனான பட்சிகளை யிருக்கவென்றாற்
போரவன்றன் பேர்சொல்லிச் சேவிநீயே. (3)

நீயேதான் கேளெனவே அணிலின்கூட்டில்
நிகர்முடிச்ச வேருண்டு யெடுத்துத்தானும்
வாயேதான் அரிநம வருகஇங்கு
மகிழ்ந்துல்ட்ச முருலேத்தி வைத்துக்கொண்டு
காயேதான் கூடதனைச் சாம்பல்செய்து
கான்வெட்டைக் கதனைநீ சத்தேயுது
பாயேதா வைவ்வேர்க்கு வெட்டைசாயும்
பரனறிய வுண்மையெனப் பகரலாமே. (4)

பகருவேன் காகத்தின் கூட்டிலப்பா
பதிந்திருக்கும் வேருண்டு மஞ்சள்வர்ணம்
அகருவேன் அதையெடுத்துத் தூசியென்று
ஆயிரத்த லட்சமுருச் செய்துகொண்டு
பகருவேன் பிரிவதற்கு ரெண்டுபேரின்
புகழ்பேரை யெழுதிவைத்துத் தூபங்காட்டித்
தகருவேன் யில்லந்தனில் வைக்கத்தானே
சண்டையுண்டா மென்றதனைச் சாத்தலாமே. (5)

சாத்தியதோர் பூஞ்சிட்டின் கூட்டில்வேரு
தனையறியக் கருப்புவரி மூன்றுமுண்டு
நேத்தியுடன் அதையெடுத்து மகிழ்ந்துகேளு
நிரம்புசிவ வாவெனவே லட்சமோது
பாத்திரங்கீழ் வைத்துமிக இருக்கும்போது
பாற்சாதம் நிரம்பவுண்டு யென்றுங்காணும்
நாத்திசையு மறியவடைக் கலத்தின்கூட்டில்
நலமான வேரின்வகை கேளுகேளே. (6)

கேளுமது பச்சைவர்ண மாகத்தோன்றுங்
கிருபையரி நங்குசங்கு லட்சஞ்சேவி
வாளுமது வைத்திருக்கும் போதேயப்பா
மழைவிலகுஞ் சோதனைதான் மைந்தாபாரு
வேளுடைய வெடிவாணம் அம்புக்குத்து
வெட்டுமுதல் விலக்குமடா திட்டம்பாரு
ஆளுமிகக் கண்டுபடை முறியுஞ்சொன்னேன்
அரனாணை வுண்மையென வருளினோமே. (7)

அருளியதோர் கரிக்குருவி கூட்டிற்றானும்
ஆனதொரு வேருண்டு வளையமாகும்
பருளியதோர் காயம்போல் வீசும்பாரு
பதிந்தெடுத்துக் கண்தப்பு மென்றுலட்சம்
பொருளிதளை யுருச்செபித்து அமுதந்தன்னிற்
புகழ்ந்துரைத்து நெற்றியிலே பொட்டிட்டாக்கால்
வருளியதோர் கண்ணாடி தன்னைப்பாரு
மாயமடா உருக்காணா மாயமாமே. (8)

மாயமடா விராற்பொரியினு ள்ளேபாரு
வைத்திருக்கும் வேர்நனையா திருக்குமப்பா
நேயமுடன்அதையெடுத்து வருகவசியென்று
நீலட்ச முருச்செபித்துப் பின்புகேளு
தூயதோர் மாதரையே நினைத்துக்கொண்டு
சுகமாகப் பொட்டிட்டு யெதிரேநோக்கு
நேயமடா பின்றொடர்ந்து வருவார்பாரு
செகத்திலே நிசமாகச் செப்பினேனே. (9)

செப்பியதோர் கோட்டையெனுங் கரிச்சான்கூடு
திகழ்மதிளி லீருக்குமதில் வேறொன்றுண்டு
ஒப்பியதோர் பயத்தங்காய் போலேகாணும்
உரைவெள்ளைப் புள்ளிபல வுண்டுபாரு
அப்பனே யெடுத்ததனை வைத்துக்கொண்டு
ஆலாலீ லூவெனநீ லட்சஞ்சேவி
இப்புவியில் வேருஅட்ட கர்மமெட்டும்
இயல்பாகச் செய்யுமென வியம்பினோமே. (10)

இயம்பினே னணையின்கற் புடையிலப்பா
யிருக்குமடா வெகுநாளை விலாங்குதானும்
இயம்பினே னதுக்குள்ளே வேறொன்றுண்டு
இதமாக யெடுக்கவென்றால் விபரங்கேளு
இயம்பினே னாலத்தி யரசோடொட்டு
இட்டுமொரு குச்சுக்குள்ளே யிட்டுப்போட்டு
இயம்பினே னதுஇதுவு மிதுவுபொட்டு
இயல்பான தூண்டிமீன் இட்டுவாங்கே. (11)

வாங்குதற்கு மந்திரந்தான் சொல்வேணப்பா
வயநமசி யென்றுலட்ச முருவைச்சேவி
பாங்குபெற அவ்வேரை எடுத்து நீயும்
பகர்வெள்ளிக் குளிசத்தி லடைத்துக்கொண்டு
தாங்கிடையின் முன்கட்ட விந்துநிற்கும்
சாதகமாய்ப் பின்றள்ள விந்துவீழும்
ஏங்கியல்லோ வெழுஜாமம் வடிந்துபோகும்
ஏத்தபணங் கொடுப்பாள்கா ணினிதுபாரே. (12)

இனியதொரு மாடப்பு றாவின்கூட்டிலப்பா
இருக்குமடா வேரொன்று எடுக்கக்கேளு
பனியதொரு விரல்நெடுக மளவுபாரு
பகர்கறுப்பா மிருபுறமும் நெல்லின்நீளம்
கனிவுடனே யெடுத்ததனை வைத்துக்கொண்டு
கவிபட்டேடங்கு பிங்கு யென்றுதானும்
பனிவுடனே பனிரெண்டு லட்சம்சேவி
பண்பான வித்தையிது சொல்லுவேனே. (13)

சொல்லுவேன் காரணத்து மோடிக்கப்பா
துப்பாக்கி வார்செய்து கீழேநாட்டி
மெல்லவே பொரிக்காரம் வில்லைதட்டி
மேல்வைத்து யிதுவேரை நடுவேதாபி
வல்லமையாய் நீதூரம் போயேநின்று
வந்துமெதி ராளியதை யெடுக்கும்போது
சொல்லிவிடு இதுவுருவை வேட்டுண்டாக்குந்
துகையாது மோடியிது சூட்சங்காணே. (14)

காணென்றேன் பூச்சிமுள்ளுக் கூட்டுக்குள்ளே
சருணைவைத்துப் பாரதுக்குள் வேரொன்றுண்டு
காணென்றேன் அதுகண்ணை மருட்டும்பாரு
கரியாங்கு வென்றுசொல்லிப் பிரித்துபாரு
யேணென்றேன் வேருமொரு யிரையினீளம்
எடுத்திடுவாய் மயிர்நரைபோ லிருக்கும்பாரு
காணென்றேன் அதுநடுவிற் பச்சைகாணும்
சருதியதோர் மோடியிது சண்டுபாரே. (15)

கண்டதனை யெடுத்துமிக வைத்துக்கொண்டு
　　கங்கிலியு மரியென்று லட்சஞ்சேவி
முண்டியதோர் வேரையொரு செம்புச்செப்பில்
　　மூடியதிற் தொலாந்திரமா மயிரிற்கட்டிக்
கொண்டியதோர் மயிர்நுனியிற் கட்டிப்போடு
　　குனிந்தெடுக்கி லுருச்சேவி உயரவேறும்
தண்டியதை யெடுப்பதற்கு மாட்டாரப்பா
　　தானான தொழிலிதுதான் சங்கையாமே. (16)

சங்கையுடன் கதுவாலிக் கூட்டின்வேரைத்
　　தானெடுக்கச் சொல்லுகிறேன் பொன்போல்மின்னும்
இங்கிதமா யதையெடுத்துக் கடித்துப்பாரு
　　இயல்பான சுக்கதுபோ லுறைக்குகண்டாய்
பொங்கமுடன் வருகநிச வென்றுசொல்லிப்
　　பூசிலட்ச முருவாகப் புனிதம்பாரு
கங்கமுட னவ்வேரு சபைவாய்கட்டுங்
　　கருவிதுவா மென்றுசொல்லிக் கருதலாமே. (17)

கருதியதோர் காடையுட கூட்டிலப்பா
　　கண்டுசொன்னேன் வேரொன்று கருப்பதாகும்
பருதியது வரும்போது யெழும்பும்பாரு
　　பதமாக யெடுத்ததனை வைத்துக்கொண்டு
இருதிதரு பட்டாங்கு நில்நில்லென்று
　　இரண்டுலட்ச முருச்செபித்துக் கடலிற்சென்று
நருதியுடன் கையமைக்க அலைதான்நிற்கும்
　　நாதாக்க ளறிந்திடவே நாட்டினோமே. (18)

நாட்டினேன் ஆட்காட்டிக் கூட்டிற்றானும்
　　நயமான வேரொன்று யிருக்கும்பாரு
சூட்டியதோர் முனைதனிலே ரெட்டைகாணும்
　　சுகமாகக் கண்டுநீ சொல்லக்கேளு
ஆட்டியதோர் ஸ்ரீறீங்கு வென்றசொல்லி
　　ஆயிரத்தெட்டுருவங்கு செய்துபோட்டால்
தீட்டியதோர் சீலைகுடை பிடிக்குஞ்சொன்னேன்
　　செகத்திலுள்ளோர் காணார்கள் தெரிந்திடாயே. (19)

தெரிந்திடவே தெண்டுடைய புடையைப்பாரு
சிவந்திருக்கும் ஒருவேரு பச்சைவாசம்
பரிந்திடவே யதையெடுத்து வைத்துக்கொண்டு
பரமசிவ தம்பயவோம் மென்றுசேவி
குரிந்திடவே லட்சமுரு செய்துக்கொண்டு
குணமுடனே வாயிலிட்டு வூதும்போது
அரிந்திடவே அரவமது லந்தேயாடும்
அன்பான வித்தையிது அடவுதானே. (20)

அடவான மூலமொடு புடையிற்குள்ளே
அமர்ந்ததொரு வேரதுதான் நீலம்சொன்னேன்
திடமாக அதையெடுத்து வைத்துக்கொண்டு
சிங்கரிஓ மென்றுலட்ச முருவைச்சேவி
சுடமாக அவ்வேரைக் கையில்வைத்துக்
கைகாட்டி யுருச்சொல்லி நிற்கும்போது
உடனேதா னோடிவருஞ் சொன்னேன்சொன்னேன்
உத்தமனே யிந்நூலை யுகந்துபாரே. (21)

உகந்துபார் மீன்கொத்திக் கூட்டுக்குள்ளே
உண்டுமடா வேர்கிழங்கு மிளகுபோலே
தகந்துபா ரிருபுறமுங் கருப்புவெள்ளை
தான்காணும் பிச்சிப்பூப் போலேவாசம்
பகர்ந்தெடுத்துச் சீவருக யீகூவென்று
பனிரண்டு லட்சமுரு பண்ணிக்கொண்டு
புகழ்ந்திடவே கையில்வைத்துத் தேங்காய்தட்டப்
பொடியாக நொருங்குமடா போதந்தானே. (22)

போதமடா பிராந்தினுட கூட்டிற்றானும்
புள்ளிகறுப் பானதொரு வேர்தானுண்டு
நீதமடா அதையெடுத்து நிசியோமென்று
நீலட்ச முருச்செபித்து விஷத்துக்கெல்லாம்
வேதமுடன் வென்னீரி லரைத்துயீய
வேரதனைக் கடிவாயி லுறைத்துப்போடு
ஓதுமிந்த மந்திரத்திற் றீர்ந்துபோகும்
ஒகோகோ இந்நூலு முதவாதென்னே. (23)

தென்னமிகக் கொண்டைவைத்த சிலாத்திக்கூட்டிற்
றெரிந்துபார் வேருண்டு சொல்லக்கேளு
வன்னமிடு மதுசிவந்த புள்ளிகாணும்
வாங்கிவந்த பின்புகிலி யாவாவென்று
இன்னிலத்தில் லட்சமுருச் செய்துகொண்டு
யிருந்தோர்க ளிருப்பதுதா னோட்டவென்றால்
சொன்னதந்த வேரதனை நீகாற்கீழே
சூட்டிமிதி யோட்டிவிடுஞ் சுரதந்தானே. (24)

சுரதமடா செம்போத்தின் கூட்டுக்குள்ளே
சொல்லுகிறேன் வேறொன்று யிருக்குமப்பா
பரதமடா அதையறிந்து யெடுக்கவென்றால்
பார்பச்சைப் புள்ளியுண்டு யெடுத்துக்கொண்டு
கரதமடா கடித்துப்பா ரேலம்போல
நாட்டமூடன் வீசுமடா விபரந்தானே
இரதமதை யதினாலே கிண்டக்கட்டும்
எடுத்துப்பார் மணியதுதான் வேதைக்காமே. (25)

வேதைக்கு மணியதனைச் செம்பிலீய
வீடுகட்டு வாக்கெனவே லட்சஞ்சேவி
கதைபோலு மதனைவைத்துக் கொண்டுசெல்லு
கண்டதொரு வல்மிருகம் விலகியோடும்
மதயானை கிட்டவரும் பிடித்தவில்லை
வளைத்திடினும் பின்தொடரும் அதுவிரும்பி
இதையெவர்க்குஞ் சொல்லாதே சித்துவித்தை
யெடுத்தாடப் புவியிலெந்தன் குருசொன்னாரே. (26)

நானேதான் சொல்லுகிறே னாந்தைக்கூட்டில்
நாடியதோர் வேருண்டு யெடுக்கக்கேளு
தானான புள்ளியது மஞ்சள்வர்ணம்
தானிருக்கு மதையெடுத்து வைத்துக்கொண்டு
கோனாள அங்குஷ்டநம வென்றுலட்சம்
குறிப்பாக வுருச்செபித்தா விந்த்ரஞ்சாலம்
வானான மலையதனை வாவென்றாக்கால்
வந்துமிதின் வலத்தில்வர வாகுங்காணே. (27)

வாகான கூகையுட கூட்டிவின்னம்
வைத்திருக்கும் வேறொன்று உள்ளிவெள்ளை
பாகாக அதையெடுத்து வங்றீங்கீங்
பன்னிரண்டு லட்சமுருப் பண்ணிப்போடு
தாசமுடன் நீயுமதை யெடுத்துக்கொண்டு
சத்தமிகுங் கடலையழைத் திடவேயாகும்
காகான வதினுடைய வனத்தைக்காட்டும்
காசினியில் மயேந்திரத்தின் சாலமாச்சே. (28)

ஆச்சப்பா கல்லோடை யிருகரையில்தானும்
அணுகியதோ ருடும்பிருக்கும் புடைதான்சொன்னேன்
மேச்சப்பா யதற்குள்ளே வேர்தானுண்டு
மிகவெடுக்கத் தந்திரத்தை விளம்பக்கேளாய்
பாச்சப்பா ஓணானைப் பிடித்துவந்து
பார்வெள்ளை யிருகழஞ்சு வாயிலிட்டு
தூச்சப்பா வுள்ளேவிடு சண்டையாகி
சுருக்குடனே பிடித்தனைத் திண்ணுந்தானே. (29)

திண்ணமுடன் சாய்ங்கால மறுத்துப்பாரு
செத்துவிடுங் கவுசனத்தை வாயிற்போடு
வண்ணமுடன் அஞ்சுநாட் சென்றபின்பு
வந்துபார் வெளியிலது வந்துதோணும்
எண்ணமுடன் கொழுந்துபோல் வாசங்காணும்
இயல்வெள்ளை நிறமாகு மெடுத்துவந்து
அண்ணலரு ளாலெயதைத் தூபங்காட்டி
அன்புடனே வைத்துமதி னன்புகாணே. (30)

அம்பாக வதையெடுத்து வைத்துக்கொண்டு
யரியாங்கு வருகஇங்கு வென்றுசொல்லி
தம்பமுடன் பன்னிரண்டு லட்சஞ்சேவி
சார்வாக வதையெடுத்துத் தொட்டதெல்லாம்
இம்பமுட னுன்னிடத்தில் வருமாம்பாரு
இதுபோலுந் தொழிவில்லை யெங்கும்பாரு
வம்பருக்கு இதுமார்க்கஞ் சொல்லவேண்டாம்
மாதவனுக் கிதுதனையே வழுத்துவாயே. (31)

வழுத்தியதோர் தூக்கணத்தின் கூட்டுக்குள்ளே
மயமாக வேறொன்று இருக்கும்பாரு
பழுத்திடவே தூங்குதலி னிடத்திற்கேளு
பரிவாகச் சாணுக்கு ளிரக்கும்பாரு
இழுத்திடவே மயிர்போல வெள்ளிக்கம்பி
யெனுநிறமாம் பிரித்ததனைப் பாருபாரு
அழுத்திடவே தெரியாது சூட்சமார்க்கம்
யாருமிதை யறியார்க ளருமைதானே. (32)

அருமையடா வதுதனிலே தீயைமூட்டு
அதுவேகா திருக்குமடா வதிகசித்து
பெருமையுட னெடுத்துவைத்துக் கொண்டுகேளு
பேணியே முன்வைத்துப் பின்னேறென்று
கருமையுட னிருபத்து லட்சஞ்சேவி
கைக்குள்ளே வைத்தெந்த நீரில்நீந்த
ஒருமையாய்த் தொப்புமுக்கீழ் தண்ணீர்நிற்கும்
உரைக்கமுடி கூடாது வுகந்தசித்தே. (33)

சித்தான குளவியுட கூட்டிலப்பா
செப்புகிறேன் வேருண்டு முயல்வால்போலே
அத்தம்வைத்து யெடுக்கவரி தப்பாகேளு
அம்மையென்ற மூன்றெழுத்து வாலைபூசை
சத்திஓம் ராமாவென் றுருவும்போடத்
தானாக மேலேபொன் போலத்தோணும்
வித்தையிதி லிருக்குதடா அநேகங்கோடி
விழுந்தவரை யெழுப்புமடா ஓமாம்பட்டே. (34)

பட்டென்று கோடியுரு சேவிசேவி
பாராய்நீ நாங்கணத்தான் கூட்டில்வேரைக்
கட்டென்று யெடுப்பதற்கு விபரங்கேளு
காணவே குத்தொலிபோருக்கெழும்பும்
வட்டென்று விடுகூகூ சீசீயென்று
வகைலெட்ச முருச்செய்து நீறதாக்கித்
தொட்டென்று புத்துத்தேன் தன்னில்மத்தி
தொட்டிட்டுப் பாரிதுவஞ் சனமுமாமே. (35)

அஞ்சனமாங் கூட்டிலெல்லாம் வேரைச்சொன்னேன்
அதுதனக்குப் பூசையது சொல்லக்கேளு
விஞ்சனமாம் பாலருசி நனைத்துவைத்து
வெத்திலையும் பாக்குமுதல் வஸ்துவைத்துக்
கஞ்சனமா முருவேத்திப் பூசைபண்ணு
கடினமா மதிசயந்தான் முப்பத்தாறும்
துஞ்சிவிட்டாற் கிடையாது அதிஷ்டம்வேணும்
சொல்லார்கள் குருவறியச் சொல்லாரென்னே. (36)

சுந்தரானந்தர் அதிசயகாரணம் 36.

முற்றிற்று.

ஸ்ரீ வில்லிபுத்தூரைச்சேர்ந்த சுந்தரபாண்டியம் அம்மையப்ப பிள்ளையவர்கள் குமாரர் பொன்னையாபிள்ளை யவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
குருவேதுணை

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

வயித்தியம் 5.

பலகலைக ளுணர்த்துபர சிவமேகாப்பு
பார்வதியுங் கணேசனோடு கந்தன்காப்பு
கலைவாணி யயன்திருமால் பாதம்போற்றி
கற்றுணர்ந்த நாதாக்கள் பாதம்போற்றி
உலகத்தோர்க் கின்னமொரு உண்மைசொல்வேன்
ஓகோகோ களிச்சியிலைச் சாறுநாழி
சிலகத்த கவுதும்பைச் சாறுநாழி
சிவந்தகண்டங் காரிச்சார் நாழிகூட்டே. (1)

கூட்டடா கால்தலையும் நடுவறிந்து
கும்பிட்டுக் குருவருளை தியானஞ்செய்து
மூட்டடா நிலப்பனையின் கிழங்குச்சாறு
முக்கியமாய் மூத்திரமோர் படியுங்கூட
நாட்டடா யேரண்டத் தெண்ணெய்நாழி
நலமாக இவையெல்லாம் பாண்டத்தூற்றி
காட்டடா அதிமதுரம் முத்தக்காசு
கனிவான சாதிக்காய் கிராம்புதானே. (2)

தானென்ற கோஷ்டமும்ரோ கணியுஞ்சுக்கு
தனித்துநின்ற கார்போகி யரிசியேலம்
ஊனென்ற ஒன்பதையும் விராகன்தூக்கி
உத்தமனே முன்சாற்றி லரைத்துமையாய்
வேனென்ற முன்சாற்றிற் கலக்கிப்போடு
வெகுசுருக்காய் வாலுகையின் மேலேயேற்று
ஏனென்ற மெழுகுபதம் வரத்தீபாக்னி
எரித்தெண்ணெய் வடித்துவைத்து இயம்பக்கேளே. (3)

கேளப்பா கரண்டியெண்ணெய் யொருநாட்கொள்ள
கெடியான கருங்கிரந்தி செங்கிரந்தி
நாளப்பா கள்ளிப்பூக் கிரந்தியோடு
நலமான மேகவெட்டை மேகவாய்வு
சூளப்பா மேகமென்ற திருபத்தொன்றுஞ்
சூட்டிப்பார் புலிபாய்ந்த ஆடுபோலாம்
வேளப்பா யெரித்தசிவன் சொன்னமார்க்கம்
வெட்டவெளி யாகவுந்தான் வீசினேனே. (4)

வீசியென்ன பத்தியந்தான் புளியாகாது
விதமான உப்பாகா மோருமாகா
மாசியென்ன பூசினிக்கா யுளுந்துமாகா
மகவாழைக் காய்கடுகும் வாடையாகா
வாசியென்ன மதனங்கள் கிட்டவாகா
மக்களே மாங்கிஷங்கள் மச்சமாகா
யேசியென்ன செம்புலியும் வராகமாகா
இதைத்தள்ளிப் பத்தியமாய்க் கொண்டிடாயே. (5)

சுந்தரானந்தர் வயித்தியம் 5.
முற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம் ..ரா.ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி இந்த ..ாஸ்திரம் அச்சிடலானது.

உ
குருவேதுணை.

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

சூஸ்திரச்சுருக்கம் 10.

பூரணமாய் நின்றசுழி முனையேகாப்பு
பொதிகைமுனிக் கருத்தந்தோன் பாதங்காப்பு
வாரணிந்த முலையாள்தன் பாதங்காப்பு
மகாகோடி முனிவர்சித்தர் பாதங்காப்பு
தாரணிந்த கரிமுகவன் பாதங்காப்பு
தப்பாமற் சொல்லுகிறேன் லிங்கமையா
பேரணிபோல் முழங்கிவரு மொன்பதுக்குள்
பெருநூலுங் குருநூலுங் காப்புத்தானே. (1)

ஆதியிலே கும்பமுனி பதினெண்பேரும்
அருட்பெருகி யானந்த மயமாய்நின்றார்
சோதியிலே நின்றுகொண்டு சொக்கினார்கள்
சொரூபமென்ற சுழிமுனையிற் சுடரையுண்டு
வாதியென்ன ஆத்தாளை வணங்கிப்போற்றி
வந்தவழி போனவழி ஞானரூபம்
ஒதியுணர்ந் தேயிருந்து உண்மைகண்டு
உரைக்கிறே னொன்பதுக்கு ஞரைக்கிறேனே. (2)

உரைப்பதென்ன மறைப்பதென்ன உலகத்தோரே
உன்னைவிட அவளையன்றி யொன்றுமில்லை
மறைப்பதென்ன தலையமுக்கைச் சீச்சீயென்று
மனந்தனிலே மாயையாய் வாழ்வோமென்று
துறைமுறையாய்ப் போதத்திற் போதமென்று
சொல்லுவார் மனமுறையார் சுத்தமாடு
குறையொன்றும் நினையாதே ரெண்டுமொன்று
குருவான ஆதிகற்ப்ங் கொண்டபேர்க்கே. (3)

கொண்டுகண்டாற் பூரணமும் வாலையாகும்
கோடிகற்பங் கோடிதொந்த மாடுமாடும்
கண்டுயிது பணவிடைதான் புனுகுகூட்டிக்
கங்காளி வசியநமா வென்றுவோத
பண்டுமுன்னாள் செய்தவினை யெல்லாம்போக்கிப்
பலிக்குமடா வசியமிது பாருநீதான்
கொண்டபெண்ணைப் போலவந் தடுமையாவாள்
கும்பிட்டுக் கேட்டதனங் கொடுப்பாள்தானே. (4)

தானேதா னிரண்டுபணந் தூக்கம்வாங்கி
சாதிலிங்கம் வராகனிடை கெந்திசூதம்
ஊனேதா னுமிநீரா லாட்டிவில்லை
உயர்ந்தவெள்ளைக் கற்சுண்ணத் துள்ளேவைத்து
சானென்ற புடம்போடக் காடையாகும்
கண்கொள்ளாச் செந்தூரம் அருணன்போலாம்
வானென்ற வஸ்துவுடன் சுத்திவைத்து
வாமத்திற் பூசித்து வணங்கிநில்லே. (5)

வணங்கியே நவலோகத் துள்ளேயீந்தால்
மாற்றாறுங் காணுமின்னம் வகையைக்கேளு
அணங்கியே யிரையெடுத்துச் செந்தூரித்து
அனுப்பானம் முன்போலே கொடுத்தாயானால்
பிணங்கியே போகாது யெண்பதாகும்
பேசாதே சாபம்வரும் ஆணையிட்டோம்
இணங்கியே பணவிடைநீ கொண்டாயானால்
யேமனென்ற பேர்களெல்லாம் யேங்கிப்போமே. (6)

ஏங்காமல் மூன்றுபணத் தூக்கம்வாங்கி
இதமான சுரைக்காய்வேர்க் கரியாலாட்டித்
தூங்காம லாத்தாளைப் பூசைபண்ணி
சுத்தமுள்ள வெத்திலையிற் பணம்போறகட்டி
தாங்கிஓம் அஞ்சனா தேவிபூமி
தட்சணிமுன் தெரிசிக்கச் சிவாயவென்று
வாங்கியே சிமிட்டாமற் பார்த்தாயானால்
வழிதிறந்து பதிங்காத வழிதான்போமே. (7)

போமேதா னதிலுளதே வதைகள்தோணும்
பொல்லாத கருப்போடு புதையல்தோணும்
ஆமேதான் பெலிகேட்டால் அங்உங்கிரியும்
அகோரமுள்ள வயிரவதே வாவாவென்று
ஓமேதான் ருத்ரனுட பூமிச்சாம்பல்
ஓதியெரி நால்மூலை யொன்றுங்கேளார்
வாமேதான் பேய்பிணிக ளகன்றுபோகும்
வாணிபதம் பூசித்து வைத்துக்கொள்ளே. (8)

வைத்தபின்பு நாலுபணத் தூக்கம்வாங்கி
வளமாம்பேய்ப் பீர்க்குப்புல் லாமணக்குக்
கைத்திட்ட மாகவுமே முறைதப்பாமல்
கருகாமற் பூப்புடத்திற் றயிலம்வாங்கி
நைத்திட்டுப் போகாமல் நமஓமென்று
நவமான சுழிமுனையிற் றிலதம்போட
கைத்திட்ட மாகுமடா காணமாட்டார்
கண்டமுனி காளியுடன் பூகம்போமே. (9)

எல்லாரும் பிழைக்கவல்லோ யிதனைச்சொன்னோம்
இதைப்பழித்தாற் பெருவயிறா மிடியும்வீழும்
பொல்லாத நோய்கள்வரும் புழுத்துச்சாவார்
புலையனைப்போ லெந்நாளுந் திரிவான்மட்டை
நல்லநூ லிதுவென்று பார்த்தாயானால்
நாயனைப்போல் நீயிருந்து நன்மைசேர்வாய்
சொல்லாத வித்தையெல்லா மிதிலேசொன்னேன்
சூட்சமெல்லா மொன்பதுக்குள் நுணுக்கமுற்றே. (10)

சுந்தரானந்தர் சூஸ்திரச்சுருக்கம் 10.
முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெரு வித்துவான் குழந்தை வேலுப் பிள்ளையவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சசிடலானது.

உ

பராசத்தி துணை.

சுந்தரானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம் 14.

பரையின்றன் நிலையுணரும் பரஞான முணர்ந்தோர்க்குப் பரத்தி னுண்மை
திரையலையும் விரைசெறியுஞ் செங்கண்மால் கிருபையதாற்சேர்ந்தோர்முத்தி
குரவர்தமிழ் பதியவுமே அரிஞான முணர்ந்தோர்க்குக் கூற லுற்றேன்
நரைதிரையுங் கறுப்பேறும் ஞானநிலை யறிந்தோர்க்கு நன்மை தானே. (1)

பத்தியுடன் பரைநிலையை யறிந்துகொண்டு
பரைஞான வெளிமயக்கம் பார்த்துப்பார்த்துப்
புத்தியுடன் கொள்பவனே பெரியோனாவான்
பூரணமாஞ் செகசோதி பிறந்துவாழும்
அத்தியுட னம்பரத்தின் நிலையைக்கண்டு
அறிவாலே அறிந்துணர்ந்து அப்பால்நோக்கிச்
சத்தியுடன் மாயையெல்லாந் தனித்துப்பார்த்தால்
சாவதுவு மில்லையென்று சாத்தினோமே. (2)

சாத்தினோங் குண்டலித்தா யடித்தாளப்பா
சாகாத காலதுவாம் மக்காள்சொன்னேன்
மாத்தினோங் குணம்பித்தாம் மாயையப்பா
மாயைகண்டு சமரசமாய் வெளியிலேகி
ஆத்தினோம் வெளியில்நின்று பார்க்கும்போது
அப்பவல்லோ தெரியுமடா தோயத்தானம்
தேத்தினோஞ் செகமாயை விட்டுநாங்கள்
சிவன்செயலைக் கண்டிருந்து தேறினோமே. (3)

தேறினோம் விஷமாயை விட்டுநீங்கி
செகசால வித்தையெல்லா மாடியாடி
ஆறினோம் தனிவீடாஞ் சுழியிற்பத்தி
ஆடினதும் அடங்கினதும் பிறப்பிறப்பு

ஏறிமன மேறியங்கே பார்க்கும்போது
எட்டுரெண்டும் பத்தாகத் தோன்றித்தப்பா
ஊறினோம் உடம்பெல்லாம் அமுர்தத்தாலே
உகாரத்தின் பொருளாலே ஊறினோமே. (4)

வாசியா மெழுத்தை மூட்டி மந்திர மதனைச் சொல்லத்
தேசியி லிரண்டு வைத்துச் சிக்கெனச் சிவத்தை யொட்டி
மாசியாம் விழி:பாள் நோக்கி மனத்தினாற் றெளிந்து பார்க்க
ஊசிபோல் நின்ற சோதி உகாரம்வந் தெய்துந் தானே. (5)

அப்பனே மனத்தையங்கே யொன்றில்வைத்து
அறிவாலே பரைநிலையை யாடிப்பார்த்தால்
ஒப்பில்லா மணிவந்து சேருமப்பா
உட்பொருளும் வெளிப்பொருளு மொன்றாய்த்தோணும்
அப்பனே விழிநிறைந்து பார்த்தப்போது
ஆத்துமங்கள் பெருவெளியில் நின்றவாறும்
அப்பனே தெரியுமடா பரமன்வீடு
ஆதியந்தச் சோதியொளி யாகுந்தானே. (6)

ஆத்துமங்கள் வெளியியல்நின்று ஆடும்வாறும்
ஆத்துமங்கள் கருவில்நின்று உதித்தவாறும்
ஆத்துமங்கள் தன்நிலையைக் காத்தவாறும்
ஆத்துமங்க ளந்தத்தி லலையும்வாறும்
ஆத்துமங்கள் முன்சென்ற பாவத்தாலே
அடிபட்டு வெளிதனிலே அடையாவாறும்
ஆத்துமங்கள் நிலைபெருகி அறிவுமட்டும்
அரிபோலே விழிநேர்ந்தாற் றெரியும்பாரே. (7)

தெரியுமடா செகசோதி கண்டபோது
தெய்வமெல்லாந் தெரியுமப்பா மெய்யுமாச்சு
அரியரனு மாத்தாளு மொன்றாய்நின்று
ஆட்டிவித்த விபரமதுங் காணலாகும்
தெரியுமடா சித்தரெல்லாங் கண்ணிற்றோணும்
திரிபுவன உலகமெல்லாம் வெளியாய்க்காணும்
பிரியமுடன் சிவவெளியை நோக்கிப்பார்த்தால்
பேராகும் ஞானமெல்லாம் பேணிப்பாரே. (8)

நவ்வெழுத்தும் மவ்வெழுத்துங் குண்டலியுமாச்சு
நடுவில்நின்ற சிவ்வெழுத்தும் மனமுமாச்சு
வவ்வெழுத்தும் யவ்வெழுத்தும் பிடரியாச்சு
வயிற்றிலே நின்றெழுத்தும் சிவ்வுமாச்ச
அவ்வெழுத்தும் அகாரமுத லந்தமாச்சு
ஆதியிந்தப் பேரொளியாம் உகாரமாச்சு
உவ்வெழுத்தும் பெரியெழுத்தைச் சாத்தவல்லோர்
உண்மையுடன் சிவநிலையை ஊன்றலாமே. (9)

மெய்யெழுத்தாய் நின்றதுவே விழியுமாச்சு
வேதாந்தம் பார்த்துணர அறிவுமாச்சு
அய்யெழுத்தாய் நின்றதுவே வாலையாச்சு
ஐந்தெழுத்தாய் நின்றதுவே சரியையாச்சு
உய்யெழுத்தாய் நின்றதுவே பரையுமாச்சு
உம்பர்களுந் தேவர்களுங் காணலாச்சு
பொய்யெழுத்தோ தாமல்மெய் யெழுத்தையோதி
புகழ்ந்தவனே மெய்ஞ்ஞானி யாகுந்தானே. (10)

அரிராம வாலைசத்தி அபிராமிசத்தி
ஆதிசத்தி அனந்தசத்தி அனாதிசத்தி
விரிகின்ற புவனமெல்லாம் பிறந்தசத்தி
வேதாந்த சத்தியடா மெய்ஞ்ஞனசத்தி
துரியமுடன் காயத்திற் சூழ்ந்தசத்தி
சொற்பெரிய பராசத்தி ஞானசத்தி
கருவிகர ணாதிகளை யாட்டுஞ்சத்தி
காணப்பா பனிரண்டு சத்திதானே. (11)

பன்னிரண்டு வீட்டிலேதா னிருந்தசத்தி
பார்வதியா மென்துரைச்சி அவள்தானப்பா
கண்ணிரண்டுங் காதிரண்டும் மெய்யுமாகிக்
கலந்திருந்து விளையாடுங் காட்சிதன்னை
எண்ணிரண்டாங் கோட்டிலவ ளிருந்துவிளையாடி
யிருதயமாங் கமலமெலாஞ் சூழ்ந்துமூடி
சொன்னரெண்டு வீட்டினிலே யிருந்தாள்பாரு
சோதிசெக சோதியடா ஆத்தாள்தானே. (12)

தெளிவாகி மனமாகித் தெளிவுமாகி
தேர்ந்துணர்ந்த பரஞானத் தொளியுமாகி
ஒளிவாகி ஓங்காரப் பொருளதாகி
உள்ளொளிக்குட் சோதியுடன் உகாரமாகி
வெளியாகி விபரமுமாய் நினைவுமாகி
வெட்டவெளி ஞானத்தின் வேதையாகி
சுழியாகி யொருசுழியுஞ் சூட்சமாகி
சொற்பெரிய நாதாந்த சமையமாமே. (13)

நாதாந்த சமையமெல்லாஞ் சொல்லிவிட்டேன்
ஞானநெறித் தன்மையெல்லாம் நாடிவிட்டேன்
வேதாந்த சாஸ்திரம்போ லாடிவிட்டேன்
மெய்ப்பொருள்வந் துதவுகின்ற வெளியுஞ்சொன்னேன்
பாதார விந்தமெல்லா மோதிவிட்டேன்
பராபரத்தி னந்தமெல்லாஞ் சொல்லிவிட்டேன்
நாதாந்த சமையத்தில் நின்றோன்ஞானி
நான்பெற்ற பேரெல்லாம் நாட்டினேனே. (14)

சுந்தரானந்தர் ஞானசூஸ்திரம் 14
முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெரு முத்தையபிள்ளை யவர்கள் குமாரர் வித்துவான் குழந்தைவேலுப்பிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
குருவேதுணை.

சுந்தரானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

முப்பு 25.

பூமிநாத மேகமே புனற்சொரிந்த பூவதாம்
நாமடா ரவிமுகத்தில் ரவிநிறைந்த வித்தடா
சோமனாத மீறியே சொரூபம்வைத்த சத்தியாம்
ஏமவித்தை பூரண மிகுந்த தட்ட சத்தியே. (1)

அட்டசத்தி யாம்புரி அட்டகூறு நேர்மைகேள்
திட்டமா மெழுவகைப் பிறப்பறிந்த யோகிகள்
மட்டிலாத பஞ்சவாசல் மனமொடுங்கும் வீதிதான்
குட்டதாங்கல் லுப்பிதென்று கூறுவார்கள் மேகமே. (2)

மேகமேசொ ரிந்திடப்பின் விண்மண்சத்தி மீறவே
ஆகமேதெ ளிந்தசத்தி ஆகரிகூ லாகவே
பாசமாள சுத்திசுத்தி பராபரைய றிந்ததே
மேகநீரு லா வவே வெளுத்தவுப்ப தானதே. (3)

உப்பறிந்த வாதியல்லோ வுணர்வதான வாதிதான்
உப்பமூன்று முத்தியா யுலாவுகின்ற சாதிகள்
அப்பிலே விளைந்தமுத்தி யானதுவும் உப்படா
செப்பினோ மறிந்துகொள்வர் தேகசித்தி ஞானியே. (4)

ஞானியாவ தேதடா நலம்பரிந்த வுப்பிலே
தேனீய்வைத்த மருவடா சிறந்தபூர ணத்துடன்
மானமாங்கல் லுப்பிலே வகையுடன்கை முறையிலே
கானமிட்ட சுண்ணமாங் கதிரவன்மு கத்திலே. (5)

முகத்திலே தெளிந்தஉப்பு மூடுகார சாரமும்
அகத்துளே பொதிந்துபுட மாகரித்தி ருக்கவே
செகத்திலடங் காதவேதை சென்றிடுமண் நீரிலே
மகத்ததா னகாரமே லுரைந்தஉப்பு நின்றதே. (6)

உப்பில்நவச் சாரமேதா னொட்டியே பொடித்திடு
அப்பதுபி றக்கப்பீங் கானில்வைக்க நீரதாம்
தப்பிலாத காரமுஞ்சவ் வீரமுஞ் சரியதாய்
ஒப்பிலாகற் பூரமே யுலாவிபூதச் சுண்ணமே. (7)

சுண்ணமோடு வீரமும் சோமகாத சுண்ணமும்
எண்ணமீறு சாரமு மிடைசரியி டையதாய்
வண்ணமீற மாரியாம் வளங்குநீர் மகத்துவம்
எண்ணெனச் சரக்கெலா மிதிலேசுண்ண மாகுமே. (8)

சுண்ணம்பூரம் நீரிலே துவைத்தக்ராங் கட்டிடு
எண்ணமாமச் சீனமு மிதிலேவைக்க நீரதாம்
வெண்ணவேக வீரமும் விளங்குபூரம் நீரிலே
கண்ணவாட்டி நீயுஞ்சவுக் காரமீதி லப்பிடே. (9)

அப்பியேநீ யனலிலே வாட்டஎண்ணெய் கக்கிடும்
உப்புநீரும் பூரநீரும் உலாவியேபின் னுப்பிலே
செப்புமித் தழலிலே சென்றுநன்றா யூதவே
அப்புநால்வ ழலைச்சுண்ண மாகிவெள்ளை யானதே. (10)

வெள்ளையான வழலையில் மீறுங்கார மேத்தவே
உள்ளியசவ் வீரசுண்ண முப்புணாத சுண்ணமும்
வெள்ளைசீனஞ் சுண்ணநீர் வெள்ளைவைத்த சாரநீர்
வள்ளவேகல் வத்திவிட்டு மருவவே யரைத்திடே. (11)

அரைத்திடு மருந்ததை அவ்வழலைக் கப்பியே
தரைக்கடங்கா வெயிலிலே தான்மயங்கப் போட்டிடு
உரைத்திடுநற் சுண்ணமாய் உத்தகார மேறியே
கரைக்குளடங் காதிது காரமிட்ட வழலையே. (12)

வழலையாட்டுப் பாரடா மகத்தாம்வேதை பாரடா
வழலைபட்ட யிடமெலாம் வாதவேதை நீரடா
வழலைபட்ட விடமெலாம் வலியுமே சரக்கெலாம்
வழலைபோட்டு மணிகளோசை மணிகனகக் குளிகையே. (13)

குளிகைகாண அட்டசித்தி கொண்டேயோடுங் கவுனமே
குளிகைசார ணைகளல்லோ குலவுமிக் குளிகைதான்
குளிகையட்ட லோகருக்குக் குலாவியே பழுத்திடுங்
குளிகைகையில் வாழவே கோடிசித்து மாடுமே. (14)

அடிகளான யேமவித்தை அன்புட னுரைக்கிறேன்
துடிவழலை நீரிலே துவைத்தொரு துருசது
வடிவுசுத்த வெள்ளையாம் மாலின்தேவி சுண்ணமாம்
கடினவங்க வீரமுங் கலக்கவெள்ளை நீரிதே. (15)

நீருவங்கம் நிமிளைசுண்ணம் நீறிதங்கச் சுண்ணமாம்
நீருதங்கம் நீறியே நிலைத்ததோ ரகத்திலே
நீருசூத வீரனை நிசமதிலே சுண்ணமாம்
நீருவீறு சூதமே லிங்கவெள்ளைச் சுண்ணமே. (16)

லிங்கத்தின்சுண் ணத்திலே நீறும்லோகச் சுண்ணமாம்
கங்கைபெற்ற லோகம்நீறுங் கைக்குருநா கத்திலே
தங்கமாத்து நூறதாம் சத்திபேதி யேதெனில்
தங்கமத்த தங்கமே சத்தபேதி யாகுமே. (17)

பேதியான பரிசனம் பேதியாசம் பேதியாம்
நீதியான வழலையாட்டு நிலைகளேது அவர்கள்தான்
வாதியான யெண்சரக்கு மாட்டலாம் வகையதாய்
சோதியான பூரணம் சொக்கியாடும் வழலையே. (18)

வழலைச்சுண்ணம் வழலையாலே மாட்டுகின்ற வுப்பினால்
வளமையான மேகநீர் மாதலொட்டு மாகநீர்
இளகியேகை முறையதா யிருந்தஉப்பு நீரிலே
வழலைசுத்தி வழலைசுண்ண மாட்டுசவுக் காரமே. (19)

காரமாம்வெங் காரமும் காரநீரிற் கூட்டியே
காரமேசெந் தூரமே கதித்ததோர்சு ரோணிதம்
வீரமேவு வேதையாம் வெங்கலமுந் தங்கமாம்
காரமேசெந் தூரநவ லோகமோடு தங்கமே. (20)

தங்கமது பத்தரை தங்கமாகு மப்பனே
லங்கநீரு துருசிலப்பி வாதஞ்சூதங் கட்டிடும்
சிங்கிகாக்கு மப்பனே சேருஞ்சார ணையதாம்
வங்கமேது மலைகளேது அந்தவேதை காணவே. (21)

காணவே புளியினால் கம்பிவெடி யுப்பினால்
தோணவேகல் லுப்பிதொன்று சூடனது காலிடை
வேணுநவச் சாரமொன்று வேதியாதடுக்கவே
ஊணவேபிங் கானில்வைக்க வுறுதியாகுஞ் சுண்ணமே. (22)

சுண்ணமேபீங் கானில்வைத்துப் பனியில்வைக்கத் தூணிநீர்
அண்மையாக ஆறுதர மிந்தவகை யப்பனே
வண்மையான நீரிலே வலுக்குமேவெங் காரமும்
உண்மையான சாரமும் உரைக்குமேயின் நீரிலே. (23)

நீரதான சாரநீர் நினைவுகொண்டு பாரடா
பாரமீது சத்தடா பராபரை வகுத்தது
சீருநீதி நீரடா சிறந்திருந்த கொங்கணன்
சேருநூற மாலமேறி சென்றுபாரு வேதையே. (24)

வேதைகாட்டக் கைமுறை வேணுமல்லோ பாரினில்
ஆதரவே நூலடா அறிந்துபாரு உண்மையாய்
ஒதியதோ ருப்பையெல்லாம் உமையாள்வந்து செப்புவாள்
ஆதியான பூரண மறிந்துபாரு சோதியே. (25)

சுந்தரானந்தர் முப்பு 25
முற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம் ந.ரா.ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
குமரன் துணை.

சுந்தரானந்தர் திருவாய்மலர்ந்தருளிய

பூஜாவிதி 37.

ஆதிபரா பரமான மூலநாயன்
அறுமுகவ னிருபதத்தை அன்பாய்ப்போற்றி
வீதிநடு வீதிதனில் நின்றசோதி
விளங்கிநின்ற சரஸ்பதியாள் பாதம்போற்றி
பாதிபிறை விமலருமை திருமாலோடு
பார்தனிலே லெட்சுமிப்தண் பாதம்போற்றி
சோதிமய மாகிநின்ற பூசைதன்னைச்
சொல்லுகிறேன் கணபதியின் பாதங்காப்பாம். (1)

கேளடா நவகோணந் தன்னைநன்றாய்க்
கீறுவே னாறுமுக பாதம்போற்றி
தாளடா யிடைரேகைக் குறுக்கேகீறி
சாற்றுகிறே னொருநெல்லு நீளமப்பா
வாளடா பிங்கலையின் ரேகைகீழே
வயணமாய் நாலுநெல்லு நீளங்கீறு
நீளடா சுழிமுனையின் ரேகைகீறி
நிகழ்த்துகிறேன் மூன்றுநெல்லு நீளங்கீறே. (2)

கீறியே யிடையிடையே ரேகைரெண்டுங்
கீழாகப் பிங்கலையின் மையங்கூட்டி
ஆறியே சுழிமுனையின் ரேகையின்கீழ்
ஆச்சரியம் கீழ் வாங்கிய மேலேயேத்தித்
தூறியே சுழிமுனையின் ரேகைரெண்டில்
திறமாகப் பாச்சியபிங் கலையைக்கேளு
மாறியே யிரண்டுநெல்லு நடுவேநிற்கும்
மைந்தனே யிரண்டுநெல்லுங் கடசிநிற்க. (3)

கடசிநெல்லும் நடுநெல்லும் பொருந்தும்மேலே
கடினமில்லை யென்றொருநெல் மேலேவைத்து
துடசியுடன் நெல்நுனியின் விரலையூன்றிச்
சுகமாகப் பிங்கலையின் கீழேவாங்கி
நடசியென்று சுழிமுனைமேற்பொருத்திவைத்து
நன்றாகக் கீழ்வாங்கி நிற்கரேகை
விடசியடா பிங்கலையின் ரேகையொன்று
விதமாக அதையுமிப் படியேகீறே. (4)

இப்படியே தான் வாங்கிச் சுழியின்கீழே
யிதமாக முன்ரேகை நடுவிலேத்தி
இப்படியே அதின்சரியாய் வாங்கிக்கொண்டு
யியம்புகிறேன் நுனிரண்டு மொன்றாய்ச்சேர்த்தால்
இப்படியே ஆனந்த நிர்த்தஞ் செய்வாள்
இதற்கீடு வுலகமெல்லாம் நலமோ யில்லை
இப்படியே கீறிலைந்து கோனஞ்ஞும் நவசியோணஞ் சூழ்ந்து
விருக்கும்நடு கோணமென்றே யியம்பக்கேளே. (5)

இயம்புகிறேன் நடுவீட்டிற் கிடையாம்வீட்டில்
என்மகனே மஞ்சலிடு பிங்கலையிற்கேளு
நயம்புகிறேன் பச்சையடா கீழாம்வீட்டில்
நன்றாக வெள்ளையிடு மூன்று மாச்சு
தயம்புகிறேன் மேல்மூன்றின் சிகப்புக்கேள்பின்
தயவாகக் கீழ்கறுப்பாய்ச் சாற்றிக்கொண்டு
வயம்புகிறேன் பஞ்சவர்ண மைந்துமாச்சு
வாகாகச அட்சரத்தை வகுக்கக்கேளே. (6)

கேளப்பா மேல்மூன்றில் நடுக்கோணத்திற்
கிருபையுடன் றிங்கிலியும் ஓம்மென்றுநாட்டு
நாளப்பா நாட்டினபின் கீழாம்வீட்டில்
நன்றாக நவ்விட்டுப் பிங்கலையிற்கேளு
வேளப்பா மகாரமிட்டுக் கீழ்மூன்றிற்றான்
வெகுசுருக்கு நடுவினிலே சிகாரம்போடு
ஆளப்பா வதுக்கிடையில் வகாரம்நாட்டு
அதினுடைய பிங்கலையில் யகாரம்போடே. (7)

போடுவாய் நடுவுடைய பிரகாரத்திற்
புகலுகிறேன் அங்கென்றும் உங்கென்றுந்தான்
ஆடுவாய் மங்கென்று மூட்டேயின்னம்
ஆச்சரியம் லாலீலூ வென்றுநாட்டு
ஈடுகிற நடுக்கோணத் தனக்குப்பின்பு
இயம்புகிறேன் ஐங்கோணந் தன்னைச்சுத்தி
ஆடுகிற திதனாட்டு கையிலாசமூர்த்தி
அடியேனுக் குரைத்தபடி அறைகிறேனே. (8)

அறைகிறேன் பானுவைப்போல் விருத்தமரண்டு
அப்பனே ஐம்பத்தி னொன்றையுந்தான்
வறைகிறேன் நாடிப்பின் னாலுவாசல்
வாகாக வாசலிரு வீதியாக
நிறைகிறேன் முன்ரேகை கதுரமாக
நினைவாகக் கீறியபின் நீதானங்கேளு
திறைகிறேன் நால்வாசல்முன்பதாகத்
தீர்க்கமாய் கொடிக்கம்பம் போலேநாட்டே. (9)

நாட்டியே நுனியதனிற் சூலம்போட்டு
நலமாகச் சிங்கென்று மங்கென்றிட்டு
ஆட்டியே யின்னமொரு சேதிதன்னை
அப்போதே சொல்லிவிட மறந்துபோனேன்
சூட்டியே அக்ஷரங்க ளிட்டதெல்லாம்
சுகமாக வதன்கீழே சிகாரமிட்டு
மாட்டியே அக்ஷரத்தைச் சுத்திவாங்கி
வளையத்தி ளிடைதனிலே சிங்குவங்கே. (10)

வங்கவென்று இருபுறமும் வைத்தபின்பு
வாகாக இருமுலை நாலிற்கேளு
சிங்கென்று கணபதியும் வீரபத்திரன்
திறமான தெக்ஷ்ணா மூர்த்தியோடு
வங்கென்று சுப்பிர மணியரோடும்
வாகாக உள்மூலை நாலிலேயும்
அங்கங்கே அவர்களையும் வைத்துப்பூசி
அப்பனே வெளிமூலை நாலிற்கேளே. (11)

கேளப்பா வயிரவனுஞ் சண்டிகேசன்
கிருபையுள்ள இந்திரனும் கந்தனையுந்தான்
ஆளப்பா வைத்துப்பூ சித்தபின்பு
நலமாக அஷ்டகெஜ மஷ்டநாகம்
வாளப்பா அஷ்டசித்தி அஷ்டபாலாள்
வரிசையுள் அஷ்டவசு அஷ்டமூர்த்தி
நாளப்பா யிவர்களுட பீசம்போட
நவிலுகிறே னென்னுடைய தீகைஷபாரே. (12)

பாரடா என்னைப்போ லாருஞ்சொல்லார்
பரிவாகச் சொன்னதென்ன குருவேசொல்லும்
வீரடா காயத்திரிபிரா ணாயத்தோடு
விதமாகக் கற்பங்கள் கொள்ளும்மார்க்கம்
தூரடா புவனையுட ஆட்டத்தோடு
சுகமான தீகைஷயொன்று சொன்னேன்பாரு
ஆரடா யிவ்வளவும் வெளியாய்ச்சொன்னார்
ஆச்சரியஞ் சித்தர்சொல்ல வில்லைத்தானே. (13)

தானென்ற யென்னூலைப் பார்த்துபீசம்
தப்பாமற் போட்டுநடு கோணத்திற்கேள்
வேனென்ற உகாரமிட்டுச் சுழித்துக்கீழே
விதமாகச் சுழித்துசுத்தி வளைத்துக்கொண்டு
ஊனென்ற சிங்குவங்கு நாட்டினாக்கால்
உலகமெல்லா மப்பனே இதுவேயாச்சு
தோனென்ற சத்திசிவ மிதுவேயாச்சு
பதிவாக இதுபோலே பகரலாச்சே. (14)

ஆச்சப்பா யின்னமுங்கேள் நடுக்கோணத்தில்
ஆதிசிவன் சாம்பவியைப் பதித்தபின்பு
பேச்சப்பா யினியேது ஒன்றுமில்லை
பெருமைமெத்த தாயையும் பூசைசெய்ய
பாச்சப்பா தகடதுதான் கனகம்நன்று
பண்பாக யில்லாட்டாற் செம்பாற்செய்து
வீச்சப்பா ஆகாது யெட்டுவிரல்நீளம்
விதமான அகலமது அளவுதானே. (15)

தானேதான் செய்துகொண்டு நடுக்கோணத்தில்
தயவாகப் பணவிடைதங் கத்தைவார்த்து
வேனேதான் அக்ஷரங்கள் வரைந்தபின்பு
விதமாகப் பூசைசெய்ய வித்தைகேளு
தேனேதான் பூசைமடம் முகம்வடக்குச்
செய்துகொண்டு மேற்கட்டும் விதானஞ்செய்து
மானேதான் நாற்காலிக் கட்டில்போட்டு
மவுனமுடன் மெத்தைவிரித் தொலுகுபோடே. (16)

ஒலுகிலே தாயைநீ பூசைசெய்ய
ஓதுகிறேன் யென்மகனே உறுதியாகச்
சிலுகிலே நாலுவித சாதியுண்டு
செப்புகிறேன் பதுமினிசித் தினியும்நன்றாய்
மலுகிலே சங்கினியத் தினிதானப்பா
வாகாகப் பத்மினியே மெத்தநன்று
குலுகிலே சித்தினிதா னிரண்டாம்பக்ஷம்
குறிப்பான சங்கினியத் தினித்தான்காணே. (17)

காணடா அத்தினிதான் சரியைக்காகும்
கருவான நாலுவகை சாதிக்குள்ளே
பூணடா சங்கினிதான் கிரியைக்காகும்
புதுமையுள்ள அத்தினிதான் சரியைபூசை
நாணடா சித்தினிதான் யோகபூசை
நன்றாகப் பதுமினியே ஞானபூசை
ஆணடா கிடைத்தாலிப் படியேபண்ணு
அரகரா கிடையாட்டா லொன்றென்றெண்ணே. (18)

எண்ணினா லொன்றாச்சு உலகமெல்லாம்
இனிப்பூசை பண்ணுகிற வரிசைகேளு
அண்ணினால் நாலுவகைச் சாதிக்குள்ளே
அகப்பட்ட பெண்களுக்கு ஸ்நானஞ்செய்து
நண்ணினால் தேகமெல்லாம் நீர்விட்டாட்டி
நன்றாகப் புனுகுசந் தனஞ்சவ்வாது
பன்னீரி னாற்குளப்பித் தேகமெல்லாம்
பண்பாகப் பூசியே பட்டுக்கட்டே. (19)

கட்டியபின் மெத்தையின்மேற் குனியவைத்து
கருத்திலே வேறுசிந்தை வையாமற்றான்
தட்டியபின் ஒருமனதாய் மவுனமுன்னித்
தனதான அம்பிகையே தாயேதேவி
நட்டியபின் சாம்பவியே உமையேயென்றும்
நன்றாகப் பூரணிகா ரணியேநீவி
வட்டியதோர் வல்லபையே பிரமன்பாரி
வரிசையுள்ள சரஸ்பதிலட் சுமியையெண்ணே. (20)

யெண்ணவே ருத்திரியே மாயோன்பாரி
யென்தாயே மயேஸ்பரியே மனோமணீயே
உண்ணவே லக்ஷ்மியாந் தேவிபம்மாள்
உருமையுடன் துளபமதி லிருந்ததேவி
எண்ணவே வேணுமடா சிந்தைதன்னில்
இதமாக அவளிடத்திற் செலுத்தவேணும்
கண்ணவே நவரத்தின முடிகிரீடம்
காதிற்குண் டலமணிந்து மஞ்சம்மேலே. (21)

மஞ்சத்தி லரனிருக்கும் மஞ்சத்தின்கீழ்
மகத்தான தேவரொடு முனிவர்சூழத்
தஞ்சத்தி லரன்மடியி லிருந்ததாயே
சச்சிதா னதியருள் பெற்றதாயே
கஞ்சத்தி லுமைமாதே ரணியேதேவி
கருணைபெருஞ் சச்சிதா னந்தத்தாயே
துஞ்சத்தி லாதார சத்தியென்றும்
சுருக்காக ஒருமனதாய்க் கூவுகூவே. (22)

சுருக்காகக் கூவியபின் சொல்லக்கேளு
சுகமான தேன்நெய்சக் கரையினோடு
மருக்காகக் கரும்பஞ்சாறுமாம் பழத்தினோடு
மைந்தனே வஸ்துவரைப் படியும்விட்டு
பருக்காகப் பொரிக்காரச் சுண்ணம்போடு
பசுவின்பால் புழுகுடனே பூரஞ்சேர்த்து
உருக்காகத் தற்சனையிற் றோய்த்துக்கொண்டு
உத்தமனே திரிகோணத் துரைக்கச்செய்யே. (23)

செய்யவே கரிகரணங் காமகளையூருந்
தேதனை பிடித்துவைத்துப்பீங் கானில்வாங்கு
வெய்யவே மடல்பழந் காழம்பூத்தூள்
விடத்தலைவேர் பிரண்டைகனி தேனாலாட்டி
பையவே உந்தியிலே தடவிக்கொண்டு
பராபரைக்குக் கரிகரணஞ் செய்யும்போது
மையவே ஆரோடும் நாற்காலிக்குள்
வாங்கிவைத்துத் தீபமுதல் தூபங்காட்டே. (24)

காட்டியே யரவுயிடம் நீர்விட்டாட்டி
கமலமென்ற சுகந்தபரி மளங்கள்தூவி
கூட்டியேது வாலையுட பட்டுவஸ்திரங்
குணமாகக் கட்டியபின் பாதபூசை
நீட்டியே சொல்லுகிறேன் திறந்துநன்றாய்
நினைவாக அவளுக்கா பரணம்பூட்டி
ஆட்டியே ஆயிபெரு விரலதன்னில்
அன்பாக மனதைவைத்து அப்பாற்கேளே. (25)

கேளடா சொல்லுகிறேன் நினைவாயப்பா
கெடியான பீங்கானில் போதந்தன்னை
ஆளடா நீயெடுத்துத் தாய்கையீய்ந்து
அவள்கொங்கை நடுவேந்தச்சொல்லிப்பின்பு
நாளடா வஸ்துவுட சாபம்நீக்கி
நன்றாக உன்கரத்தில் வாங்கிக்கொண்டு
மூளடா வாலைமந் திரத்தையுன்னி
முன்குருவுக் கீய்ந்தபின்பு வாலைக்கீயே. (26)

ஈயடா அவள்தனக்கு யிய்ந்தசேடம்
என்மகனே மிச்சமெல்லா முண்டாயாகில்
தூயடா கயிலாச தேகமாச்சு
சுகமாகப் பாங்குபெறக் கொண்டாளையா
வாயடா வாங்கென்று மிச்சமுன்டால்
மருவினதால் சதாசிவத்தின் பூசையாச்சு
மாயடா யினிவேறே பூசையில்லை
மைந்தனே யிப்பூசை ஆதியாமே. (27)

ஆமப்பா பூசைசெய்துஅவள் முன்பேநீயும்
அன்னமொடு பலகாரம் வைத்தபின்பு
நாமப்பா சொன்னபடி யொளித்தான்காண்
நன்றாகப் புருவமையம் பார்க்கச்சொன்னேன்
தாமப்பா நவகோணத் தகடுதன்னை
தப்பாமற் கடிதடத்தில் வைத்துப்பூவால்
காமப்பா அர்ச்சி த்துபின்பு நீயும்
கலியாணி பெருவிரலில் மனத்தைவையே. (28)

வையடா பலநினைவைவிட்டு வோர்நினைவாய்
மந்திரத்தை ஓதிடவே வரிசைகேளு
பொய்யடா சொல்லவில்லை என்தாய்தீக்ஷை
பூட்டினேன் தனியிருந்து லெக்ஷந்திரு
மெய்யடா உருவேறுமட்டுங்கேளு
வித்மாக யிடக்கண்ணில் உகாரம்நாட்டி
நெய்யடா வலக்கண்ணில் அகாரம்நாட்டிநீ
நீயடா புருவமத்தி நிலையைநாட்டே. (29)

நாட்டியே மவுனமுன்னி தீக்ஷையோதி
நன்றாகப் புருவமையம் பார்க்கப்பார்க்கக்
கூட்டியே உருவேறுமட்டும் நன்றாய்
கூர்ந்துபார் கோடிரவி கோடிபானு
மாட்டியே ஒளிகாணும் ஒளியிற்சென்று
மைந்தனே யீராறு தலமுங்காணும்
தாட்டியே தலங்கண்ட போதுதானே
சகலசித்தி யாகுமடா சார்ந்துபாரே. (30)

பாரப்பா யோகசித்தி குளிகைசித்தி
பண்பாக வாதசித்தி காயசித்தி
ஆரப்பா அஷ்டகன்மஞ் சித்தியாகும்
ஆச்சரியந் தாயுடைய பெருமையாலே
கூரப்பா அவள்முன்வைத் திருந்தஅன்னம்
கொடிமையுள்ள கரிபதார்த் தங்களெல்லாம்
வாரப்பா தள்ளிமுறைப் பிள்ளைகூட்டி
வயணமாய் ஒருமனதாப் பொசித்திடாயே. (31)

பொசித்தல்லோ தகடதிலே மாளாச்சித்து
புதுமையுள்ள தூபமுதல் தீபங்காட்டி
வசித்தல்லோ வசியென்று தகடெடுத்து
மைந்தனே தினம்பூசை பண்ணக்கேளு
கசித்தல்லோ முன்செபித்த தீட்சைதன்னை
கருவாக நூற்றெட்டு உருச்செபித்து
பொசித்தல்லோ பூரணத்தி லன்புவைத்து
புதுமையுடன் யென்மகனே பூசிப்பாயே. (32)

பூசிக்கும் போது ஒருமுறைமை கேளு
புதுமையுள்ள உலகமெல்லா மகண்றபோது
ஆசிக்கு முபசாரஞ் செய்துநிற்பர்
அன்பாகப் பெண்கள்வந்து அணுகவென்பார்
நாசிக்கும் அவர்களைநீ யணுகவேண்டாம்
நன்றாகத் தாய்சொன்ன படியேசொன்னேன்
வாசிக்கும் பூசைசெய்யா விட்டால்
வாயாது காயசித்தி வாயாதென்னே. (33)

வாயாது தேவருக்கும் ரிஷிகளுக்கும்
மைந்தனே மும்முர்த்திதனக்குங்கூட
வாயாது பூசையிது யுனக்குமைந்தா
வாங்கிவிட்ட குறயையாலே வந்துவாய்த்துதப்பா
வாயாது ஒருநாளும் மனிதற்கையா
மகத்தான பூசையிது கிரியைபூசை
வாயாது யென்றுசொல்லி விட்டிடாதே
மறவாமற் சிவயோகி மருவிப்பாரே. (34)

மருவிப்பா ரிப்பூசை முன்னேசெய்து
வகையாகக் கிருபையையே காந்தம் பார்த்து
உருவிப்பா ரிதுக்கெல்லா முன்னேசெய்ய
ஒகோகோ சரியையுட விபரங்கேளு
கருவிப்பார் சித்தர்சொன்ன தீட்சைமார்க்கம்
கருணையுடன் உருச்செபித்தால் கரியையாகும்
தருவிப்பா ரதன்பிறகு கிரியைபூசை
தப்பாமற் செய்தபின்பு யோகம்பாரே. (35)

போகத்தைப் பார்த்தபின்பு கற்ப முன்னு
ஒழுங்காக அறுசுவை மகற்றிப் போடு
வேதத்தைப் பார்த்துவிட்டு யோகம்பாரு
பொலிவான சோம்பல் நித்திரையே வேண்டாம்
பாகொத்த கொங்கணரும் எந்தன்தந்தை
பாடினா ரிருவரு மொன்றுபோல
சேகொத்த அம்முறைக்குக் கற்பங்கொண்டு
செகசால மார்க்கமெல்லாஞ் சேரத்தள்ளே. (36)

தள்ளியே மலைகளிலே செல்வதற்குச்
சாரனைக்கு யேத்ததொரு குளிகைபண்ணி
அள்ளியே மலைகளிலே நடந்துதெக்ஷ
ணாமூர்த்தி பொதிகைதனிற் கண்டுசேவி
மள்ளியே நானிருந்தேன் மகேந்திரத்தில்
மைந்தனே வந்தென்னைக் கண்டுசேவி
வள்ளிதனை யுனக்களிப்பேன் வாழ்வையீவேன்
மகத்தான நவகோணப் பூசைமுற்றே. (37)

சுந்தரானந்தர் புஜாவிதி 37.
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சிவகுருநாத பிள்ளையவர்கள் குமாரர் செல்லம்பிள்ளை யவர்களிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
குருவேதுணை.

சுந்தரானந்தர் திருவாய் மலர்ந்தருளிய

வாக்கிய சூஸ்திரம் 64.

ஆதியென்ற சட்டைமுனி பதத்தைப்போற்றி
அறிவாகச் சூஸ்திரந்தா னாறுசொன்னேன்
காதியென்றன் குருநாதர் மரபுக்குள்ளே
கனமான யென்குருவு மனேகஞ்சொன்னார்
வீதியென்ற பூரணமுங் கணேசன்பாதம்
விரிவாகத் தான்போற்றிப் பிரிவாய்ச்சொன்னேன்
போதியென்ற குருபற்ப வகையைச்சொல்வேன்
புகழாகத் தேவியைத்தான் போற்றிக்கேளே. (1)

கேளப்பா நாலுவகை பாதந்தொட்டுக்
கெடியாக வதினாலே சித்தர்கோடி
ஆளப்பா வெகுகோடி நூலைச்சொன்னார்
ஆருக்குங் கிட்டாது யெந்நூலையா
வேளப்பா சித்தருடன் வாதுசெய்து
வெற்றிகொண் டிந்நூலைச் சொன்னேன்சொன்னேன்
வீளப்பா கெடுகாதே காயசித்தி
மேன்மையுள பராபரத்தை மேவிப்பாரே. (2)

பாரப்பா ஞானம்வந்த தென்றுபேசி
பகர்சீமை பெண்டுபிள்ளை தன்னைவிட்டு
ஊரப்பா பெரியோரை யெண்ணாமற்றான்
உலகத்தே நான்பெரியோ னென்றுபேசி
சேரப்பா போட்டுவிட்டுத் திரிவான்பாவி
சிரத்தைகெட்ட மாடென்று தேர்ந்துபாரு
மேரப்பா சட்டைமுனி பதத்தைப்போற்றி
மேவியதோர் குருவையினிச் சொல்லக்கேளே. (3)

கேளப்பா நாலோடு மூன்றுகூடன்
　　கெடியான மூன்றோடு வகையைக்கேளு
ஆளப்பா மூன்றாக நின்றசோதி
　　ஆனந்த பூரணமென் றறிந்தபாரு
வீளப்பா பற்பகுரு விதுவேபோக்கு
　　மேலான பெரியோர்கள் செய்வதப்பா
தாளப்பா வுலகத்திற் கண்டபேர்கள்
　　சமரசமாய்ப் பதினொன்று கண்டுகொள்ளே. (4)

கொள்ளப்பா யிதன்மேலே கவசங்கேளு
　　கொடியான கெந்தியொடு படிகியாகும்
வில்ளப்பா வழலையுடன் மெழுகுங்கூட்டி
　　விதமாக அரைத்ததனைக் கவசங்கட்டு
கள்ளப்பா குருவானாற் சொல்லார்சொல்லார்
　　கருத்துடனே நீயுமதைக் கண்டுபாரு
அள்ளப்பா யெனைப்போலே சித்தர்சொல்லார்
　　அதினாலே யெங்கள்மேற் பகையுமாச்சே. (5)

ஆச்சப்பா யெங்களையா சொன்னூல்தான்
　　ஆருக்குங் கிட்டாது அறிந்துபாரு
வீச்சப்பா யெண்ணாதே விட்டகுறையாலே
　　மேலான தவத்தோர்க்குக் கிட்டுங்கிட்டும்
மாச்சப்பா குருபதத்தைத் தேடுதேடு
　　மதியான பிள்ளையென்றாற் கண்டுகொள்வாய்
போச்சப்பா குருவையெங்கே தேடவென்றாற்
　　பொய்யாகிப் போவாய்நீ புகழ்ந்துபாரே. (6)

பாரப்பா செந்தூர முறைமைகேளு
　　பரிவாக வென்குருவு மெனக்குச்சொன்னார்
மேரப்பா யிதுவுனக்குப் பீசகோசம்
　　மேற்சாரத் தின்நீரா லரைத்துக்கொண்டு
ஆரப்பா எணாதுகுடோ ரிக்குப்பூசி
　　யானதொரு ரவியதனிற் போடுபோடு
வேரப்பா சேர்த்தந்தக் குடோரிகட்டு
　　மேலான பட்சத்தி லறிந்துசேரே. (7)

சேரப்பா பிரமாவின் தேவியோடு
செயலான மாலுடைய தேவியோடு
மாரப்பா ருத்திரனாந் தேவியோடு
மகத்தாக மூன்றுயினங் கூட்டிவெண்ணெய்
வேரப்பா விட்டரைத்துக் கலத்திலப்பி
மேலாக ரவியில்வைக்கத் தயிலமாகும்
பேரப்பா யிதையெடுத்துக் குடோரிக்கீயப்
பேரான தயிலமெல்லா முண்ணுந்தானே. (8)

தானென்ற தயிலத்தை யுண்டபின்பு
சாதகமாய் விற்பனனை யரைத்துப்பூசித்
தேனென்ற மொழியுடையாள் சொன்னவித்தை
சிவசிவா நாதாக்கள் சொல்லார்சொல்லார்
வானென்ற குருபிலத்தி னாலேசொன்னேன்
வாகான் பெரியோரே மகிழ்த்துபாரும்
வேனென்ற சிவஞானக் குருவேஐயா
மேலான சீனச்சுண் ணத்தில்வையே. (9)

வைத்துடனே கலந்தெரிசெந் தூரமாகும்
மகத்தான வித்தையடா மைந்தாபாரு
தைத்ததுடனே யெடுத்துநவ லோகத்லுள்ளே
சாதகமா யைம்பதுக்கொன் றிடவேதங்கம்
ஐந்துடனே யிந்தவித்தை யாதியாதி
அப்பனே லோகத்துக் காகக்சொன்னேன்
பைத்துடனே யென்சொன்னா யென்றாரையர்
பரிவாகக் கேட்டதற்குப் பயந்திட்டேனே. (10)

பயந்திட்ட வகையறிந்து குருநாதன்றான்
பரிவாகச் சுந்தரமே வாவாவென்று
அயந்திட்டா யெனச்சொல்லி முதுகைத்தட்டி
அன்பாக நம்முடைய மரபுக்குள்ளே
உயர்ந்திட்ட துன்னையல்லால் வேறேயுண்டோ
உத்தமனே ரிஷிகோடி சித்தர்கோடி
பயந்திட்டார் கொங்கணவ ரென்றுசொல்லிப்
பரிவாகச் சிலம்பொலியைப் பாரென்றாரே. (11)

பாரென்ற சொற்கேட்டு அடியேன்றானும்
பரிவாகச் சிலம்பொலியைப் பார்க்கவென்று
காரென்ற கமலினியாஞ் சொரூபத்தோடு
காரணமா யண்டமுத லேறிப்பார்த்தேன்
வாரென்ற கொங்கணவர் வல்லமைக்கு
மகத்தான சித்தனப்பா போகர்பிள்ளை
தாரென்ற சமர்த்துடையா ரானதாலே
சகலசித்து மவருக்குள் ளாச்சுஆச்சே. (12)

ஆச்சப்பா சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
அறிவாகக் கருவெல்லா முறைப்பேனையா
வாச்சப்பா சவுக்கார மில்லாவிட்டால்
வாகான சரக்கெல்லாம் மண்ணாய்ப்போகும்
வீச்சப்பா வுப்பைவிட்டா லொன்றுமில்லை
வேதையும்நீ யரிதரிது காணமாட்டாய்
காச்சப்பா சொன்னதெல்லாம் நினைவாய்ப்பாரு
காரணமாய்ச் சொன்னதொன்றும் வழிதப்பாதே. (13)

தப்பாதே யின்னமொரு வித்தைகேளு
சாதகமாய் மடையனுட வகையைச்சொல்வேன்
செப்பாதே செந்தூர மாதியையா
செகஜால மாடுதற்குத் தாய்தான்சொன்னாள்
ஒப்பாதே குமரியுட சாற்றிலப்பை
யுறவாக வரைத்துநன்றாகப் பூசிப்போடு
உப்பாதே உமித்தீயிற் புடத்தைப்போட
உத்தமனே கட்டிப்போம் மடையன்தானே. (14)

தானென்ற திரிகோணத் தயிலமூட்டிச்
சாதகமாய் விற்பனனைக் கூடச்சேர்த்து
வானென்று வரைத்துருட்டிச் செம்புக்கீய
மகத்தான வராகனுட மாத்துக்காணும்
தேனென்ற காரம்விற் பனனைப்பூசிச்
சீனத்தில் வைத்தெரிசெந் தூரமாகும்
கோனென்ற வாதியடா யிந்தவித்தை
கூறினேன் பூரணத்தின் வழியைக்காணே. (15)

காணப்பா யின்னமொரு வித்தைசொல்வேன்
கனமான மூலகுரு வெனக்குச்சொன்னார்
பூணப்பா வெடியுப்பும் புளியுங்கூட்டிப்
புகழாகத் தீக்கொளுத்தச் சுண்ணமாகும்
வாணப்பா பனியில்வைக்கச் செயநீராகும்
மகத்தான சீனத்தி லூத்திப்பாரு
வீணப்பா பெண்ணாதே சுண்ணாம்பாகும்
விரிவாக யிதுதனையுஞ் சொல்லக்கேளே. (16)

கேளடா வுலகத்திற் செய்வதெல்லாம்
செடியாக வீரைந்து மாத்தேயாகும்
நாளடா தேவியைத்தான் பூசைபண்ண
நலமாகக் கொடுப்பளையா தேவிதேவி
வேளடா சீனத்தில் வீரத்தாட்டி
வேதாந்தத் தாளகத்திற் பூசிப்போடு
ஆளடா ஐங்குகையி லூதிப்போட
அப்பனே சுண்ணாம்பாம் தேவிதானே. (17)

தானென்ற மாலுடைய தேவிதன்னை
சாதகமாய் வீரமிட்டு ஆட்டிக்கொண்டு
வானென்ற வங்கத்திற் பூசியாட்டு
வாகாகச் சுண்ணாம்பாம் மைந்தாமைந்தா
தேனென்ற சுண்ணத்தில் வீரத்தாட்டித்
தேவியென்ற நிமிளையிலே பூசியாட்டு
ஆனென்ற நிமிளையது சுண்ணாம்பாகும்
அப்பனே நன்றாக வறிந்துகொள்ளே. (18)

கொள்ளடா நிமிளையிலே வீரந்தன்னைக்
குணமாக வரைந்துநன்றாய்ச் சாரத்தப்பி
விள்ளடா சாரத்தைங் குகையிலூத
விரிவாகச் சுண்ணாம்பாம் அறிந்துபாரு
தெள்ளடா சாரத்தில் வீரத்தாட்டிச்
சினத்துடனே பரங்கிக்குப் பூசிப்போடு
அள்ளடா ஐங்குகையிற் புடத்தைப்போட
அரகரா சுண்ணாம்பா மறிந்துபாரே. (19)

பாரப்பா பறங்கிக்கு வீரத்தாட்டிப்
பரிவாகத் துருசுக்கு அப்பிப்போடு
நேரப்பா ரவிபடவே சுண்ணாம்பாகும்
நேராக வெகுசுருக்கு சுண்ணாம்பாகும்
வேரப்பா வாதத்துக் கிதுவேயாதி
விரிவாகப் புழுகிட்டுச் சீனஞ்சேர்த்துத்
தாரப்பா வீருமிட்டுத் தாரத்தப்பு
சார்வாக ரவிபடவே சுண்ணமாமே. (20)

ஆமப்பா பார்த்ததில்லை யிந்தப்போக்கு
அறிவாகத் தன்மையிலே சுண்ணாம்பாகும்
வேமப்பா தாரத்தில் வீரத்தாட்டி
வேரான வங்கத்திற் பூசியாட்டு
வாமப்பா வங்கமது மலரும்பூப்போல்
மைந்தனே யிதுக்கிடைதான் சாரமூட்டு
சேமப்பா பார்க்குமுன்னே செயநீராகும்
சிவசிவா யென்னசொல்வேன் சிங்கத்தாட்டே. (21)

ஆட்டான சிங்கமென்ற செயநீர்தன்னை
யானையென்ற சூதத்தில் விட்டுப்பாரு
போட்டான தோசையைப்போற் கட்டிப்போகும்
பொறிவாக யிதையெடுத்து வுருக்கிப்பாரு
தேட்டான காரமிட்டு வூதுவூது
சிவசிவா மணிபோலே நின்றேஆடும்
தாட்டான வித்தையதி லனந்தங்கோடி
சதாசிவன்மேல் நின்றாடுந் தாக்கிப்பாரே. (22)

பாரப்பா வீரமொடு புழுகுசீனம்
பரிவான வழலையுடன் சுண்ணம்போடு
தேரப்பா வெண்கருவா லாட்டிவில்லைச்
சினக்கவொரு ஐங்குகையிற் புடத்தைப்போடு
ஆரப்பா வுனக்கெதிரே வாதமாட
அரகரா சூதம்விட்டால் வர்னம்போச்சு
ஊரப்பா தேவியுட பதத்தைப்போற்றி
உரைக்கிறேன் தூமத்தை யுரைக்கிறேனே. (23)

உரைக்கிறேன் கண்ணத்தில் வீரத்தாட்டி
உத்தமனே பரித்தகட்டிற் பூசிப்போடு
அரைக்கிறதோ ரஞ்சுசுண்ணக் குகையிலூத
அரகரா சுண்ணாம்பாம் வேகம்மெத்தப்
பரைக்கிறதோர் வீரமிட்டு அண்டத்தப்பா
பரிவாக மெழுகாகும் வேதைகோடி
விரைக்கிறதோர் தூமத்தில் வேதைகோடி
வீசுகிறே னுலகத்தில் வீசுவேனே. (24)

வீசுகிறே னுலகரெல்லாஞ் சித்தராக
வேதாந்த ஞானமெல்லாம் வெளியாய்ப்போகப்
பேசுகிறே னென்றசித்த ரேங்கிநிற்கப்
பிரபலமாம் உலகமெலாம் பொன்னாய்ப்போக
ஆசுகிறே னென்றகுரு பதத்தைப்போற்றி
அறிவாக யின்னமொரு குருவைச்சொல்வேன்
வாசுகிறேன் மைந்தனேநீ வாய்பேசாதே
வழலையுட மார்க்கமது சொல்லுவேனே. (25)

சொல்லுகிறேன் சூட்சமா யாதிவித்தை
சுண்ணாம்புக் கல்லுபடி ரெண்டேயாகும்
மல்லுகிறேன் பூநீரு படிதான்நாலு
வாகான கல்லுப்புப் படிதான்ரெண்டு
வெல்லுகிறே னமுரிபடி யாறுவாரு
விரிவாகப் பின்பதிலே நாலுவாரு
அல்லுகிறே னஞ்சாநாள் பாருபாரு
அப்பனே தெளிவாக யிருக்குந்தானே. (26)

தானென்ற தெளிவுதனை மிடாவில்விட்டுச்
சாதகமாய்த் திமிரமிட்டுக் கடைந்தாயானால்
தேனென்ற நுரையாக நிற்குந்தன்னைச்
சிறப்பாக வகப்பைகொண்டு யெடுத்துக்கொண்டு
நேனென்ற கையதனா லெடுத்தாயானால்
நேரமில்லை யென்மேலே நெருப்பாய்வேகும்
கானென்ற கைவந்தாப் போலேயப்பா
கைவிட்ட சூஸ்திரம்போற் சரக்குவேமே. (27)

வேமப்பா நுரையிலேபோ கிறதைக்கேளு
விளங்கியதோர் சாரமொடு மூன்றுபோடு
ஆமப்பா காரமது வைந்துபோடு
அப்பனே வெடியுப்பு ரெண்டுபோடு
கோமப்பா வீரமொடு பூரம்போடு
குறிப்பான லங்கமொடு கண்டர்சுண்ணம்
போமப்பா போட்டதிலே அடுப்பிலேத்திப்
புகழாக யெரிக்கையிலே மெழுகுமாமே. (28)

ஆமிந்த மெழுகதனிற் காசுதூக்கி
அப்பனே வீரமிதிற் காற்சிலப்பு
ஓமிந்த விளக்கதனில் வாட்டுவாட்டு
உத்தமனே மணிபோலே யாடுமாடும்
வாமிந்தத் தங்கத்தைச் சுருட்டிவாங்கும்
வயிரம்போல் வேதையடா வர்னங்கோடி
ஆமிந்த மெழுகிலே யனந்தங்கோடி
அப்பனே சமுத்திரந்தா னடங்காவாறே. (29)

வாறான மெழுகொன்று சொல்லக்கேளு
மைந்தனே வெகுபோக்கு யென்னசொல்வேன்
பேறான அண்டமொன்று சீனமொன்று
பிரிவான சாரமொன்று காரமொன்று
காறான கல்லுப்பு ரெண்டரையுங்கூட்டிக்
கருதிடவே வெடியுப்புப் பலந்தான்போடு
பூறாவாய் வருக்கையிலே மெழுகுபோலாம்
பொருந்திடவே ரவியிலிட்டு வூதிப்போடே. (30)

போடந்த மெழுகெடுத்துப் பாறைவுப்பிற்
பூசியே ஊசரமும் உப்புநேரே
வோடந்த வோட்டில்வைத்துப் புடத்தைப்போடு
வுத்தமனே வயிரம்போ லிறுகிக்கிட்டும்
வாடாம விதையெடுத்துச் சுண்ணாம்பாக்கி
மைந்தனே வுப்பிலே வீரங்கூட்டிக்
கூடந்த வெண்கருவா லரைத்துக்கட்டிக்
கூர்மையாங் கரியோட்டி லூதிப்போடே. (31)

ஊதியதோர் சுண்ணாம்பு பலந்தானொன்று
வுத்தமனே சாரமொன்று காரமொன்று
காதியதோர் வீரமொன்று பூரமொன்று
கைமுறையா யரைக்கையிலே மெழுகுபோலாம்
சாதியதோ நவலோகம் நூறுக்கொன்று
தப்பாது மாற்றேது வென்றாற்கேளு
போதியடா மகமேரு திகட்டாதப்பா
புகழான பூரணமாம் புகழ்ந்துபாரே. (32)

பாரப்பா மவுனம்விட்டால் ஞானமில்லை
பரிவாக யெங்களையர் பரிந்துசொன்னார்
ஆரப்பா ஞானம்வே தாந்தமையா
ஆதிசத்தி யாதிசத்தி லகிரிக்குள்ளே
வேரப்பா மூலத்தில் உலகசத்தி
மெய்க்குருவோ வனந்தமடா கோடாகோடி
போரப்பா வெண்ணாதே மவுனவித்தை
புகழான பஞ்சிலிட்ட வன்னிதானே. (33)

வன்னியென்ற சரக்குடனே காலுங்கூட்டி
மத்தித்துச் சரக்கதனை யினத்திற்சேர்த்துக்
கன்னியென்ற நீருடனே வாய்வுங்கூட்டிக்
காரணமாய்ப் பிருதிவியுஞ் சலமுங்கூட்டி
மின்னியென்ற சரக்கெல்லா முப்பிற்சேரு
விதம்விதமா யினத்தோடே கட்டிப்போகும்
பொன்னியென்ற பீசமொடு சரக்கைக்கேளு
போடுவது வீரமொடு சுண்ணந்தானே. (34)

தானென்ற தாம்பூல மருந்தயிலேபூரம்
சமரசமாய்ச் சுண்ணத்திற் சேர்த்துக்கொண்டு
வானென்ற சதாசிவனைப் போற்றிசெய்து
வாகாக அமுதத்தை வூத்துவூத்து
தேனென்ற மொழிமடவாள் சொன்னதப்பா
சிவசிவா வென்சொல்வேன் சிவத்தைக்கேளு
கோனென்ற கொக்கிறகு சூடுநாதன்
குருபரனாந் திருநீல கண்டர்தானே. (35)

கண்டரொடு காரமொடு யினிமையோடு
காரணமா யிம்மூன்றுஞ் சரியாய்க்கூட்டி
விண்டரொடு செயநீரை விட்டுஆட்டு
விதவிதமா யொருசாமம் நன்றாய்க்கேளு
அண்டாம லரைத்துநன்றாய் வில்லைசெய்து
அடவாக ரவியதனிற் போடுபோடு
கொண்டாட வுணர்ந்தபின்பு அதன்மேற்கேளு
கொடிதான கவசத்தைச் சொல்வேன்தானே. (36)

தானென்ற கவசத்தைச் சொல்லக்கேளு
சதாசிவன்றான் சொன்னபடி சாத்துவேன்யான்
வானென்ற தேவியொடு பட்டியாகும்
வாகான அண்டத்தின் மெழுகுமாகும்
கோனென்ற சுண்ணமொடு நாலுங்கூட்டிக்
குறிப்பாக அமுதைவிட் டரைத்துக்கொண்டு
தேனென்ற சட்டைமுனி பதத்தைப்போற்றிச்
சிவசிவா வில்லைமேற் கட்டிப்போடே. (37)

போடப்பா ரவியதனிற் காய்ந்தபின்பு
புகழாகச் சொல்லுகிறேன் நினைவாய்க்கேளு
ஆடப்பா சூடனிலே யாட்டிக்கொள்வாய்
அரிதரிது சூட்சமதா யறிந்துகொள்ளு
வீடப்பா யிதுவுனக்குக் குபேரன்வீடு
வீணாகப் போகாமற் றாயைப்போற்று
கூடப்பா கூடழிந்து போகாமற்றான்
குருபற்பந் தினந்தின்று குணத்தைக்காணே. (38)

காணப்பா மண்டலத்திற் சித்தியாகும்
காணரிது பெரியோர்கள் சொன்னவித்தை
வீணப்பா யெண்ணாதே மூலநாயன்
விரைந்துமெத்தப் போற்றிசெய்து வாசியேறி
ஆணப்பா அறிந்துகொள்வாய் சித்தனாவாய்
அரகரா யென்னசொல்வே னாண்மைதள்ளு
தோணப்பா தோணரிது சொன்னேன்சொன்னேன்
சொற்பெரிய மூலகுரு சொன்னவாறே. (39)

சொன்னதொரு குருவையினி வேதைபோடச்
சொல்லுகிறேன் பூரணத்தின் தாயைப்போற்றி
வின்னமதா யெண்ணாதே வெள்ளிமேலே
விரைந்துநீ நூற்றுக்கு ஒன்றுபோடு
தென்னனடா மாற்றேது வென்றாற்கேளு
சிவசிவா ஆறரையாந் தேர்ந்துபாரு
கன்னமடா போடுதற்கு யிதிலேவித்தை
கலந்தேறக் கலந்தேற யின்னங்கேளே. (40)

இன்னமடா சொல்லுகிறே னிதனின்போக்கு
இக்குருவி லொன்றெடுத்து ரசத்திலூட்டுப்
பன்னமடா அரைக்கையிலே பதைத்துச்சாகும்
பரிவாக விந்துவிதிற் கட்டிப்போகும்
தன்னமடா யிதுவைத்துக் கொண்டுநீயும்
சார்வாகக் கற்பமுண்டு தேறுதேறு
இன்னமடா யிதனாலே வேதைகோடி
எந்நாளுஞ் சொல்லரிது நினைவாய்க்காணே. (41)

காணப்பா யிம்முறையை வகையாய்க்கேளு
காரணமாய்ப் பிருதிவியி லொன்றேயாகும்
மாணப்பா அப்புவிலே ரண்டேயாகும்
மகத்தான தேயுவிலே மூன்றேயாகும்
வாணப்பா வாயுவிலே ரண்டோடொன்று
வகையாக ஒன்பதுவும் நினைவாய்ப்பாரு
பாணப்பா பஞ்சபூதச் சரக்கைநீயும்
பரிவாக அறிந்துகொண்டு சரியாய்க்காணே. (42)

சரியாக ஆகரசச் சரக்கைக்கேளு
சார்வாக மூன்றுதா னறிந்துகொள்வாய்
அரியாக ஐயிரண்டில் ரண்டேயாகும்
அப்பனே குருவிதிலே யடங்கிப்போச்சு
கிரியாக யேழுவகை யோனிநாலாம்
செப்பாதே வழலையென்ற கண்ணமொன்று
வரியாக மழைமேகம் பொழிந்தாற்போல
வாகாகப் பயிர்தழைக்கும் மருந்துதானே. (43)

மருந்தென்ற சரக்கெல்லாம் பயிரதாகும்
வாகான சவுக்காரம் மழையதாகும்
வருந்தாமற் பயிர்களெல்லாம் வாடாமற்றான்
மவுனத்திற் றேவியைநீ பூசைபண்ணு
அருந்திடா யிக்குருவிற் பணந்தானென்று
அப்பனே மண்டலத்திற் சித்தியாகும்
வருந்தாமல் மண்டலந்தா னுண்டாயானால்
வாகான கற்பூரத் தேகமாமே. (44)

தேகமென்ற வுடனுக்கு ஞானம்வேணும்
சித்தாந்தம் வேதாந்தம் நோக்கம்வேணும்
தேகமென்ற உடலுக்குப் பூசைவேணும்
செபம்வேணுந் தபம்வேணும் எக்யம்வேணும்
தேகமென்ற வுடலுக்கு யோகம்வேணும்
சிறப்பாக வாசியென்ற குதிரைவேணும்
தேகமென்ற வுடலுக்குச் சித்திவேணும்
தெளிவாக வுப்பினுட கருவைக்காணே. (45)

காணரிய உப்பினுட கட்டைச்சொல்வேன்
காட்டாதே துஷ்டரென்ற சீடர்க்கெல்லாம்
பூணரிய வுலகத்துக் காகச்சொன்னேன்
போடடா விருதுநீ புகலக்கேளு
ஆணரிய ஆட்டெல்லா மையராட்டு
ஆனந்தக் கேசரியா மவுனத்தூட்டு
தாணரியச் சித்தரெல்லா மேங்கிநிற்கச்
சாற்றுகிறேன் கவலையறச் சாற்றுவேனே. (46)

சாற்றுகிறேன் சவுக்காரச் சுண்ணமொன்று
சாதகமாய் வீரமொன்று ரண்டுங்கூட்டிச்
சாற்றுகிறே னதுக்கிடையே சாரந்தன்னை
தனிக்கூட்டி யரைக்கையிலே சலமுமாகும்.
சாற்றுகிறேன் சலத்துள்ளே வீரம்பூரம்
சார்வாக அமுரியுப்புக் காலுங்கூட்டிச்
சாற்றுகிறேன் குளம்பாக்கி யுப்பின்மேலே
தயவாகப் பூசியிதை ரவியிற்போடே. (47)

போடப்பா மூன்றுதினங் காய்ந்தபின்பு
புகழாக அஞ்சுசுண்ணஞ் சாரங்கூட்டி
ஆடப்பா ஆட்டிமெள்ள வுப்புக்கம்பி
அறிவாக ரவியதனிற் போடுபோடு
தேடப்பா வுவரோடு உப்புங்கூட்டித்
திடமாகப் பொடித்துமதின் நடுவேவைத்து
வாடப்பா புடம்போடக் கட்டிப்போகும்
மகத்தான குருசொன்ன வாறதாமே. (48)

ஆமென்ற வுப்பெடுத்து வுருக்கிப்பாரு
அசமத்த பொன்போலே உருகியாடும்
தாமென்ற வுப்பதுவுங் கம்மிச்சானாந்
சலியாதே பின்னோருக்காற் புடத்தைப்போடு
வாமென்ற உப்புக்குப் பூசைபோடு
மகத்தான சின்மயத்தை மருவிக்காணும்
ஓமென்ற முத்துப்போற் கட்டிப்போகும்
உத்தமனே சித்தரெல்லாம் மகிழ்வார்தானே. (49)

தானென்ற மணியெடுத்துப் பார்க்கும்போது
தமரகத்தி னொலிபோல வெண்மைகாணும்
வானென்ற மணிபோலே யெங்குங்காணேன்
மகத்தான சித்தரெல்லாம் மயங்கினார்கள்
ஏனென்ற யென்குருவும் அருகழைத்து
இதமென்று ரகசியமாய்ச் சொன்னதப்பா
கானென்ற சித்தரெல்லா மெதிர்த்ததாலே
காரணத்தோர் மெச்சிடவே வீசிட்டேனே. (50)

வீசிட்டே னுலகமெல்லாம் வாதமாக
விரைந்துசித்த ருலகத்தே மெத்தவாக
வீசிட்டேன் சொல்லாத கருவையெல்லாம்
வீணருட வாய்தனிலே மண்ணைப்போட
வீசிட்டேன் சின்மயத்தைப் போற்றிசெய்து
மிக்கான குருவையெல்லா மினத்தோடப்பா
வீசிட்டேன் தூமமுதல் வேதைகோடி
விரிவாக யினத்தையின்னஞ் சொல்லக்கேளே. (51)

கேளப்பா மணிபோலே பூசவையா
 கெடியான வீரமொடு பூரம்ரெண்டும்
நாளப்பா நாலிலொன்று புழுகுங்கூட்டி
 நலமான வெண்கருவா லாட்டிக்கொண்டு
வாளப்பா மணிபோலே பூசிப்போடு
 வாகாக ரவியதனி லுலர்ந்தபின்பு
ஆளப்பா அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
 ஆட்டிமெள்ள லூதிடவே சுண்ணமாமே. (52)

சுண்ணமடா சொல்லுகிறே னையாகேளு
 சுழியாகத் துறையொன்று சூட்சமாக
வண்ணமடா சரியிடையாய் ரசமுங்கூட்டி
 வாகாக அரைக்கையிலே மாண்டுபோகும்
முன்னமடா அதையெடுத்துக் காரங்கூட்டி
 முறையாக மத்தித்துச் சவாதுசேர்த்து
இன்னமடா சொல்லுகிறே னிதையெடுத்து
 இதமாகச் சரக்கதனி லூட்டிப்பாரே. (53)

பாரடா சரக்கதனிற் குருவையூட்டப்
 பரிவாக மணிபோலே நின்றேஆடும்
வாரடா சுண்ணாம்புக் கருவாம்வீரம்
 வகையாக அறிந்தவனே வாதிவாதி
தாரடா அதன்கீழே உப்பேபாதம்
 சமரசமாய் முடிவையினி சொல்லக்கேளு
வேரடா மூலமது முடிவுமாகும்
 வெட்டவெளி சவுக்காரம் விளம்பினேனே. (54)

விளம்பினேன் சவுக்காரத் துறையைக்கேளு
 விளங்கியிதி லெண்ணெய்தனைக் கழற்றிவாங்க
விளம்பினேன் சவுக்கார உருண்டைவாங்கி
 விதமாகச் சுண்ணாம்புக் கல்வில்வைத்து
விளம்பினேன் காடியதிற் றோய்த்துப்பாரு
 விதமாக யெண்ணெயதனைக் கக்கிப்போடும்
விளம்பினே னறுபத்தொன் றானபின்பு
 விரைந்தெடுத்துச் செயநீரிற் றோய்த்துப்போடே. (55)

போடப்பா ரவிபடவே யெண்ணெய்கக்கும்
புகழாக அதின்மேலே பூசக்கேளு
வாடப்பா சீனத்திற் சுண்ணந்தன்னை
வகையாக வெண்கருவா லாட்டிப்பூசு
தேடப்பா ரவிபட்டுக் காய்ந்தபின்பு
தெளிவாகச் சுண்ணாம்பி லெரித்துப்போடு
பாடப்பா யெண்ணாதே சுண்ணாம்பாகப்
பரிவாகச் சொல்லுகிறேன் பரிந்துகேளே. (56)

கேளுங்கோ சொல்லுகிறேன் மக்காள்நீங்கள்
கிருபையுட னாத்தாளைப் பூசைபண்ண
வாழுங்கோ வுலகத்துக் காகச்சொன்னேன்
மருவியுட னாடுதற்கு வகையாய்க்கேளு
ஆளுங்கோ அஞ்சுசுண்ண மரைத்துப்பூசு
அடரவே புடம்போட எண்ணெய்வாங்கும்
வேளுங்கோ யிதன்மேலே வேகமேற
விதமாக முட்டைதனை விரைந்துவாங்கே. (57)

வாங்கிடாய் முட்டைதான் பதினாறப்பா
வகையாய்வெண் கருவைப்பீங் கானில்விட்டுத்
தேங்காமற் றிமிரமிடக் குச்சியினாற்கடைந்தே
திரமாக அஞ்சுசுண்ணம் பரிவாய்நீயும்
வாங்கியல்லோ அண்டநீர்க் காசுபோடு
மருவியதைக் கலக்கியோரு நாள்தான்மூடிப்
பாங்காக நிழலிருத்தி மூடிநீக்கிப்
பனியிலே மூன்றுதினம் வைத்திடாயே. (58)

வைத்தெடுக்கக் கடுங்காரச் செயநீராகும்
வாகான சவுக்காரந் தோய்ந்துப்போடு
கைத்திடவே சவுக்காரந் காரமேறுங்
கலங்காதே அண்டமுதற் புவனந்தாண்டும்
தொய்த்திடுநீ மூன்றுதினம் ரவியிற்போடு
தோயாமல் மூன்றுநாள் ரவியிற்போடு
மைத்திடுவே சுண்ணத்தி லதையெடுத்து
மருவியொரு புடம்போடச் சுண்ணமாமே. (59)

சுண்ணமடா சுண்ணமடா கட்டிகட்டிச்
சொல்லாத கருவையெல்லாஞ் சொன்னேன்சொன்னேன்
இன்னமடா சித்தரெல்லாம் பகைவராகி
யென்மேலே வந்தெதிர்த்தா ரிடும்பினாலே
அன்னமடா அதினாலே தக்கித்தாட்டி
ஆகாகா விருதுநான் போட்டேனையா
வன்னமடா வுந்தனக்கு யிந்தவித்தை
மகத்தான சிவன்பூசும் நீறுதானே. (60)

நீறதனா லெடுத்ததொழி லெல்லாமப்பா
நிமிஷத்தில் கைகாட்டும் முறமைபோல
ஆருதா னெடுத்தாலு மிதுதான்வேணும்
அந்தவஸ்து வில்லாட்டா வொன்றுமில்லை
பேருதா னிதனாலே யுலகமெல்லாம்
பேரறிய மாட்டாமல் மாண்டுபோனார்
வாறுபோல் பூமியிலே விளைந்ததப்பா
வாகான கயிலாச வஸ்துதானே. (61)

கயிலாச மூர்த்திநிரஞ் சனமேஜயா
கபடுமெத்தச் சித்தருக்குக் கண்டேனப்பா
கயிலாச மூர்த்தியா மறுகுகூடும்
கருணையினா லவருடனே வாதுசெய்தேன்
கயிலாச மூர்த்தியுந்தட் சணமாமூர்த்தி
கருணையுடன் வரவழைத்து விருதுபோட்டார்
கயிலாசத் தேகமென்ன யெடுத்தேனையா
கலந்தேறச் சித்தரெல்லாங் கைக்குள்ளாச்சே. (62)

ஆச்சப்பா சித்தரெல்லாஞ் சொன்னநூலும்
அறிவான யெங்களையா சொன்னநூலும்
வீச்சப்பா ரெண்டுமொத்துப் பார்க்கும்போது
வெகுகவடு வெகுகவடு சித்தர்நூல்தான்
ஆச்சப்பா யிதனாலே நிகண்டுசெய்தார்
ஆகாத சித்தரெல்லாம் நிகண்டைப்பார்த்து
மூச்சப்பா மூலகுரு முன்னேவைத்து
முனிவர்களுந் தொண்டனிட்டுச் சொல்கின்றாரே. (63)

தெண்டனிட்டுச் சொன்னமுனி வரையும்பார்த்துச்
சினமாக அவரையிங்கே யழையுமென்றார்
தெண்டனிட்ட மச்சமுனி யோடிச்சென்று
சீச்கிரமா யெங்களைய ரழைக்கச்சொன்னார்
அண்டிவந்த மச்சேந்த்ரர் செய்திகேட்டு
ஆச்சரிய மீதாமென் றெழுந்துசென்று
தெண்டனிட்டார் மூலகுரு பதத்தையப்பா
சிவசிவா யென்னசொல்வேன் சொன்னவாறே. (64)

சுந்தரானந்தர் வாக்கிய சூஸ்திரம் 64.
முற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம் ந. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

கடுவெளிச்சித்தர் திருவாய் மலர்ந்தருளிய

சிவராஜயோகம் 18.

பராபரமெய்ஞ் ஞானநிலை வடிவமாகிப்
பங்கயன்மால் சத்தியொடு சிவனுமாகி
நிராதரத்துக் காதார பூதமாதி
நித்தியதத் துவமாய்நின் மலமதாகித்
தராதலமுற் றெங்கும்வியா பகமதாகித்
தாமரைமென் மலர்நடுவி லமுதமாகிச்
சராசரமா யானந்தா தீதமாகித்
தானிலங்கும் பரமதனை வணங்கிக்கேளே. (1)

கேளப்பா மனம்நடுவிற் செல்லும்போது
கெதியான பொருளதன்றன் மார்க்கந்தன்னை
நாளப்பா வோராண்டு நலமாயுண்டு
நன்னயமாய் மகாரத்தை நாடிக்கொண்டு
வாளப்பா மூன்றையுமொன் றாகக்கூட்டி
வண்மையுடன் தசதீட்சை சுத்திபண்ணி
ஆளப்பா தீட்சையது முடிந்தபின்பு
ஆண்டொன்று திரமனதாய் நின்றுகாரே. (2)

காரேநீ யாண்டுமுடிந் தானபின்பு
கதித்ததொரு சரக்கதனிற் பூரம்வீரம்
கூரேநீ லிங்கமொடு சத்திபீசம்
குணமுடைய மால்தேவி சமனாய்க்கொண்டு
வாரேநீ முன்கருவுஞ் சமனாய்க்கூட்டி
மகனேகேள் ரவிபீசஞ் சாரஞ்சீனம்
பாரேநீ யெம்மருந்துஞ் சமனாய்க்கூட்டிப்
பக்குவமா யாட்டிடுவாய் பசளைநீரால். (3)

நீராலே அரைத்துருட்டி வட்டுப்பண்ணி
 நினைவாக ரவிதனிலே காயவைத்துப்
பாரேநீ யோட்டினிலிட் டோடுமூடிப்
 பக்குவமா யெழுசீலை மண்ணுஞ்செய்து
வாரேநீர் கனபுடத்திற் சுட்டெடுத்து
 மறுபடியு மிம்மருந்தைக் கல்வத்திட்டுச்
சீராய்நீ யமுதரசத் தாலேயாட்டிச்
 சிறப்பாய்முன் போற்புடமுஞ் செய்துகொள்ளே. (4)

கொள்ளேநீ யிம்மருந்தைப் பொடித்துஅப்பால்
 குணமாகச் சிவந்தகன்னிப் பால்விட்டாட்டி.
அள்ளேநீ யரைத்துருட்டிக் காயவைத்து
 அப்பனே முன்போலப் புடத்தைப்போட்டு
தள்ளேநீ யாறினபின் மருந்தெடுத்துத்
 தாக்காக முன்போலப் பொடித்துக்கொண்டு
மள்ளேநீ குடத்துநீ ரதனாலாட்டி
 மைபோல வரைத்துவில்லை காயப்போடே. (5)

காய்ந்தமருந் ததைப்புடமிட் டெடுத்துப்பாரு
 கண்மணியே மலர்ந்தபூப் போலேநீறும்
வாய்ந்தமருந் ததனைவிட் டலையவேண்டாம்
 வாதபித்த மகலுமென வாலைப்பெண்ணாள்
தோய்ந்தபச்சை வர்னத்தா யெனக்குச்சொன்னாள்
 சொல்லினேன் பிழைப்பதற்கா யுலகத்தோர்க்கு
ஏய்ந்தநற்பங் கொள்ளுவது முன்னேயப்பா
 இருந்துசிவ பூசைகுரு பூசைபண்ணே. (6)

பண்ணுவாய் திரிபுரையின் பூசைதானும்
 பத்தியொடு சித்தர்பதம் வணங்கிப்போற்றி
எண்ணுவாய் தாய்பதத்தை மனதிற்றானும்
 யேழைபர தேசிகட்குத் தருமமீய்ந்து
நண்ணியே ரவிவழியே சுழினைபுக்கி
 நலமான காரணசூக் குமந்தெரிந்து
விண்ணிலே செல்வதற்குத் தாயைப்போற்றி
 விரும்பிநித்தம் பூசைசெய்து மேலேநோக்கே. (7)

நோக்கியே ஆண்டொன்று சென்றதானால்
நுவலவொண்ணாப் பிணியனைத்தும் பறந்தேயோடும்
நீக்கியே பெண்ணரவந் தீண்டிற்றானால்
நில்லாது சடலமப்பா நிசமேசொன்னேன்
வீக்கியதோ ரிம்மருந்து நிலைத்துதானால்
வீழாது தேகமடா கன்னிநாதம்
தாக்கியிந்த வகையாகக் கூட்டியுண்டால்
தப்பாது காயகற்ப முறுதியாச்சே. (8)

ஆச்சப்பா யெமனேது மிருத்துமேது
ஆண்மைசெயும் பிணியேது நோய்களேது
வாச்சப்பா அரிதான வாசிகட்டும்
வகையான அமுதரசஞ் சொரியும்பின்னும்
காச்சப்பா அம்பிகைப்பெண் குடியிருப்பு
கைவசம தாச்சுதடா கன்மமெல்லாம்
போச்சப்பா வுலகம்பொய் யென்றுதேர்ந்து
புத்திகொண்டு சிவயோகம் பாருபாரே. (9)

சிவயோக மார்க்கமது தெரிவதற்குக்
தேவியெனு மனோமணியைத் தெரிசித்தேத்தித்
தவமேவும் வேதமுடி வின்னதென்று
சாற்றிடுவாய் தாயேயென் றிரங்கிக்கேட்க
அவமேபோ காதேயென் றருகழைத்து
அமுதரச பானமதை யெனக்களித்தாள்
நவமான அமுதமது புசித்தபோது
நான்பணிந்து பூசைவிதி நவிலென்றேனே. (10)

நவிலென்ற போதிலென்றா யப்பாவிந்து
நல்லமதி யமுதமது நமக்குந்தந்தாள்
பவம்வென்ற மதுவதுவால் முத்தியாச்சு
பாங்கான அம்பரத்தை யடுக்கலாச்சு
சிவமான தெரிசனமுந் தெரியலாச்சு
சித்தரிலே கடுவெளியின் சித்தனாச்சு
தவமான பூசைவிதி தன்னாலாச்சு
சந்ததமுந் தாய்பதத்தை வணங்கினேனே. (11)

வணக்கிலே னெதற்கென்றால் வாலைபூசை
  வகைகளெல்லா முரைக்கின்றேன் தெளிவாய்க்கேளு
குணக்கொன்று மில்லாத அகாரதீட்சை
  கொண்டுசெவி மண்டலந்தான் கொண்டாயானால்
கணக்கென்ற தேகமது உறுதியாச்சு
  காயமாந் தேகமதற் கழிவோயில்லை
பிணக்கமிலாத் தேகமது வுறுதியானாற்
  பேரான வுயிர்பரத்துக் குறுதியாச்சே. (12)

ஆச்சென்ற சத்தியடா உகாரதீட்சை
  அதையுணர்ந்து செபித்திடுவாய் மண்டலந்தான்
பாச்சென்ற வாசியுதற் குறுதியாச்சு
  பரிவான வாசியது பிராணனப்பா
நீச்சதில்லாச் சடசீவ னுறுதியானால்
  நின்னயமா யாடிடலாம் வேணசித்து
மாச்சலிலாப் பொருளான பொருளைப்பார்த்து
  வகைவிபரம் பூசைவிதி மார்க்கந்தானே. (13)

மார்க்கந்தான் காணமன மகாரபீடம்
  மருவிநின்ற விந்துவடா வட்டமாகும்
தீர்க்கமுள விந்துவெனு மகாரந்தன்னைத்
  தேர்ந்துபா ரோங்காரக் கம்பமாகி
காக்கவே கம்பநுனி மேலேயப்பா
  கனமாகி நின்றதொரு வன்னிதன்னை
பார்க்கவது ஆயிரத்தெண் மலருக்குள்ளே
  பாலகனே அமுதமதற் குள்ளேபாரே. (14)

பாரேநீ மதியமுதந் தன்னைமைந்தா
  பணவிடைதா னொருபோது உள்ளேகொண்டால்
நேரேயிச் சடலமதற் கழிவோயில்லை
  நிச்சயமா யுன்தேகம் வலுத்துப்போச்சு
காரேநின் மந்திரமுஞ் சித்தியாச்சு
  கருத்தான முடிவுபொருட் காணலாச்சு
மாறாத அட்டகர்மஞ் சித்தியாச்சு
  மகத்தான சத்தியைப்பூ சித்துப்பாரே. (15)

பாரேநீ இடகலைபிங் கலையுங்கூடிப்
பத்திநின்ற யிடமல்லோ சுழினையாச்சு
தேரேநீ இம்மூன்றுஞ் சுடருமான
தீபவொளி வெளியதனைக் கண்டுகொண்டு
காரேநீ சன்னதிமுன் பாகநின்று
கருக்குருவைக் கண்டுமனக் கவலைவிண்டு
கூரேநீ அம்பிகையின் மூன்றெழுத்தைக்
குறித்துநித்தங் கூடுவது அறிவுதாமே. (16)

அறிவான வஸ்துவல்லோ பிர்மரூபம்
அபரமென்றும் பரமென்றுந் துவிதமாகி
விரிவான சத்திசிவ ரூபமாகி
வெவ்வேறு கர்த்தரென விளங்கிமூன்று
பிரிவான சுடராகிச் சுடர்மூன்றாகிப்
பேசரிய வெளியாகி வெளியிலேதான்
குறியான ஓரெழுத்தே சத்தமாகிக்
கொண்டுநின்ற ஐந்தெழுத்துங் குருசொரூபம். (17)

குருவான வஸ்துவல்லோ நாலுவேதம்
கூறியமா வாக்கியத்தின் பொருளைநாடார்
ஒருநாளு மீடேறப் போறதில்லை
உண்மைசொன்னே னென்மகனே மாணாகேளு
தெருவான தெருவொன்று சந்திமூன்று
தேர்ந்தறிந்து முச்சந்தி வழியேகூட்டிப்
பொருளான பொருளறியச் சூக்மயோகம்
பூண்டதல்லோ சிவராஜ யோகமாமே. (18)

கடுவெளிச்சித்தர் சிவராஜயோகம் 18.
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் குருவமூப்பனார் மாரர் வைகுண்டமூப்பனாரிடம் வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த ாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

கடுவெளிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

பூரண ஞானம் 67.

கண்ணிகள்.

குருவைத்தொழுதிடுவேன் கும்பிடுவேன் ஆதரிப்பேன்
குறுவினுட சீர்பாதம் (என்னையா) கொண்டேன் தலைமேலே. (1)

பரசாட் சிகாரமென்ற பண்பறையைத் தான்திறந்து
உரசாட்சி யாலே (என்னையா) உகந்தடிமை கொண்டவரோ. (2)

ஒளியா விருளறுத்து வுற்றபடி மாறாமல்
தெளிய நமக்குரைக்க (என்னையா) தேசிகனாய் வந்தவரோ. (3)

மானும் புவியுமொரு வாவிதனில் நீர்குடிக்க
மோனமென்ற வீட்டில் (என்னையா) மொழிந்தவுப தேசிகரோ. (4)

அந்தர காமியத்தி லாயனலாய் வீற்றிருந்து
இந்திரிய ஞாலமதில் (என்னையா) என்பிறவி தீர்த்தவரோ. (5)

அச்சாவ தாரமென்ற யாமளையிற் பள்ளிகொண்டே
உச்சி யதுவழியாய் (என்னையா) ஊடுருவி நின்றவரோ. (6)

உந்தித் தவத்துதிக்கும் உம்பர் பராபரமாய்
சிந்தித்து என்முடிமேல் (என்னையா) சீர்பாதம் வைத்தவரோ. (7)

மூலாதா ரத்துள் முழுக்கனலைத் தாள்சிறந்து
பாலா லவித்து (என்னையா) பகுந்தளிக்க வந்தவரோ. (8)

எட்டெழுத்தி னூடுருவி யேரூப ரேசகமாய்
வட்டமொற்ற மாவில் (என்னையா) வளர்ந்த பராபரமே. (9)

பத்திரம தான பதிதனிலே தானிருந்து
மத்திசமா யெற்கு (என்னையா) வரமருள் வந்தவரோ. (10)

சரியைகிரி யையோகந் தன்னையுமே தான்கடந்து
அரியதொரு ஞானமதில் (என்னையா) ஆளடிமைகொண்டவரோ. (11)

பத்திரண்டோர் நாலும் பழம்பொருள் தாயுதித்துச்
சத்தியமெய் வாய்க்கவுமே (என்னையா) சந்குருவாய் வந்தவரோ. (12)

தத்துவந்தொண் ணூற்றாறுந் தானடக்கி யேயெனக்கு
உத்தமெய்ஞ் ஞானம் (என்னையா) உபதேசம் தந்தவரோ. (13)

அந்தக்கர ணத்தை யறிவாகந் தானறுத்துத்
தொந்தப் பிறவி (என்னையா) துலைக்கவென்று வந்தவரோ. (14)

தீராத தீவினையைத் தீர்க்கும் பராபரமாய்ப்
பேரா லறிய (என்னையா) பெரிய பெருமானோ. (15)

என்னோ டுடன்பிறந்த யென்பிறவி வேரறுத்துப்
பொன்னாடர் காணா (என்னையா) பொருளாக வந்தவரோ. (16)

சீலாமெய்ஞ் ஞானந் தெவிட்டா தெனக்களித்து
நாலாம் பதத்துருகி (என்னையா) நாட்டவந்த நாயகனோ. (17)

சாத்திரங்கள் வேதம் சகல கலையுணர்ந்து
மாத்துரைக ளில்லா (என்னையா) வரமுனியாய் வந்தவரோ. (18)

முக்குணமொ டுக்கி முடிமே லடியையைவத்து
பைக்குணஞ்சொல் லாத (என்னையா) பரமபத மீய்ந்தவரோ. (19)

ஐம்பத்தோ ரட்சரத்தி லாடி யுருவினின்ற
வம்புற்ற வெண்புரவி (என்னயைா) மாற்றிவைக்க வந்தவரோ. (20)

கூறுமுப தேசங் குருவா யெனக்களித்துத்
தேறுதலை யாக (என்னையா) திருநாமந் தந்தவரோ. (21)

பச்சைத் திருமேனி பல்லக்கு மேலேறிக்
கொச்சப் பிறவியதை (என்னையா) கோறல் புரிபவரோ. (22)

நித்தா சனமாய் நிறைந்தடி யேனிடத்திற்
பத்தி நடனம் (என்னையா) பரம பதத்தானோ. (23)

ஆங்காரங் கோப மடக்கி யருட்பதத்தில்
நீங்கா திருத்தி (என்னையா) நிறைவிளக்காய் வந்தவரோ. (24)

மத்திம தானகுண மாயை தனையறுத்து
உத்தமகு ணத்தை (என்னையா) உறுதிபெறத் தந்தவரோ. (25)

பஞ்சமலர் தானறுத்துப் பாசபந்த மேயறுத்துத்
தஞ்சமினி வேறெனக்கு (என்னையா) சற்குருவாய் வந்தவரோ. (26)

கற்புநீ தக்குணமுங் கற்பனையா மென்றுரைத்து
ஒப்பமுட னென்னிடத்தில் (என்னையா) உள்ளொளியாய் வந்தவரோ.(27)

இகமும் பரமும் எனக்கரிய வேயியம்பிப்
பகமும் விலக்கி (என்னையா) வரமுனிநம் மாள்வாரோ. (28)

அகர உகரமுமாய் ஐம்பத்துமொன் றாய்
மகரங் கலந்த (என்னையா) வரமுனிநம் மாள்வாரோ. (29)

ஆற்றைக் குறுக்கடைத்தே ஆள்வாரை முன்னிறுத்தி
காற்றையடைத் தூதிரவி (என்னையா) காட்டிவைக்க வந்தவரோ. (30)

புவியி லொளித்தவரோ பூவுலகை யாண்டவரோ
செவியி லுபதேசம் (என்னையா) செய்தடிமை கொண்டவரோ. (31)

அட்டாங்கம் போட்டு அதின்மேற் பிரட்டிவைத்துப்
பட்டாங்கு சொல்லி (என்னையா) பரமபதத் தாள்வாரோ. (32)

நெஞ்சுதொட்டி லாக நினைவு கயிறாகக்
கொஞ்சிவிளையாட (என்னையா) கொத்தடிமை கொண்டவரோ. (33)

ஏழரங்கு கோபுரமாம் ஈயெறும்பு பாம்பேறாச்
சூழரங்கு மாடம் (என்னையா) துயில்கொள்ள வந்தவரோ. (34)

ஐந்து மனைபிளந்து ஆகாசப் பந்தலிட்டு
பந்தலின்கீழ் தானே (என்னையா) பயிர்செய்ய வந்தவரோ. (35)

பட்டணத்தைக் கட்டிப் பலரைக் குடியேற்றிப்
பட்டணத்துள் ளோர்க்கு (என்னையா) பயிரேற்ற வந்தவரோ. (36)

மேட்டுவயல் வெட்டி விரும்பி வயல்திருத்தி
நாட்டிலுள்ளோர் வாழ (என்னையா) நலம்பெறச் செய்தவரோ. (37)

வித்து விதைத்ததனை மேற்பார்க்க ஆள்வைத்துச்
சித்துக் கதிரறுக்க (என்னையா) செல்வமுடன் வந்தவரோ. (38)

கருவூர் நடுவணையாங் காமா வடியிற்
றிருவடர்ந்த நல்லூரில் (என்னையா) தீரமுடன் வந்தவரோ. (39)

அய்யரென்ற நாமமதை யாதிமுத லாகவைத்துச்
செய்யபர மாகவந்து (என்னையா) தீவினைகள் தீர்த்தவரோ. (40)

அச்சாவ தாரனோ ஆதிமுதல் வேதியனோ
உச்சிவழி காட்டி (என்னையா) உகந்தடிமை கொண்டவரோ. (41)

அவ்வி லுதித்துமே ஆகாய மூடுருவி
உவ்வி லிருந்து (என்னையா) உகந்தடிமை கொண்டவரோ. (42)

சந்திரருஞ் சூரியருந் தாங்கும் நடுவணையில்
இந்திரிய வீட்டில் (என்னையா) யிருந்தரசாண்டவரோ. (43)

மூலத் துதித்தமும் மண்டலமு மூடுருவி
மேலத் தெருவிருந்து (என்னையா) வேகமா யாள்பவரோ. (44)

நாலு மிருமூன்றும் நாட்டிலுய நீரீராறும்
சாலவீ ரெட்மைந்தாய் (என்னையா) சார்ந்தளிக்க வந்தவரோ. (45)

கண்ணி லுருவாய்க் கலந்திருந்து மெவ்வுயிர்க்கும்
விண்ணுமண்ணு மொன்றாய் (என்னையா) விரிந்த பராபரனோ. (46)

அறுகுநுனி போலிருந்து அண்ட முடைக்கும்
பெருகுமுப தேசமதை (என்னையா) பேசும் பெருமாளோ. (47)

தன்னை யறிந்து தயவுமிகக் கூர்ந்ததற்பின்
என்னை யறிய (என்னையா) இயம்பும் பெருமாளோ. (48)

கறுத்த நிறமுடைய காகுத்த னென்றே
மறுத்துப் பிறவா (என்னையா) வழியெனக்குச் சொன்னவரோ. (49)

பொய்யென்று சொல்லிப் புவன மதைவிடுத்து
மெய்யென்று பாதம் (என்னையா) விரும்பித்தந் தாள்பவரோ. (50)

ஆள்வாராய் வந்து அடிமைதனைத்திருத்திப்
பாழ் வீட்டைக்காட்டும் (என்னையா) பாமஹரி கேசரியோ. (51)

அண்டமுடி மீதி லருளொளியாய் நின்றிலங்கி
முண்டகப்பூ மாமலராய் (என்னையா) முத்திதர வந்தவரோ. (52)

கற்றவர்கள் போற்றக் கரியமால் நான்முகனாய்ப்
பெற்றதாய் தந்தையென (என்னையா) பேருலகில் வந்தவரோ. (53)

சித்தரியும் மோனவெளி சிற்பாத்தி லேயிலங்கப்
புத்தி வழியாய் (என்னையா) புகழ்பெறவே நின்றவரோ. (54)

தூண்டா விளக்கின் சடரிரண்டுந் தானாகி
நீண்டா னெனமுன்பு (என்னையா) நின்றாள வந்தவரோ. (55)

மூலமெனுந் தலத்தில் மூண்டெழுந்த வாசியது
தாலமெனும் நாசிநடு (என்னையா) தான்திருப்ப வந்தவரோ. (56)

ஓங்கார வட்டமென வுற்றமுடி மீதினிலே
றீங்கார நாதமென்ன (என்னையா) நின்மலமாய் நின்றவரோ. (57)

ஆதியந்த மும்நடுவாய் அண்டாண்ட பிண்டமுமாய்
சோதி மயமாய் (என்னையா) துலங்க வுதித்தவரோ. (58)

பேச்சுமூச் சில்லாப் பெரும்பா ழெனுங்கடலில்
நீச்சுப் பழகெனவே (என்னையா) நேமிக்க வந்தவரோ. (59)

நாத மெனுங்கீதம் நாடியுதித் தேயொடுங்கும்
போதந் தனையுரைக்க (என்னையா) பூரணமாய் வந்தவரோ. (60)

முப்பா ழெனும் வெளியில் முச்சுடராய்த் தோன்றிபதற்
கப்பாலும் நிற்க (என்னையா) அரும்பொருளாய் வந்தவரோ. (61)

சித்தரியும் பேரரியும் சேரும் பரவெளியில்
அத்தனரி யொன்றாய் (என்னையா) அமர்ந்தாள வந்தவரோ. (62)

அகர உகரமுமொன் றாயமையுந் தானம்
சிகர வகரமுடன் (என்னையா) சின்மயமாய் வந்தவரோ. (63)

முத்திக்கு வித்தாகி மூதண்ட வாசனத்திற்
சத்திசிவ மொன்றாக (என்னையா) தானே வளர்பவரோ. (64)

உச்சி யதன்கீழே உண்ணா வதன்மேலே
மெச்சுஞ் சுடாரராய் (என்னையா) விளக்கவே வந்தவரோ. (65)

முச்சந்தி வீதியிலே மூன்றுபொரு ளொன்றெனவே
சச்சிதா னந்தநிலை (என்னையா) தானெனக்குத் தந்தவரோ. (66)

சாலோக சாமீப சாரூப மென்றநிலை
மேலோக சாயுக்ஷ்யம் (என்னையா) வேண்டி யடைந்தேனே. (67)

கடுவேளிச்சித்தர் பூரண ஞானம் 67.
முற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம் ந. ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

பராசத்திதுணை.

கடுவெளிச்சித்தர் பாடல் 35.

பாபஞ்செய் யாதிரு மனமே நாளைக்
கோபஞ்செய்தேயமன் கொண்டோடிப் போவான் (பாபம்)

சாபங் கொடுத்திட லாமோ விதி
தன்னைநம் மாலே தடுத்திட லாமோ
கோபந் தொடுத்திட லாமோ இச்சை
கொள்ளக் கருத்தைக் கொடுத்திட லாமோ. (பா)

சொல்லருஞ் சூதுபொய் மோசம் செய்தால்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லதோர் பத்திவிசு வாசம் எந்த
நாளும் மனிதற்கு நன்மையாம் நேசம். (பா)

நீர்மேற் குமிழியிக் காயம் இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்
பார்மீதின் மெத்தவும் நேயம் சற்றும்
பற்றா திருந்திடப் பண்ணு முபாயம். (பா)

நந்த வனத்திலோ ராண்டி அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி. (பா)

தூடண மாகச்சொல் லாதே தேடும்
சொத்துக் களிலொரு தூசுநில் லாதே
எடணை மூன்றும்பொல் லாதே செகத்
திச்சைவைத் தாலெம லோகம்பொல்லாதே. (பா)

நல்ல வழிதன்னை நாடு எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்திற் கூடு அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக்கொண்டாடு. (பா)

நல்லவர் தம்மைத்தள் ளாதே அறம்
நாலெட்டி லொன்றேனும் நாடித்தள் ளாதே
பொல்லாங்கி லொன்றும் கொள் ளாதே கெட்ட
பொய்மொழி கோட்கள் பொருந்தவிள்ளாதே. (பா)

வேத விதிப்படி நில்லு நல்லோர்
மேவும் வழியினை வேண்டியே செல்லு
சாதக நிலமையே சொல்லு பொல்லாச்
சண்டாளக் கோபத்தைச் சாதித்துக்கொல்லு. (பா)

பிச்சையென் றென்றுங்கே ளாதே எழில்
பெண்ணாசை கொண்டு பெருக்கமா ளாதே
இச்சைய துன்னையா ளாதே சிவன்
இச்சைகொண் டவ்வழி யேறிமீ ளாதே. (பா)

மெய்ஞ்ஞானப் பாதையி லேறு சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு உன்னை
அண்டினோர்க் கானந்த மாம்வழி கூறு. (பா)

மெய்க்குரு சொற்கடக் காதே நன்மை
மென்மேலுஞ் செய்கை மிகவடக் காதே
பொய்க்கலை யால்நடக் காதே நல்ல
புத்தியைப் பொய்வழி தனில்நடக் காதே. (பா)

கூட வருவதொன் றில்லை புழுக்
கூடெடுத் திங்க னுலாவலே தொல்லை
தேடரு மோக்ஷமா மெல்லை அந்தத்
தேடும்வழியைத் தெளிவோரு மில்லை. (பா)

ஐந்துபேர் சூழ்ந்திடுங் காடு இந்த
ஐவர்க்கு மைய ரடைந்திடும் நாடு
முந்த வறிந்துநீ தேடு அந்த
மூல மறிந்திட லாமுத்திவீடு. (பா)

உள்ளாக நால்வகைக் கோட்டை பகை
ஓடப் பிடித்திட்டா லாளலாம் நாட்டை
கள்ளப் புலனென்னுங் காட்டை வெட்டிக்
கனலிட் டெரித்திட்டாற் காணலாம்வீட்டை. (பா)

காசிக்கோ டில்வினை போமோ அந்தக்
கங்கையா டிற்கதி காணவுண் டாமோ
பேசுமுன் கன்மங்கள் சாமோ பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ. (பா)

பொய்யாகப் பாராட்டுங் கோலம் எல்லாம்
போகவே வாய்த்திடும் யார்க்கும் போங்காலம்
மெய்யாக வேசுத்த சாலம் பாரில்
மேவப் புரிந்திடி லென்னனு கூலம். (பா)

சந்தேக மில்லாத தங்கம் அதைச்
சார்ந்துகொன் டாலுண்டாந் தாழ்வில்லாப்பொங்கம்
அந்தமில் லாதவோர் துங்கம் எங்கும்
ஆனந்த மாக நிரம்பிய புங்கம். (பா)

பாரி லுயர்ந்தது பத்தி அதைப்
பற்றின பேர்க்குண்டு மேலான முத்தி
சீரிலுய ரட்ட சித்தி யார்க்கும்
சித்திக்கு மேசிவன் செயவினாற் புத்தி. (பா)

அன்பெனும் நன்மலர் தூவி பர
மானந்த தேவ னடியிணை மேவி
இன்பொடு முன்னுட லாவி நாளும்
ஈடேறத் தேடாய்நீ யிங்கேகு லாவி. (பா)

ஆத்தும வீடேற்றங் கண்டு அதுக்
கான வழியை யறிந்துநீ கொண்டு
சீத்தமில் லாமலே தொண்டு ஆதி
சிவனுக்குச் செய்திடிற் சேர்ந்திடுங் கெண்டு. (பா)

ஆன்மாவா லாடிடு மாட்டம் தேகத்
தான்மா வற்றபோதே யாமுடல் வாட்டம்
வான்கதி மீதிலே நாட்டம் நாளும்
வைத்தா லுனக்கு வருமேகொண் டாட்டம். (பா)

எட்டு மிரண்டையு மோர்ந்து மறை
எல்லா முனக்குள்ளே யேகமாய்த் தேர்ந்து
வெட்ட வெளியினைச் சார்ந்து ஆனந்த
வெள்ளத்தின் மூழ்கி மிகுகளி கூர்ந்து. (பா)

இந்த வுலகமு முள்ளும் சற்றும்
இச்சைவை யாமலே யெக்காளுந் தள்ளும்
செந்தேன்வெள் ளந்தனை மொள்ளும் உன்றன்
சிந்தைதித் திக்கத் தெவிட்டவுட் கொள்ளும். (பா)

பொய்வேதந் தன்னைப்பா ராதே அந்தப்
போதகர் சொற்புத்தி போதவோ ராதே
மைவிழி யாரைச்சா ராதே துன்
மார்க்கர்கள் கூட்டத்தின் மகிழ்ந்துசே ராதே. (பா)

வைதோரைக் கூடவை யாதே இந்த
வையமுற் றாகப்பெற்றாலும்பொய் யாதே
வெய்ய வினைகள்செய் யாதே கல்லை
வீணிற் பறவைகள் மீதிலெய் யாதே. (பா)

சிவமன்றி வேறேவேண் டாதே யார்க்கும்
தீங்கான சண்டையைச் சிறக்கத்தூண் டாதே
தவநிலை விட்டுத்தாண் டாதே நல்ல
சன்மார்க்க மில்லாத நூலைத்தோண் டாதே. (பா)

பாம்பினைப் பற்றியாட் டாதே நல்ல
பத்தினி மார்களைப் பழித்துக்காட் டாதே
வேம்பினை யுலகிலூட் டாதே உன்றன்
வீராப்புத் தன்னை விளங்கநாட் டாதே. (பா)

போற்றுஞ் சடங்கை நண் ணாதே உன்னைப்
புகழ்ந்துமே பலரிற் புகலவொண் ணாதே
சாற்றுமுன் வாழ்வை யெண் ணாதே பிறர்
தாழும் படிக்குநீ தாழ்வுபண் ணாதே. (பா)

கஞ்சாப் புகைபிடி யாதே வெறி
காட்டி மடக்கிய கட்குடி யாதே
அஞ்ச வுயிர்மடி யாதே புத்தி
யற்றவஞ் ஞானத்தின் நூல்படி யாதே. (பா)

பத்தியெனு மேணிநிலை நாட்டித் தொந்தப்
பந்தமற் றவ்விடம் பார்த்ததை நீட்டி
சத்திய மென்றதை யீட்டி நாளும்
தன்வச மாக்கிக்கொள் சமயங்க ளோட்டி (பா)

செப்புரும் பலவித	மோகம்	எல்லாம்
சீயென் றொறுத்துத் திடங்கொள்வி	வேகம்	
ஒப்பரு மட்டாங்க	யோகம்	நன்றாய்
ஓர்ந்தறி வாயவற் றுண்மைசம	போகம்.	(பா)

எவ்வகை யானநன்	னீதி	அவை
எல்லா மறிந்தே யெடுத்துநீ	போதி	
ஒவ்வா தென்றபல	சாதி	யாவும்
ஒன்றென் றறிந்தே யுணர்ந்துநீ	சோதி.	(பா)

கள்ளவே டம்புனை	யாதே	பல
கங்கையி லேயுன் கடம்நனை	யாதே	
கொள்ளயே கொள்ளநினை	யாதே	நட்புக்
கொண்டு பிரிந்துநீ கோண்முனை	யாதே.	(பா)

எங்குஞ் சுயம்பிர	காசன்	அன்பர்
இன்பா மிதயத் திருந்திடும்	வாசன்	
துங்க வடியவர்	தாசன்	தன்னைத்
துதிக்கிற் பதவி யருளுவா	னீசன்.	(பா)

கடுவெளிச்சித்தர் பாடல் 35.

முற்றிற்று.

உ
குருவே துணை.

மதங்கநாதரென்ற
சங்கிலிச்சித்தர் திருவாய்மலர்ந்தருளிய

ஞான சூஸ்திரம் 16.

ஆதிமூ லப்பொருளா யகண்டாகார
அன்பரமாய் மெய்ஞ்ஞானச் சுடருமாகி
நீதியுள்ள ஓங்காரச் சுழினையாகி
நிறைந்தெங்குந் தன்மயமாய் ஜீவகோடி
ஓதிடவொண் ணாதனைத்துங் காத்தாள்நின்ற
உண்மையுள்ள தாரகமாம் வஸ்துவாகி
மேதினியி லென்றனக்குக் குருவாய்த்தோன்றி
விளங்குகின்ற பரம்பொருளின் பாதங்காப்பே. (1)

காப்பாக பூசைசெய்ய வகைதானப்பா
களிப்புடனே சொல்லுகிறேன் கருவாங்கேளு
தாப்புடனே அனந்தம்பேர் தீபபூசை
தான்செய்வா ரதிலோர்சக் கரத்தைவைத்து
மூப்புடனே பூசிப்பார் தாயைப்போற்றி
முழுப்பூசை யேபுரிவா ரனந்தம்பேர்கள்
கோப்புடனே நானியற்றும் பூசைமார்க்கம்
குறிப்பாக நீநன்றா யுணர்ந்துபாரே. (2)

பாரேநீ நாற்பத்தி முக்கோணந்தான்
பரிவாகப் பூசைசெய்வார் சித்தரெல்லாம்
நேரேதான் மேருவைப்போற் பூசைசெய்வார்
நெடியதொரு சாபமிட்டா லண்டம்வேகும்
கூரேநீ மேருதச தீட்சைசெய்து
கூரறிந்த சித்தருடன் சேர்ந்துகொண்டு
கோரேநீ மேருதனைப் பூசைசெய்தால்
கோரியதோ ருபதேசச் சித்துமாச்சே. (3)

சித்தான சித்தல்லோ கெவுனசித்தி
 சீர்பெறவே யெப்பொருளுஞ் சித்தியாகும்
முத்தான வாலையின்மூன் றெழுத்தைக்கீறி
 முன்னறிந்து பூசைசெய்து பின்புபாரு
வித்தான திரிபுரையி னெட்டெழுத்தை
 விபரமுடன் மானதமாய்ப் பூசைசெய்து
உத்ததொரு புவனைமந் திரஞ்செபித்து
 உலகமதிற் சித்தனென்ற பெயரைவாங்கே. (4)

வாங்கியே யாமளைப்பெண் ணாறெழுத்தை
 மைந்தனே பூசைசெய்து பாதம்போற்று
தாங்கியதோர் வாலையின்ற னைந்தெழுத்தைத்
 தயவாகக் கும்பகமாய் மவுனபூசை
ஓங்கியதோர் தீட்சையைந்து முடிந்தபின்பு
 உயர்வான சிவயோக நிலையைக்கண்டு
தீங்கிலாப் பிராணாயஞ் செய்தாயானால்
 தெவிட்டாத காயசித்தி யெய்தும்பாரே. (5)

பாரேதான் அட்டசித்துந் தெரிந்தாயானாற்
 பாங்குடனே சிவயோகம் முடிந்துபோச்சு
நேரேதான் பிர்மநிலை கண்டுதேறு
 நேர்மையுட னென்னனாசான் மிருகண்டேயர்
கூரேதான் சிவயோக மார்க்கந்தன்னிற்
 குறித்ததனை நன்றாகப் பார்த்தறிந்து
தேரேதான் ஞானமதின் சூட்சந்தன்னை
 தெரிசித்து ஞானவழி சேருவாயே. (6)

சேருதற்குச் சிவயோக வழியைச்சொன்னேன்
 சித்தருட மருமமெல்லாந் தெரியச்சொன்னேன்
நேருபெரும் பூசையின்றன் விபரஞ்சொன்னேன்
 நிலைதெரிந்து நடப்பதற்கு வழியுஞ்சொன்னேன்
வீறுடைய சிவனுமையாள் பூசைசொன்னேன்
 வேதாந்த வழியனைத்தும் விளங்கச்சொன்னேன்
மாறுபடா சித்தர்கள்தன் பெருநூலிற்றான்
 மைந்தனே கண்டறிவாய் நீதந்தானே. (7)

நீதமுடன் சூதகற்பங் கேட்பாயப்பா
நீணிலத்தில் யாவருக்குஞ் சொல்லவில்லை
வேதவாக் கியமிதுதா னப்பாகேளு
விபரமுடன் சொல்லுகிறேன் திரமதாக
நாதமுடன் சூதமடா மந்திரவாலை
நாதாந்த வாலைரச மென்னசொல்வேன்
மாதுகன்னி யமுதமதி யமுதமாகும்
மகத்தான போதமது சொல்லொண்ணாதே. (8)

சொல்லொண்ணா மதியமுதஞ் சூதமாகும்
சூதமதின் கற்பமது கிட்டாதப்பா
நல்லதொரு சூதமது சுத்தவெள்ளை
நலமான வெள்ளையடா மதிதானாச்சு
வல்லதொரு மதிதானும் விந்துவிந்து
வளமான விந்ததுவுஞ் சூதமாகும்
எல்லையில்லாச் சூதமது பாலாம்விந்து
இனிமையுடன் விந்துவிலே பருவம்பாரே. (9)

பாரப்பா விந்துரசம் நிலையைக்கண்டு
பத்தியுடன் வாங்குதற்கு வகையைக்கேளு
தேறப்பா வகையென்ன வென்றுகேட்டால்
திறமான பூர்வபட்ச மந்தநாளிற்
கோரப்பா குருவாரந் தன்னிலேதான்
குணமான நாளிதனைக் குறிப்பாய்க்கண்டு
சீரப்பா நடுவணையி லமுதமூறும்
சிறக்கவே மனதுகந்து காலையூணே. (10)

காலூணும் போதில்விந்து ரசமும்வீழும்
களிப்புடனே பீங்கானில் வாங்கிக்கொள்ளு
மேலுலகோ ரலைந்தாலுங் கிட்டிடாத
மேலான ரசமதிலே வீரங்கூட்டி
வாலையுட கிருபைதாற் பத்துக்கொன்று
வளமாக வீரமுடன் பூரஞ்சேர்த்தே
காலையத்திற் குருநாதன் செய்துநின்ற
கைமுறையாய்ப் பூரமுட னமுதஞ்சேரே. (11)

சேர்த்தப்பா நாகரச மதனிற்சேர்த்துச்
சிறப்பாக விரலாலே யமர்த்திமத்தி
பார்த்தப்பா ரவிமுகத்தில் வைத்துப்பாரு
பாலகனே ரசநாகம் மாண்டுபோகும்
ஆர்த்தப்பா மாண்டரசம் நிறம்பொன்னாகும்
அப்பனே மெழுகாகு மென்னசொல்வேன்
காத்தப்பா குருவருளாற் கண்ணாற்கண்ட
களிப்பான மெழுகதனைப் பதனம்பண்ணே. (12)

பதனமது செய்தப்பா குருவைப்போற்றிப்
பரிவாக ஆத்தாளைப் பூசைசெய்தே
இதமுடனே பணவிடைதான் கொண்டாரானால்
இன்பமுள்ள போதையது அதீதமப்பா
சதமுடைய போதமய மென்னசொல்வேன்
சற்குருவி னருளாலே தெரிந்துகொள்ளு
விதமுடைய போதமதைக் கண்ணிற்காண
வெகுபேர்க ளலைந்துதெரி யாமற்றானே. (13)

தெரியாம லலையவில்லை சிதம்பரத்தை
தெரிசித்த சித்தர்கள்தான் செப்பினார்கள்
உரியதொரு வாசிமல ரதனைப்பார்க்கில்
உண்மையுள்ள தீபசுட ரதிலேதோணும்
அறியவே வினைதனையும் நாடிநீதான்
அம்பிகைப்பெண் வாலையுட நடனங்கண்டால்
பிரியமுடன் றன்னிலையைத் தானேகாட்டும்
பேசாம லிதையறிந்து மவுனம்வையே. (14)

வையப்பா கற்பமதாற் சட்டைவாங்கும்
மைந்தனே கருப்பாக உரிந்துபோகும்
செய்யப்பா சடமதுதான் வலுத்துப்போகும்
சிறந்ததொரு வாசியடா சழினைக்கேறும்
உய்யப்பா சுழினையிலே தீபந்தோணும்
உற்றுற்றுப் பார்க்கையிலே வெளியாய்த்தோணும்
மெய்யப்பா சிவாயவென வமுதங்கொண்டு
மேலான அஷ்டாங்க யோகம்பெற்றே. (15)

பெற்றதினால் யோகமுதற் சகலசித்தும்
  பேரான பாருலகிற் சித்தர்போற்ற
உற்றபே ரனேகமடா பெருமைமெத்த
  ஓகோகோ வென்னசொல்வேன் பின்னும்பற்ற
மற்றந்தச் சுடரொளியும் மேலேசெல்ல
  மார்க்கமுள்ள மூலமதை மனதில்வைத்துக்
கற்றறிந்து கற்பமுண்டு வலுமையான
  காயமடா தேகம்வச்ர காயமாச்சே. (16)

சங்கிலிச்சித்தர் ஞானசூஸ்திரம் 16.
முற்றிற்று.

ஸ்ரீவில்லி புத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் குருவமுப்பனார் குமாரர் மாமுண்டி மூப்பனாரிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
கணபதி துணை.

மதங்கநாதரென்ற

சங்கிலிச்சித்தர்பாடல் 36.

கும்மி.

மூலக்க ணேச னடிபோற்றி யெங்கும்
முச்சுட ராகிய சிற்பரத்தில்
வாலை திரிபுரை அம்பிகை பாதத்தை
மனதிற் கொள்வாயா னந்தப்பெண்ணே. (1)

எங்கள் குருவாந் திருமூலர் பாதம்
எப்போதும் போற்றித் துதித்தேதான்
சங்கைக ளற்றமா சித்தர்கு ழாங்களின்
றாளைப் பணிவாயா னந்தப்பெண்ணே. (2)

ஓங்கார வட்ட முட்லாச்சு பின்னும்
ஊமை யெழுத்தே உயிராச்சு
றீங்காரம் ஸ்ரீங்கார மான வகையதை
நீதா னறிவாயா னந்தப்பெண்ணே. (3)

அகாரம் உகாரத் துடன்பொருந்த வது
யகார மான தற்றிந்துகொண்டு
சிகார மான தெளிவினி லேநின்று
தேர்ந்து கொள்வாயா னந்தப்பெண்ணே. (4)

பஞ்சபூ தங்களைக் கண்டறிந்தோர் இகப்
பற்றினைச் சற்றும் நினைப்பாரோ
சஞ்சல மில்லாது யோகவழியதைத்
தானறிந் துய்வாயா னந்தப்பெண்ணே. (5)

தவ நிலையை யறிந்தோர்க்கு ஞானந்
தன்னாற் றெரியு மெனவேதான்
நவசித் தாதிகள் கண்டுதெளிந்ததை
நன்றா யறிவாயா னந்தப்பெண்ணே. (6)

வாசி நிலையை யறிந்துகொண்டால் தவம்
வாச்சுது வென்றே மனதுகந்து
தேசி யெனும்பரி மீதேறி நாட்டம்
செய்த தறிவாயா னந்தப்பெண்ணே. (7)

நந்தி கொலுவைத் தெரிந்தோர்கள் வாசி
நாட்டம் வீடார்க ளொருக்காலும்
உந்திக் கமலத்தி லந்தணன் பீடத்தை
உற்றறிந் துய்வாயா னந்தப்பெண்ணே. (8)

மாலுந் திருவும் வசித்திருக்கும் இடம்
வணங்கி யப்பாற்செல் லும்போது
மேலும் உருத்திரன் ருத்திரி சேவையை
மேவியே காண்பாயா னந்தப்பெண்ணே. (9)

எந்தெந்தப் பூசைபு ரிந்தாலும் பரம்
ஏகமென் றேகண் டறிந்தாலும்
சிந்தையடங்கு முபாயஞ் சதாசிவன்
சீர்பாத மல்லோவா னந்தப்பெண்ணே. (10)

தானேதா னாக நிறைந்துநின்ற சிவ
தற்பர மாகிய வுற்பணத்தை
நானேநா னென்றறிந் துக்கொண்டு பர
நாட்ட மறிவாயா னந்தப்பெண்ணே. (11)

வஞ்சப் பிறப்பு மிறப்புக்கு மேது முன்
வாசனை யென்றே யறிந்துகொண்டு
சஞ்சல மற்றுப்பி ராணாயஞ் செய்திடிற்
றற்பர மாவாயா னந்தப்பெண்ணே. (12)

சரியை கிரியை கடந்தாலும் யோகஞ்
சாதித்து நின்றருள் பெற்றாலும்
உரிய ஞானவி சர்க்கமி லாவிடில்
ஒன்றும் பயனின்றா னந்தப்பெண்ணே. (13)

தன்னையின் னானெனத் தான்தெரிந்தாற் பின்னும்
தற்பர னைப்பார்க்க வேணுமோதான்
அன்னையும் அப்பனும் போதித்த மந்திரம்
அறிந்தவன் ஞானியா னந்தப்பெண்ணே. (14)

எண்சா ணுடம்பு மிதுதாண்டி எழி
லேற்கும் நவவாச லுள்ளதடி
தண்மை யறிந்து நடப்போர்க்கு எட்டுத்
தலங்கள் தோணுமா னந்தப்பெண்ணே. (15)

அஞ்சுபேர் கூடி யரசாள ஒரு
ஆனந்தக் கட்டடங் கட்டிவைத்த
செஞ்சிக் கோட்டையைக் கண்டிதுதானெனத்
தெரிந்துக் கொள்வாயா னந்தப்பெண்ணே. (16)

ஊத்தைச் சடல மிதுதாண்டி நீ
ருப்பிட்ட பாண்ட மிதுதாண்டி
பீத்தத் துருத்தி யிதுதாண்டி நன்றாய்ப்
பேணித் தெளிவாயா னந்தப்பெண்ணே. (17)

ஆத்தா ளெந்தனைப் பெற்றுவிட்டாள் எந்தன்
அப்பனு மென்னை வளர்த்துவிட்டார்
வேத்தா ளென்று நினையாம லிதன்
விபரங் கேட்பாயா னந்தப்பெண்ணே. (18)

இந்தச் சடலம் பெரிதென வெண்ணியா
ளிருந்து வீண்காலந் தான்கழித்துச்
சொந்தச் சடல மெதுவெனப் பார்த்திடிற்
சுத்தமாய்க் காணோமா னந்தப்பெண்ணே. (19)

மணக்கோலம் கண்டு மகிழ்ந்தபெண் ணோடுபின்
மக்களைப் பெற்று வளர்த்தெடுத்துப்
பிணக்கோல மாவ தறியாமல் வீணே
பிதற்றுவ தேதுக்கா னந்தப்பெண்ணே. (20)

எல்லா பொருள்களு மெங்கிருந்து வந்த
தென்றுநா னுற்றிதைப் பார்க்கையிலே
நல்லதோர் மண்ணினி லுற்பத்தி யென்றுபின்
நன்றாய்த் தோணுதா னந்தப்பெண்ணே. (21)

செத்தபின் கொண்டே சமாதிசெய் தப்பாற்
சிலநாட் கழித்தந்த மண்ணெடுத்து
உத்ததோர் பாண்டம தாகச்சுட்டுப்பின்
னுலகோர்க் குதவுதா னந்தப்பெண்ணே. (22)

சகல பொருள்களும் மண்ணா யிருப்பதைச்
சற்று நிதானித்துப் பார்க்கையிலே
பகவனங் கங்குமெள் ளெண்ணெய்யைப் போலவே
பற்றி யிருப்பாரா னந்தப்பெண்ணே. (23)

மண்ணிற் பிறந்த தழிந்துவிடும் பார்த்து
வைத்த பொருளு மழிந்துவிடும்
கண்ணினிற் காண்பதழிந்து விடுமென்று
கண்டறிந் துக்கொள்ளா னந்தப்பெண்ணே. (24)

பெற்றதாய் தந்தை சதமாமோ உடற்
பிறப்புச் சுற்றஞ் சதமாமோ
மற்றுமுள் ளோர்கள் சதமாமோ கொண்ட
மனைவி சதமோவா னந்தப்பெண்ணே. (25)

யாரா ரிருந்துஞ் சதமலவே நம
தாத்துமா கூடுவிட் டேகும்போது
ஊரா ரொருவர் சதமல வென்பதை
உற்றுநீ காண்பாயா னந்தப்பெண்ணே. (26)

இந்த வழியைத் தெரிந்துகொண்டே இவ்
விகத்தும் பரத்துமா சித்தனென்றே
சொந்தம தாகவென் பாட்டன் போகரிஷி
சொல்லை யறிவாயா னந்தப்பெண்ணே. (27)

வழி தெரியா தலைந்தோர்க ளிந்த
மாநிலந் தன்னிற் கோடாகோடி
சுழிமுனை தன்னைத்தெரிந்து கொண்டாற்பின்
சுகவழி கண்டோரா னந்தப்பெண்ணே. (28)

ஆசையொ ழிந்தருள் ஞானங் கண்டுவீ
ணாண்மையைத் தான்சுட் டறுத்துத்தள்ளி
பாசத்தை விட்டுநீ யோகத்தைச் செய்திந்தப்
பாரினில் வாழ்வாயா னந்தப்பெண்ணே. (29)

இரவைப் பகலா யிருத்தித் தெரிந்துநீ
ஏக வெளியையுங் கண்டறிந்து
விரைவா யிந்த விதத்தெரிந்தாலிம்
மேதினி போற்றுமா னந்தப்பெண்ணே. (30)

பெற்றதாய் தந்தை யிருந்தாலென் கொண்ட
பெண்டீர் பிள்ளை யிருந்தாலென்
நற்றவஞ் செய்யா திருக்கில் நமனுக்கு
நாம்சொந்தங் காண்பாயா னந்தப்பெண்ணே. (31)

தீர்த்த மாடிக் குளித்தாலும் பல
தேவா லயஞ்சுற்றி வந்தாலும்
மூர்த்தி தரிசனஞ் செய்தாலும் நாலாம்
மோனமுண் டோசொல்லா னந்தப்பெண்ணே. (32)

காடு மலைக ளலைந்தாலும் பல
கன்மானுஷ் டானம் புரிந்தாலும்
ஒடுஞ்சித் தத்தைநி றுத்தார்க்குப் பர
வுற்பனம் வாய்க்காதா னந்தப்பெண்ணே. (33)

மாயா வுலக மயக்கத்தையும் நல்ல
வஞ்சியர் மீதுற்ற மோகத்தையும்
தீயா மாந்த ரொருக்காலும் வீடு
சேருவ தில்லையா னந்தப்பெண்ணே. (34)

நாலா கலைக ளறிந்தாலும் யோக
ஞான் வழிகள் தெரிந்தாலும்
மேலா மோன மறிந்தவரே துஞ்சா
வீடுறு வார்களா னந்தப்பெண்ணே. (35)

சங்கிலி கண்டத் தணிந்துகொண்டு நற்
றவயோகஞ் செய்தங் கிருக்கையிலே
சங்கிலிச் சித்தனென் றென்பாட்டன் வந்து
சாற்றத்தெரியுமா னந்தப்பெண்ணே. (36)

சங்கிலிச்சித்தர் பாடல் 36.
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த சுந்தரபாண்டியம் சங்கரலிங்க மூப்பனார் குமாரர் சாமியப்ப மூப்பனாரிடமிருந்து வாங்கிய ஏட்டுப் பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
முருகன் துணை.

ஊர்வசி திருவாய் மலர்ந்தருளிய

இரத்தினச் சுருக்கம் 19.

ஏக மாகி யிருந்த பராபரம்
தேக சீவசை தன்யசித் தாரணை
யோக மாக நினைத்திடு மூர்வசி
தோகை யாள்செலும் ரத்னச் சுருக்கமே. (1)

சீல மான பதஞ்சலி யும்புலிக்
கால னுங்குரு வாமென் கருத்தினில்
மூல மான தியானமெய்ஞ் ஞானமும்
கோல மான தமிழ்க்கவி கூறவே. (2)

ஆசை யன்றி யிருந்தமெய்ஞ் ஞானியை
ஈச னென்றே யியம்பிடும் வேதமும்
வாசல் கண்டு நுழைந்தறி வாகினாற்
பூச லன்றிப் புலன் கெடும் யோகியே. (3)

பரிச மான புராணவி யாபகம்
சரியை யாமெனச் சாற்றுமெய்ஞ் ஞானநூல்
ஹரிகி ஓமென் றெழுத்தறி விற்பனக்
கிரியை பூசையி னிற்பலன் கிட்டுமே. (4)

வேறு

படிகமதிற் றன்னுருவந் தோன்றுகின்ற
படியேதான் சீவப்ர மாணமாகும்
கடினமனக் களங்கத்தாற் சீவனாகும்
களங்கமற்றாற் பிரமமெனக் கருதலாகும்

குடிலமெனும் விபரீத பாவனையேஜெகமாய்க்
கோலியதிற் சீவன்மனங் கொள்கிநின்றால்
மடிவதுவும் பிறப்பதுவுஞ் சமுத்திரத்தின்
மன்னுமலை யிரண்டாகும் வகையதாமே. (5)

கலித்துறை

ஆசிக்கு நாலுபத் தொன்பா னெழுத்தைந் தகாரமிட்டு
நேசிக்கும் நாதத்தில் மேலேவு காரத்தை நீட்டிவைத்து
வாசிக்கு மவ்வைச் சுழித்துச்சி காரத்தின் மவ்வையிட்டால்
காசிக்கு நீநடப் பானேன் மிகுபலன் கைவருமே. (6)

நாதிக்கும் ஐயுங் கிலியுடன் சவ்வையும் நாட்டிவைத்துச்
சோதிக்கும் அவ்வினிற் பின்பாக மவ்வினிற் சூலமிட்டுச்
சாதிக்கு முன்னஷ்ட கர்மத்தின் வாலையைத் தான்பெறலாம்
வாதிக் குதலொன்று மாகாது யோக வழக்கமிதே. (7)

வேறு

நாக்காலே நாட்டுவது பக்கமாசி
நவமியடா யேழான ராசிமிச்சம்
வாக்கார மனதார வாகுமாகும்
வலுத்தநாள் சோதியடா கிழமைவெள்ளி
நாக்காலே கன்னியிடங் கொடுத்துவாங்கி
நாட்டினாற் கண்டவரை முகியும்பாரு
மூக்கான நாசியிடை கலையைப்பாரு
முழுமதியின் சோதிமுச் சில்லைத்தானே. (8)

வெண்பா

பூரகத்தை யெண்ணான்கு போக்கிவிடு ரேசகத்தைக்
கூருமதிற் பாதிவிடக் கோணாதே - பேர்பெரிய
அம்பரத்தைக் கண்டங் கசபையறு பத்தொருநால்
கும்பகத்தைச் செய்யக் குணம். (9)

குணமாகும் மூலத்திற் குண்டலிசட் பீஜத்
துணையதனாற் சாதனஞ்செய் தோன்றா - வுணர்வுதரும்
பிராணாய மாதிமுதற் பேசா மவுனவரை
நிராணாய சாதனையில் நில். (10)

வேறு

மூலச் சுழியிட் டிருமாந்து மூக்கி லிரண்டு வகுப்பாகி
மோசப் படுத்தும் வகைதானே மூன்றத் தொருபங் குயிர்மூச்சு
நாலைச் செலவிட் டதினாலே நாளைக் குறைக்கும்படியாகி
நாசப் படுவின் மதிபோல நமனுக் குயிரின் றிரையாச்சு
பாலைச் சிறுக வனற்காய்ச்சிப் பாசிப் பயறிட் டுறவான
பாகத் தமிர்த முண்பார்க்குப் பாவச் சனனப் பழிபோகும்
மேலைச் சுழியிட் டமரூடே வேதக் கலையின் மணிநாவை
மேவிக்கூடு முயிர்தானும் மேலைப் பிடரி வழிசேரும். (11)

கலித்துறை

ஈராறு பன்னிரண் டீரெட்டு மாகி யியங்குமனம்
பூராய மீரெட்டுப் பன்னிரண் டாகிப் பொதுச்சுழியில்
ஆரா தனையுமிட் டண்ணாக்க முத்தி யமுதருந்தச்
சாராது மட்டிகட் காகாது யோக சமாதியுமே. (12)

வேறு

ஆதியுப்பு விண்ணினில் அனாதியுப்பு வேலையில்
ஆழிநீரை யுண்டுகெற்ப மாயிருந்த கொண்டலும்
சோதியற்ற நாளில்மேனி சூலுளைந்து மாரியாய்த்
தூறும்வேலை தன்னில்மின்னல் மீறுமம்ப ரத்தினில்
மோதிபக்கி னிக்கடாவி வீழுமங்கி யுடன்சுடர்
மூலவிந்து பூமியூடு தானிறங்கு மேலுவாச்
சாதியத்த லத்தினிற்ச மாதிகொண்ட தையனே
சத்தியுள் ளடக்கமாகித் தானிருக்கு மீசனே. (13)

வேறு

ஈசனென்றுமுடி வன்னியாதிகழி யேகமானபரி பூரணம்
இந்துசூடுமொரு மீனமேஷமதி லேயிருக்குமவை போதுமோ
வாசமுண்டுபுவி யாளர்தானுமறி யாதிருந்தச மாதியாய்
வாடிடாதுபின் மலர்ந்திடாதுநிற மாவதென்னவயி டூரியம்

தேசமென்றவுவ ரானபிங்கலைசி வந்தமேனியடி சூரியன்
தேவிமூலவெளி யேமலர்ந்துநிறை திங்கள்சித்திரையின் மாதமாம்
ஊசிநீலமதி னின்றுஆழியிலு றைந்தெழுந்திடுகல் லுப்பெனும்
ஓதுமங்கைநடு வானதென்றுமிடை யுண்மையானபனிக்காலமே. (14)

வேறு

காலமறிந்தவை தோணாரேதலை கீழேநுழைந்து காணாரே
காரியவேலையி னூடாரேசிலை யாகவளர்ந்தது பாராரே
மேலையெழுந்திடும் பூநீரேஉர மாகமுடிந்திடும் நீராலே
மேகஜலப்பசை கூராலேமதி பீஜமதென்பர்கள் பெரியோர்கள்
மூலகயம்பிவை மூன்றாலேவளர் மூவுலகும்பொருள் தானாகி
மோனமிகுந்திடு மொன்றாலேசுவர் கோடிவிளைந்தது மண்மேலே
ஆலமருந்து மான் பூலையறி யாமலலைந்து சுடுந்தோஷி
ஆசைமிகுந்து கடந்தோறுமுய ராவிபுலம்பி மெலிந்தாரே. (15)

வேறு

மெலிவிலாத லாயுவங்கி யப்புமூன்று முப்பதாம்
வெளியில்ரெண்டு குழியிலொன்று மீனமேஷ மல்லவோ
செலவிலாத நாதநீரில் மேவியாடுந் தீட்சையாம்
தேவதேவ நீயலாது செம்பொனென்ன அற்பமாம்
மலைவிலாத யோகமுமெய்ஞ் ஞானமுங்கை மேல்வரும்
மாசிலாத சூகராஜன் வானிலோடி யேவரும்
அலையின்மீதி லண்டபிண்டம் நாதமேக நீரடா
அங்கிகண்ட வழலைப்பு ஆதியான குருவிதே. (16)

கலித்துறை

குருக்காணு மென்நந்தி முந்நூற்றிற் சொல்லிய கோசரத்தைப்
பெருக்காற்றி னிற்சென்று தானே மிதக்கின்ற பேதையுப்பை
உருக்காக வுங்கட்டி நீரான வூசரத் தோடுணரில்
கருக்காணும் வேதைக்கு மால்சவுக் கார்த்தைக் கண்டிலரே. (17)

வேறு

பாருலகத் தினிலிரும்பு பசும்பொன்ன தாகும்பின்
பாகா தாலே
வேருலகத் தினிலுடலைப் பொய்யெனவென் றறிந்துமேல்
மேவான் ஞானி
மாருதத்திற் சலமசையு மசைவதுபோ லாகாய
மசையா தென்றே
பேருரைக்கொணாதறிவிற் கவ்வறிவே சேருமல்லாற்
பேதி யாதே. (18)

வேறு

ஆதியின் விலாசமிவை யானஜெகம் யாவும்
பேதகம தாயறிஞர் பேசுவது முண்டோ
சாதிபல வானவுயிர் சாகரம தென்றே
நீதிமொழி யானபதி னெட்டுமிவை முற்றே. (19)

ஊர்வசி இரத்தினச் சுருக்கம் 19.
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூர் வத்திராயிருப்பைச் சேர்ந்த தம்பிபட்டி கிருஷ்ணாபுரம் மாரிமுத்துத் தேவர் குமாரர் அங்கப்பத் தேவரிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

பதஞ்சலியார் ஞானம் 54.

திருப்புகழ்

காப்பு

நேரிசை வெண்பா.

சீலத் தரும்பொருளைத் தேசோன் மயப்பொழிவை
மூலத் தசைவை முதற்குருவை - ஞாலமுணர்ந்
துய்ய பதஞ்சலிமுன் போதுந் திருப்புகழ்க்கையங்
கையனிரு பூஞ்சரணே காப்பு.

ஆறாதா ரப்பொருளா யைம்புலனாய் வன்கரணக்
கூறாய்க்கான் மூவசைவின் கொள்கையாய்ப் - பேறான
வாழிடமூன் றெய்தும் மனோமணியன் பான்மகிமை
சூழும் பதஞ்சலிநூல் சொல்.

தனதனதந்தன தானாதானன
தனதனதந்தன தானாதானன
தனதனதந்தன தானாதானன - தனதான.

பரமமெ னும்பொரு ளேதோகாரணம்
விவரம றிந்தது தானேகூசனை
பழுதுற வெஞ்சுலு மாயாபேதமை யுறவாகிப்.

பழகிநி றைந்தபின் வேறேயோர்பொருள்
கருவிலெ ழுந்தது போலேவாய்வது
பரிசநு ழைந்திடு பூதாகாயமு மதுதானே.

கருவிய னந்தமு மீளாவாணவ
மலமிக கந்தைகண் மேலாய் நால்வகை
கபடவ லங்கிர்த யோனிபேதமு மெழுக[illegible]ாய்க்.

பதஞ்சலியார் ஞானம் 54.

கரையிலை யென்பது சீவான்மாவுகள்
பசுசல னஞ்சமை யாதீயாகம
கலகமெ னுந்திரை யூடேமுழ்கினர் சதிமாறி.

இரவிகள் சந்திரர் வானாகாயமும்
யுகமுடி வுஞ்சன னாதீமாயையி
லிதுசக சந்தனி லேனோபூருவ மிதுகாணும்.

இகபரம் ரண்டென வேதானோதிய
விருவகை யுந்தள லாமேஞானமு
மிதுவது வுஞ்சரி தானேமோனமு மினிதாகும்.

சருகுகி ழங்குகள் பானீர்க்காய்கனி
மிகவும ருந்துவர் வீண்வாய்பேசியெ
தடியின்மு ரண்டினர் தாமோர்வேணியின். முடிவேதோ.

சருவம வன்செய றானேயாகிய
குருவையு ணர்ந்தவர் தாமேயோகிக
டனையும றிந்தவர் பேசார்ஞானிக டவியாரே. (1)

உருகிர தஞ்சனி யாதேகநாமொரு
கவனமி டும்படி தானேசாரணை
யுபரச முஞ்செய நீரேயாகவு மறிவோமென்.

றுலகின் மடங்களி லோபாகாமிய
ரிவரைவ ணங்குவ ரியார்காண்முடர்க
ளூறுதிசி வன்சொலுமி யோகாதீதமு முரையாரே.

புருவமெ னுஞ்சுழி யூடேசார்வையும்
வலமிட முஞ்செய வேதான்வாயுவை
புரையுள தெங்கணுண் மேலேதேடிய பதியோராய்.

புதியமு துஞ்சிர கூடேநாடியி
லொழுகிவ ரும்படி யாமேதாரணை
புரியுமி தம்பெற வேதான்ரேசக புணர்வாகும்.

இருதய முஞ்சில நாளாயூகையு
ளுருகிம கிழ்ந்திட வேதோவாதனை
யிடர்கட விர்ந்திட லாமேஞானமு மிதுதானே.

இமையவர் கஞ்சன்மு ராரீயீசனு
மறலியும் விண்குடி போனாராசையி
லெவர்களி ருந்தவர் கூறாய்காதைகள் வழுவாமல்.

சொருபம றிந்தவ ரியாரோ பார்மிசை
சருவப ரம்பரை யோகீநீயறி
சுகருமி னந்தெரி யாதேபோயினர் தொலைதூரம்.

சுடுசுடு நெஞ்சையு னாலேதீமையை
விடுவிடு வைம்புல னாலாமாயையை
துறைதுறை சங்கைசெ யாதேநீடிய வியலீதே.

தனதன தத்தன தான தந்தன
தனதன தத்தன தான தந்தன
தனதன தத்தன தான தானன - தனதான.

இடைகலை யிற்றிகழ் சோடசந்தனை
ரவிகலை யிற்புக லாகவுஞ்செய
விருகலை யைத்திசை மாறிமாறியெ யிதுபோல.

இசையுமி தக்ஷணை பூரகந்தனி
லிருதொகை தப்பிவி டாமனின்றிடு
வெழில்புரு வச்சுழி மூலநாடியி லிருநீயே.

இனியச துர்த்திவி ரோசனஞ்செய
நவமிநி லைப்படு பாதிகங்குலி
லிருவிழி யுச்சியை மேவிப்பாரினி யிருசாமம்.

இடமூலி தற்பைவி தாயகந்தனி
லுழைசரு மத்துயின் மீதிலங்கிரு
யமனுமெ திர்த்துவ ராதஞாயமு மிதுவாமே.

பதஞ்சலியார் ஞானம் 54.

அடரும னத்தைவி டாதையைம்பொறி
விடையமு னைப்பழி போடவந்திடு
மதிகப சிக்கொரு நேரமேநுக ரரைகாலாய்.

அறுசுவை யிச்சைகொ ளாதகன்றிடு
புகையிலை நித்திரை கோபமுந்தளு
யபினிக ளைக்குடி யாதைலாகிரி விடவேணும்.

அருளும்வி திப்படி வாசியுஞ்செல
தசமிதி னத்துப வாசமும்புரி
யமவசி யிற்செய சூதமேகொளு செயநீரில்.

அறியும்வ கைப்படி தானேமுன்பிறை
பிறகுமி தைச்சரி பாருபின்பிறை
யமுதமு னக்கது தாரகாதியு மடையோகம்.

பிடரிவ ழிச்சிவ யோகமுஞ்செல
வுரகப டத்தடி மீதினுந்துயில்
பிசகிலை யப்பிர மாதியேந்திர முயிர்மூலா்.

பிரணவ வுட்சுழி வாசல்வந்திடு
வொருதுளை யற்புத மாமுவந்திடு
பிடரிந டுக்கணி னாலெகூடுவ ததுமோனம்.

பிரமமு னிக்குப தேசமுஞ்சொன
வதிகம கத்துவ மானவிந்தையை
பிரபல முக்கிய மான நூல்களி னுரைகூறும்.

பிறவிவி னைத்துய ரானமன்பதை
யிதையறி யச்செய லேதுசங்க்ரமம்
பெரியகு ருத்தொட ராவைநாடொரு நிழல்போல.

சடையைவ ளர்த்ததி னாலுமங்கென
தலையைவ ழித்ததி னாலுமங்கென
சருகுபு சித்ததி லேதுசாதகம் விருதாவே.

சமயம தப்பரி யாசமிண்டர்க
ளூடலழி யச்சில வாதியம்புவர்
தனமது கைக்கொள்வ தாககோதுவர் சிலபேர்கள்.

தவமது பெற்றவர் போலவம்பல
குகைமலை யுச்சியில் வாசமுஞ்செய்வர்
தனியெயி ருப்பதி லேதுகாரிய மிதுமாயை.

தணையுணர் தற்பரம மானவன்பர்க
ளிகபர மெய்ப்பொரு ளானநண்பர்கள்
சலனம னத்துயர் மேவிடாரவர் தவியாரே. (3)

தானத் தானன தானன தானன
தானத் தானன தானன தானன
தானத் தானன தானன தானன தனதான.

மூலத்தானம தாகியநாலிதழ்
மேலிட்டேயொரு நரகசிகாமணி
மூவெட்டாறுவி நாடியிலேகதிர் முனையாகி.

மோதிப்பார்விதி யாலருகேயொர்கூ
வாதிட்டானவி சேடனுமாகவெ
மோகப்போகவி ராகசையோகமு முனையாகும்.

மூடிப்பேசுவ தேதுநிராமணி
பூரத்தாமரை மாதவனாய்வட
மூலிப்பாயலி லேதுயில்காரண முகிலாகும்.

மூவர்க்கேமுத லானவநாகத்
கோணத்தீயுட லாகியதேவனை
மோசக்கோபம னோமயனாகவே முழுநாளும்.

மேலைக்கோபுர வாயின்மகேசுர
பூதத்தோடறு கோணமுளாகிய
வீசிக்காலையு லாவியுலாவியெ விளையாடும்.

பதஞ்சலியார் ஞானம் 54.

வேதத்தேமுடி வானசதாசிவ
பீடத்தேகுடி யாகவுமாயையில்
வீருக்கேயுரு வாகியவேபல விதமாகும்.

மேருக்கீழடி மேலுமுலாவிய
ஞானச்சேர்வையை மோனமதாயறி
மேவிப்பார்மத யானைவிநாயகன் வெளியாவான்.

வேடத்தாள்வட மாகியபேர்சிலர்
கூடிக்கூடிவி சாரணையேசெய்து
வீணுக்காகம நூல்சகமாயையில் வீழாமல்.

காலத்தேசரி சாலையிலேயரி
தானச்சூரண மோடுறவேசெய்து
காறிக்காறியு ணாவினிலேயிடு கபமாறுங்.

காலுற்றேவரு மூவிதபிராணயம்
மேவிப்பாணியி லூடுறவேசெய
காலக்கூர்மல மாறிடுமேவெகு களையாறும்.

காடிப்பானையி லூறும்வல்லாரையை
நீளத்தேசல தாரையிலேவிடு
காமச்சூடொடு தாபதின்சூடது காணாதே.

காரிட்டேவரு மாலையிலேயறு
கேழுக்கோர்மிள கோர்பலமாயது
காயச்சால்குடி நீரினிலேகொளு கனல்போகும்.

தூலப்பூக்ஷண மாகவுமேசெய
சூதச்சாரணை மூலிகையேயுணு
சூதத்தேசெய நீரினிலேகொளு சுழிபாரு.

சோமப்பால்ரச மேல்பெ ரிதானது
தோணிக்கோ குகையானதிலேயிரு
தூளித்தாலய மூசியுமேகொளு சொருகாதே.

தூரத்தேயலை யாதையுமாயிர
மேலிட்டோடிய வேம்பினிலேகரு
சோதித்தேயம வாசியிலேகொளு துயர்போகும்.

தோகைக்கேயர னாருரையேசெய்த
தியானத்தேயிரு ஞானவினோதசு
வாமிக்கேயுற வாகுகையேகுரு துணையாமே. (4)

தனதனதத்தத் தனத்ததாணன
தனதனதந்தத் தனத்ததானன
தனதனதத்தத் தனத்ததானன - தனதான

அகரவெழுத்துச் சரிக்கவேமதி
யமுதரசத்தைப் புகட்டுமேசிவ
வருளிலுருப்பெற் றிருக்கலாமுத லசையாமல்.

அறிவைவெளிக்குட் செலுத்தவேபர
வணுவொளியுற்றுச் சொலிக்குமாமொலி
யதுகுறியொத்துத் தனித்ததேகதி யருண்ஞானம்.

வகரமிறுக்கிப் பிடர்க்குளேயொரு
மனதையுறத்துச் சுருக்கமாய்நெடு
மதியை வலத்திற் றிருப்பியேவிடு மறவாமல்.

மணிரவியுச்சிக் குழிக்குளேநடு
சுழியினில்வைத்துத் துலக்கமாய்நிச
மவுனபதத்தெச் சரிக்கையாயிரு மலைபோல.

சிதரமுரைக்கச் சினைக்குமாணவ
கெறுவமதத்தைக் கெடுக்குமேயது
திருவுளமொப்புற் றிருக்குமேவெகு செயல்கூடும்.

செகமகரச்சக் கரத்தனார்மயன்
முழுவதும்வெட்டிப் புதைத்துமேவிடு
தினமொருகுத்துப் பிடர்க்குளேவரு மொருபோதும்.

உரகவிருத்திக் கிணக்கமாகிய
நகரபிறப்புக் கவத்தைபோய்விடு
முறுதிபலப்பட்டி ருக்கவேவரு முயிர்மூலம்.

உகரபடத்துத் தலத்திலேவளர்
பிரணவம்வைக்கக் கதிக்குமேயன
லுயிரையெழுப்பிச் சிவத்திலேயிரு /முலகோரே. (5

தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன
தான தந்தன தானனதானன - தனதான.

ஆசைகொண்டவ ரோசிலர்பேரச
வாதமுஞ்செய லாமெனவேயெணி
ஆதியந்தமி தாமெனவேவகை யறியாமல்.

ஆடன் மங்கையர் யோனியிலேவரு
தாரமென்பதி லேயுருசேரையி
லாகுமென்றிடு வார்சலமாகவே ரவிசூடன்.

ஊசரங்கதிர் நாளையிலேயெடு
மூவையுஞ்சிறு நீரினிலேதுவை
யூமையின்கரு நீரதிலேகடை யொருமாதம்.

ஊதவுங்கரி யாய்விடவேயது
பாகமுந்தவ றாமெனவேசொலி
யூதியெங்கணு மேதிரிவார்விதி யுலகாசை.

கேசரந்தனி லேயிடுரேசக
பூரகும்பக மேயுணர்யோகிகள்
கேவலம்பெரி தாமெனவேசொலு மறைநூலில்

கீதமங்கொலி பூமியிலேகலை
மாறிநின்றத லோகுயமானது
கேசனும்பர மேசனுமாமென சொலவேணும்.

தாசிவங்கண மானதிலேபிர
யோகசனங்கடு காகிலுமேயிலை
தாழ்வுவந்திடு மேயதுநீரென வறியீரோ.

தாரகஞ்சில நாளையிலேவிடு
தாரகஞ்சில நாளையிலேகொளு
தாரகம்பர மோனமதாயது தவமாமே. (6)

தானதந்தன தந்தனதந்தன
தானதந்தன தந்தனதந்தன
தானதந்தன தானனதானன - தானான.

ஆதிவங்கமி ரும்புடன்வெண்கல
மானசெம்புக ளிம்பறவேமன
தாசைகொண்டல வோசிலமூலிகை யாராய்வார்.

ஆவிடங்கண முஞ்சிலைசெந்திரு
வீரமும்புர முங்குருவாகிட
வாமியம்புவொ நீரறவேயென லாண்மோசம்.

நாதவிந்தொடெ லும்பதின் மண்டைகள்
சாரிடும்பல விந்தைகள்பேசுவர்
நாகலிங்கநி தானமதாய்கிலர் நாய்வாயார்.

நாலிரண்டுபு டங்கள்செயும்பல
காரியங்கடெ ரிந்திடுவீரென
ஞானமுஞ்சில நூல்களுமோதுவர் நாவாரச்.

சூதுறைந்தம னம்புலகந்தையர்
சூதமொன்றி விரண்டரைநாழியில்
தோயும்விஞ்சைசெய் வோமெனவோதுவர் வாய்வீணர்.

சோவிரம்பவி யம்பிலையஞ்சனம்
வாசிதம்பனம் விந்துவிடாதென
சோரரிந்தவு பாயமுமேகொடு சூழ்வார்கள்.

ஊதிநெஞ்சுவ றண்டிருகண்களும்
ஏயவிந்துபு லம்பிடுவார்சில
ரூமைகண்டக னாவெனவேயவ ரோய்வாரே.

ஊசரம்புவி யங்கியறிந்தவர்
கேசரந்தனி னின்றதறிந்தவ
ரூழுடம்பறி யாதவர்போல மேரதாரே. (7)

தானதந்தன தந்தனதானன
தானதந்தன தந்தனதானன
தானதந்தன தந்தனதானன - தானான.

காதலைம்புல னும்பொடியாய்விட
தீதுவெங்கர ணந்தொழின்மாறிட
காயவுண்டிய ருந்துவதாமரை காலாகிக்.

காரியந்தனி லுந்தனவாவழி
யோரிடந்தனி லுங்கரவாவணங்
காரணங்குரு வன்றுரைசேர்நெறி காலாகிச்.

சாதுசங்ககிர மங்களுமாயிரு
தானமுந்தவ முஞ்செய்வதாயிரு
தாழ்வகன்றியன் மிஞ்சினுமாமது சார்வாகிச்

சாதகங்கலை யும்புலியாசன
மோடுபங்கய முந்தரைமீதினுந்
தானிருந்தசை வென்பதிலாமலே தாராளம்.

நாதகுண்டலி கொண்டலுமேவிடி-
லூதுசந்திர னங்கசைவாய்வரி
னாடுபிங்கலை வொன்றுபிராணனை நாடோறும்.

நாதசங்மெழுந் தொலியேசெய
ஞானகும்ப சிதம்பரமாநட
காவலஞ்சுழி வந்திடவேவிர னாலூணும்.

ஒதுதுண்ட நெடும்பிறைமேன்முனை
யூடெழும்பிட வும்பிரபைநேரிடும்
ஓமெனும்பரம் வந்தருண்மோனமு மோர்வாயே.

ஊழியிந்திர னுங்கணணோர்பர
மேயனந்தண னுஞ்சனகாதியு
மோடிவந்துற வுஞ்செய்வர்காணுமு னூழ்போமே. (8)

தானதானன தானனதானன
தானதானன தானனதானன
தானதானன தானனதானன - தானான

பாலனாமறி யாமையுமேவிடு
கோலமேனிப யோதருமேதரு
பானுநாண்முதல் சோமனலோகுறி பாரீரோ.

பாவைமார்மய லாசையிலேமன
மோடினாலும் விடாமலுமேமறி
பாதை நூல்வழி யாகவுமேவிடு பால்போலச்

சாலவேபதி னாறளவாயடை
யோகமானது வாகுமுனாலுசெய்
சாமிகாரிய மியாவுநினால்வழி தானாகுஞ்

சாகுநாளையிலேசிவ னேயென
வோதினால்விடு மோதலைமேல்விதி
சாடவேவரு மேமபடாளர்க டாழ்வாரே.

மூலவாசிய பானபிராணனை
மோனகேசர மாயுறவாகவும்
மூலிகாதிக ளாலிடரேதுடன் மூசாதே.

மூடரேவய தேடிதளாடிய
நாளிலேயென ரேசகபூரக
மோசமேவரு நோய்பிணியாலுடன் மீளாதே.

பதஞ்சலியார் ஞானம் 54.

காலதாமச மாயரைநாழியும்
வீணிலேதிரி யாமளன்னேரொடு
காணுதேசிக னாரிருசேவடி காணியே.

காடுவாவென வேகரநீடவும்
வீடுபோவென வேசொலியூடவுங்
காலசூனிய மாமிதுவேவிதி காணீரோ. (9)

அகஸ்தியர் நூலின்றொகை.
கழிநெடிலாசிரிய விருத்தம்.

கும்ப மாமுனிவர் தாமு ரைத்ததமி
 ழோநிகண்டுபதி னாயிரங்
கூறு காவியம தாயிரம்பெரிய
 வாதமாயிர மிரண்டுநூற்
றைம்பதோடமைவ தொன்றுமிக்கபதி
 னாறுமெண்பதுட னன்றியே
அஞ்சுநூறுபரி பாடைமூலெழுச
 கஸ்திரமாறுசத பூரணம்
இன்பமானவிரு நூறுமுப்பதொரு
 வேழுநூறுவறு நூறுடன்
இனியசாகரமே ழாயிரங்கவிதை
 யேமதத்துவமெ ணூறதாம்
உம்பர் தாமறிவர் நாலுநூறுவிடை
 யோதுகாவல்வ ரியாயிரம்
உப்பு நூறுமதி பாடல் நூறுசிவ
 யோகம் நூறுமிது வுண்மையே. (10)

சித்தர்நூலின்றொகை.

இசையும்ஞானதிரு மூலமந்திரமெண்
 ணாயிரங்கவிதை யின்பமாய்
இனியபோகருமே ழாயிரத்தையு
 மெடுத்துரைத்தன ரிணக்கியே
விசுவரூபவவ தாரகொங்கணனு
 மேயுரைத்தனனை யாயிரம்

மீறுமச்சமுனி யெட்டுநூறுகவி
வேதமென்றறைவர் நூல்வலோர்
அசைவிலாதசிறு பிள்ளைசுந்தரனு
மாயிரத்தினி லடக்கினான்
ஐயர்சட்டமுனி யாயிரத்தினிரு
நூறுமாயிரமு மற்புதம்
வசனசுத்திகபி லாதிமாமுனிவர்
வாசமானசன சாதியும்
வாமரோமமுனி நந்திதேவர்வட
பாஷையோதினர்கள் வண்மையே. (11)

சித்தர்வர்க்கமிடம்.

மேருலாவிவட வீதிதோறுமுயர்
வேதஞானசன காதியர்
மேலைவீதிதிரு மூலவர்க்கமிக
வேயிருந்துவிளை யாடினார்
பாருகீழ்த்திசையி லையர்சட்டமுனி
பானுமாமலையி லாகினார்
பன்னுதென்றிசையி லேயிருந்துதமிழ்ப்
பாஷையோதின னகத்தியன்
தாரிலேயிவர்கள் சீடவர்க்கமது
கோடிகோடியிவர் தம்மிலே
சாதுசுந்தரனு மச்சகூர்மமுனி
தாரகாதிபதி கொங்கணன்
சீருலாவிபர வேமடங்களது
செய்துசித்திக மாடினார்
தேசதேசசில பாஷையாலுமிவர்
செப்புநூன்முறை தெரிந்திடே. (12)

யோகிகளுக் கழிவில்லையென்பது
மட்டு விருத்தம்.

தாதுகொண்ட வண்டமீது தானெழுந்த வங்கியார்
சூதமுண்ட பேரில்யம தூதரண்டு வார்களோ
ஓதுகின்ற பூதமஞ்சு முள்ளடங்கி நிற்கவே
நாதமுண்ட யோகர்யாரும் ஞானகண்ட ராவரே. (13)

ஆழிதூள்க ளாகிமேரு வண்டம்வேறு கூறதாய்
ஊழிகால மானபோதும் யோகிசாவ துள்ளதோ
பாழிலேயெ ழுந்தவன்னி பாரில்வந்து ணர்ந்ததால்
வாழிவாழி சூதமுண்ட மானுபாவர் வாழியே. (14)

சரியை.
கட்டளைக்கலிப்பா.

ஆதித்தன்மதி வாரமிருந்திடு
  ஆடிப்பார்நதி யாடிடுகும்பிடு
வேதத்தோர்தம தேவல்புரிந்திடு
  மேவிப்பாருயிர் மீதிலிரங்கிடு
நீதத்தேமனை யாளைமணந்திடு
  நேமத்தாலயல் மாதையான்றிடு
சாதித்தேதர்ம தானங்களுஞ்செயுஞ்
  சார்புக்கேநிலை யாகுஞ்சரியையே. (15)

கிரியை.

ஊணிப்பாரே அகாரவெழுத்திடை
உவ்வைச்சேர்க்கி லுருப்படுஞ்சக்கரம்
பேணிப்பாரு மகாரமவுனத்தைப்
பெற்றியாமது பேரிட்டழைக்கவும்
தோணிப்பார்கர்நி யாசவிதிப்படித்
தொட்டுப்பார்சர்வ காலமுமிப்படிக்
காணிக்கானது கோடிக்குமாகுமாங்
காட்டுங்காட்டுங் கிரியையைக்காட்டுமே. (16)

காயகற்பச்செந்தூரம்.
சந்தவிருத்தம்.

காந்தச்சத்தை யெடுத்தொ ரயத்திடை கட்டிடு வில்லோசை
சாந்தப்பொற்றக டேறரசத்திடை, தக்க பரைநாதஞ்
சேர்ந்தந்தப்படி யப்பிர கத்தொடு செய்திடு செந்தூரம்
ஈந்தப் போததை நக்குவர் மெய்த்திற லக்கமுறைத்திடுமே. (17)

சூரிப்பச்சிலை யுப்பையெடுத்தொரு சுத்தசலத்தினில்வை
வாரிக்குச்சுள காலையெடுத்தொரு மத்தகசத்தினிலிட்
டேரிக்கற்பசை யூனையெடுத்துட னிட்டிடுபூநீரிற்
சாரிக்கச்செய நீருகடைந்திடச் சாகாக்கங்கையுமே. (18)

யோகத்துக் கருகராகார்.
மட்டுவிருத்தம்.

பூவுலகி லேயதிக பொய்க்கொலை யவர்க்கும்
பாவியென வேவுடல் படைத்தவர் தமக்கும்
ஆவல்பெரி தாகிவறி யாமையுள வர்க்கும்
தேவிமுத லானசிவ தீக்ஷையுரை யாரே. (19)

மையல்பெரி தாகிய மனத்தினர் தமக்கும்
ஐயமுறு கோபியர்க ளானவரி டத்தும்
பொய்யுரையி னிற்பொழுது போக்குவரி டத்தும்
செய்யபிட ரிக்குள்வழி சேர்க்கவறி யாரே. (20;

ஆசைதன தானியம தாகறுவ மீறிப்
பாசவலை யிற்பதறு பாதகர்த மக்கும்
வாசிசிவ யோகபர மாமவுன மூலம்
பேசவறி யார்கள்பெரி யோர்கள்குண மாமே. (21)

ஆனபொரு ளாவியுட லாகவொரு தாரைத்
தானிமளி யாதவப சாதகர்த மக்கும்
ஞானபர தூஷணர்க ணல்லறிவி லார்க்கும்
வானவன லாம்வழலை வாசமுரை யாரே. (22)

மாயமனை யாளுடைமை வாழ்வுசத மென்றே
பேயரென வேமொழிபி தற்றுவர்த மக்கும்
ஏயவய லாருடமை யேகவர்ப வர்க்கும்
காயமுற வானசவுக் காரமுரை யாரே. (23)

பத்தியம்.
ழடுகு விருத்தம்.

பருகிய கனிகா யிலைபனி பயறொடு
　படர்கொடி விரைமூலம்
பருமினி கடுகொடு புளிபுகை யிலைதுவர்
　பலபல மாமிசமும்
உருகிய கிருதமோர் தயிர்வகை யெணெயொடு
　முயர்மது குளிர்சலமும்
உறவுசெய் திடுசில மதுரமு மியைதளி
　யுணவது நீகேளாய்
குருவைநெ லரிசிசெம் மிளகொடுகோதிவை
　குணமுள பொடியடையாய்
குருமிள கதுசெய லவணமு மறிதடு
　குறைவிர் புளியாரை
அருமையி லொருபசு வமுதினை யுடனெடு
　வனலது பிடியாமல்
அரைவயி லொருபொழு துணுமவர் மவுனமு
　மவர்களு மறிவாரே. (24)

மதிவெண்பா.

கதிருஞ் சசியுங் கலந்து பிரிதல்
விதிபுருவ மாய்க்குருநூல் விள்ளும் - மதியான்
மொழியு முறைதெரியா மூடரே நாளும்
வழலையறி வாரோ வழங்கு. (25)

வண்ணான் பிறப்பறிய மாட்டாத வாதிகட்குச்
சுண்ணாம் பிருக்குமிடந் தோன்றாதே - தண்ணீரி
லூருங் கருங்காக மூசரத்தைக் கொன்றுதென்றாற்
பேருமதி வெண்பாவைப் பேசு. (26)

காந்த மலருங் கடலுப் புறவானால்
ஏந்து தனமிரண்டிங் கெய்தாதோ - காந்தமலர்
காட்டிலே பூபூக்குங் கானலிலே காய்காய்க்கும்
நாட்டிலே கண்டிருப்போம் நாம். (27)

யோக ஞான சாஸ்திரத் திரட்டு

உப்புந் திரைகடன்மே லூசரமு மண்மேலே
அப்புங் கனலிரண்டு மாகாய - மிப்புவியில்
வாதிகாள் சூத மடக்கறியீர் வீண்கரிகட்
டூதினா லுண்டோ வுணர். (28)

காரஞ் சுருக்கறியீர் கம்பியுப்பைக் கட்டறியீர்
பூரப் புகையடங்கப் பூசறியீர் - வீரத்தை
யூனிட் டுருக்கீறியீ ரூசரத்தைக் கொல்லறியீர்
ஏனிப் படித்தவிக்கி றீர். (29)

ஆழி கடைந்தமுத மாக்கறியா ரச்சலத்தா
லூழிபர னுப்பையெடுத் தூட்டறியா - ரேழுசட்டை
வாங்கிரசங் கட்டறியார் வாதிகடம் வையகத்திற்
றூங்கிவிழு வாரெனவே சொல். (30)

பார்த்தால் விசுத்தி பரத்தினடி யாசனத்தி
லேத்தாமல் விட்டா லிதமில்லை - காற்றாடி
பின்கலையி லூதிற் பிடரிவழி புக்குமே
முன்கலையி லோடு முன். (31)

சாயை மறையாதோ தன்னுடம்பு தான்வெளிக்கு
ளோயா வகத்தினடு வோடாதோ - காய
முயரப் பறவாதோ வுன்மனையைத் தாண்டாதோ
செயமுக் குளிகைசெயுஞ் சீர். (32)

சாற்றுங் குளிகை தமர்வாச லிற்செலுத்தி
யேற்றினா லேழுசபை யேறாதோ -தோற்று
மனங்கடந்து பூரணத்தில் வாழாதோ காய
மினந்தெரிந்து கொள்ளு மியல். (33)

வண்ணவிருத்தம்.

வாசிவாசி மூலவாசி வாயுமூல தாரையின்
மாறிமாறி யூதபான வாதையேது போய்விடும்
வீசிவீசி யோடினாலும் வீடகார வீதியின்
மேவியூது பிராணவாயு மேலைவாசல் தேடிடு

நாசிநாசி கூர்மையான நாதவாரி கேசரம்
நாடியூது ஞானசாடி ராஜயோக மாகுமாம்
காசிகாசி யேயுணேசி வீணிலோடி மாய்கிறீர்
காலன்மூல வாசியாகக் காணலாவ தாகுமே. (34)

கட்டளைக்கலிப்பா.

மார்க்க மாம்பர வானத்தின் விந்துவாற்
றீர்க்க மாய்வெகு வுப்புச் செனித்திடும்
பார்க்கும் யோகம டாபரை வாதிகட்
கேர்க்கு மாமுப்பு வேழென் றறிந்திடே. (35)

உண்ணு மங்கையர் கர்ப்பக்கு ழிக்குளே
பெண்ணு மாணும் பிறந்தது போலவே
விண்ணி லாடும் விளங்கு மழைத்துளி
கண்ணி லேதரு சாரமுஞ் சாரமே. (36)

சார மேசில காரம தாயிடும்
கார மேயதி சாரம தாயிடும்
பூர மேயுற வாகவும் புக்கினால்
வீர மேவி விளைந்திடும் வேதையே. (37)

அஞ்சு பூதம தாகிய வுப்பது
மிஞ்சு தீக்கு வெறுங்குகை யாய்விடும்
தஞ்ச மாஞ்சிவ சத்தியின் றீகைஷயாற்
றுஞ்சி டாதது தோஷமு மில்லையே. (38)

ஒது பூரணச் சந்திர னுப்பினால்
வாது சூரிய னுப்பு வசப்படும்
போது வானத் திழிந்திடும் பூவினாற்
சூத மாமணி யாடித்து லங்குமே. (39)

சூத மாமணி யோடுசு கெந்தியும்
சாது நாகமுந் தாளக வங்கமும்
நாத வேமமும் மேருவும் நண்ணினாற்
றீதி லாதசெந் தூரமுஞ் சித்தியே. (40)

தாக்கும் பூமியைத் தானறிந் தாலல்லோ
வாய்க்கு மீசன் மகிமையுப் பாமது
காய்க்குங் காலத்திற் கண்டிடா வாதியை
யேய்க்கு மேய்க்கு மிறக்குமு டலுமே. (41)

அலையி லேவழிந் தாடிய சைந்தது
சிலைய தாய்மதி யாகத்தி ரண்டது
மலையி லேவரு கங்கைம கத்துவந்
தலையி லேசிவ சத்தியின் நீக்கையே. (42)

அண்ட வன்னியி னால்ரச மாகிடக்
கண்ட போதினிற் கற்பம தாயிடும்
உண்ட போதினிற் காயமு றுதியாம்
பண்டு மீசன் பகர்ந்தமு றையிதே. (43)

வன்னி யுண்டு ரசஞ்செய மாகினாற்
பின்னை யோர்பொருள் பேசவும் வேண்டுமோ
தன்னை யேயுணர்ந் தார்தமக் கல்லவோ
சொன்ன யோகமுஞ் சூதமுஞ் சித்தியே. (44)

உப்பி லேகளிம் பூறுந்து ருகுதான்
அப்பி லேதுவைத் தாலல வோவறும்
செப்பி னார்கடுஞ் சீனச்சுண் ணாம்பினாற்
றப்பி டாதரி தாரஞ்ச லவையே. (45)

அகார மென்றறி யார்முடி யக்கினி
உகார மென்றறி யார்புவி யூசரம்
சிகார மென்றது கைக்குளே சிக்கினால்
வகார நின்றிட வாயுவி ளங்குமே. (46)

அண்ட மாவது கோழியி னண்டமோ
பிண்ட மாவது தான்றலைப் பிள்ளையோ
வண்ட ரேயிதி ரண்டையு மார்க்கமாய்க்
கண்ட போதலோ காண்பது சொர்னமே. (47)

காக்கை யார்க்கெனுங் கம்பிதி றப்படும்
காக்கை யாயுவர்ச் சாரமுங் கட்டலாம்
காக்கை யார்ச்சவர்க் காரமுங் கைக்குளாம்
காக்கை காக்கை நடுங்கடங் காக்கையே. (48)

ஆடி யாவணி யாழிதி ரண்டதை
தேடி னால்வரு மோவந்து சிக்கினாற்
பாடி னார்பல நூல்களிற் பாஷையா
லோடி யோடி யுழன்று தவிக்கவே. (49)

தையுமாசி யென் றேசிலர் சாற்றினா
ரைய னேபனிக் காலம தல்லவோ
செய்ய கங்கையின் றீக்கை யறிந்தபேர்
கையு மெய்யுமெய் யாகவுங் காண்பரே. (50)

மீன மேடமி ரண்டையு மேவுவார்க்
கான காலமென் றேசிலர் காட்டுவார்
போன காலமும் புக்கின வேளையும்
ஞான தேசிக னார்சொலும் நல்குமே. (51)

மட்டு விருத்தம்.

காரஞ்சில சாரஞ்செய நீரானது கட்டும்
வீரஞ்சில பூரங்களும் மெழுகும்பல விதமாய்க்
சேருஞ்சில குருவும்பல செந்தூரமு முறவாய்
ஊருஞ்சில தயிலங்களும் உப்பாமென வுரையே. (52)

ஆகும்பெரு வெளிமேலுட லாடும்படி கசனம்
போகும்படி திடமாகிய பொருளேரச மணியுந்
தேகஞ்சில நாணின்றிட வேசெய்திடு திரமும்
யோகம்பெறு மௌனங்களும் உப்பாமென வுரையே. (53)

மூடுகுவிருத்தம்.

நூறிலேறு போதிலாறு கேணியாகும் விந்தடா
நூறுநூறு சேருமாகின் மாரிபெய்யு மாறடா
வேறுமீச னேதுஞான வீதியேறு போதிலே
வேதனாளு மாயனாளு மீசனாளும் வீசமாய்க்
கூறுநாவ தேதடாசொன் மூலநாடி யூதவே
கோணமாமு வாசலேறப் பாழின்மீதி லேறடா
சாறுபோற்க ணேசர்பாத கேசராதி வீதியிற்
சாருசேரு தாரகாச தாசிவாய பிரமமே. (54)

பதஞ்சலியார் ஞானம் 54
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச்சேர்ந்த வத்திராயிருப்பு தம்பிபட்டி கிருஷ்ணா புரத்தில் மாவூற்றுச்சாமியார் இராமகிரி கோசாயி அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ
கணபதி துணை.

பதஞ்சலியார் சூஸ்திரம் 20.

பூமலியின் கண்ணாடன் பாதம்போற்றிப்
புகலுவேன் வாதத்தின் திறவுகோலை
நாமுரைப்போம் ஐநான்கு பாடற்குள்ளே
நலமான வாதவித்தை ஞானமார்க்கஞ்
சோமனுற்ற வேணியனா ரு தேசத்தால்
துறையறியும் பதஞ்சலிதன் சூஸ்திரத்துள்
ஏமவித்தைக் காதியென்ற வஸ்துவுப்பை
யிதையறிய மாட்டாம லேங்கினாரே. (1)

ஏங்கினார் வஸ்துவுப்பைக் கண்டாற்போலே
யிதினாலே யிருக்குதென்பார் எதுதானென்றாற்
பாங்கியர்கள் தீட்டமென்பார் விந்தாமென்பார்
பனிரெண்டும் பதினாறும் பருவமென்பார்
தாங்கிவளர்த் திட்டதலைப் பிள்ளையென்பார்
சமாதியிலே வைத்திருக்குந் தலையோடென்பார்
தூங்கையிலே சொற்பனத்தி லாயிவந்து
சொன்னதென்பார் பூடென்பார் சுகியென்பாரே. (2)

சுகியென்பார் கோழிமுட்டைக் கிழிஞ்சிரெண்டும்
சுத்தசல மானாக்கால் தொழிலாமென்றுந்
தகையென்ன புளிதானே பலமாமென்றும்
சாரமென்றும் மூத்திரமே உப்பாமென்றுங்
குகையென்ன செவிநஞ்சுங் கண்ணீரென்றுங்
கோசமென்றும் பீசமென்றுங் குருவண்டென்றுந்
திகையாதே சடத்தினிலைங் காயமென்றுஞ்
சிகையென்றும் பூகாகத் தெளிவென்பாரே. (3)

தெளிந்தவர்போற் சித்தர்சொன்ன சூத்திரத்திற்

சிக்கறுத்துப் பாராமற் செகத்துள்ளோர்கள்
அளுந்தியதி லுத்திபண்ணிப் பாராமற்றான்
அவரவர்கள் நினைத்தபடி கட்டுப்பார்த்துப்
இளந்தைசொல்லா மென்றுசொல்லி நூல்வெறுத்து
இல்லறமே நல்லறமென் றிருந்தார்கோடி
களிந்தபிணம் போல்மெலிந்து சிலதுபேர்கள்
கானகத்து மலையிடத்துங் கருதினாரே. (4)

கருதினார் சிலதுபேர் குருத்தான்வந்து
காட்டுவா ரென்றுசொல்லி சூஸ்திரத்தை
உருவியே கிழித்தெரிந்து வீண்வாய்பேசி
உழன்றுதவிப் பார்களதி லனந்தம்பேர்கள்
மருகினார் சிலதுபேர் வாதவித்தை
வந்தவற்போற் சொல்லியவர் பிழைப்போமென்று
உருகினார் யோகதண்டுங் காயாசங்கள்
யோகநிஷ்டை பெற்றவர்போ லுருக்கொள்வாரே. (5)

கொள்ளுவார் செபமாலை கையிலேந்திக்
குறடுமிட்டு நடைநடப்பார் குகையிற்காப்பார்
விள்ளுவார் வாதமொடு யோகஞானம்
வேதாந்த அதீதம்விசா ரித்தோர்போலத்
துள்ளுவா ருபதேசம் செய்வோமென்பார்
சூதமணி கட்டுகிறேன் தொழிற்பாரென்பார்
த்ள்ளுவார் பொருளாசை நமக்கேயென்பார்
சவுக்காரக் குருமுடிக்கத் தனமென்பாரே. (6)

தனமென்ன வாலைமனோ மணிதானென்பார்
சாராயம் பூசிக்கத் தண்ணீரென்பார்
கனமென்ன காந்தசத்துக் கிண்ணம்பண்ணிக்
கற்பமுண்டு பெண்ணாசை கண்டோமென்பார்
மனமென்ன வாய்ப்பிரட்டுங் கைப்பிரட்டால்
வாதவித்தை போற்காட்டி மயக்கஞ்செய்வார்
தினமிந்தப் படிதானே யுலகத்துள்ளே
சீவனங்கள் செய்வார்கள் சிலதுபேரே. (7)

சிலதுபேர் பிரமவித்தை பொய்யென்பார்கள்
சித்தசுத்தி யானவரைத் தெரியப்போமோ
தொலையாத பூமியிலே யறிவுகொண்டு
சோதித்தாற் கோடியிலே ஒருவனுண்டு
கலகமிடா நற்சீட னறிந்துகொண்டாற்
காந்தமய மிழுப்பதுபோற் கலந்துகொள்வார்
மலையென்ன உலகமென்ன வனந்தானென்ன
மவுனவித்தை யறிந்திருக்கும் வகையாளர்க்கே. (8)

வகையறிந்த பெரியோர்கள் மலையிலுண்டு
வனத்திலுண்டு செகத்திலுண்டு வாழ்ந்தாலுந்தான்
பகையணுகா ருறவுகொள்ளா ருலகாசாரப்
பந்தம்விடார் கர்மானு பவத்துட்சிக்கார்
செகம்விளையாட் டதிலிருக்கார் சினந்துபேசார்
சிவசமய விகற்பமுறார் திறந்துசொல்லார்
அகமுறையார் ஜீவபர மாத்மாவெல்லாம்
அவராகி நிறைந்திருப்பார் ஆசான்றானே. (9)

ஆசானைக் கண்டபேர்க்கு ஞானப்போக்கும்
அப்போதே யோகத்துக் கருளுண்டாகும்
பேசாத மௌனமென்ற பிரமவித்தை
பிடரிவழி கண்திறந்து பிரகாசிக்கும்
பூசார வஸ்துஉப்பு வன்னிபீஜம்
புதைத்தவிடம் தனைக்காட்டிப் பொருளுஞ்சேருங்
கேசாதி பாதமுதல் நடுவுந்தோன்றுங்
கெவுனமென்ற குளிகையது கிடைக்கும்பாரே. (10)

கிடைக்குமே யின்னூற்கு முதனூலையா
கெட்டியாய்ப் புதைத்துவைத்தேன் சூஸ்திரத்துள்
முடிகனலும் அடிப்புனலும் நடுக்கால்மூன்றும்
மோசமில்லை பாடிவிட்டே னிருநூற்சங்கங்
கொடைக்கொருவ னென்பதுபோ லிந்தநூலிற்
கூறுவேன் வஸ்துஉப்பின் குறியொன்றைத்தான்
உடைக்கவென்றா லக்கினியின் பூவுக்குள்ளே
உற்றவிடம் வஸ்துஉப்பென் றுரைக்கலாமே. (11)

உரையார்க ளாதியென்ற வஸ்துஉப்பை
உதாரணமாய்ச் சொல்லிவைத்தார் சித்தரெல்லாம்
துறையறியா வண்ணமதாய்ச் சூட்சமாகச்
சொன்னாரே யந்தவிதந் தன்னைநோக்கி
மறையாமற் றிறந்தாரே நந்திதேவர்
வாய்ப்பூச்சிக் கடக்கிவிட்டார் மற்றோரெல்லாங்
கரைகாணா விருட்சிகமாம் வன்னிபீசங்
காண்பதற்கு யெவ்வனமுங் கண்டுபாரே. (12)

பாரையா காலத்தை முன்பின்னாகப்
பாடினா ரதைத்தெளிந்து பார்க்கவேணும்
நேரையா வஸ்துவுப்பைக் காணவென்றால்
நினமறிய வேணுமதின் நிஜமும்வேணும்
தூரையா சந்திரனுக் கைந்துதீட்சை
சுயமான சூரியனும் கைந்துதீட்சை
பேரையா அக்கினிக்கோர் தீக்ஷையென்றாற்
பின்றசமாம் தீட்சையொன்றும் பேசினாரே. (13)

பேசினதி லொன்றுமில்லை யேகதீக்ஷை
பெரியோர்க ளுட்கருவை புதைத்தாரந்த
சூக்ஷணைதா னறியவென்றா லகாரமிட்டும்
சுழித்திருக்கும் உகாரமல்லோ யேகதீக்ஷை
பூசைவிதி மறந்தாக்கால் முப்புசத்திப்
பூரணமு மாகாது பொய்யாய்ப்போகுங்
காசினியோ ரிதைவிட்டு ஆசைபூண்டு
கரிசுட்டுக் காணாமற் கலங்கினாரே. (14)

கலங்காமல் வன்னிக்கு நாலுகாலு
கதிரவனுக் கொருநான்கு காலுமாகுந்
துலங்கினார் சோமனிலே விரண்டுகாலு
துகைபார்க்கப் பத்துக்கால் தோன்றலாச்சு
மயங்கினா ரிடைதப்பி குருவைச்செய்தால்
வாய்க்குமோ பூதமைந்து காணவாழ்க்கை
துலங்கினோம் முன்நூலிற் கண்டுபாரு
துருசுகுரு ஆவதற்குத் துறைசொன்னோமே. (15'

சொன்னதென்ன பிரிதிவுக்குத் தீக்காலொன்று
சுகமான வப்பினுக்குத் தீக்கால்ரெண்டு
பின்னமில்லாத் தேயுவுக்குத் தீக்கால்மூன்று
பேரான வாய்வினுக்குத் தீக்கால்நாலு
நன்னயமா யாகாச மைந்துதீக்கால்
ஞாதுறுநா லுக்குமிந்த ஞாயஞ்சேர்க்க
வின்னமில்லா தீகைஷக்குப் பலந்தானாச்சு
மேலான வாதவித்தை வெளியாய்ப்போச்சே. (16)

போச்சிந்தப் பூதத்தைப் பிரித்துப்பார்க்கப்
போகர்சொன்னார் பூவழலைப் புலன்சொல்லாமல்
ஏச்சிந்த வகையாலே பார்த்துப்பார்த்து
எடுபட்டுப் போனார்க ளுலகவாதி
ஆச்சிந்தப் படிதானே செயநீர்வைப்பார்
ஆதியென்ற சுத்தகெங்கை யாற்றைக்காணார்
மூச்சிந்தப் படிதானே யோகத்துக்கு
மூலமடி யிதைவிட்டால் மூடனாமே. (17)

மூடாம லொன்பதுவா சலையும்விட்டு
மூத்திரப் பாதைவழி மூச்சைவிட்டு
சூடான மேகத்தால் வியாதிபூண்டு
தூங்கியல்லோ மாண்டார்கள் தொழும்பரெல்லாம்
ஆடாமற் கேசரமா மாயைபத்தி
அறிவுக்குள் ளாயிருந்து அசவையெல்லாம்
ஓடாமற் சுழிமுனையைப் புரையிலூட்டி
உயிரடக்கும் பெரியோர்க ளுண்மைதானே. (18)

உண்மையென்ற குண்டலியே பிராணவாய்வு
ஓங்கார பிண்டத்தி லுதித்தவான்மா
மென்மையென்ற வாகாசத் திருந்தவாறு
மேலெழுத்துங் கீழெழுத்து மானவாறு
தன்மையென்ற வித்துவிலே நின்றவாறும்
சாஸ்திரவிதஞ் சாகரத்திற் சார்ந்தவாறுங்
கன்மையென்ற சிங்குவங்கில் நிறைந்தவாறும்
கண்மூக்கு மத்தியிலே கண்டுபாரே. (19)

கண்டுபார் பிராணாய மாகுமார்க்கம்
காபெற்றா லாகுங்கற் பூரதேகம்
ரெண்டல்ல மூன்றல்ல ஒன்றுமல்ல
நின்றவிட மெல்லாம்நீ நிறைந்துகொள்வாய்
கண்டமடித் துண்ணாக்கிற் கும்பகத்திற்
கால்நிறுத்தி யுன்சடத்தைக் காக்கவேணும்
மண்டலத்தின் வஸ்துவுப்பைக் காணவென்றால்
மனம்பார்த்து மனம்பார்த்து வாழுவீரே. (20)

வாழவே நடுவெழுத்தை அகாரந்தன்னில்
வைத்திட்டார் தலையெழுத்துப் பிரகாசிக்கும்
மீளவே கண்டெழுத்து ஓடாதையா
விட்டெழுத்துந் தொட்டெழுத்தும் மேல்கீழாச்சு
தாழவே வேண்டாங்கா ணைம்பத்தொன்றுந்
தலையெழுத்துக் குள்ளாகிச் சிறந்துபோச்சு
கோளுமே வாராது மறலியாவாய்
கூறியவா தத்திறவு கோல்தான்முற்றே. (21)

பதஞ்சலியார் சூஸ்திரம் 20
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த வத்திராயிருப்பு தம்பிபட்டி கிருஷ்ணாபுரம் மாவூற்றுச் சாமியார் காசிகிரி கோசாயி அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

வியாக்கிரமபாதர் ஞானம் 13.

எத்தை யாகிலுங் கருத்துளே வைத்தெளி தென்றும்
தத்தை யோகங்க ளிதுபலன் தருமென நினைவாய்
முத்தி வாசக மிதனிட மில்லென மொழியாய்
சித்தர் யோகிகள் தள்ளின திதுவெனத் தேறே. (1)

தேறும் வாசகம் நந்தியே திருநந்தியே சொன்னார்
யேறும் அங்கெனச் சிங்கென அங்கனே யிணைத்தாய்
தூறும் போகின்ற மும்மலைப் பாலையுந் துலைத்து
ஆறும் பாயவே அருவியுங் காட்டின னையன். (2)

ஐயன் வந்தெனை யாட்கொண்ட வதிசெயங் கேளாய்
கையும் வாயுமாய்க் காட்டினன் கண்டத்திற் கண்டாய்
பொய்மை போக்கினேன் ஓடினேன் ஒன்றினிற் புகுந்தேன்
மெய்ய னாகினேன் உயர்க்கெம னிலையென விதித்தான். (3)

வேறு

பூண்ட வித்தில் மதிபோச்சு பொன்போற் காணு மதுபோச்சு
ஆண்ட விடமும் நானறியேன் அகண்ட மல்லால் வெளிகாணேன்
மாண்டார் பிறந்தா ராராரோ மருவிஞான வாளொன்றில்
தூண்டா விளக்கிற் புள்கையத்தாற் சொரூப மவனாம் நிசமெண்ணே.(4)

நிசமே யென்று நீநினைத்தால் நினைந்த வண்ண மவன்நிற்பன்
அசைவாய் நீயும் மறந்துவிட்டால் அங்கே அவனும் வெளிக்கெய்தான்
குசையே கொண்டுப் பரிகட்டிற் கூற்றன் தன்னை யேயுதைப்பாய்
வசையே யில்லை பிறவிநோய் வாயா தொன்றும் வாராதே. (5)

வாரா தொன்றுந் தானில்லை வருந்தி மூலம் பார்ப்போர்க்குச்
சேரா தொன்றுஞ் சேராது தீயே தினமுஞ் சேர்ந்திருந்தால்
ஊரே வளைய வலம்வரினும் உறத்து நீயு மிடத்தேவா
ஆரே காணா மெய்ஞ்ஞான மறிவே மணமாய் நிசமெண்ணே. (6)

இறவா நெஞ்சம் நீயென்பார் இரவி மதியும் நீயென்பார்
மறவா நெஞ்சம் நீயென்பார் மனமும் நினைவும் நீயென்பார்
திறவா மனமுந் திறப்பிப்பாய் தேவ தேவம் நீயென்பார்
கறவாப் பாலில் நெய்வருமோ கசடர்க் குரையாய் மெய்ஞ்ஞானம்.(7)

ஞானங் கேட்கில் வாதமென்பான் நல்ல தொழிலைச் சொல்லென்பான்
தானே மோக வகைகேட்பான் ஜகஜா லத்துப் பொருளென்பான்
தேனே உரைத் தானென்பான் திருடர் மனது வெவ்வாறே
ஆனால் சோதி பன்னிரண்டும் ஆடும் மறைக்கும் அவர்மனமே. (8)

மனமே தென்கில் நேரென்பான் வாக்கிற் காணு மாண்டாகும்
குணமே தென்கில் நேரென்பான், குற்றம் பார்க்கி விடங்கொடான்
தினமே சுத்திக் கவடென்னத் திரிவார் வண்டச் சீஷருடன்
அனமே சத்தும் பேசாதே அறிந்த நூலுங் காட்டாதே. (9)

காட்டி மெல்லத் தலைசொல்லிக் கண்ட விடத்திற் கும்பிட்டுப்
பாட்டிற் பயனே பொருளென்பார் பசாச ரிடத்தி லுறவாகா
தீட்டிக் கழித்துத் தீயிட்டுத் தினமுங் கவரவல்லீரேல்
மூட்டித் திறக்கும் பகிரண்டம் மூலமுனக்கு வெளியாமே. (10)

வெளியாகும் ஞானம் வெளியாகும் மேவு மவுனம் வெளியாகும்
அழியாக் காய மழியாது அநேக காலந் தவஞ்செய்யும்
பொழியா வமிர்தம் பொழிந்துவிடும் பூரித் தெங்குந் தானாகும்
வழியே வந்த சீஷருடன் வர்ன முனக்கு உரைப்பேனே. (11)

உரையே அய்யா மகரநந்தி யுற்ற சீஷர் வேறுண்டோ
கரையே நட்பார் மனமஞ்சிக் கண்ணிற் காணப் பயப்படுவார்
திரையே யில்லை யவ்விடத்திற் சித்த மில்லை தேகத்திற்
புரையே அற்ற விடமற்றுப் போலே நிற்பார் தண்டவர்க்கம். (12)

வர்க்க மலர்க்கே மனம வர்க்கே மறந்து போன விடமவர்க்கே
தர்க்க மவர்க்கே தரனில்லை தனித்து வினைதா னும்பார்ப்பார்
ஒக்க விருப்பார் போசார்கள் உண்மை ஞானம் வகைசொல்லார்
திக்கு விஜயம் வருவார்கள் தீயே நினைவாய்த் திரிவாரே. (13)

வியாக்கிரமபாதர் ஞானம் 13.

முற்றிற்று.

உ
குருவே துணை.

வியாக்ரமபாதர் சூஸ்திரம் 16.

பிள்ளையில்லா மாதருக்குத் திருட்டிதோஷம்
புகலக்கேள் கெருடனொடு சேடன்பட்சி
வள்ளலே காகமொடு யிலர்கள் நால்வர்
வரப்போகக் கண்டதினாற் றோஷந்தோஷம்
மெல்லவே யிவர்கள்செய்யுங் கொடுமைகேளாய்
வினையாக நாலுவகைக் கெற்பப்பூச்சி
உள்ளபடி யிதுசெய்யுங் குணத்தைநன்றாய்
உரைக்கிறே னுலத்தோர் பிழைக்கவென்றே. (1)

பிழைக்கவே கெருடனுட பூச்சியாலே
பிசகாத மாதவிடை தங்கித்தங்கி
அழைக்கவே திரண்டுருண்டு கீழ்வயிற்றில்
அரிதான சுரோணிதந்தா னிருகிவீழும்
இழைக்கவே பண்ணுமது தேகம்வத்தி
யிருகியே மரம்போலே யிருக்கச்செய்யும்
குழைக்கவே யிக்கொடுமை தீரவென்றாற்
கூறுகிறோ மின்னமொன்று கூறுவோமே. (2)

கூறவே செம்பினாற் றகடடித்துக்
குணமாக அச்சரத்தை யதன்மேலூன்றித்
தேறவே கணபதிக்குப் பொங்கல்செய்து
சிறப்பான கன்னிதனை முன்புவைத்து
வாறவே படைப்புத்தெட் சனைகளீய்ந்து
வகையான அத்தியித்தி யரகுஇண்டாற்
றேறவே இதனாற்றா னெக்யஞ்செய்து
கேயிழையாள் பவமறுக்கச் செய்வாய்நீயே. (3)

நீயாகத் தியானித்து ஓமம்செய்து
நேரிழையைக் குளிப்பித்துத் தூபங்காட்டி
வாயாகக் கெருடசக் கரத்தைக்கட்டில்
மனதுகந்து நல்லகுண வசியனைப்போற்
சேயாக வந்துதிக்கும் பாலரப்பா
தேவிபரை கிருபைதங்கித் திரமிதாகும்
நாயாக அலையாதே யிதுபோற்செய்வாய்
நன்றாகப் பாலர்வரும் நளினமாமே. (4)

நளினமுள்ள சேடன்வரக் கண்டதோஷம்
நன்றாகச் சொல்லுகிறோம் நயந்துகேளு
பழியாதே பெண்களுக்கு மாதவிடைவருநாள்
பறபறன நீர்கசிவு பசிகளாகும்
துளிதுளியாய் மழைமாரி போலேவீழுந்
துடையுளையுந் தேகமது துவளும்நல்ல
விழியாள்தான் பெற்றபிள்ளை யிறந்துபோகும்
மெல்லியருக் கீதுண்மை விளம்புவோமே. (5)

விளங்கவே வெள்ளீயத் தகடடித்து
விடதரத்தி னட்சரத்தை யதன்மேலூன்றி
உளம்பெறவே கணபதிக்குப் பூசைப்பொங்கல்
உற்றயிசங் கிலுப்பைபல சிப்பிதன்னால்
களங்கமற வேப்பெண்ணெய் தன்னாலெக்யம்
கட்டாகச் செய்வதற்குக் கன்னிமார்கள்
உளம்புகழக் களித்தபின்பு உம்மென்றோதி
உட்கழுத்திற் சக்கரத்தைக் கட்டிடாயே. (6)

கட்டினா லித்தோஷங் கழன்றுபோகும்
கன்னியற்கு வேதையில்லை கலகமில்லை
பட்சியுட தோஷத்தை நன்றாய்ச்சொல்வேன்
பதிவிரத கன்னியர்கள் மாதவிடைவருநாள்
தட்டிவிடுங் குருக்கிடுப்பி லுளைவாந்தேகம்
தலையிடியுங் கண்ணோவாற் சளமேசெய்யும்
அட்டிபண்ணுங் கணவனுக்கு நேராகாது
அதுதவிர வேணுமென்றா லறைகிறோமே. (7)

அறையாத காரியத் தாகட்டிலேதான்
அட்சரத்தை நீயெழுது ஆதியான
மறையாத கணபதிக்குப் பூசைபொங்கல்
வளமாகச் செய்வித்து வரிசையாகக்
குறைவாகா வேம்புநத்தைச் சூரிகொண்டு
குணமாக நல்லெண்ணெய் யதனாலோமம்
திறமாகச் செய்வித்து அருமைமாது
திருக்கழுத்திற் கட்டிவிடச் செயமாம்பாரே. (8)

பாரப்பா காகமென்றோன் கண்டதோஷம்
பரிகார மின்னதென்று பகரக்கேளு
வாரப்பா மாதவிடை வருநேரந்தான்
வயறுளையும் உடல்மெலியுங் காங்கைகொள்ளும்
சீரப்பா அந்நிறமுங் கரிப்போலோடும்
சேயிழையாள் வருத்தமது தீரச்சொல்வோம்
ஆரப்பா வெனைப்போலே சொல்லப்போறார்
ஆச்சரியம் மிந்தவித்தை அதீதங்காணே. (9)

காணப்பா அதுதீர வகையைக்கேளு
கருதுவில்வம் எருக்குநா யுருவிகொண்டு
தோணப்பா யேரண்டத் தெண்ணெய்யாலே
சுகமாகக் கணபதிமுன் னெக்யஞ்செய்து
வீணப்பா பேசாதே மவுனமாக
விரைந்துருவை நீயோது விளைகளெல்லாம்
காணவென்றா லண்டாம் லோடும்பாரு
கண்மணியே யிந்தவித்தை வெளிவிடாதே. (10)

வெளியிலே தோற்றம லடக்கிசெய்து
மெல்லியரைக் குளிப்பித்துத் தூபங்காட்டி
அழியாத சிதம்பரத்தை யவள்முன்னோத
அப்பனே கவிதளெல்லா மகன்றுபோகும்
தெளிவாக மங்கையர்கள் கழுத்திலேநீ
சிதம்பரத்தைக் கட்டிவிடத் தெளிவிதாகும்
குளியாத மங்கையருங் குளியாநின்று
குணமான மைந்தர்வந்து பிறப்பார்நன்றே. (11)

நன்றாகச் செய்வித்தால் பாலருண்டாம்
நகையாதே பொய்யென்று நகைத்திடாதே
ஒன்றாக மனதுவரச் செய்வாயப்பா
உன்மனது நெகிழ்ந்துவிட்டால் வாக்கோயில்லை
குன்றாமல் மனதோடுஞ் செய்வாயப்பா
குருவருளா வின்னமொன்று கூறக்கேளு
பொன்றாம லரைப்படியே ரண்டத்தெண்ணெய்
புகழாகப் பேருசொல்லா மூலிகேளே. (12)

மூலியது ரண்டுபலன் வெள்ளையுள்ளி
முறையாகப் பலமொன்று முனிந்துவாங்கிப்
பாலீனிய கத்தபத்தின் நீரைவாங்கிப்
படியரையி லரைத்துருட்டிப் பருவமாக
மேலினியே முன்சொன்ன யெண்ணெய்தன்னில்
வெருளாமற் காய்ச்சியதைப் பதத்தில்வாங்கி
வேலுடையோன் முன்பாகப் படைத்துவாழ்த்தி
வெகுபதன மாகநீ வைத்துக்கொள்ளே. (13)

வைத்துமங்கை மாதவிடை வருநாள்தன்னில்
வயணமாய் நாளொன்று கரண்டியொன்று
வெத்திமையா யுட்கொள்ளச் சொல்லுபின்னால்
வெண்ணீர்தான் இரண்டுதரம் விரும்பச்சொல்லு
புத்தியுட னிப்படியே மூன்றுநாளும்
புகழாக அருந்திவர மாதமூன்றிற்
சத்தியமாய்க் கெற்பமது தரிக்கும்பாரு
தையநல்லாள் மனங்குளிரத் தயவுண்டாமே. (14)

தயவில்லா மாதவிடை மூன்றினுக்குத்
தவறாமல் மூன்றுநாட் கொண்டாயானால்
பயமில்லாப் புத்திரனா யருமையான
பாக்கியவா னாயுருவம் பதுமையாகச்
சுயசனங்கள் மெய்க்கவரு சுசீலனாகச்
சுகமாகத் தருமர்தம்பி தமக்கொப்பாக
நயனமுள்ள கண்மணிபோல் மைந்தர்பெற்று
நாடறியக் கொஞ்சிவிளை யாடல்தாமே. (15)

தாமாக யிம்முறைகள் செய்யானாகிற்
  றருகாது யிந்திரியஞ் சலனமாகா
நாமாக மனக்கரித்து வுலகத்தோர்க்கு
  நவின்றோங்கா ணவர்மனது நமக்கீதென்னச்
சீமானா யிருந்தவரை வாழச்சொன்னோம்
  சீலமுண்டு சுகமுண்டு துணையுமுண்டு
பூமாது தனக்காகக் கெற்பசூஸ்திரம்
  புகன்றதுயி ரெண்கலையின் புதுமைமுற்றே. (16)

வியாக்கிரம பாதர் சூஸ்திரம் 16.
முற்றிற்று.

மதுரை வடக்குமாசிவீதியி லிருக்கும் பாத்திர வியாபாரம் ரா. ம. கணபதியாபிள்ளை யவர்களிடமிருந்த ஏட்டுப்பிரதியின்படி இந்த ஸ்திரம் அச்சிடலானது.

உ

முருகன்துணை.

வியாக்கிரமபாதர் சமாதி 8.

முயங்கிய கண்டம் மூவா றிதழுயிர்
தயங்கிய வாசன் தானது கறுப்பாம்
தியங்கிய உந்தி தெளிவது காரம்
பயங்கிய வாய்வு பதியது தானே. (1)

பதியதில் நின்று பாங்குட னேறிச்
சதிபெரும் ரவிமதி சார்ந்தது ரெண்டாம்
விதிமூக் கடியுள் ளிட்டு வெளிப்படும்
மதியெனக் கண்டு மறிப்பவர் சித்தரே. (2)

மறிப்பவ ருயிரை வங்கென் றழுத்திக்
குறிப்பவர் சீயைக் குப்பென்று யேத்தி
தெறிப்பவர் கண்டஞ் செய்திட மறியார்
வெறிப்பென்ன யோகி விடமது தானே. (3)

விடமது கண்டம் வெத்திப் புருவம்
தடமது வழியாய்த் தாக்கிடும் வாய்வு
குடமது வென்று குவிந்தது அதுவாம்
மடமது வாய்வு· மனமொன் றாச்சே. (4)

மனமது வேறென மயங்குவர் கயவர்
தனமது வாகுந் தாண்டவம் புரிந்திடம்
எனமது வென்று யேத்தறி வார்க்குக்
கனமது தேகங் கால்குரு வாமே. (5)

கால்தனைப் பாரு கண்டத்தோ ரெழுத்து
மால்தனை குடியாய் மதிப்பவள் பாரு
ஏல்தனை ருத்திரன் என்றது வெளுப்பாம்
ஆல்தனைக் கண்டா லானவ னாமே. (6)

அரனென்ற பேரா யகண்டமு மொன்றாய்க்
கரனென்ற வாய்வு கலந்துடன் சேர்ந்தால்
உரனென்ற வில்லு ஒங்கியே யெய்யலாம்
பரனென்ற காயம் பளிச்சென்ன மின்னுமே. (7)

பளிச்சென்ன மின்னும் பரியமு துண்ணலாம்
வெளிச்சென்னக் காணும் வெட்ட வெளியதாம்
களிச்சொன்னப் போகாக் காயமு மதுதான்
ஒளிச்சென்ன தேக மொருகோடி யுகமே. (8)

வியாக்கிரமபாதர் சமாதி 8.
முற்றிற்று.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த மகமதுசாயபுபுரம் எ. எஸ். அழகமுத்து வைத்தியரவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குமரன்துணை.

திரிகோணச் சித்தர் திருவாய் மலர்ந்தருளிய

சிவஞான சூஸ்திரம் 52.

ஆதி யனாதி யண்டாண்ட பிண்ட
மீதில்மெய்ஞ் ஞான வீடான மெய்ப்பொருட்
சோதி மயமாய்த் துலங்குஞ் சுழிமுனை
நீதிய தாய்வளர் நிராமயங் காப்பே. (1)

மூத்திர மாவது மூவ ரிருப்பிடம்
மூத்திர மாவது மூலத் தெழுந்ததீ
மூத்திர மாவது முன்னோ ரறிந்திலார்
மூத்திரந் தன்னை முரிக்கச் சயிலமே. (2)

சயில கரணியிற் சவ்வீரம் பிறந்தது
வெயில்நிற மாக விளங்கும் புவியெலாம்
அயிலங் கொடுக்க அறிந்ததுண் டானால்
சயிலத்தி னுள்ளே சவீரம் பிறக்குமே. (3)

பிறந்தசவ் வீரத்தைப் பேதித்துப் பார்க்கையில்
இறந்திடு முப்பூ யெழுந்திடும் வேதை
அறிந்துகொ டுத்து அதுவுமொன் றானால்
பிறந்த பிறப்பெலாம் பிறங்குபொன் பிறப்பே. (4)

பொன்னிற் பிறந்தது பொன்னீரு முப்புநீர்
தன்னிற் பிறந்தது சாதக வேதையாம்
மன்னிப் பிறந்தது வழலைகுரு பஷ்பம்
தன்னிற் பிறந்தது சாரஞ்சவ் வீரமே. (5)

சவ்வீர மெடுத்துச் சாரணைச் சாற்றில்
கவ்விக் கொடுக்கக் கலங்கிக் கருப்பாம்
விவரம தாக வேறேநீர் விட்டுச்
செவியிற் பிழியச் சிவக்கு மிரும்பே. (6)

இரும்பிற் றிராவகம் யெண்ணெய் யில்வாங்கி
நிரம்ப வமுரியை நேரொக்கக் கூட்டி
விரும்பிக் கலசத்தை மேலேமண் செய்து
தரும்பிட் டெரிக்கச் சயிலம் பிறக்குமே. (7)

சயிலத்திற் றாம்பூரந் தண்ணீர்குளிப் பாட்டி
நெகிலக் குருபற்பம் நிறையாகக் கூட்டி
கயிலைச் சிவனைக் கருத்தில் நினைந்து
குகையிற் கொடுக்கக் குறித்தது காணுமே. (8)

காணக் கண்டது கர்த்த னறியவே
பேணி யேசொன்னேன் பெரியோர் பிழைக்கவே
ஆணி யுமித்துளே அண்ணலு மித்துளே
வாணி யரிய மனையிது தானே. (9)

மனையிது வானது மண்டல வேதையாம்
சுனையிது பொன்னிது தொழிலுக்குப் பண்டது
அனைவருங் காண ஆய்ந்திந்நூல் தன்னை
வினையமாய்ச் சோதித்து வேர்க்கடைக் கூறிதே. (10)

கூறிது காணுஞ் சயிலக் குறிப்பிது
சோறிது சத்தியஞ் சொர்னத் தொழிலிது
வாறிது பொன்னுக் கருளிது கோலிது
தேறிதற் கெல்லாந் தெளிவிது தானே. (11)

தெளிவிது வேதாந்தந் தேர்ந்த குறிப்பிது
ஒளிவிது பற்ப முரைக்கின்ற நீரிது
மொழியிது கண்ட முதச்சயி லத்தின்
அழிவிது தானென் றறிந்துகொள் வீரே. (12)

விரைகி லெரியும் வேதாவைக் காட்டும்
நிரைக்குந் துருதில் நேரொக்கப் பாயும்
உரைக்கு மிரும்பினி லூட்டமெழு காகும்
இருக்குஞ் சயில மெடுக்கின்ற வாறே. (13)

எடுத்தச்யி லத்தி லிரதத்தைக் கூட்டிக்
கடுத்துத் துருசியின் கண்ணிலே யூட்டி
மடித்துக் கிளிஞ்சியில் வைத்தே யெரிக்கிற்
கொடுத்திடு பற்பங் குருபற்ப மாமே. (14)

ஆமே சயிலமாம் ரெண்டாங் காய்ச்சலில்
போமே சயிலம் பொன்னிலுஞ் செம்பிலும்
கோமே தகனைக் குறிப்பறி வாளர்க்குச்
சாமே சயிலஞ் சார்ந்தபா சாணமே. (15)

பாசாணஞ் சேர்ந்திடும் பாரத்துச் சித்தியாம்
காசாயந் தீர்த்த கருவறி வாரில்லை
காசாயந் தீர்த்த கருவறி வாளர்க்குக்
காசாயந் தீர்த்த கருவிது வாமே. (16)

கருவது கல்லுப்பு கண்டது வெண்மை
குருவது வாசி கூட மிரும்பினில்
அருளு மதுவே ஆனந்த வாதத்திற்
பொருளு மதுவே பொறியள வாகுமே. (17)

பொறியிற் பிடிக்கப் பொருள்வேணு மென்றால்
கருகச் சயிலத்தைக் காய்ச்சி யிருக்க
மடியக் கவுரி மாத்தறிந் தீய்ந்திடக்
கடியத் தமர்ந்த கல்லு முருகுமே. (18)

கல்லு முருகிக் கருக்குஞ் சிவந்திடும்
அல்லும் பகலு மறிவுமொன் றாக
நெல்லுங் கரியும் நிரம்பக் குகையிடக்
கல்லுங் கொடுக்கக் கரைகண்ட பொன்னிரே. (19)

கரைகண்ட ஞானிகள் காணுந் தொழிலிது
கரைகண்ட ஞானிகள் காணும் பொருளிது
கரைகண்ட ஞானிகள் காணுமெய்ஞ் ஞானத்தைக்
கரைகண்ட ஞானிகள் கருத்தறி வீரே. (20)

கருத்தை யிருக்கித் துருத்தியி லூதிப்
பெருத்த அடைப்பைப் பேதித்துக் கூட்டி
முருக்கி முழித்து உருக்கவல் லார்க்கு
உருக்கப் பிடித்தது உற்பன மாமே. (21)

உற்பன மானது உயர்சாதி லிங்கத்தால்
மற்படி கார மணித்தக் சாளியிற்
கற்பரக் கட்டிக் கருத்தறத் தூக்கினால்
மெற்புடன் பாயும் விளங்கிய செம்பிலே. (22)

செம்பிற் பழுக்குந் திராவில் வெளுத்திடும்
வம்பிக் கெவுரிக்கு மாதளஞ் சாத்தினால்
கம்பிச் சயிலத்தைக் கையினில் வாங்கியே
செம்பிற் கொடுக்கச் சிவபதங் காணுமே. (23)

காணிறை மாத்துக் கண்டது பத்துமாத்
தாணியாஞ் சொன்னோம் அந்தசயி லத்தை
நாணித் துருசியில் நாலிலொன் றியப்
பேணிச் சிவக்கும் பெரியோர்க ளாணையே. (24)

பெரியோர்கள் கல்வியும் பிண்டத்தி னுள்ளே
எரியவனல் மூட்டி யெண்ணெய் யிருத்துக்
கரிமுகில் வண்ணன் கனல்ரசம் வாங்கிச்
சரியோக்கக் கூட்டிற் சயிலம் பிறக்குமே. (25)

சயிலத்தில் நாகத்தைச் சரியொக்கக் கூட்டித்
தயிலத்தை வாங்கித் தாம்புரத் திட்டுக்
குகையிற் கவுரியைக் கூட்டிக் கொடுக்க
வகைபெற்ற கல்லு மணலுங் கரையுமே. (26)

கரையு மனோசிலை கட்டு மமுரியிற்
றிரையுளித் தாரஞ் சேர்த்துச் சிவப்பிடும்
பரியபா ஷாணம் பவழநிற மாகும்
எரியதோர் செம்பினி லென்னாணை யேறுமே. (27)

சிறக்குமே கெந்தகஞ் சேர்சாதி லிங்கத்தால்
நிறக்குமே பாதை யிரதத்தில் நீறுமே
துறக்குமே யுள்ள தொழிலுங் குறிப்பெலாம்
பிறக்குமே லோகத்திற் பேதிக்கும் வாறிதே. (28)

பேதிக்கும் வாறிது பிரம கிரிரசம்
ஆதிக்கங் கொள்ள் அருட்பொரு ளுண்டாம்
சேதிப் படுத்த செயலறி வாளர்க்கு
ஆதிக்கந் தானே அருட்பொரு ளாகுமே. (29)

பொருள்மணித் தக்காளி போதப் பிழிந்து
மருவி யரைப்படி மணலிற் கலந்து
குருவது தன்னுடன் கூட்டிக் கலக்க
இரவும் பகலு மிதனிலொன் றாகுமே. (30)

ஒண்ணாகத் தானும் உருகு முருக்கெலாம்
நண்ணாகக் கெந்தகம் நனையக் கொடுத்து
ஒண்ணாகக் கூட்டி யுருக்கவல் லார்க்குக்
கண்ணாரக் காணுங் கருவளை மண்ணே. (31)

கருவளை மண்ணைக் கரைத்தே யிருத்து
உரிய வமுரியை உண்ணக் கொடுத்துப்
பருவ முடனே பாஷாணங் கூட்டியே
பருவமாய்க் காய்ச்சப் பாயு மிரும்பிலே. (32)

இரும்பை யமுரியி லெட்டுநாட் போட்டுத்
திரும்ப வெடுத்துத் திராவக மாக்கிக்
கரும்பினிற் சாறு காற்படி கூட்டி
வருந்திக் கொடுக்க மலையுஞ் சிறக்குமே. (33)

சிறக்குஞ்சவ் வீரத்திற் செந்தூரங் கூட்டி
நிறக்கு மனோசிலை நிற்கு மிரும்பினிற்
கறக்குந் திராவினிற் காரீயம் வேதிக்கும்
பிறக்கு மிதுவே பிராணன் பிறப்பே. (34)

பிறப்பு மனோசிலை பின்பரி தாரம்
கறக்கின்ற கெந்தகங் காரியங்கூட்டி
இறக்குஞ்சவ் வீரத்தி லேகமுங் கண்டுபோம்
பிறக்கும் நிருபதின் பேரொன்று தானே. (35)

பேரொன்று சித்திக்கும் பொன்னரி தாரத்திற்
சேரொன்று கூட்டிச் சிறுநீரைப் பூட்டு
காரொன்று கண்டு கருதுஞ்சயி லத்தில்
நேரொன்று கூட்டி நிலைகண்ட வாறே. (36)

நிலைகண்டு சொன்ன நிண்ணயந் தன்னிலே
நிலைகண்ட காந்தி யமுரிமன் கூட்டிப்
பலைகொண்ட வெணீரிற் பச்சிலை கோவைதான்
நிலைகண்டு சொன்னது நிண்ணயந் தானே. (37)

நிண்ணயஞ் சொன்னோம் நிலைகளுஞ் சொன்னோம்
கண்ணையும் மூக்கையும் காதையும் காட்டி
நண்ணிய மூலத்தில் நாதம் அமுரியிற்
பண்ணியே கண்டாற் பரப்பிர்மந் தானே. (38)

பரப்பிர்மங் கண்டதைப் பாணித்துப் பார்த்து
உரைக்கின்ற பொன்னையும் உட்கண்ட சோதியும்
கரைகண்டு சொன்னார் கமலத்திரு மூலர்
குறவைவா ராமற் கூறினேன் சாரே. (39)

சாராமூ மத்துச் சாத்திலொன் றாகக்
காரீய மொன்று கரையப்பொடி யாக்கி
கோரா யரைக்கக் கொடுத்துக் குளிகையாய்
தூரா மிர்தமுந் தொந்தம்ப னந்தான். (40)

தம்பனநான் மூன்று தந்தையோ முந்நூறாம்
ஐம்பது கோடி யருட்காதங் காட்டும்
இன்பம தாயிரட் சிக்கவல் லார்க்குத்
தம்பனந் தானே சாயுட்சிய மாமே. (41)

சாயுட்சிய மாவது சாதக மோகினி
வாயுட்ச மாக மனோசிலை கூட்டி
ஆயுச்சுச் செம்பை யரபொடி யாக்கியே
காயத்தில் நீரைக் கட்டவு மாமே. (42)

ஆமே பொடிதிரி யமைமுன் றிரதமும்
கோமே தகமாங் கொடுகற்பச் சாத்தினில்
தாமாக முந்நூறு தட்டுவி ராட்டியிற்
கோமான் புடமிடக் குளிகையு மாகுமே. (43)

ஆகுமே மாரண மரிதார யீயத்தில்
சாகவே யெட்டிப் பழத்தினி லெட்டுநாள்
நோகவே வைத்து நொந்துபின் னொன்றாய்
ஏகமாய்ச் சேர்க்க யெங்கும்பிர காசமே. (44)

பிரகாசங் காணலாம் பேதன வித்தை
விறகா வரையினில் விளங்கு மனோசிலை
சரியாகக் கூட்டிச் சட்டியி லொன்றாய்த்
திரமாய்ச் சுருக்கீயச் செத்துப் பிறக்குமே. (45)

பிறக்கு மதிசயம் பேராக் கிருஷணம்
சறக்க மமுரியிற் றாளிச்சா ரிட்டுச்
சிறக்கக் குளிகை செயச்சுருக் கீய
நிறக்குங் குளிகை நிதியிது தாமே. (46)

நீதியிது வாகும் நிலவரஞ் சொன்னோம்
சோதி யிதுவே துலங்கம்பிர காசமாம்
ஆதியாம் பாதமே லாணையிட் டிப்படி
சோதியான் கண்ட சுத்த வெளியிதே. (47)

வெளியிது யீசனார் மெய்ப்பதத் தாணை
தெளிவிது தானே தேகமுஞ் சித்தியாம்
ஒளிவதில் லாமல் யான்காணும் வாறுபோல்
தெளிவிது சொன்னேன் தேர்ந்துகொள் வீரே. (48)

தேர்ந்துகொள் வீரிந்தத் தேகப்பிர காசத்தைச்
சார்ந்துகொள் வீரிந்தச் சக்கரைக் கூட்டத்தில்
ஆய்ந்துகொள் வீரிந்த ஆதித்த வித்தையைச்
சாய்ந்துகொள் வார்க்கிது சாயமாந் தானே. (49)

சார்ந்துகொள் வார்க்கிது சாயமாம் பொன்னாம்
நேர்ந்துகொள் வார்க்கிது நிச்சய முத்தியாம்
தேர்ந்துகொள் வார்க்கிந்தத் தேகமுஞ் சித்தியாம்
ஆர்ந்துகொள் வார்க்கிந்த அம்பலக் கூத்தே. (50)

அம்பலக் கூத்திது ஆதிக்க வீடிது
தம்பலப் பூச்சித் தயிலங்குரு வாகும்
செம்பது மாக்கல் சேரவல் லார்க்கு
அம்பது அவ்வழி அம்பலக் கல்லிலே. (51)

கல்லிலே சுண்ணாம்பு காணத் துணிந்தால்
சொல்லிலே பத்திச் சூட்சத்தை யாராய்ந்து
கல்லு மிதப்பாய்க் கரையேற வல்லார்க்குக்
கல்லிலே சோதி கரைகண்ட முத்தே. (52)

திரிகோணச்சித்தர் சிவஞான சூஸ்திரம் 52.
முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெரு முத்தையுபிள்ளை அவர்கள் குமாரர் வித்துவான் குழந்தைவேலுப்பிள்ளை யவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிட்டலானது.

உ

குருவே துணை.

திரிகோணச் சித்தர்பாடல் 92.

கலிவெண்பா.

சிவனே பரமகுரு தேசிகனே பாத
மவனே அனுதினமு மாகும் நவநீத (1)

பொன்பூத்த நீலப் புயல்வண்ண னும்பொறிவாய்
மின்பூத்த நான்முகனும் வேதாவும் தென்பூத்த (2)

செக்கச் சடையானுந் தேசுபெற வேயுருவாய்
ஒக்கத் தனிவந் துதித்தபிரான் தர்க்கமிடும் (3)

வேதமுஞ் சாஸ்திரமும் வேண்டும் பலசமயம்
பேதமுங் காணாப் பெருஞ்சமயம் நாதத்தில் (4)

ஓசை யடங்க வொளியம் பரமனையில்
ஆசை யடங்க அனுபவிப்போன் பூசைபுரி (5)

தொண்ட ரிதயச் சுனைமடலில் வேரூன்றி
விண்ட நறைக்கமல மெல்லடியான் எண்டிக்கும் (6)

சாதியான் றோன்றும் சமரச மாயிருந்து
பேதியான் வஞ்சமிலாப் பேதமையான் ஆதி (7)

முதலாய் நடுவாய் முடிவாய் முடிந்து
சிதலாய் வெளியொளியாஞ் சென்மம் சதகோடி (8)

சத்தியும் மந்திரமுந் தானாகப் பாவித்து
முத்தி கொடுக்கும் முழுமுதல்வன் சுத்திய (9)

செஞ்சடையான் யோகநிலை தேர்ந்து தனைக்குறியார்
நெஞ்சடையான் பிஞ்சு நிலாச்சடையான் நஞ்சார்ந்த (10)

கண்டத்தான் தேடரிய காட்சியான் பல்கோடி
அண்டத்தான் சோதி யருவுருவான் முண்டகச்செம் (11)

போதங் கடலும் பொருப்பும் விருப்பாகிச்
சூதுபுரி மூன்று தொழிலுடையோன் ஓதும் (12)

சரியை கிரியை தவயோக ஞானம்
தெரிய வமைத்த சிவசித்தன் துரியத்தில் (13)

தோத்தி யணுவாய்த் துகழாய்ச் சுடரொளியாய்த்
தேத்தியுரு வாகவந்து சென்மிப்போன் சாத்தரிய (14).

முக்குணமும் ஐம்பொறியும் மும்மலமு முண்டாகி
எக்குணமுந் தானாயிருந்தருள்வோன் அக்கரமாம் (15)

அஞ்செழுத்தா யெட்டெழுத்தா யைம்பத்தோ ரட்சரமாய்ப்
பிஞ்செழுத்தா யெங்கும் பிரணவமாய்க் கொஞ்சப் (16)

பொருளாய் மருளாய்ப் புரையா யுரையாய்
அருளாய்ந் தனியிருந்த ஆனந்தன் இருளாத (17)

காட்சியான் கண்டவர்க்குக் காணாத பேர்க்குருவும்
சூட்சியாய் நின்ற தொழிலாளி ஆட்சி (18)

இடைபிங் கலைசுழினைக் கெட்டாமல் மூலக்
கடையில் நடக்குங் கடலுடையோன் விடையேறும் (19)

பாசன் குடிலை பராசத்தி வீட்டிலுறை
யேகன் பிறப்பிறப்பொன் றில்லாதான் யோகன் (20)

சிறியன் பெரியன் சிவப்பன் கறுப்பன்
குறியன் நெடியனெனக் கூறாதான் பொறிகலந்த (21)

பாசத்தான் பாசக் கட்டை யறுத்தவர்க்கு
மாசத்தான் சோதிமணி மண்டபத்தான் நேசத்தான் (22)

பொய்யர்க்குப் பொய்யன் பொருந்தி யுளந்தேறும்
மெய்யர்க்கு மெய்யாய் வெளிநின்றோன் ஐயன் (23)

உருவு மருவும் ஒளியும் வெளியும்
கருவுங் கடந்தகன மாயன் குருவாகித் (24)

தோத்திப் பழவடியார் சூழ்வினையை நீக்கியுரு
மாத்தித் தனதுவச மாக்கியே சாத்தரிய (25)

மானிடச் சட்டை வடிவெடுத்த மாயோகி
யானிடப முந்துமரு ளானந்தன் தேளடர்ந்த (26)

செங்கமலத் தோற்கரிய தேவ னடியவர்க
ளங்கமலத் தேயுறையு மானந்தன் எங்கள்குரு (27)

நேசிக்கு மன்பர்துயர் நீக்கி நிலைபெறவே
யாசிக்கு மெங்கள்குரு வானந்தன் பூசிக்கும் (28)

பொன்மலைக்கும் வெள்ளிப் பொருப்புக்கும் பொற்புடைய
கன்மலைக்குந் தானே கடவுளாய் பன்மலைக்கும் (29)

எட்டாய்ச் சிகர மெழுத்துக் கொழுந்தோட
மட்டான ஓங்கார வன்மலையான் கட்டாகத் (30)

தேடு மடியார்கள் சின்னந் துகளறவே
யாடுஞ் சிவகருணை யாற்றினான் நாடுதவம் (31)

பண்ணு மடியார் பழவினைபோய்ப் பாதமலர்
நண்ணுமெழிற் பேரின்ப நாட்டினான் எண்ணும்நிறை (32)

கற்புடையா னென்னக் கலங்காத நெஞ்சுகொண்ட
பொற்புடைய காயா புரிநகரான் அற்பவிசை (33)

திரிகோணச் சித்தர் பாடல் 92.

வண்டு தொடாமல் மதுவொழுகி வாய்ந்தாறை
கொண்டு மணத்த குணமலையான் துண்டடத் (34)

துரமே கரமா யொருநாளு மோயாச்
சரமே முழங்குந் தவத்தோன் கரமெடுக்கும் (35)

தொண்டர் பலபகையைச் சூறைகொள வேணுமெனக்
கொண்டதவ வேடக் கொடியினான் சண்டமிகும் (36)

இல்வாழ்க்கை யென்னும் யிருப்பானை மட்டித்துப்
பல்வாய்ப் பிறப்பைவெறும் பாழாக்கி மெல்வாய் (37)

சமையப் பகைதுடைத்துச் சாதிமுறை யெல்லாங்
குமைய மிதித்துக் குளப்பி யமையாத (38)

ஆணவத்தை வேரோ டறுத்து விழுத்தாட்டி
நாணமுற்ற பாகம் நறுக்கியே காணத் (39)

துடர்ந்த கிளைநிகழச் சூரைபட வீசி
யடர்ந்தமக வாகைக் கடங்காப் படர்ந்ததெரு (40)

வீதியும் அம்பலமும் மிக்கதொரு சாதிகட்குப்
பூதிப் பொடியணிந்து பொய்மிதித்துக் காதிச் (41)

சினக்குறும்பை வாரிச் சிதறித் திரட்டி
மனக்குறும்பைப் பற்றி வனைத்து உனக்கெனக்கென் (42)

றோது குறும்பை யுழக்கி யெமராஜன்
தூதனைப் பாய்ந்து துரத்தியே தாதுசெறி (43)

அஞ்ஞான மோக மறுக்கு மனுபோக
மெய்ஞ்ஞான மோனமத வேளத்தான் பைநாகம் (44)

நெட்டுடலை மாறி நெருக்கிப் பரிபடுத்திக்
கட்டு மிசைக்குங் கடுவாளந் தொட்டுத் (45)

திசைவாயு வென்னுஞ் சின்னூ லகப்பட்டுக்
குசையா லிறுக்கிக் குணப்படுத்தி யசையா (46)

மனமென்னுங் கல்லணையை வைத்திறுக்கி வாய்ந்த
சினமென்னும் அங்கவடி சேர்த்துக் கனமான (47)

நாகபந்தஞ் சாரி நடைதுலுக்குத் தூவான
மாகமுற விட்டுள் ளடக்கியே சோகப் (48)

புரியட்ட காயப் பொருப்பைத் தகர்த்துச்
ச்ரியுட்ட வைம்பொறியைத் தாண்டித் துரியத்தில் (49)

ஓடிவிந்து நாதமெனு முட்கோட்டை யுங்கூத்து
வாடியிடும் நாடி வரம்பழித்து ஆடியிடும் (50)

தொண்டுபுரி யன்பர் தொடுநரகில் வீழாமல்
மண்டுசினங் கொண்டெழுந்த வாசியான் கண்டுதொழும் (51)

தன்னாணை தானே தனக்காணை யாவதன்றிப்
பின்னாணை யில்லாத பெற்றியான் என்னாளும் (52)

மாறாத கீர்த்திமது மாலையான் வாய்திறந்து
சீறாத மோனச் சிவயோகி நேராக (53)

ஆண்டகுரு சித்தம் பலவ னடியருளும்
வேண்டி வளர்த்த விரு[illegible]த்தான் பூண்டசிவ (54)

வேடத்தா னோங்கி விளங்குஞ் செழுங்கமல்
பீடத்தான் ஞானப் பிரகாசன் ஆடிற் (55)

பரியா னுரியான் பசியான் பொசியான்
பெரியா னரியான்பே ரில்லான் துரியா (56)

தீதங் கடந்து திகழும் பரங்கடந்து
போதங் கடந்துநின்ற பொற்பதத்தான் சீதம் (57)

திரிகோணச் சித்தர் பாடல் 92.

கருணையா னந்தமுனி கண்டுதொழ வந்த
வருணவா னந்த மழைமேகம் அருணப் (58)

பிரகாசங் கொண்டுநின்ற பேரொளிபோல் மாயைப்
பிரகாசம் மாற்றும் பெருமையான் இறவாத (59)

மெய்ப்பொருளைக் காட்டி விரும்பு மடியாரைக்
கைபொருளாய்க் கொண்ட கருணையான் துய்க்கும் (60)

உடற்பொரு ளாவி யுதகத்தாற் கொண்டு
சடவினையை மாற்றுஞ் சமனன் இடைபிங் (61)

கலைசுழினைக் கெட்டாத காட்சியான் காமங்
கொலைகளவு தீர்த்தகு ரோரி அலையாமல் (62)

ஆட்கொண்ட சித்தம் பலவ னடிக்கமலத்
தாட்கொண்ட தொண்டர் தனக்கடியேன் வாட்கொண்ட (63)

கண்ணாள் திரிகோணக் கன்னியுமை பெற்றெடுத்த
பெண்ணா ளிடத்திற் பிறப்பட்டு எண்ணாமல் (64)

தூர்த்தனிவ னென்னபலர் சொல்லத் துயுருழைந்து
பார்த்தவிட மெல்லாம் பகையாகி வேர்த்துக் (65)

கலங்கி விதிவிதித்துக் கண்ணீரொழுக
மலங்கிக் குருநாட்டில் வந்தேன் துலங்குமெனக் (66)

காயா புரிநகரைக் கண்ணுற்றே னவ்வூரிற்
போயா தரித்துப் பொருந்தினேன் மாயாத (67)

மாது சிவானந்த வல்லியெனப் பேரிட்டாள்
ஓதுதிரி கோணவல்லி யூதாரி ஆதரவாய் (68)

கொஞ்சி வளர்த்த குடிலை மகள்தனையே
மிஞ்சுசிலம் பத்தொழிற்கு விட்டாளே ரஞ்சிதமாய் (69)

கால்மாறி யாடக் கலாதி கரணவித
மேல்மாறிச் சுத்தி விளையாட நூல்மாறிக்/ (70)

கைலாகு பாயக் கலந்து பலசமய
மெய்லாகு தாவியதன் மேல்மிதிக்கப் பையப் (71)

பரதத் தொழிலும் பலகோடி வேத
சுரதத் தொழிலும் தொகுத்து விரதவுரை (72)

தென்னூல் வடநூலைந் தேர்ந்துபலகோடி
முன்னூறுந் தானே மொழிந்திட்டாள் இன்னிலத்தில் (73)

ஆடப் பதுமைதனை ஆட்டிவிக்க வப்பதுமை
பாடத் தொழிலும் பலகற்றாள் நாடறிந்த (74)

வம்பி திரிகோண வல்லி யுடகிரியை
கெம்பீர மெல்லாங் கிரிகித்தேன் அம்புவியில் (75)

மின்னே வெரிந்தெழுந்த மேகம்போல் மெய்குளிர்ந்து
தன்னை யறிந்த தளதளத்தாள் பொன்னனையாள் (76)

பக்குவத்தை நோக்கிமுகம் பார்த்துப் பரிமளிக்க
முக்குணமுங் கற்ற முதுகிழவி தொக்கறுத்து (77)

மின்னே யமுதம் விளைந்த மனக்கமலப்
பொன்னே வுறுதியுள்ள புத்திகேள் பன்னரிய (78)

வேத புராணர் வெறும்பிலுக்கா யுன்கமலப்
பாதம் பணிவர்முகம் பாராதே நாதத் (79)

துரியமணி வாசலிலே தோன்றிமுகம் சத்தே
தெரியநின்று பின்னையுள்ளே சென்று அரிதாகச் (80)

சாற்றுஞ் சரியைச் சளுக்க ருனைத்தழுவப்
போ.றுவா ரங்கவர்பின் போகாதே யேற்றுப் (81)

அவலக் கிரியை அசடருனை மேவக்
கவலைப் படுவார் கடத்திச் சிவபே க (82)

வாதியர்கள் வந்துன் மலரடியைத் தெண்டனிட்டாற்
பேதியா துள்ளழைத்துப் பேசிக்கொள் ஆதி (83)

தவஞான மோனத்தனக்காரர் வந்தால்
அவமானம் பண்ணா தழைத்துச் சிவபொருளைத் (84)

தேடாத மூடரிடஞ் சிக்காதே சிந்தையிலே
நாடாத வஞ்சரிடம் நத்தாதே கோடாத (85)

சாத்திரத் தூரித்தர்தமைச் சாராதே தக்கமிடுங்
கோத்திரப் பஞ்சியளைக் கூடாதே சூத்திரப் (86)

பொய்வீண ராசை பொருந்தாதே புத்தகப்பேய்
மெய்வீண ராசை விரும்பாதே கையோகக் (87)

காமத்துக் கான கலாதிவேள் நூல்கற்ற
வாமத்தார் பால்மனது வையாதே நாமமிட்டுப் (88)

பஞ்சரிக்கும் பாசிப் பதப்பிலுக்கர் வந்தக்கால்
நெஞ்செரியத் தள்ளிவிடு நில்லாமல் சஞ்சரிக்கும் (89)

சித்தக் கெருவியிடஞ் செல்லாதே சீலமதக்
கொத்தவன்றன் னாசை குறியாதே பற்றற்ற (90)

மோனக் குறும்பரசர் மோகித்தால் நீயவருக்
கான படியே அழைத்துவிடு ஞானப் (91)

பொருள்தேடும் வல்லாரைப் போற்றிப் பொருந்தி
அருளோடு நீசென்றி (92)

திரிகோணச்சித்தர் பாடல் 92.
முற்றிற்று.

திருமங்கலம் அருணாசலம்பிள்ளையவர்கள் குமாரர் வைத்தியம்
ா குருபரம்பிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்
இந்சாஸ்திரம் அச்சிடலானது.

உ
குருவே துணை.

கொங்கணர் திருவாய்மலர்ந்தருளிய

முதற்காண்ட சூஸ்திரம் 41.

ஆயிரத்தைஞ் ஞூற்றிலே அறிந்தெடுத்த மந்திரம்
பாயிரத்துள் ளானபாடல் பத்துநான்கு மொன்றிலே
தாயிரக்க மானசத்தி தானறிந்து வாழ்வதோ
ஆயிரத்தி லொன்றடா அவளடிபே ராகுமே. (1)

அடிமறந்த அடியரன் ஆதிமூன்று உப்படா
திடமுளிந்தி ரீயமஞ்சும் சென்றுபூர ணம்மதாம்
விடமருந்து நாதமான வெண்மையான உப்படா
உடல்மிகுந்த உப்பினா லுயர்ந்தகுரு வாகுமே. (2)

குருமுடிக்குஞ் சித்திரம் எழுவகைப்பி றப்படா
அருளிருப்ப தாறுமூன்று மப்புனா லடங்கினோம்
செருவிளைப்பெண் ணாளுடல்வி ளைந்தவாறுசெப்பவே
திருமுடிக்கும் வெள்ளையுந் தெளிந்தநீரி லானதே. (3)

ஆனபூர ணத்திலே அனாதமஞ்சு வகைய்டா
ஆனமாங்கல் லுப்பிலே அமைந்தவேழு வகையடா
ஞானியாம் வழலையுப்பு நதியிரவி கண்ட்பின்
ஆனமாவில் தீச்சுருக்க மதில்விளைந்த நாதமே. (4)

நாதம்நாலு பூரணம் நாடச்சுண்ணம் உப்படா
சூதமிக்க கல்லுப்பு சுத்திசிறு நீரிலே
போதமாகு மெழுவகைப் பிறப்பறிந்த போதிலே
வாதமென்ன மசகந்தான் மயங்காமுப்பு வாதியே. (5)

முப்புவும் விளைந்தபின் முடிந்சற் குருவடா
அப்புநாத மீறியே அடங்கினார்கள் மூவரும்
ஒப்பமாக வோரிடை யுணர்வதாக உறவுசெய்
எப்பவும் மயங்காதிந்த யேமவித்தை காணுமே. (6)

வித்தடிநற் பூரமொன்று வேறுசீன மொன்றுடன்
ஒத்திலங்கும் வெடியினுப்பு உயர்வுசித்தம் நாலதாய்
சுத்தயிந்து வுப்புடன் சொற்பழச்சாற் றாலேயே
மெத்தமூன்று நாளரைத்து மேவுபுடஞ் சுண்ணமே. (7)

சுண்ணமெட்டுச் சாரமே தூக்கிரண்டு கூட்டியே
பண்ணமாய்ப் பொடித்திராப் பனியில்வைக்க நீரதாம்
வண்ணமா லறுவகை வகுத்தநீரைக் காண்கிலார்
எண்ணுள சரக்கென மிதிலரைத்து மாட்டவே. (8)

மாட்டேலாமடி பூரணம் வழலையுப்பு அறிகிலார்
சூட்டெலாம்வே ரிரவியாதி சோமநாதன் கண்டபேர்
ஆட்டெலாம்பெண் ணாட்டடா ஆதிமூலர் பேரன்நான்
பாட்டெலாம்ப டித்தபேர் பச்சைகாண வல்லரே. (9)

வல்லபக் குருமடிக்கும் வாறுகேளு மாண்பரே
நல்லஞாலத் துப்பினால் நயந்துவேறொன் றாகவே
அல்லறுநீர் விட்டரைத்து அதுகெச புடத்திலே
செல்லநல்ல சுண்ணமே சிறந்தவீரம் சேர்த்திடே. (10)

சேர்த்துநீர்விட் டாட்டியே தெளிந்தகரி யுப்பிலே
சேர்த்தரை கெசபுடத்திற் செப்பமான சுண்ணமாம்
நீத்ததூப சாரமே நிறுத்தருங்கொண் டேவிட
நீர்ப்பிர ளையமதாம் நிலைத்ததிற்கை யாடவே. (11)

ஆடுபச்சை வீரனும் அதிகசூத சூடனும்
கூடுமுக் குருவையுங் கூட்டிநன்றா யாட்டியே
கோடுபெத்த துருசிலே கவசமிட்டுக் குக்குடம்
போடநல்ல சுண்ணமாம் வீரனைப் புகட்டியே. (12)

கட்டியான தாளகம் கவசமாய்ப் பொதிந்துதான்
மட்டில்சீர்பு டத்திலே மஞ்சட்பாங்கு மப்பனே
திட்டமான வீரனைச் சேர்த்துவங்கத் தப்பியே
கெட்டியோர் புடத்திலே வலித் துநல்ல சுண்ணமாம். (13)

வேறு

சுண்ண மோடுசவ் வீரனைச் சேர்த்திடு
அண்ணல் பொன்னிமி ளைக்கதை யப்பியே
உண்ண வூதிப் புடமிட வெள்ளையாம்
வெண்மை வீரனைச் சேர்நவச் சாரமே. (14)

சாரத் தப்பித் தழலினில் வாட்டியே
சாரச் சுண்ணம்வீ ரத்துடன் தாக்கியே
வாரப் பச்சைத் துருசினி லப்பவே
கோரச் சுண்ணங் கொடியதோர் சிங்கிக்கே. (15)

சிங்கிக் காமிந்த நீரு ரசங்கட்டும்
தங்கஞ் சேர்த்துக் குகையில்வைத் தூதவே
வங்கத் தீய வலிந்துவப் போதிலே
தங்க மொன்ப தரைவய தாகுமே. (16)

ஆகுஞ் சிங்கி துருகாவ் வீரஞ்சே
ராகு மேஅரி தாரத்தி லப்பியே
சாகி யூதநல் வெள்ளைவெள் ளீதனில்
ஏக வேகொடு வொன்பது மெய்யதே. (17)

மெய்மால் தேவியில் வீரனைச் சேர்த்தரை
செய்ம னோசிலைக் கப்பிநீ யூதடா
பைய நல்லதோர் பற்பம தாய்விடும்
செய்ய செம்பினிற் சேரவை யெட்டிதே. (18)

எட்டு மெட்டெட்டுங் கூர்மைச் சரக்கடா
கட்டுங் கால்மதி பூரண மேபொருள்
ஒட்டு மாகாசச் சுண்ணத்தை விட்டவர்
கெட்ட புத்தி நிலைத்திடும் வாதியே. (19)

வாதி யென்றால் வழலையைப் பாரடா
ஆதி மூல மடிதனைச் சுத்திசெய்

சோதி மூலம் சீவன்தி ராவகம்
பாதி வெண்மதி யாதித்தன் பாரிலே. (20)

பாரு வர்க்கு ளிருந்திடும் பூமலர்
சீர்கல் லுப்பெனச் சென்றிடு மாஞ்சிவம்
மூரிப் பாம்பதின் மூல மறிந்தவன்
பேர்கள் கொண்ட பிரபல ஞானியே. (21)

ஞானி நானெனச் சொன்னவன் ஞானியோ
மேனி வெந்து விடுவ தரிகிலான்
தான வன்னெனக் கற்பஞ்சா தித்தவன்
ஞானி தானவன் வாதிமெய் போகியே. (22)

வேறு

யோகியாவ தாரடா மானிலத்து யோகியோ
போகியாவ தாரடா புவியிலுற்ற யோகியோ
மோகியாவ தாரடா ஆசைகொண்ட மோகியோ
தேகியென்ன ஞானவாதி சென்றவன்பே ராகுமே. (23)

ஆகமாவ தேதடா அஞ்சுபூக மேதடா
போகமாவ தேதடா பொருளுமாவ தேதடா
சாகமாவ தேதடா சனியனாவ தேதடா
நாகமாவ தேதடா நற்சென்னச் சென்மமே. (24)

சென்மமாவ தேதடா செயலிருப்ப தேதடா
வன்மமாவ தேதடா மட்டைலுத்த ரேதடா
கன்மமாவ தேதடா களத்ரமாவ் தேதடா
தன்மமாவ தேதடா சரிதைகெட்ட நெஞ்சிலே. (25)

நெஞ்சமாவ தேதடா நின்விருப்ப தேதடா
வஞ்சியாவ தேதடா மாயையாவ தேதடா
நெஞ்சொல்லாவ தேதடா திருவிருந்த தேதடா
தஞ்சமாஞ் சதாசிவத் தாளடி பணிந்திடே. (26)

அடியாம்வழலைபூ ரணம் ஆகநீர்முப் பூவடா
கொடிமா வாவ தடியடா குறிப்பறிந்தோன் வாதியாம்
சடமாமறு பத்துநாற் சரக்கெல்லாஞ்சத் தேவிடு
அடர்வதான கைமுறை அறிந்தபேர்க்கு வாய்க்குமே. (27)

வாய்ப்பாகச்செய் யோர்தொழில் மடக்குவரி விள்ளுவேன்
நாய்ப்பாகல் விரைத்தயிலம் நல்லபச்சைக் கப்பியே
தாய்ப்பாகர்சுண் ணம்வீரம் சற்குருவுங் கூட்டியே
காய்ப்பாய்ரவி கண்டபின் கனிக்குள்வைத் தவியுமே. (28)

அவித்திறக்க ரெண்டுசாமம் ஆனபின்பு பாரடா
நவிக்குறைந்த சுண்ணமாய் நந்தியாவட் டத்திலே
குவித்தெழுந்த நீரதாம் கொட்டும்ரச மீதினிற்
பவிப்பரப்பிச் சுருக்கிடப் பச்சைநாகங் கட்டுமே. (29)

கட்டுவாய்நல் நாகமே மணத்தவளை கண்டமாய்
வெட்டிலே ரவியினி லுலத்திநெய்நற் றயிலமே
திட்டமாய்ச் சுருக்கியான் சீருநாகஞ் சேர்த்திடும்
சட்டமான சாரநீரிற் றானுருக்கிச் சாய்க்கவே. (30)

சாய்ப்பாய்நீ பத்துத்தரம் நாகஞ்சுத்தி தானிது
வாய்ப்பிதுதான் கட்டியே வவிக்கும்வகை யப்பனே
தோய்ப்பாயந்த முக்குரு விழுந்தபின் துணிந்திடும்
போய்த்தெழும்பல் நின்றிடும் புதுமையான கட்டிதே. (31)

ஆனரசங் கட்டியே அனவில்வைத் துருக்கியே
ஏனமான த்ங்கமே யிடைசரி யுருக்கினம்
தானவாதி தன்னையுஞ் சரியிடை யுருக்கினம்
மானதோர் களங்கமாம் வேதைசரக் காட்டமே. (32)

ஆட்டிய களங்கமேசெந் தூரவகை விள்ளுவேன்
காட்டுள்ளிக் கிழங்கதிற் கெந்தியிருக் காற்பலம்
மாட்டிவடி பூரணம் மாகுருவைச் சேர்த்துநீ
மூட்டிய தயிலமே சுருக்கிட முருக்கம்பூ. (33)

பூநிறச்செந் தூரமே புதியநல்ல வெள்ளியில்
மூனிப்பார்பி ராயம்பதி மூன்றெனவே தங்கமாம்
ஆனையாசைந் தாடுமண்ட பித்தில்மத யானையும்
சேனாபதி யாந்தளவாய் சென்றவிதி கண்டமே. (34)

கண்டருட சுண்ணமோ கவர்கள்கோடா கோடிகாண்
அண்டரண்ட மட்டுமே அனைத்துமெள்ள ஆடலாம்
பிண்டவித்தை யாருடன் பிரபலம் உரைப்பது
தொண்டனா யடிபணிந்து சொல்லும்வெளி காணவே. (35)

வெளியிலே கிடந்தயிந்து வெய்யோன்ரண்டு பொருளுமே
ஒளியிருந்த துளிநீரல்லோ உயர்ந்தசிவ சத்திகாண்
களியிற்சுண்ண மாவது கல்லுப்பொன்றே யாவது
துளிர்விழுந்த சுத்தியாய்த் தொடுத்துமுப்பூ வானதே. (36)

வேறு

முப்பூவுங் கூட்டி முடிந்த குருத்தான்
அப்பூவி னாலே ஆனது சத்தியாம்
ஒப்பிச் சேர்ந்த ஒளிவெளி யாச்சு
கப்புகள் கோடி கால்வெள்ளப் போக்கே. (37)

போக்குடன் சொன்னேன் பொருளடி மூலம்
பார்க்க வொளிவெளி பரவிந்து நாதம்
தூர்க்கரி யுப்புச் சுழன்றாடு மப்பா
மார்க்கமில் லாட்டால் வளர்கற்பந் தானே. (38)

கற்ப மறியார் கசடர்கள் மீதில்
அற்புத மான அமுத மிருக்க
அப்பையுண் ணாமல் அழிந்தது மாண்பரே
சிற்ப..ரை பூசை திடமாகச் செய்யே. (39)

செய்யாத வாதி சீர்பொன் னடியைக்
கையாரக் கரணான் கழிவது மாத்திரம்
மெய்யான சோதி வெளிமூலங் காணான்
அய்யா சிதம்பரத் தியான மறியே. (40)

அறிகோச பீசம் வாதச் சரக்கு
அறியவல் லார்க்குப் பொன்காணு மப்பா
குறியான மூலம் குலாவுமவு னத்தால்
அறிவாய் சிவத்தி னடிசத்தி முத்தே. (41)

கொங்கணர் முதற்காண்ட சூஸ்திரம் 41.
முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெருவிலிருக்கும் வித்துவான் குழந்தை வேலுப்பிள்ளை யவர்களிடமிருந்து வாங்கியஏட்டுப்பிரதியின் படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவேதுணை.

கொங்கணர் திருவாய்மலர்ந்தருளிய

நடுக்காண்ட சூஸ்திரம் 51.

பறிவான முதற்காண்ட மைஞ்ஞூறும்முற்றும்
பார்மக்காள் சீவகளை சூத்திரத்திற்சொல்வேன்
உறவான தெவ்வுயிர்க்கும் புறம்புள்ளாக
ஒன்றிநின்ற பூரணமே காப்புகாப்பு
பரமான மனமுரைக்கப் பரனைப்போற்றிப்
பார்த்திருக்கச் சூத்திரத்தைக் கையிலீவாய்
தரமான யோகமுதல் ஞானஞ்சித்தி
தனதுசிவ யோகசித்தி பலிக்குந்தானே. (1)

பலித்திடவே பலபலசாஸ் திரத்துக்கெல்லாம்
பாடினார் நிகண்டுகயி லாசமூர்த்தி
ஒலித்திடவே யெந்தன்சாத் திரத்தைச்சொல்வேன்
உத்தமமாம் பிள்ளைகண்டா விதனையீவாய்
கெலித்திடவே வேதசித்தி கெவுனசித்தி
[illegible]டியான காயசித்தி ஞானசித்தி
நலித்திடவே குருபதத்தின் மேலேநின்று
நாடு[illegible]ற பூரணத்தின் சித்திதானே. (2)

சித்திபெற சித்தவா சனையைப்போக்கு
சித்தாகும் மனமொன்றா யறிவிற்கூட்டும்
பத்தியொடு நானெனுமா ணவத்தைப்போக்கு
பலகாலுந் தாக்குமகங் காரம்நீக்கு
சத்தியென்ற பெண்ணாசை யுதித்தாலுந்தான்
தப்பாம லென்றுமுள்ளஞ் சாந்தமாக்கும்
முத்தியிலே உயர்வதற்குப் பாசம்நீக்கும்
மூதண்ட வானந்த மூலத்தோர்க்கே. (3)

ஆனந்த மூலகுருவேடங்கேளு
அப்பனே சடையொன்று பிரம்பதொன்று
தானந்தப் படிகமணி அக்கினாபரணம்
தன்காலிற் குறடுடனே யோகவேட்டி
வானென்ற காயாசம் படிகலிங்கம்
வாகான செம்புருட்டுக் காதில்வேடம்
ஊனந்த விபூதியொடு பரமஞானம்
உத்தமனே நம்முடையவர்க்கத் தோர்க்கே. (4)

நம்முடைய வர்க்கத்தில் யோகமார்க்கம்
நலமுற்ற வாதாரம் போலேசெய்து
தம்முடைய பிராணாயம் பண்ணிப்பண்ணி
சாதகமாய் மூலமாக் கினைவரைக்கும்
உம்முடைய யோகத்திற் பனிரண்டோடு
உத்தமனே வாசியது உள்ளேநிற்கும்
அம்முடைய சித்தியஷ் டாங்கமாடும்
அரகரா அதீதமென்ற ஞானங்கேளே. (5)

கேளப்பா ஞானத்துக் கேறும்மார்க்
கெடியான மண்டலங்க ளாறுஞ்சொல்வேன்
வேளப்பா தழலுருமண் டலந்தானொன்று
மேலான ரவியின்மண் டலந்தானொன்று
கோளப்பா மதியின்மண் டலந்தானொன்று
குளிர்ந்திருக்கு மமுதமுடன் கலைய்யீரெட்டு
நாளப்பா அவ்வளவும் யோகசித்தி
நவிலுகிறேன் ஞானவரை சார்ந்துகேளே. (6)

சார்ந்தகுரு வாயிரத்தெட் டிதழாம்பாதம்
சர்வக்ஞ சத்திமண் டலந்தானப்பா
ஆர்ந்திதுமேல் வருஞ்சலமண் டலந்தானொன்று
அப்பவஞ்சு வர்க்கதெரி சனமுமானால்
போர்ந்திதன்மேல் நிர்மலமண் டலத்திற்புக்கும்
போச்சுதப்போ பிறவிசஞ் சிதங்களெல்லாம்
ஓர்ந்திதன்மேல் நிர்மலமாய் நிறைந்தபோதம்
உத்தமனே உரைக்கரிது உரைத்தார்மேலோர். (7)

மேலான சவுக்காரச் சுண்ணம்வைத்து
விதமறிந்து நீர்வாரு மைப்பத்தஞ்சு
சீலான சீனத்தின் சுண்ணங்கட்டிச்
சிக்கெனவே சுண்ணத்திற் புடமுந்தீர்ந்து
கோலான வெண்கருவா லரைத்துக்கட்டிக்
குளிரவிடு யெண்ணெய்யெல்லாங் கக்கமட்டும்
மாலான யெண்ணெய்கக்கிச் சுண்ணாம்பானால்
மாட்டுதற்கு குருவான வாதிகேளே. (8)

ஆதியென்ற குருவுடைய கருவைச்சொல்வேன்
அப்பனே சொல்லார்க ளறிவாற்காணு
பேதியென்ற சாரமொடு காரம்ரெண்டும்
பேசாம லரைக்கயிலே ஜலமுமாகும்
நீதியென்ற மதியுப்பு வொன்றுகூட்டி
நேர்ந்தபின்பு செயநீரை ஒன்றில்வாங்கி
வாதியென்றா லிவையறிவான் மற்றோர்காணார்
மகத்தான் பூரணத்தை யிதனிற்போடே. (9)

போடப்பா பலமொன்று செயநீர்க்குள்ளே
புகழாக ரவியில்வைக்கப் புரண்டுப்பாகும்
ஊடப்பா யிதன்பேர்கற் பூரவுப்பு
உத்தமனே சொல்லரிது சொன்னேன்சொன்னேன்
ஆடப்பா யிதைநாட்டு அண்டரண்டம்நீறும்
அப்பனே யிதுக்குடம்பு வழலையுப்பு
நீடப்பா உடலோடு உயிருஞ்சேர்ந்தால்
நிச்சயமாம் நாம்சொன்ன நினைவுமாச்சே. (10)

ஆச்சப்பா வெண்சாரைக் குயிரேபூரம்
அச்சாரைக் கேவீரம் நஞ்சுமாச்சு
பேச்சப்பா ஒன்றுமில்லை வாதசித்தி
பெரியோர்க ளூட்கருவைப் பேணிச்சொல்வார்
நீச்சப்பா யிதைவிட்டால் வாதமில்லை
நிலைத்துதப்பா யிதையறிந்தால் வகாரமூன்றும்
மூச்சப்பா அற்றிடத்துக் கொக்குமொக்கும்
மூதண்டக் குருகூட்டு முறைமைகேளே. (11)

முறையான வெண்சாரை பலந்தான்பத்து
முந்தியதோர் கற்பூர உப்புப்பத்து
நிறையான வீரமது பலந்தானஞ்சு
நேராகக் கடைந்தெடுத்துக் கூட்டிக்கொண்டு
துறையான கடைஞ்ப்பா பதினொன்றானால்
தொடுமுன்னே அண்டரண்டஞ் சுண்ணமாகும்
மறையான வஸ்துவிலே யிதனைக்கூட்டி
மாசற்ற நாதாக்க ளாடுவாரே. (12)

ஆடுவார் நாதாக்கள் வஸ்துவித்தை
அரிதென்றே அவனியுளோ ராதிகுருவாலே
யூடுவா ருப்பெடுப்பார் செயநீர்செய்வார்
உத்தமனே யிரும்பைவிட்டு வேதைபார்பார்
கூடுவா ரறிந்தமட்டும் நாலாற்மாத்தாம்
கூறியதோர் வஸ்துவைப்போ லோடாதோடா
தேடுவார் மாணிக்க மெரிந்துபோட்டுத்
தெருக்கிடக்குஞ் செங்கலையு மெடுத்தவாரே. (13)

வாரான அண்டத்தின் செயநீர்க்குள்ளே
மாட்டியல்லோ சவுக்காரங் கடைந்துகொண்டு
வீரான கற்பூர வுப்புச்சேர்த்து
வீரமிட்டு வெண்கருவா லரைத்துக்கட்டித்
தாரான சுண்ணத்தி லெரித்துவாட்டிச்
சாதகமா யெடுத்தண்ட நீரைவிட்டு
நீரான குருவாகக் கடைந்துயேறு
நினைவாகப் பத்துவிசை கடைந்துகொள்ளே. (14)

கடைந்துபத்துந் தீர்ந்தபின்பு கருவைக்கேளு
கைவிட்ட சூதுமொடு வீரம்பூரம்
குடைந்தவுறம் குருவண்டு புழுகுங்கூட்டிக்
குறையான சுக்கிலத்தாற் குழையுமட்டும்
அடைந்தபின்பு வழலையொடு கூட்டிக்கொண்டு
அப்பனே அண்டநீர்க் குள்ளேபோடு
உடைந்தபின்பு வெண்ணெயைப்போற் கடைந்துவேறு
உத்தமனே பதினோராங் கடைச்சலாச்சே. (15)

ஆச்சப்பா பதினொன்றுங் கடைந்தோரில்லை
அப்பனே சிவனூலில் மூன்றுகண்டேன்
ஓச்சப்பா மூலகுரு அஞ்சுதரமென்றார்
உத்தமனே சட்டைமுனி யேழுதரமென்றார்
கூச்சப்பா கடுஞ்சுருக்கு வழலையென்று
குறிப்பாகப் பத்தோடு மொன்றுதீர்ந்தேன்
நீச்சப்பா வென்றுசொன்ன வகாரமூன்றும்
நிமிஷத்தி லொருசிரங்கை நீர்க்குளாச்சே. (16)

நீரான வேதையொரு சிரங்கையாகும்
நீத்தினமோ கட்டினமோ உருக்கினமோகோடி
வாரான மெழுகினமோ செந்தூரங்கோடி
மாட்டுகிற களங்குமுதற் செயநீர்கோடி
நாரான குருக்கோடி தொந்தங்கோடி
கைவிட்ட வேதையிலெட் டெட்டுக்கோடி
நேரான வழலையுமித் தனையுமாச்சு
நினைவுகெட்டுக் கைவிட்டா லெல்லாம்போச்சே. (17)

போச்சென்ற வஸ்துக்கு வழலையாதி
புகழான உபரசத்துக் கிதுவேயாதி
மூச்சென்ற காரமொடு லவணத்தாதி
முதிர்ந்துநின்ற அண்டத்துக் கிதுவேயாதி
ஆச்சென்ற தீநீர்க்கும் செய்நீர்க்காதி
அறுபத் துநாலான குருவுக்காதி
ஏச்சென்ற யெண்ணெய்கக்கி சுத்தியாக்கி
ஏறினா லவன்வாதி சித்தனாமே. (18)

ஆமிந்த யெண்ணெய்கக்கும் சிவயோகிக்கும்
ஆசானைப் பணிந்தோர்க்கும் அருளுள்ளோர்க்கும்
தாமிந்தத் தேவிதாய் வாமனீசன்
சாதகமாய்ப் பூசித்தோர்க் கெண்ணெய்கக்கும்
ஓமிந்தப் படிவிட்டுப் பார்த்தானாகில்
ஒன்றுமில்லை எண்ணெய்சுத்தி வழலையேகும்
நாமிந்தப் படிசெய்து பார்த்துத்தேர்ந்தோம்
நாதாக்க ளிப்படியே பார்த்திட்டாரே. (19)

பார்த்திட்ட முறையோடு யெண்ணெய்போனால்
பலித்ததுகா ணவர்க்குப்பொன் பரிந்துகாணும்
ஏந்திட்ட யெண்ணெய்யொடு நீருங்கூட்டி
யிருந்துதப்பா உண்டையைப்போ லென்னசொல்வேன்
காத்திட்ட இலவடியின் கிளியைப்போலக்
கசடருக்கும் திருடருக்குங் காணாதோடும்
மாத்திட்ட மாகவைத்து வாசனையைப்போக்கும்
மயங்கியே போனாலும் மறுகாற்செய்யே. (20)

செய்கையிலே புடபேதம் வாட்டும்பேதம்
திரமான சுண்ணத்தில் நீற்றும்பேதம்
செய்கையிலே கண்கண்டு அறைக்கும்பேதம்
சேர்ந்தவெண்ணெய் கருப்போட நின்றபேதம்
செய்கையிலே மணல்வறுப்பாய்ச் சுருண்டபேதம்
சேராமற் சுண்ணத்தைச் செய்தபேதம்
செய்கையிலே தயிலமத்து நின்றபேதம்
செயமாகக் கண்டுமெள்ளத் தீயிலூட்டே. (21)

ஊட்டயிலும் ஆட்டயிலும் புடத்தினுள்ளும்
ஓடிப்போம் வெகுபதனம் உறத்துப்பண்ணு
காட்டயிலே தண்ணியுண்டை உருவாய்நிற்கும்
கபடநா டகமெனச் சாத்திரங்களெல்லாம்
மூட்டயிலே தீக்கண்டா லெறிந்துபோகும்
மோசமல்லோ சாத்திரசூத் திரமாய்ச்செய்தார்
நீட்டயிலே தீயும்வெருங் குகையாய்நிற்கும்
நிர்மலத்தைக் குருவாக்கும் நிறையைக்கேளே. (22)

ஆட்டப்பா யிதினாலே உப்பைக்கட்டு
அந்தஉப்பூ பூரத்தை யாத்திக்கொல்லும்
மூட்டப்பா பூரம்பூ மாதுசாகும்
உத்தமனே பூமாதால் வங்கஞ்சாகும்
நாட்டப்பா வங்கத்தால் நிமிளைசாகும்
நல்லதொரு நிமிளையினாற் சாரஞ்சாகும்
கூட்டப்பா சாரத்தாற் றுருசுசாகும்
கொள்ளையிட்டான் வாதமெல்லாம் லவணப்போக்கே. (23)

போக்காக வெள்வங்க மேறுச்சானால்
புகல்மாத்துப் பதினைந்தாங் காரசாரம்
வாக்காக யிதைவிட்டுக் குருவைத்தொட்டு
மாட்டுவார் லோகத்திற் பாஷாணத்தில்
தாக்காக அஞ்சாறு யேழுங்காணும்
சாதகமாய்த் தீயினாற் சமாதுசெய்வார்
நோக்காக யிக்குருவைக் கொடுப்பார்மாந்தர்
நுண்மையாம் வழலையுட நோக்கங்கேளே. (24)

கேளப்பா ஆதிகுரு நாதம்போட்டு
கெடியாக முறிந்தபின்பு விந்துவிட்டு
நாளப்பா யிதினோடே வீரம்பூரம்
நலமான குருவண்டு வுறமுங்கூட்டி
நீளப்பா சூதமொடு புழுகுகூட்டி
நேராக வாய்நீரு அமுரிவிட்டு
சூளப்பா முலைப்பாலா லாட்டுஆட்டு
தொடுகுறிபோல் துருசியின்மேற் சூட்டிப்போடே. (25)

போட்டபின்பு மேலேகற் பூரச்சீலை
புகழாகச் சுண்ணாம்பாய்ப் பண்ணிக்கொண்டு
நாட்டபின்பு யிதினோடே சூடன்கூட்டி
நலமான வெண்கருவா லறைத்துக்கட்டி
ஊட்டபின்புஅதின்மேலே சுண்ணச்சீலை
உறவாக நாலுசுத்திக் காயவைத்து
நீட்டபின்பு வங்கத்தில் யினத்தில்மாறில்
நிலைத்துதப்பா வழலையென்ற சுண்ணந்தானே. (26)

தானென்ற குருமுறைக்கு நாதவிந்து
சார்வாகக் குறைந்தாக்காற் பசுமைகாணும்
வானென்ற துருவியிலே நாதம்போட்டு
வழலையிட்டுச் சுக்குலத்தை வாறுவாறு
பானென்ற பச்சைபோம் ரவியினுள்ளே
பாச்சியல்லோ தாளகத்தை வங்கம்பூசி
வேனென்ற புடம்போடு வங்கம்நீரும்
வெட்டவெளி யாச்சுதிந்த வாதங்காணே. (27)

காணப்பா வங்கந்தங் கத்திற்றேய்க்கக்
கண்ணிமைக்குட் டங்கமது குருவுமாச்சு
தோணப்பா யிதுவேவா தத்துக்காதி
சொல்லுகிற நூலெல்லாம் யிதுவேசொல்லும்
விணப்பா யிதைவிட்டால் வகாரமூன்றும்
வெறும்பானை யீப்போலே விழலாய்ப்போகும்
வேணப்பா வங்கம்வெள் ளியிலேதேய்க்க
வெள்ளியது குருவாகும் விளம்பக்கேளே. (28)

விளம்பினதோர் குருவாமுப ரசமுஞ்சாகும்
வெவ்வேறே சுண்ணமுமாம் கவரோகோடி
விளம்புனதோர் சுண்ணத்தில் தொந்தங்கோடி
வேதாந்த வெளிபோலே சுண்ணக்காடு
விளம்பினதோர் நித்தினத்தி லிதுவேயாதி
மேலான கட்டினத்தி லிதுவேயாதி
விளம்பினதோர் உருக்கினத்தி லிதுவேயாதி
வெகுகோடி சாஸ்திரத்தை அவிழ்த்துப்பாரே. (29)

பாரப்பா யிக்குருவிற் சவாதுகூட்டிப்
பாச்சியல்லோ மத்திச்சுப் பூசியாட்ட
நேரப்பா வண்டிட்ட மணிபோலாகும்
நிலையான உபரசபா ஷாணமேது
தூரப்பா யிதன்வேதை சொல்லப்போகா
தொட்டவிடம் பட்டவிடம் தூரவோடும்
வேரப்பா வஸ்துவித்தை வேதையோட்டம்
வெவ்வேறே நின்றாடும் விரைந்துகூடே. (30)

கூடுதற்குக் குருவொன்று சொல்லக்கேளு
கூப்பிட்டால் வாதமுங்கும் பிட்டுநிற்கும்
ஆடுதற்கு வங்கமொன்று நாகமொன்று
அப்பனே ரெண்டுபலம் உருகும்போது
நீடுதற்கு அரைப்பலந்தா ளகத்தையூட்டு
நேராகக் காற்பலந்தான் சூதமிட்டு
ஊடுதற்குக் காசிடைதான் காரங்கூட்டி
உத்தமனே விந்துவினா லரைத்துக்கட்டே. (31)

கட்டியதோர் வில்லைதனை ரவியிற்போட்டுக்
காய்ந்தபின்பு நாகவங்கங் கல்வத்திட்டு
வெட்டியதோர் குளவியைக்கொண் டாட்டத்தூளாம்
வித்தகனே தூளுக்குள் நாதம்வார்த்து
கெட்டியா யரைத்ததனை வில்லைகட்டி
கெடியாகப் புடம்போடு வெள்ளையாகும்
மட்டியதோ ரஞ்சிலொன்று வழலையிட்டு
மத்திச்சுக் காசுபோல் வில்லைதட்டே. (32)

வில்லைதனைச் சுண்ணாம்பிற் புடத்தைப்போடு
வெகுசுருக்காய் நாகவங்கம் சுண்ணாம்பாகும்
வில்லையிலே வீரமிட்டு விந்தாலாட்டி
மேலோன தங்கமதிற் பூசிப்போடு
வில்லையிலே பட்டதங்கங் குருவுமாச்சு
வெண்ணீராய்ப் போமளவும் விரைந்துபோடு
வில்லையைப்போல் தங்கத்தை விந்தாலாட்டி
வெகுசுருக்காய்ச் சுண்ணத்திற் புடத்தைப்போடே. (33)

போட்டெடுக்கத் தங்கமது குருவுமாகும்
பொற்குருவாற் பொன்விளைந்து பொருளுமாகும்
காட்டெடுத்த குருவோடு வீரஞ்சீனம்
கைமுறையாய் புளுகிட்டார் சுண்ணங்கோடி
நீட்டுதற்குச் சவாதோடு காரங்கூட்டி
நேராக உருக்கினத்தின் நிலையோகூடி
பூட்டெடுத்த துறைக்கெலாமிப் படியேமைந்தா
போக்கென்ன விந்துவினா லரைத்துப்பூசே. (34)

அரைத்திடுவா யஞ்சுசுண்ணம் பலந்தானொன்று
அந்திடைக்கு முன்வைத்த துருசுச்சுண்ணம்
நிரைத்தினைப் பொடியாக்கி வைப்பீராகில்
நிகரான குருசித்தி நிலைத்துதப்பா
விரைத்ததிதன்பெருமைசொல்ல நாவோயில்லை
வெகுசுருக்கு சுக்குலத்தை யுண்டதொருதுருசு
அருத்தியினாற் சிவனோடு பரமுந்தாண்டி
அந்தரத்தே சிவபதத்தைக் கண்டவ்ாறே. (35)

கண்டதொரு குருவெடுப்பார் கழஞ்சுரெண்டு
கைமுறையாய் நாதவிந்தா லறைத்துக்கொண்டு
பண்டதொரு குருவோடு சவாதுகூட்டிப்
பாகமுடன் முக்கழஞ்ச் வகையொன்றுக்கு
நிண்டதொரு பீங்கானி லப்பிமேலே
நேராகக் காந்தியிடைத் தயிலமாகும்
விண்டதொரு தயிலத்தை வழித்துநன்றாய்
விதமாகக் காந்திகொண்டு கொட்டிவாங்கே. (36)

வாங்கியதோர் தயிலத்திற் காரசாரம்
மால்தேவி தொட்டியொடு நாவிகெந்தி
பாங்கியதோர் நேர்வாளம் வகையதொன்று
பருவமுடன் பணமரைதான் நிறுத்துக்கூட்டி
ஓங்கியதோர் தயிலத்திற் பொடித்துச்சேர்க்க
உத்தமனே வஸ்துசிங்கி தன்னைப்பாய்ச்சு
தாங்கியதோ ரிச்சிங்கி ரசத்திற்குத்த
தப்பில்லை வெண்ணெயுமாந் தொக்கிக்காணே. (37)

காணப்பா சூதவெண்ணெய் கிளிபோற்கட்டி
கலந்தெரியுஞ் சூடனுட புகையுங்காட்ட
ஊணப்பா வெண்ணெய்குத்திக் கரண்டிசூதம்
உருக்கிடவே மணியாகும் எடுத்துக்கொண்டு
தோணப்பா காரமிட்டு உருக்கவாடுஞ்
சொல்லேது குருக்கோடி சுண்ணங்கோடி
வீணப்பா சூதமில்லா வாதமேது
வெகுகடின மறிந்துணர்ந்து வர்தம்பாரே. (38)

பாரிந்தச் சூதமொன்று தங்கம்நாலிற்
பாய்ச்சியொரு மணியாக வாங்கிக்கொண்டு
நேரிந்த வீரமொடு துருசுச்சண்ணம்
நிலையான புழுகோடு சீனங்கூட்டி
வாரிந்தச் சூதத்தின் மணிக்குப்பூசி
வகையான சற்சுண்ணங் குகையில்வைத்துத்
தாரிந்தக் கெசபுடமே போடச்சித்தி
தன்னோடு நந்தியையும் பூசைபண்ணே. (39)

பண்ணியதோர் குருவோடு லிங்கம்வீரம்
பரிவான காரமிட்டு வைத்துக்கொண்டு
வெண்ணியதோர் தூமமுத லாய்ச்சந்தான
வேதையெட் டெட்டுமுப ரசமுமாகும்
கண்ணியலோ கந்தனிலே பட்டுதானாற்
காய்ச்சயிலே நூத்தெட்டு மாத்துமாகும்
உண்ணியதோர் சிவயோக ஞானிக்காகும்
உத்தமனே பொற்குருவின் நீருகாணே. (40)

காணப்பா முன்னாக வங்கத்தாலே
கைமுறையாய் வெள்ளிதனைக் குருவாய்ச்செய்து
பூணப்பா குருவாலே சூதங்கட்டிப்
புகழ்பெரிய வெண்கண்டர் மேலேபூசி
ஊணப்பா கட்டியதோ ருப்பைப்பூசி
உத்தமனே நேர்பாக வாட்டிக்கொண்டு
பேணப்பா வாரையிலைக் குள்ளேவைத்துப்
பேராகப் பதினைந்து புடத்தைப்போடே. (41)

போட்டெடுத்த சூதமொன்று வெள்ளிநாலிற்
புகழாக விட்டுமொரு மணியாய்வாங்கி
நீட்டெடுத்த வெண்கண்டர் மேலேபூசி
நேரான சீனஞ்சுக் குலத்தாலாட்டி
மாட்டெடுத்த குளிகையின்மேல் புழுகோடப்பா
வாகான அஞ்சுண்ணக் குகையில்வைத்து
மூட்டெடுக்கக் குகையிலிட்டுப் புடத்தைப்போடு
மூதண்ட ரசிதமது குருவுமாமே. (42)

குருவோடே வீரமிட்டுச் சீனஞ்சேர்த்துக்
கொட்டுநாக வங்கத்தை நூறுக்கொன்று
செருவூடே வெள்ளியுமாஞ் சீனவெள்ளி
செப்பியதோர் சூஸ்திரத்தி லொன்றுதப்பா
கருவூடே யிக்கருபா ஷாணங்கூட்டிக்
கவரொன்றிற் பிரித்தாடக் கறைகொள்ளாது
தருவோடே வெள்ளிதா னேற்றதாகும்
சமத்தவரைப் பிரியமா யிடுவாய்காணே. (43)

காணப்பா இம்முறையை வீட்டுமாண்பர்
கட்டினேன் வங்கத்தாற் சூதமென்று
வீணப்பா வங்கமுதற் செம்பிலிட்டு
வேதையிதிற் கொஞ்சமென முழிப்பான்பாவி
தோணப்பா சாஸ்திரத்தா லாவதென்ன
சொல்லுகிற குருவேணு மென்பார்மாடு
பூணப்பா சாஸ்திரம் நிகண்டும்பாரார்
புத்திகெட்ட காய்களுக்கு வாதம்பொய்யே. (44)

பொய்யென்றே வாதத்தைக் கழுதைமாண்பர்
போக்கோடே கைதவறிற் றிரும்பப்பாரார்
தையென்றே நிர்த்தமிட்ட சிவனைப்பூசி
தாயான பராபரையைச் சார்ந்துபூசி
மெய்யென்றே சதாசிவத்தைக் காணுகாணு
வேதாந்த முரைத்தோர்க்கு விரைந்துகாணும்
பொய்யென்ற பயமச்ச மற்றால்வாதம்
பொய்யாமல் வாதத்தைப் பூட்டக்கேளே. (45)

கேளப்பா பாறையுப்பைப் பாக்குப்போலக்
கீழ்தட்டி வழலையிலே வீரஞ்சேர்த்து
நாளப்பா மத்தித்து உப்பிலப்பி
நலமாகக் காய்ந்தபின்பு பூசக்கேளு
தாளப்பா சூடனொடு சீனஞ்சேர்த்துச்
சம்பளத்தின் சாத்தாலே அரைத்துப்பூசி
ஆளப்பா உலரவிட்டுச் சீனத்தூளில்
அமிழ்த்தியுப்பை வெகுவாகப் புடத்தைப்போடே. (46)

புடத்திலே உப்புநின்று கட்டுமானாற்
பொன்முதலாய் வெள்ளிவித்தை ரெண்டுஞ்சித்தி
தடத்திலே உப்பாலே பூரங்கட்டும்
தனிப்பூரந் தாளகத்தைச் சண்ணியேறும்
விடத்திலே தாளகம்வங் கத்தைநீற்றும்
வேறான வங்கத்தால் நிமிளைநீறும்
மடத்திலே நிமிளைசா ரத்தைநீற்றும்
மாச்சரியஞ் சாரத்தாற் கண்டர்நீற்றே. (47)

நீறாலே கட்டினம்நீற் றினமுமாகும்
நிலையான செந்தூரன் களங்கமாகும்
நீறாலே சிங்கிமுதற் குளிகையாகும்
நிரைநிரையாய மெழுகொடுவால் ரசமுமாகும்
நீறாலே தொந்தித்தாற் றொந்தமேறும்
நிமிஷத்திற் றூமமுதற் பரிசமாகும்
நீறாலே கட்டார்கள் வாதியெல்லாம்
நிலைத்ததென்ன வழலைமுத லுப்பிற்கட்டே. (48)

கட்டென்ன கருவென்ன வேதையென்ன
காணுகிற வேதையென்ன காண்பதென்ன
நெட்டென்ன செந்தூர வியன்களென்ன
நேராகக் கேட்குகின்ற கற்பமென்ன
மட்டென்ன வழலையுட போக்கதென்ன
மாறிவைத்து வூதுகிற குருதானென்ன
தேட்டென்ன தெவிட்டாத கருத்தானென்ன
ஜெகமெல்லாங் கதறாதே தெளிந்துகாணே. (49)

காணப்பா லவணமொடு காரசாரம்
கட்டுகிற வித்தைக்கு வழலையாதி
ஓணப்பா உபரசமூ லிகையினாட்டு
உற்றுப்பார் வழலைவிட்டா லொன்றுமில்லை
பூணப்பா வஸ்துவினாற் றொட்டுஆடும்
போக்கென்ற போக்கெல்லாம் வழலையப்பா
வீணப்பா மற்றதெல்லாம் வழலைக்குள்ளாம்
வெகுசுருக்கு உடலுயிரும் நஞ்சுமாச்சே. (50)

நஞ்சான வழலைபட்டால் நாதம்நீறாம்
நவலோக மூட்படவே வங்கம்நீறும்
நெஞ்சான மனமிருந்த ஆத்துமாப்போல்
நிரைநிரையாய் வாதஅங்கம் நெட்டிட்டாடும்
பஞ்சான பருவதத்திற் பொறிபட்டாப்போற்
பராபரமே யிதன்பெருமை பகரமாட்டேன்
அஞ்சாமோ யெட்டாமோ என்னவேண்டாம்
அறுபத்து நாலோடே நூற்றுப்பத்தே. (51)

நூறுதுறை பார்த்தாலென் பலநூல்பார்த்தென்
  நுட்பமெல்லா மென்னூல்போ லேதுஞ்சொல்லார்
வேறுதுறை யேதுமில்லை உப்பேயாதி
  வேதாந்த முற்றவர்க்கு மனமேயாதி
மாறுகுறை யேதுமில்லை நாதவிந்து
  மாட்டினார் சூத்திரத்தி லேதும்பொய்யா
கூறுதுறை வெகுகோடி யலைந்துபார்க்கிற்
  கூப்பிட்டார் கைக்கொள்ளார் பத்திதானே. (52)

பத்தியிந்தச் சூத்திரத்தைப் பாருபாரு
  பலபலவாஞ் சாஸ்திரத்தைப் பாருபாரு
அந்தியிந்தச் சூத்திரம்போற் சட்டமுனிநூலாம்
  அல்லாதே நூவில்லை யறிந்துபாரு
முத்தியென்ப கெதினாலே லவணத்தாலே
  முன்பின்னுந் தீபரமே தீட்சைமார்க்கம்
சத்தியிந்த வழலையப்பா யிதனைவிட்டால்
  தலைகெட்ட வாதமிது காணும்முற்றே. (53)

கொங்கணர் நடுக்காண்ட சூஸ்திரம் 51.
முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெரு வித்வான் மு. குழந்தை வேலுப்பிள்ளை அவர்களிடத்திலும், திருமங்கலம் வைத்தியம் அ. குமர குருபரம்பிள்ளை அவர் களிடத்திலிமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதிகளின் படி இந்தசாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

கொங்கணர் திருவாய் மலர்ந்தருளிய

கடைக்காண்ட சூஸ்திரம் 61.

ஆதியந்தங் கடந்தபூ ரணந்தான்காப்பு
அம்மனொடு மூலத்திற் கணேசன்காப்பு
பாதியிந்து மலர்கடந்த மூலர்காப்பு
பரமாகி யடியிருந்த போகர்காப்பு
சோதியாய் நின்றதொரு பெரியோர்காப்பு
துரியவெளிக் குள்ளான ரிஷிகள்காப்பு
நீதிபெற அறுபதுக்குள் தீட்சைமார்க்கம்
நிலையாக உள்ளபடி நிலைக்கிறேனே. (1)

நிலையான மனத்தோர்க்குக் காலங்கேது
நிஷ்டையறி வில்லார்க்குத் தலையங்கேது
கலையாமல் நிற்பதற்குப் பூதமேது
கருத்துறையாக் காமியர்க்கு ஞானமேது
துலையாத சென்னமெடுத் தாடுவோர்க்குத்
துரியமென்ற வெளியேது சூட்சமேது
மலையாதே மனதடங்கி யறிவிற்சேர்ந்து
மதிகடந்த பெரியோரே அமுதத்தோரே. (2)

அமுதமுண்ட பெரியோர்கள் கோடாகோடி
ஆச்சரிய மனமடங்கி யறிவிற்சேர்ந்தோர்
குமுதமென்ற குண்டலிக்குட் சித்தியானோர்
கோடான கோடிநந்தி மூலங்கண்டோர்
திமுதவொலி யண்டத்தே வாய்வுள்ளாகச்
சிந்திப்பாய் நின்றவர்கள் கோடாகோடி
கமுதவிதழ்க் கமலத்தே கடக்கறிந்து
கரைகடந்த பேர்கோடி கண்கொள்ளாதே. (3)

கண்ணேது காதேது மூக்கங்கேது
கலந்துரைக்கில் நாவேது பரிசமேது
உண்ணேது வென்றாக்கால் மனமேயொன்று
உத்தமனே ஞானவரை யுறுதிகாணும்
பெண்ணேது ஆணேது பிறகுமுன்பால்
பிலத்தபுத்தி யுண்டானா லறிவாய்க்காணும்
பண்ணேது யிசையேது பாசாங்கப்பா
பாவியா யுங்களைத்தான் படைத்திட்டாரே. (4)

படைத்திட்ட படியேயிடை கலையிற்பெண்ணாம்
பாதகரே பிங்கலையிற் புருடனாகும்
அடைத்துவைத்த பொருட்சொல்வேன் கேளுகேளு
அவனவளுங் கூடும்போ தமைத்தவாழ்க்கை
விடைத்தவிரை கரைபோட்டாற் பாகலாமோ
வேதாந்த சாஸ்திரத்தில் விழுந்தபாவி
மடைத்தனமாய்ப் போகாதே யென்னூல்பாரு
வாதமொடு ஞானவரை வாய்க்குந்தானே. (5)

தானென்ற புரிட்டம்பூ ரணமுங்கூடிச்
சடலமெழு மசபையாய்ப் பிறந்துதப்பா
தேனென்ற நாதவிந்தா லாசைகொண்டு
செகமெல்லா முண்டாச்சு தேகமாச்சு
வானென்ற தீபத்திற் றிரிநெய்நின்ற
மார்க்கமடா பூரணத்தின் வரிசையார்க்கும்
கோனென்ற கதலிகுலை சாயும்போது
குறியான பூரணத்தின் குறியைப்பாரே. (6)

பாரப்பா பிறவியென்றால் மூலம்பார்க்கிற்
பக்கத்திற் கனுவெடித்த 'பருவமைந்தா
ஆரப்பா யெனைப்போலே சொல்லப்போறார்
அலைகடலை யுண்டமுனி ஞானநூலிற்
சீரப்பா தவறாமற் சடலவாழ்க்கை
செப்பினா ரிதையறியார் தேசத்தோர்கள்
வேரப்பா தலையப்பா யென்றுங்காணார்
வெருவாயைப் பிதற்றிடுவார் வீணர்தானே. (7)

தாமப்பா யிந்தவகை ஞானங்கற்றால்
சாஸ்திரங்கள் வேதங்கள் தவறுண்டேபோம்.
போமப்பா வென்றுசொல்லி லோகவாக்யம்
பூட்டாகப் பூட்டினார் நினைவுகோடி
ஆமப்பா அதனாலே கெட்டுப்போனார்
ஆதியந்த மறியாமற் சடத்தைவிட்டார்
நாமப்பா வொளிக்கறியோம் பெற்றபேறு
நாட்டிலே சென்மித்த நரர்கள்காணே. (8)

காணப்பா புண்யமென்றும் பாவமென்றும்
கணவனென்றே சிலகால மிருந்தபின்பு
பேணப்பா அவள்தனக்குப் புதல்வரென்றும்
பிறந்தாயோ அம்மம்மா வென்றுசொல்லித்
தோணப்பா யிந்தவகை யார்க்குஞ்சொல்லார்
சுருதியிலே முடிந்தவகை சொல்லப்போமோ
பூணப்பா யிதனாலே ஒளித்தார்சித்தர்
போக்கோடே ஏறுதற்கு என்னூல்பாரே. (9)

பாருநீ சட்டைமுனி நூலுமென்நூல்
பண்பான கும்பமுனி பகர்ந்தநூலும்
பாருநீ வாதமொடு ஞானமெல்லாம்
பகற்போலே வெட்டவெளி யாகத்தோன்றும்
பாருநீ மற்றநூ லடக்கமாகும்
பாரையுப்பை மறைத்துவைத்தார் மூலநாயன்
பாருநீ மற்றதுள்ள படியேசொன்னார்
பஞ்சபூ தச்சரக்கை மறைத்திட்டாரே. (10)

மறைத்திட்டார் நூலெல்லாம் அறிந்தபேர்க்கு
வகைதோணும் மற்றுள்ளோர் காணமாட்டார்
மறைத்திட்டா ருபரசமு முதலாந்தீட்சை
மகத்தான பஞ்சகர்த்தாள் வழலையாதி
மறைத்திட்டா ரென்னைவிட்டுச் செய்வதற்கு
வழிபாடு யொன்றுங்கை முறையிற்காணேன்
மறைத்திட்டா ரிப்படித்தா னுண்டோவென்று
வாதமுறை தப்பாமல் வ்ழலைசெய்யே. (11)

வழலைதனைச் செய்வதற்கு முறையைக்கேளு
மகத்தான சத்தியது நூறுபங்கு
நிழலையென்ற வெடியுப்பு பத்துக்கொன்று
நெறியான பாறையுப்புச் சூடனிந்து
அழலையென்ற வகைவீதம் நூற்றுக்கொன்று
அப்பனே பஞ்சபூ தந்தான்சேர்க்கத்
தழலையென்ற சவுக்காரஞ் செய்யுமார்க்கம்
சாற்றுகிறேன் வெட்டவெளி யாகத்தானே. (12)

தானென்ற சவுக்காரஞ் செய்யுமார்க்கம்
தத்தளிப்பார் தத்தளிப்பார் சார்வுகாணார்
கோனென்ற வழலைசெய்ய முறையைக்கேளு
கொடியதொரு நவச்சாரம் படிதானெட்டு
கானென்ற புரியட்ட மிதுவேயாச்சு
கண்கொள்ளாப் பூரணத்தின் முறைச்சொல்வேன்
வானென்ற கற்சுண்ணம் படிதான்ரெண்டு
வளமான யெட்டிரண்டின் வரிசையாச்சே. (13)

ஆச்சப்பா சிவமென்ற கல்லுச்சுண்ணம்
ஆதிசத்தி யுவச்சார மறிந்துபாரு
பாச்சப்பா சகலத்துக் குயிரேதென்னிற்
பாறையுப்புப் படியொன்று பூரணந்தான்
காச்சப்பா சோடசந்தான் பதினாறகும்
கைகண்ட கருமறைப்புச் சொல்லக்கேளு
வாச்சப்பா போச்சுனக்கு அப்பாகேளு
வரிசையுடன் கைமுறையின் வகுப்புக்காணே. (14)

காணவே சொல்லுகிறேன் கன்னியடிவாங்கிக்
கலசமதில் வைத்துமேலாண் முடியைவைத்துத்
தோணலே யிணங்கனுக்கோர் படிதான்வைத்துத்
துடியாக மேலுமிந்த முடிதான்வைத்து
ஊணவே அதன்மேலே அடிதான்வைத்து
உத்தமனே சில்லிட்டுச் சேலைசெய்து
பூணவே நூறெருவிற் புடத்தைப்போடு
புடமாறி யெடுத்தபின்பு உடைத்துவாங்கே. (15)

வாங்கியதோர் படியென்றா லிணங்கனுக்கு
மலம்பத்துக் காரமதிற் பாதிபோட்டுத்
தாங்கியதோ பழச்சாற்றா ரண்டுசாமம்
தாக்கியரை யண்டவெள்ளைக் கருவினுள்ளே
ஓங்கியதோ ரிரண்டுபத்து அண்டத்துக்கு
உரைக்குத்தா யெருக்கலம்பால் சேரைவாரு
தேங்கியரை யொருசாமம் வில்லைசெய்தே
திரமாக ரவிமுகத்தி லுலர்த்திடாயே. (16)

உலர்ந்தபின்பு நூறெவிற் புடத்தைப்போடு
உறவாகத் தேசிநீர் படிநாலுக்குள்
அலர்ந்ததொரு அடிமுடியி லிணங்கள்சுண்ணம்
அப்பனே கரைத்தந்தத் தெளிவைவாங்கி
பலம்பெறவே அகல்சட்டி தன்னிற்காய்ச்சு
பாங்கான வுப்பிதென்பார் கருவைப்பேசார்
சலங்காணு மெனுந்தவள தந்தம்போலத்
தானான வெடியுப்புத் தான்கட்டாயே. (17)

கட்டான யிணங்கிபடி யரைதான்வாங்கிக்
கருத்தவெள் ளெண்ணெய்ப்படி யனாயிற்கிண்டி
மட்டாகக் கலக்கியதை வைத்திருப்பாய்
வழலையுப்புத் தெளிந்தநீர் காயும்போது
கொட்டுவாய்க் குழம்புபோற் பருவங்கண்டு
குறுகியெண்ணெய் சவுக்காரங் கொள்கிநிற்கும்
திட்டமுடன் மெழுகுபத மாகும்போது
சிதறாம லண்டம்போ லுண்டைசெய்யே. (18)

செய்கையிலே கைமுறையி லிணங்கள்தன்னைச்
சேராமற் பாடிவிட்டார் சூஸ்திரத்திற்
கைகையிலே தசதீட்சை கடந்துயேறக்
கடினமப்பா முதற்றீட்சை வாலைதீட்சை
பொய்கையிலே கொண்டுகை முறையாய்ச்சேர்த்துப்
பொலிவாகச் சவுக்கார எண்ணெய்விட்டு
நைகையிலே யெண்ணெய்தனைக் கழற்றிப்போட்டு
நலமான கடுங்காரம் நன்றாயேற்றே. (19)

நன்றாக அஞ்சுசுண்ணக் குகையில்வைத்து
நல்லுகல்லுச் சுண்ணமது நடுவேவைத்துப்
பன்றாக அடுப்பேத்தி ரெண்டுசாமம்
பாங்காக முத்தீயு மெரித்தபின்பு
சென்றாடும் வழலைகடுங் காரமாகும்
திரமுள்ள வாதியென்றாற் செய்வாரப்பா
ஒன்றோடு ஒன்றுதப்பிக் கருத்தையாமல்
ஒமுடிந்து போகாதே உண்மைதானே. (20)

உண்மையிந்தப் படிசெய்யப் புரியெட்டாச்சு
ஒகோகோ சோடசமோ பதினாறாச்சு
வண்மையுட னெட்டிரண்டு மறியலாச்சு
மகத்தான முப்பாழுந் தோணலாச்சு
தண்மையுடன் பஞ்சகர்த்தாள் சடலமாச்சு
சார்வாக எழுசபையுந் தோணலாச்சு
வெண்மைபெற விந்துவுட நாதமாச்சு
மேலெழுந்த பூரணமோ யொன்றாய்ப்போச்சே. (21)

ஒன்றான அண்டமது ஆர்தான்செய்வார்
உலகத்தோர் செய்வர்கை முறையாய்க்காணார்
சென்றதொரு சித்தர்செய்வார் ரிஷிகள்செய்வார்
செகத்திலே யென்றனுட தநயர்செய்வார
வென்றதொரு சட்டைமுனி ஐயாசொன்ன
விதமல்லோ பார்த்துக்கூஸ் திரந்தான்சொன்னேன்
அன்றொருநாள் நந்தியருள் மூலநாயன்
ஆசைவைத்துச் சொன்னதைநான் பாடினேனே. (22)

பாடினதோ ரிக்கருவை வெளிவிட்டோர்க்குப்
பலித்தாலுங் கைக்கடங்க மாட்டாதப்பா
நாடியதோர் சவுக்கார வைப்புக்கெல்லாம்
நாதாந்தக் கருவைமறைத் திட்டாரையா
வாடியதோர் மணிதரெல்லாம் வழலைகாணார்
வாய்பார்த்த திருடருடன் வாய்பேசாதே
ஆடியதோ ராட்டெவ்லாம் வழலையாட்டு
அரகரா ஒளிக்கறியோ மறிவுள்ளோர்க்கே. (23)

கொங்கணர் கடைக்காண்ட சூஸ்திரம் 61.

உள்ளபடி யுரைத்தேன்கை லாசமூர்த்தி
உத்தாரத் தாலேகை முறையாய்ச்சொன்னேன்
எள்ளளவுந் தப்பில்லை மறைப்போயில்லை
யிதைவிட்டாற் சவுக்கார மேதுசும்மா
வள்ளலெனுஞ் சட்டைமுனி மூலநாயன்
வாழ்த்தியென்னைச் சந்தோஷப் பட்டுக்கொண்டு
கள்ளமன்றிச் சொன்னீர்கொங் கணரேயென்று
காவியத்தி லென்புகழைப் பாடினாரே. (24)

பாடினார் கற்பமுறை சட்டைநாதர்
பாலன்முதற் கிழவன்மட்டும் பண்பாய்த்திண்ணச்
சூடினா ராதிதொட்டு அந்தமட்டும்
சொல்மொழிகள் தவறாமற் றூரியங்காணத்
தேடினார் செகசால மெல்லாந்தோணச்
சித்தாகத் திறவுகோல் கைக்குள்ளாகச்
சாடினா ருலகத்தோர் பிழைத்துப்போகத்
தவறில்லா வண்ணமிது சாயுட்சத்தே. (25)

சாயுட்சிய ஞானவழி கடந்துயேறத்
தானவனா யிருந்தவொரு யோகம்வேணும்
சாயுட்சிய மார்க்கமடி வழலைநீக்கித்
தன்னுக்குள் முடிவழலை தன்னைப்போக்கிச்
சாயுட்சிய மாவதற்குக் குளிகைகொண்டு
சாகாக்கா லறிந்துதலை வனையுங்கண்டு
சாயுட்சிய மாவதுதான் கற்பமப்பா
சரியையொடு கிரியைவிட்டு யோகம்பாரே. (26)

பாரப்பா இவ்வண்ணந் தேறும்போதிற்
பண்பாக ஆசான்றன் னடியைப்போற்றிச்
சேரப்பா தீட்சைதனைச் சொல்லக்கேளு
திருட்டாகப் பாடிவிட்டார் நூல்களெல்லாம்
சூரப்பா கும்பமுனி நன்றாய்ச்சொன்னார்
குறிப்பறிந்து தீட்சையிரு நூறுக்குள்ளே
சாரப்பா யென்னூலும் முனிநூலுந்தான்
சாத்தியதோர் மச்சமுனி நூலும்பாரே. (27)

மச்சமுனி நூலோடு மூன்றுநூலும்
வகையாகத் தோணுமப்பா தீட்சைமார்க்கம்
மெச்சிடவே மற்றவர்கள் தீட்சைமூலம்
விள்ளவில்லை சட்டைமுனி ஐயாசொன்னார்
தச்சபூட் டெலாம்வெட்ட வெளியதாகத்
தடையில்லா உப்பெடுத்து வேதைபோடார்
உச்சிதமா யிதனாலே கிழித்தாரேடு
ஒகோகோ மூலர்செய்த சனங்கள்தானே. (28)

சனங்கள்தான் பாராமல் தீட்சைசொன்னார்
சார்வாகப் பொருளறிந்த போர்க்குத்தோணும்
பழங்கனிந்து ரசனைகொண்ட பாங்குபோலப்
பரமகுரு ஆசானைப் பணிந்துசேரு
களங்கமறப் பனிரெண்டு வருஷஞ்செல்லிற்
கருத்தறிந்து சோதித்து தீட்சைவைப்பார்
வளம்பெறவே சிவதீட்சை சத்திதீட்சை
வகுத்துரைப்பா ராதார மாறுந்தானே. (29)

தானவனா மாதார மாறுதீட்சை
சச்சிதா னந்தமெழு சபையின்தீட்சை
தானவனாஞ் சமாதுக்குள் ளொன்றேதீட்சை
சார்வாக வதுகடந்தால் மவுனதீட்சை
தானவனாஞ் சுத்திதிரை சேரும்நாளில்
தாண்டவங்க ளாடிடுவார் பூரணத்தின்
தானவனா மவன்றானாம் பதினெண்பேர்க்குத்
தானவர்க்கு விட்டகுறை சாத்துவேனே. (30)

விட்டகுறை யேதென்றால் விந்துநாதம்
வெளியொளியின் வாய்வாகிச் செனிக்கும்போது
இட்டமுட னவதான மாத்திரைக்குள்
ளெடுத்துவிட்ட குறையாலே பிறக்குஞ்சீவன்
அட்டகர்ம விதியோடு தீட்சைமார்க்கம்
ஆனதினால் மற்றபடி விந்துநாதம்
பட்டவுவ சாரத்தாற் காணவேணும்
பாரிலுள்ளோர் காணர்கள் மடையர்தானே. (31)

மடையரப்பா வெறுவீணர் சாம்பல்பூசி
மாடுபோற் றிரிந்தலையு முலுத்தர்கோடி
சடையரப்பா சிலபேர்கள் தீனியாசை
சமுசார மரயையிலே அலைவார்கோடி
அடையாளஞ் சொன்னாலு மறியமாட்டார்
அறிவில்லாச் சவங்கலென்ற சென்மங்கோடி
உடையாளி வந்தாற்போல் பூசைசெய்வார்
உருளுவான் கருக்களென்பான் குருட்டுமாடே. (32)

குருடான செத்தெழுத்தை யுபதேசிப்பான்
கூறுகெட்ட பாவிசெய்த கொடுமைஐயோ
திருடான மருளன்பூ ரணமேயென்பான்
தீர்த்தமென்பான் கோவிலென்பான் தெய்வமென்பான்
மருடான மருடனப்பா மயங்கிமாள்வான்
மனதார உபசாரக் காரஞ்செய்வான்
அருளான அருளனைப்போற் பரமேயென்பான்
அம்பலத்தைக் காணாத அசடனாமே. (33)

சிவதீட்சை

அசடாகிப் போகாமல் தீட்சைசொல்வேன்
அரகரா சிவதீட்சை யப்பாகேளு
கசடெல்லாம் போக்கியுள்ளம் நன்றாய்க்சொல்வேன்
கள்ளமன்றிச் சிவயோகக் கருத்துள்ளோர்க்கு
வசமாக ருத்திரனில் ரெண்டுதீட்சை
வகையான முதற்றீட்சை யெழுத்தைக்கேளு
குசநாக மத்துட்னே கங்கைமூலம்
கொள்கையாம் நாலெழுத்துக் கூர்ந்துகாணே. (34)

காணவே சொல்லக்கேள் தசமிசஷ்டி
கைமுறையாய்க் குருச்சொல்லக் காணுங்காணும்
காணவே உபயதீட்சை கழறக்கேளு
கைமுறையாய்ப் பிரதமையிற் பிர்மாவிஷ்ணு
தோணவே நாலெழுத்துங் காணலாச்சு
சுத்தமயே சுரத்தில்ரண்டு தீட்சைசொல்வேன்
பூணவே துவாதசத்தின் உத்திரமூலம்
புகழான தோரெட்டுங் சண்டாராமே. (35)

கண்டருடன் மூலம்நா லெழுத்துமாச்சு
கட்டியதோர் நாலாகுந் தீட்சைகேளு
விண்டதொரு சோடசந்தா னதுமூன்றோடே
மேலான துவாதசமுந் தசமிவேதன்
உண்டதொரு மயேசுரத்திற் றீட்சையாச்சு
உத்தமனே சதாசிவத்தி லஞ்சுதீட்சை
அண்டரொடு தொழுதேற்று மஞ்சுதீட்சை
அப்பனே ஆசானைப் பணிந்துகேளே. (36)

கேளப்பா அஞ்சாகுந் தீட்சைமார்க்கம்
கெடியாகச் செப்புகிறேன் கேளுகேளு
வாளப்பா பிரணவத்தின் தசமிசஷ்டி
மாலரணையாங் கங்கென்றே யஞ்சசேரில்
தாளப்பா அஞ்சவித தீட்சையாச்சு
சதாசிவன்றான் நாலிலே தோணலாச்சு
வேளப்பா சண்முகத்தின் தீட்சைகேளு
வேதசத்த சாகரத்தில் ரெண்டுமாச்சே. (37)

ரெண்டோடு பிரணவத்தை முன்னதாக்கி
நெடுமாலட் சரச்சேரெட் டெழுத்துமாச்சு
பண்டோடு சுத்தத்தின் தீட்சைகேளு
பாக்கியங்கள் செய்தவர்க்கு யெய்துமெய்தும்
கண்டோடு அஞ்செழுத்தாற் கஞ்சன்மூலம்
கடியமூன் றாமெழுத்தைக் கருதிப்பாரு
உண்டோடு அல்லாவின் றிரியினாலே
உத்தசிவத் தோடஞ்சும் ஓதிக்காணே. (38)

காணப்பா சதாசிவத்தின் நாலாந்தீட்சை
கைமுறையாய்ச் சொல்லார்கள் பெரியோரையா
தோணப்பா சாக்கரத்தின் மூன்றாமாலின்
சுத்தமூன் றெழுத்துசதுர்த் தசமுங்கூட்டிப்
பூணப்பா மயேசுரத்தில் மூலம்பூட்டு
பூட்டிலெட்டக் வரம்புருவ மையங்காட்டும்
வீணப்பா சதாசிவத்தி லஞ்சாந்தீட்சை
விள்ளார்கள் சிவயோகி வெளிசொல்வேனே. (39)

சொல்லுவே னொன்பதாந் தீட்டைமூலம்
  சூட்சாதி தூலம்விட்டுக் கூடுபாயும்
அல்லுவே னண்டத்தின் மூலங்கொண்டு
  அரியெண்ணித் தினம்ரெட்டித் தசமாங்கெண்ணும்
வெல்லுவா யெட்டெழுத்துஞ் சிவயோகிக்கு
  வேதாந்த அந்தமுதல் விளம்பக்காணேன்
சொல்லுவேன் திரிபுரமும் பாழய்ப்போன
  சித்தாந்த யோகமிதிற் செப்புவேனே. (40)

செப்புதற்குக் குருவேணுங் காணமாட்டாய்
  திறத்தப்பா அவரவரே தீட்சைசொல்வார்
ஒப்புதற்கு ஒப்பவம்ப ரத்தின்தீட்சை
  உரைக்கவிது நடனத்தி னுண்மையப்பா
தப்புதற்கு யென்னூலுந் தவறொட்டாது
  தாக்குமே விட்டகுறை வந்தநாளில்
நிற்புதமாம் நீர்க்குணமாம் பத்தாந்தீட்சை
  நிலைத்தகுரு சொல்லவுந்தான் நினைவிற்காணே. (41)

நினைவாலே காணநந்தி சொல்லவேணும்
  நில்லாட்டா லென்னூலில் நிலைக்கவேணும்
மனதாரச் சொல்லுகிறேன் நாடிச்சொன்ன
  வலிநாதம் பிரணவத்தி னாலாகாலாய்த்
தினமாயை எட்டெழுத்தாய் நின்றமூலம்
  திசதீட்சை யதினாலே சேரக்காணும்
கனமான அமுதத்தின் தீட்சையென்றால்
  காட்டான அஷ்டசத்தி நிற்குங்காணே. (42)

அட்டசத்தி யெட்டுப்பே ரேவல்செய்வார்
  அமுதமுண்ண வகஞ்சிவப்பா மதினாற்சித்தி
வெட்டவெளி யப்பாற்பின் னொன்றுமில்லை
  வேதாந்தஞ் சித்தாந்த மேதுசும்மா
இட்டமுட னெட்டெழுத்தா யஞ்சுமூன்றாய்
  ஏகாட்ச ரம்படைத்த தீட்சைமார்க்கம்
திட்டமுடன் நான்சொன்னேன் மற்றோர்சொல்லார்
  திசதீட்சை யென்றுறுதி செப்புவேனே. (43)

உறுதியாய்ச் செப்பினதோ ரென்னூலப்பா
உலகத்தோர் பார்த்தறிந்தா லுறுதியாமோ
நிருவிகற்பங் கடந்துநின்ற குருவைக்காரு
நினைவாக வென்னூல்வைத் திருந்தோர்பாதம்
பெருமையாய்ச் சரண்புகுசூத் திரத்தின்மார்க்கம்
பேசுவார் சிவயோக ஞானதீட்சை
அறுதியா யுனக்குப்பின் னெதிரார்சொல்ல
அரனப்போ தல்லாது ஆர்காணேனே. (44)

காணப்பா சத்தியுட யோகதீட்சை
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கபடுநீக்கித்
தோணப்பா மூலதீட்சை வாலைதீட்சை
சொல்லக்கேள் சுலபமுறை யாருஞ்சொல்லார்
பூணப்பா பிரணவத்தின் நாதபீடம்
புகழான விந்தால்மூன் றெழுத்துமாச்சு
பேணப்பா சரசுபதி நாமஞ்சேரிற்
பித்தர்களே யேழெழுத்தாம் பேசொண்ணாதே. (45)

ஒன்றான தீட்சைவிட்டு புவனைதீட்சை
உத்தமனே பிரணவத்தின் கோட்டையாலே
நன்றான பிரபஞ்ச மாகாயந்தான்
நாதன்மால் பிரமாவின் பூமியாகும்
தன்றான தீட்சைதிரி புரையாந்தீட்சை
தாரணியாம் றிங்காரந் திரிபுராயி
பென்றான மால்பிரமன் மூலங்கொண்டு
பெலத்துதே திரிபுரையின் தீட்சைதானே. (46)

தானென்ற சாமளையின் தீட்சைசொல்வேன்
தசையாதே பூராடம் பிறந்தபோது
ஏனென்ற பொருளாகுந் தங்கங்கண்டால்
யீந்தெடுத்துச் சதுர்த்தியிலே சாமளாயே
மானென்ற மால்பிரமன் மூலத்தாலே
மகத்தான் சாமளையின் தீட்சையாச்சு
கானென்ற சாமளைதா னஞ்சாந்தீட்சை
கடியதொரு திசைரெட்டி கண்டுகொள்ளே. (47)

கொள்ளப்பா ஆகாசம் ரெண்டினாலே
குருவுயா மனையேமால் பிரமன்மூலம்
துள்ளப்பா அம்பிகா சத்திதீட்சை
சொல்லுவேன் பூமியொன்று சிவந்தானொன்று
தள்ளப்பா ஆகாச சத்தியொன்று
தாயாமம் பிகையேமால் பிரமனோடு
விள்ளப்பா கணேசசத்தி தீட்சைசொல்வேன்
வேரென்றுந் தூரென்றும் விளம்பக்கேளே. (48)

விளம்புவேன் வல்லபையே மாலேகஞ்சன்
விருதான யேழாகுந் தீட்சையாச்சு
உளம்பிலக்கு மயேஸ்பரியின் தீட்சைசொல்வேன்
ஒம்மயே சுரமூலம் ருத்திரமூலம்
வளங்குதற்குக் கேசரியே மாயோன்வேதம்
மகத்தான ஒன்பதாந் தீட்சைசொல்வேன்
களங்கமறு முன்மணியாஞ் சத்திதீட்சை
கண்ணனோ மெனவசிஅும் உம்பிடாயே. (49)

உம்பிடாய் கஞ்சன்மா லீசனோடு
உலகமெல்லாம் படைத்ததச தீட்சைசொல்வேன்
எம்பிடா தேசவ்வும் பிரணவந்தான்
எளிதாய நமாமவென் றோதவோத
கும்பிடாப் பேய்கணங்கும் பிட்டுநிற்கும்
கொடியசர சோதிகா ளாஞ்சியேந்தும்
தம்பிடா லெட்சுமிதா னடப்பஞ்செய்யும்
தானவனா யிருப்பாய்நீ சத்யந்தானே. (50)

சத்தியாம் மவுனசத்தி தீட்சைசொல்வேன்
தானென்ற தசமிரண்டா லரிக்குமூன்றாம்
சித்தியாந் திரிகோணந் தொட்டுமூன்றிற்
சென்றமவு னாயிமால் பிரமனானேன்
பத்தியாம் பதினோராந் தீட்சைசொல்வேன்
பகர்ந்ததொரு சத்தியுட தீட்சைசொல்லார்
முத்தியா மாசானை யடுத்துக்கேளு
மூதண்டஞ் சுத்துமிந்த தேகவாழ்வே. (51)

வாழ்வான தேகமென்றாற் சாகாக்கல்வி
மனந்தேறி யறிவுகொண்ட ஞானமூர்த்தி
தாழ்வாக வெந்துவிட்டா லேதுண்டாகும்
சாம்பலாய்ப் போகுமடா க்ஷணநேரத்தில்
ஆள்வானே உலகமெல்லாங் கற்பங்கொண்டால்
அடங்காத சமாதியிலே யிருந்துமீண்டால்
கோள்வான குளிகைவிட்டுக் கயிலாசத்துட்
குடியிருக்கும் படிவாதங் கொட்டினேனே. (52)

கொட்டினே னறுபதுக்குள் தீட்சையெல்லாம்
குறிப்பான கடைக்கோவை தேர்ந்துதேர்ந்து
கட்டினேன் சூஸ்திரமே பேசும்பேசும்
கயிலாசச் சட்டைமுனி ஞானம்பாரு
வெட்டினிய கும்பமுனி ஞானம்பாரு
வேதாந்த தீட்சையிரு நூறும்பாரு
அட்டியாய் நடுக்காண்ட மைஞ்நூறுக்குள்
அழகான சுண்ணமுறை யாடினேனே. (53)

ஆடுதற்கு ஆதார மாறுதீட்சை
அதனோடே முதற்றீட்சை மூலாதாரம்
பாடுதற்கு யேகதீட்சை ரெட்டிமூலம்
பாருநீ நாதவிந்து சிகாரபீடம்
நீடுதற்கு நிலைத்தோங்கும் நந்தியாசான்
நிலைப்பாகக் குண்டலியை நினைவாய்ப்பாரு
சூடுதற்குக் கணேசனங்கே வார்த்தைசொல்லார்
தொடுகுறிபோல் நந்திஉப தேசிப்பாரே. (54)

உபதேசஞ் சொல்வதென்ன விந்துநாதம்
ஓமென்ற அகாரமுத லஞ்சுஞ்சேரில்
உபதேசஞ் சுவாதிஷ்டா னந்தான்தீட்சை
உத்தமனே மணிபூர கத்தைக்கேளு
உபதேச முன்சொல்முன் றெழுத்துமுற்றும்
உற்றுப்பார் மகாரத்தி லஞ்சுசேரில்
உபதேச மனாகத்தின் தீட்சைசொல்வேன்
ஓம்சிவமாம் சத்தியெனு மூன்றுங்காணே. (55)

மூன்றுடனே சிகாரத்தி லஞ்சுசேர்க்க
முத்திபெற் ருத்திரனார் மோட்சமீவார்
மூன்றுடனே மகாரமுத லஞ்சுசேரில்
மூவுலகுங் கெவுனமிகும் வாசியாவார்
மூன்றுடனே அகாரமுத லஞ்சுசேரில்
முக்கியமே ஆக்கினையின் தீட்சையாகும்
மூன்றுக்கு முன்மூன்றா மரியின்தேவி
மோசமில்லை சிகாரத்தால் மவுனமாமே. (56)

ஆமப்பா ஆதார மாறுஞ்சொன்னேன்
அதற்கடுத்த பராபரத்தின் வெளியாய்ச்சென்றே
நாமப்பா யெழுசபையின் தீட்சைமார்க்கம்
நன்றாகச் சொல்லிவிட்டேன் கபடில்லாமல்
சோமப்பா லுண்ணவைக்குந் தீட்சைகேட்டால்
சொற்பெரிய சித்தர்களே தோய்ந்துகாரு
காமப்பால் வித்தைவிட்டோர்க் கல்லோதங்கும்
கரைசொல்ல வென்றாலுங் கடைபடாதே. (57)

கடைபடாச் சமாதிகொள்ளுந் தீட்சைகேளு
கருவொன்று குருவொன்று காணமாட்டார்
விடைபடா தென்பார்கள் சமாதிமூலம்
மேதினியோர் பிழைப்பதற்கு வெளிவிட்டேனான்
படைபடாக் குருவதனைச் சொல்லவேணும்
பாங்கறியா ரென்னூவிற் காணவேணும்
உடைபடா தென்பார்க ளுகமேகாரு
ஒன்றாகி யிம்முறைதான் சொல்லக்கேளே. (58)

சொல்லென்று கேளாதே பெரியோர்பாதம்
தொழுதிறைஞ்சிக் காருநித்தம் சோதிப்பார்பின்
மல்லென்ற மனமொன்றாய் வாக்குமொன்றாய்
மனங்கொண்டு காத்திருந்தால் வண்ணஞ்சொல்வார்
செல்லென்ற மவுனத்தின் தீட்சையாச்சு
தெளிந்திருந்த பூரணத்தின் தீட்சைகேளு
கல்லென்றும் கடலென்றும் பூமியென்றும்
கத்தனெழு பிறப்பென்றும் காட்டுவாரே. (59)

காட்டியதோ ருபதேசங் கடந்தானென்றும்
கயிலாய மதினாலே யாச்சுதென்றும்
மூட்டுவாய் நாலுவகை தொந்தமேரு
முத்திபெற்ற மூவருக்கும் பிறவியென்றும்
பூட்டுவார் தெரியாமற் பேசுவார்கள்
பூரணத்தின் தீட்சைதனை யார்க்கும்விள்ளார்
காட்டுவார் சதுரயுகங் காத்திருந்தால்
காராட்டா லொன்றுமில்லை கள்ளன்றானே. (60)

கள்ளனென்று திரியாதே தீட்சைமார்க்கம்
கயிலாயத் தேகுடியா யிருக்கப்பண்ணும்
வெள்ளனென்ற மனங்கண்டால் விள்வாரன்பாய்
வெறுவீணர் போற்றினதா லேதுமில்லை
உள்ளபடி முப்பாழுக் கப்பால்நின்ற
ஒகோகோ சுருதிமுடிந் திட்டவாறு
வள்ளலே பூரணத்தின் தீட்சையாச்சு
வகையறியக் கடைக்காண்ட சூத்திரமுற்றே. (61)

கடைக்காண்ட சூஸ்திரம் 61.
முற்றிற்று.

மதுரை வடக்குவாசல் யானைக்கல்தெரு வித்துவான் மு.குழந்தை வேலுப்பிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
கணபதிதுணை.

பரத்துவாச மகாரிஷி திருவாய்மலர்ந்தருளிய

யோகசாதனம் 23.

மூலமுத லாதார பூதமாகி
முச்சுடரின் தீபவொளி வெளியுமாகித்
தாலமெனும் அண்டரண்ட பிண்டமாகித்
தற்பரனுஞ் சிற்பரையு மிரண்டுமாகி
நீலநிற மாலயனும் வித்துமாகி
நின்மலமாம் ஜீவபர வான்மாவாகிச்
சீலமுள்ள மதிகதிரு மாகிநின்ற
சின்மயத்தின் பாதமதைப் போற்றுவேனே. (1)

போற்றுவது பூரணத்தால் நோக்கவேணும்
புத்தியுடன் மனதடங்கி யிருக்கவேணும்
சாற்றியதோர் வாக்குமன மொன்றதாகத்
தன்மையாய் மனக்கசட்டைத் தள்ளவேணும்
ஏற்றியதோ ராக்கைநிலை தனையறிந்து
இனிமையுள்ள யென்மகனே குருவைக்காரு
ஆற்றலுடன் மதியமுத மன்பாய்க்கொள்ளு
அப்பனே நாக்குநுனி பதித்துப்பாரே. (2)

பாரேநா தாந்தப்பே ரொளியைநீயும்
பத்தியுடன் தான்தெரிந்து விடாமற்காரு
சேரேநீ மயேந்திரமாங் கிரியிலேறிச்
செய்யதொரு பூரணத்திற் கருத்தைவைத்து
சேரேநீ சக்கரத்தில் நின்றுகொண்டால்
நிலைபெறுமந் திரத்தாலே சோதிகாணும்
காரேநீ நந்திகண்டால் வாதங்காணும்
காணாட்டாற் சுடுகாட்டுப் பிணமாவாரே. (3)

வாரேநீ மூலவெளி காணமட்டும்
மைந்தனே சுழிமுனையில் நின்றாயானால்
காரேநீ மனதொடுங்குங் காற்றாடாது
கருத்தறிந்து குருபதத்தில் நினைவாய்க்காரு
பாரேதான் வினையகலும் பயமேயில்லை
பார்க்கையிலே ஆதாரந் தோணுந்தோணும்
நேரேதான் அவ்விடத்திற் சென்றுகொண்டால்
நீணிலத்திற் சித்தியெல்லா மாடுந்தானே. (4)

தானென்ற மனைதைவிட்டுக் காத்தாயானால்
தன்மையிலாச் சுழுத்தியுளே அழுத்தும்பாரு
நானென்ற வாசியினாற் குருவைக்காரு
நன்மையிலா திருந்ததினா லொன்றுமில்லை
வானென்ற ஊணறிந்து உண்ணவேணும்
மகத்தான சத்திசிவங் காணவேணும்
கோனென்ற அமுதமது கொள்ளவேணும்
குருவருளால் யோகத்திற் குறித்துநில்லே. (5)

நில்லென்றால் குருஞானந் தெளிந்துமைந்தா
நிலமையாஞ் சுழிமுனையைக் கூர்ந்துபாரு
வல்லதொரு மண்ணாசை தீனியாசை
மகத்தான பெண்ணாசை பொருளினாசை
எல்லாந்தான் வெறுத்துவிட்டு இருக்கவேணும்
இல்லையேல் ஜீவகலை யிவர்காண்பாரோ
நல்லதொரு ஜீவகலை தெரிந்தாயானால்
நன்மையுடன் யோகநிலை தெரிவாய்பாரே. (6)

தெரிவாய்நீ ஜீவகலை தெரிந்தாலப்பா
சிவசிவா வரிசையுட னுண்ணப்பண்ணும்
தெரிவாய்நீ ஜீவகலை தானறிந்து
திசையெட்டும் நாலும்நீ தெரிந்துகொண்டு
தெரிவாய்நீ புறப்பட்டு நாலும்பாழாய்
ஜீவகலை மதிதானுஞ் சீரணித்தால்
தெரிவாய்நீ உண்மைதனை யின்னதென்று
தெரியாமல் மாண்டார்கள் தெளிந்துபாரே. (7)

பாரப்பா சீவகலை யானதந்தப்
  பாரினிலே மூலமென்றூ மூனவன்னி
தேரப்பா பரத்தினுட அடிதானென்பார்
  தீரமுட னகாரஞ்சோ டசமாய்நிற்கும்
காரப்பா நாதங்கண் டத்திற்காணும்
  கருத்தான வாயுவதற் குகந்தவீடு
சீரப்பா பஞ்சகர்த்தா னிருக்கும்வீடு
  சிறப்பான சத்திசிவம் ஒடுங்கும்வீடே. (8)

வீடென்ற தேனமுதஞ் சொலிக்கும்வீடு
  விற்பனமாஞ் சீவகலை யிருந்தவீடு
தேடவரி தானதொரு வீடறிந்து
  சிறப்புடனே மந்திரத்தை யிருந்தவேணும்
நாடறிந்து வீட்டிலுள்ள பேர்கடன்னை
  நலமாக அவர்களையும் விரும்பவேணும்
கூடறிந்து நல்லபதங் காணவேணும்
  குருவருளாற் சத்திசிவ பூசைசெய்யே. (9)

செய்யப்பா பூசையது பண்ணவேணும்
  தேடரிய சற்குருவைத் தேடவேணும்
மெய்யப்பா ஜெகஜால மாயையெல்லாம்
  விவேகமெனும் புத்தியினாற் றள்ளுதள்ளு
வையகத்தில் யோகநிலை யறியாப்பேர்கள்
  மனதாறச் சற்குருவைத் தூஷித்தோர்கள்
பையவே கஞ்சாக் கள் அருந்தினோர்கள்
  பாவியென இவர்களைநீ தள்ளுதள்ளே. (10)

தள்ளாதே வெண்சாரை கற்பந்தன்னைத்
  தயவாகச் சொல்லுகிறே னுன்றனுக்கு
விள்ளாதே வொருவருக்கும் வெளிவிடாதே
  மேதினியில் வெகுபேர்கள் தெரியாமற்றான்
துள்ளியே செடிமலையின் குகையினுள்ளே
  தோன்றாது தானிருந்தார் கடினமப்பா
உள்ளங்கை நெல்லியின்றன் கனியைப்போல
  உன்றனுக்குச் சொல்லுகிறேன் கேளுகேளே. (11)

கேளடா மயேந்த்ரகிரி தன்னிற்சென்று
கிலேசமிலா தேயிருக்கும் போதுமைந்தா
கோளடா வாராமல் நீயிருந்தாற்
குதூகலமாய் வெண்சாரை அதிலேவாழும்
நாளடா போகாமற் சாரைகாண்பாய்
நன்மையா யும்மென்று கும்பித்தேதான்
வேளடா பதினாறு உருவேசெய்தால்
வெண்சாரை கிருபையுடன் வருகும்பாரே. (12)

பாரேநீ கண்டவுடன் நடுமையத்திற்
பண்புடனே நழுவாமற் பிடித்துமைந்தா
நேரேநீ புசிக்கையிலே பொருந்தியோடும்
நீயொருக்கா லதைப்பிடித்துக் கொள்ளுகொள்ளு
கூரேநீ அஞ்சுதரம் பிடித்துக்கொள்ளு
கூரறிந்து தினந்தினமுங் கொண்டாயானால்
தேரேநீ ஆக்கைதனக் கழிவேயில்லை
சிறப்பாக அதுக்கடியிற் கனியொன்றாமே. (13)

ஒன்றாமற் கருநெல்லி யஞ்சாறுண்டு
உத்தமனே அவ்விடத்திற் பிரமதேவன்
குன்றாமற் றவசிருப்பா ரவரைப்போற்றிக்
குருநாதா வைந்தரு கற்பகமேயென்று
நின்றாடிப் பொருளறிந்து பணிந்தால் மைந்தா
நின்றனையு மருகழைத்துக் கனியையீய்வார்
அன்றேதான் கொடுத்தகனி கசப்பிருந்தால்
அருந்தாமல் ருசிபார்த்து எறிந்திடாதே. (14)

எறிந்திட்டால் வாராது நெல்லிகற்பம்
இம்மையிலே கிடைத்ததிது வென்றுபோற்றிச்
சொறிந்திட்ட கனியதனைச் சாப்பிட்டாக்காற்
றூலமது பெலத்ததடா அழிவோயில்லை
அறிந்திட்ட ரிஷிமூல மிதுதர்னாகும்
அப்பாவெண் சாரை நதிமூலமாகும்
நெறிந்திட்ட ரிஷிமூலம் நதிமூலத்தை
நிதநிதமும் போற்றிசெய்தாற் சித்துமாச்சே. (15)

ஆச்சென்றாற் றுலங்குமடா ஆறாதாரம்
அப்பனே ஆறுதலம் பிரமாவீடு
பேச்சென்றால் நகாரமென்ற பூமிக்குள்ளே
பெலத்துநின்ற வாசியினாற் பிறப்புமாச்சு
மூச்சென்றா லதன்மேலே மாலின்வீடு
முன்பாரு பத்திதழும் பிறையுமாகும்
வரச்சென்றால் ஜெகத்துக்குத் தாயாய்வந்து
வரங்கொடுப்பாள் ஓங்கார மாகத்தானே. (16)

தானென்ற தாயங்கு அமர்ந்தவீடு
தன்மையுடன் போதமிகுந் தாடும்வீடு
தேனென்ற காமியத்தை நிமிர்த்தும்வீடு
சிறப்பான மாயமெல்லாம் நிறைந்தவீடு
கோனென்றே மனமுழன்று பெண்ணைத்தேடிக்
கொண்டுகூத் தாட்டுவிக்கும் பெலத்தவீடு
நானென்று வரமளித்த தாயின்வீடு
நலமாக மேலேகண் டறிந்துபாரே. (17)

கணடறிந்து பாரப்பா பனிரண்டுக்குள்
காண்பருதி வீராறு முகமாய்நிற்கும்
பண்டறிந்து காணவென்றாற் கண்கொள்ளாது
பார்க்கநடு மனையில்திரி கோணமாகி
விண்டறிந்தாற் சிகாரமென்ற வெழுத்துநிற்கும்
விளங்கவு ருத்திரனு முருத்திரியும்நிற்பார்
கொண்டறிந்து நடுமனையில் நின்றகாட்சி
கூறவென்றாற் கண்கொள்ளாக் காட்சியாமே. (18)

ஆமென்ற அவருடைய கூத்தைக்கேளு
அப்பனே பசியுறக்கஞ் சையோகந்தான்
நாமென்ற விதனத்தாற் காமம்மீறி
நன்மையிலா நரைதிரையும் வளர்ந்துநிற்கும்
தாமென்ற சடமழிந்த பாழாம்வீடு
தவஞான யோகமெல்லாம் பறந்துபோகும்
வாமென்ற அதினுடைய கூத்தைக்கண்டு
வளமான அகாரமதின் தன்மைபாரே. (19)

பாரென்றாற் பதினாறு வாயல்வீடு
பரிவான காமமுதற் சூரோதம்லோபம்
தேரென்றால் மோகமொடு மதங்கள்தானும்
தெளிவாகப் பிறப்பற்று மாளப்பண்ணும்
சீரென்றால் நல்லதொரு பரத்தின்வீடு
சிறப்பாக அதின்குணத்தைக் கூறக்கேளு
மேரென்றால் மேல்மூலம் அகாரவீடு
மேலான சிவனுமனோ மணியுங்கூடி. (20)

கூடியே சிவனுமனோ மணியுஞ்சேர்ந்து
குறிப்பாக விரண்டிதழி லிருப்பாரப்பா
நாடியே நால்வரையும் போற்றிசெய்தால்
நலமான பிரபையொளி காணும்பாரு
தேடியே சக்கரத்தி லிருந்துகொண்டு
திகட்டாத வித்தையெலா மகிழ்ந்துபாரு
ஆடியே வருமையுமாய் மனதுமாகி
அகப்பொருள்வித் தாங்கருவிக் கூத்துமாமே. (21)

ஆமென்ற வுலகத்திற் கன்மதன்மம்
அப்பனே சரிதைமுதற் கிரிகையாகி
வேமென்ற யோகமுமாய் ஞானமாகி
வித்தான நூலாகிக் கருவுமாகி
ஓமென்ற தெளிவாகி நினைவுமாகி
உருத்தாகத் தோற்றுஞ்சாக் கிரமுமாகி
நாமென்ற பொருளாகி ஞானங்காட்ட
நன்மையுள்ள குருபதத்தைப் பூசிப்பாயே. (22)

பூசிப்பாய் சித்தர்கள்தம் பாதந்தன்னைப்
புகழாக வாழ்ந்திருப்பாய் புவியின்மீது
நேசிப்பாய் பூரணத்தில் மனதைவைத்து
நிலைபெற்று வாழ்ந்திருப்பாய் சடத்தோடேதான்
வாசிவழி தெரிந்துகொண்டால் மகிமைமெத்த
வந்தவழி மறந்துவிட்டு மதியைப்பாரு
தூசித்தா லிந்நூலை யாரானாலும்
சொல்லவொண்ணாப் பாவத்துக் குள்ளாவாரே. (23)

பரத்துவாச மகாரிஷி யோகசாதனம் 23.

முற்றிற்று.

உ
குருவே துணை.

சங்கரர் திருவாய் மலர்ந்தருளிய

நவக்கிரக கக்கிஷம் 100.

காப்பு வெண்பா.

இந்து ரவிதழலா யெட்டாப் பெருவெளியாய்
அந்தரங்க மான அரும்பொருளாய் - வந்தகுகா
திக்கு விஜயஞ் செலுத்தும் நவக்கிரகக்
கக்கிஷத்துக் குன்றாள் கதி.

கதிபெறவே அவனவளுங் கலக்கும்போது
கர்த்தவிய மேபவளம் முத்துப்போலே
பிதிராமல் மலர் புகும்பே ரிளமையின்பம்
பிணிமூப்புச் சாக்காடி தாறுஞ்சித்தி
அதிகசென்மம் நற்குலத்தி லுதித்தோனாக
அழகுளனாய்ப் பிரபலனாய் அறிவோனாக
விதிவழியே பிறந்தவர்க்கு யிந்நூல்தன்னை
விளம்பு சடாட்சரப்பொருளே காப்புத்தானே. (1)

காப்பதற்கு நன்மைசெய்தால் மோட்சமெய்தும்
கடும்பாவஞ் செய்தவற்கு நரகமெய்தும்
காப்பதற்குத் தன்னுயிர்போற் பிறரைப்பேணு
கபடாகப் பொய்யுரையை மெய்யென்னாதே
காப்பதற்குக் குருபூசை கணேசன்பூசை
கைலாசச் சிவன்பூசை தேவிபூசை
காப்பதற்குக் குகன்பூசை வடுகன்பூசை
கற்றபெரி யோர்பாதம் பூசைசெய்யே. (2)

பூசையிலே அதிக மானதமாம்பூசை
புண்ணியர்செய் வார்களல்லால் மற்றோர்காணார்
பேசையிலே அவர்மனம்பூ ரணத்தேநிற்கும்
பிரபஞ்சத் தோடிருப்பா ரறியப்போகாப்
பாசையிலே சாஸ்திரத்தின் பொருளைச்சொல்வார்
பத்திமுத்தி வயிராக்ய மாகச்செய்வார்
ஓசைபிறந் திடம்பாரு ஒளியைப்பாரு
ஒன்றுமில்லா வெறும்பாழாம் பூசைபண்ணே. (3)

பண்ண மூலத்தினில் வல்லபை கணேசன்
பதபூசை பூவிலயன் வாணிபூசை
நண்ணுதக மீதிலரி திருவின்பூசை
நற்றீயில் குத்திரன்ருத் திரிதன்பூசை
எண்ணுமெழு காலில்மயேஸ் பரிமயேசன்
இவர்பூசை முடிந்தபின்பு மேலுங்கேளு
கண்ணிறைந்த மணிசதா சிவத்தின்பூசை
கருத்துறவே பூசிமனக் கண்ணினாலே. (4)

கண்ணாலே மேற்புருவ மையம்பாரு
காலடக்கிக் கீழ்த்துண்ட முனையைப்பாரு
உண்ணாக்கை மேலேத்தி யிருந்துபாரு
ஓடாதே யுறங்காதே பிதற்றிடாதே
பெண்ணாசை யாற்பிணிகொண் டிறந்திடாதே
பேரின்ப வாமத்தை மறந்திடாதே
பண்ணாதே கொலைகளவு கட்காமத்தைப்
பரிகரித்தா லட்டகன்மம் பவிக்கும்பாரே. (5)

அஷ்டகன்மத்தகடு விபரம்.

பாருநீ வசியமே தாம்பிரமதாகும்
பகையாத தம்பனங்கா ரீயமாகும்
காருநீ ரசிதமென்றால் மோகமாகும்
கருதரிய மாச்சீயம் பேதஞ்செய்யும்
சேருநீ தராவென்றால் லித்வேசிக்கும்
செகமறிபூ ரசைபத்ர மழைப்புக்காகும்
ஆருநீ அயமென்றா லுச்சாடிக்கும்
ஆகாத மாரணம்பச் சோலையாமே. (6)

ஆமென்ற யெந்திரத்தி னகலநீளம்
அங்குட்ட முதற்கனுஷ்ட னளவுநேர்நேர்
காமென்ற தலையறைநெற் கடைதான்விட்டு
கதிக்கமேல் மூன்றுவரை யடுக்கக்கீறி
தாமென்ற துவர்க்கொண்டு அச்சுப்போட்டுத்
தவறாக்கீற் றிரண்டுமொன் பதுதட்டாக்கி
ஓமென்ற குறுக்குமந்தப் படியேகீறி
உறமூன்று விளிம்புதிரி ரேகையூணே. (7)

ஊணியொரு மூலையறை யுட்கீழ்மேலும்
உபயவறை யோடந்த மாதியீறாய்க்
கோணிவிட லாகாது ரேகைரெண்டும்
குறித்தவறை மூலையெல்லாந் திரிகோணாகக்
காணிலெதிர் மூலைதிரி கோணம்ரண்டும்
கருதிப்பார் சிவலிங்கம் போலேகாணும்
வீணிலே புறம்பாய்ந்த மூலைரேகை
மேலேறும் மறுகுறுக்கே ரேகைமுட்டே. (8)

ரேகைரெண்டுந் தலைமறித்து நேரேமுட்டி
நிறுத்திதிரி கோணநாற் றிசையுங்காணும்
ஆகவது துகையென்ன முப்பத்தாறும்
அதனிடைநேர் வருரேகை சூலம்போடு
ஏகதுகை நாற்றிசைநாற் பதுவேசூலம்
இதனிடையி லிருபுறமு மெழுத்தைக்கேளு
வாகாகச் சிறீஓமென் றெங்கும்போடு
மறுமுப்பத் தாறுதிரி கோணகிலிஅவ்வே. (9)

அவ்வென்று சுபகன்ம பீசஞ்சொன்னேன்
அக்கன்மஞ் சூலயிடை அரிகிறோமும்
சிவ்வென்றும் ர்ங்கென்றும் இரண்டுபீசம்
தீர்க்கமிடு திரிகோண முப்பத்தாறும்
ஒவ்வொன்றுக் கஞ்சறையா மெண்பத்தொன்றுக்
குள்ளதுகை நானூற்றஞ் சறையாம்பாரு
இவ்வென்ற வறைமூன்றிற் றலைமூன்றொன்றில்
எதிர்த்தவறை யொன்பதொரு கண்டமென்னே. (10)

என்னவே யிரவிமுதற் கேதுமட்டும்
 எண்பத்தோ ரறையும்நவ கண்டமாக்கிச்
சொன்னதொரு கண்டமொன்ப தறையொன்றைந்தாய்த்
 துகையைப்பார் நானூத்தஞ் சறையாய்நிற்கும்
அன்னதனிற் குருவினுட கண்டந்தன்னில்
 அஞ்சாம்வீ டேநடுவென் றறிந்துபாரு
தன்னுடலாய் வளர்ந்தபஞ்ச பூதந்தன்னைத்
 தானறிய அதன்வடிவைச் சாற்றுவேனே. (11)

சாற்றுகிறேன் பிருதிவிநாற் சதுரமாகும்
 தண்ணீர்க்குப் பிறைகோணங் கால்சட்கோணம்
போற்றுகிறேன் முகடுவட்டம் தீமுக்கோணம்
 பொன்மைவெண்மை செம்மைகரி காளவர்னம்
ஆற்றுகிறே னதிற்றேவர் பீசங்கேளு
 அவனிதனில் நகாரமதாம் புனல்மகாரம்
ஏற்றியதீ யிற்சிகாரம் வகாரங்காலில்
 எழில்வானில் யகாரமித னியல்பைக்கேளே. (12)

கேளுமே பூமியஞ்சு குணமதாகும்
 கெடியான நீர்நான்கு தீயோமூன்று
நாளுமே காவிரண்டு வானமொன்று
 நாடோறு மிவர்குணஞ்செய் நடத்தைகேளு
வாழுமே வெளியாவுந் தானாய்நிற்கும்
 மண்டாங்கும் நீர்குளிரும் சுடுமேதேய்வு
வீழுமே காலுதறு மிவர்கள்செய்கை
 மேவுமிவ ரஞ்செழுத்தை மாறுமாறே. (13)

மாறுவது விண்ணில்யம வநசியென்ன
 மசகாத காலில்வந சியமவென்னத்
தேறுவது சியமவந வென்றுதீயிற்
 செகமறியப் புனலில்மவ நசியவென்னக்
கூறுவது நசியமவ, வென்றுபாரிற்
 கூட்டியிடு சுபபஞ்சாக் கரமிதாகும்
ஏறுவது யசிநவம வென்றேவானில்
 இடுவதுவே நவமயசி பாரில்வீசே. (14)

வீசுநீ மயசிநவ யென்றேநீரில்
மேவுசிந வமயவென்னத் தீயிற்போடு
பூசுநீ வமயசிந வென்றுவாய்விற்
போடுவது முதலெழுத்து நடுநால்சூழ
ஆசுநீ யவபஞ்சாக் கரமிதாகும்
ஆருக்குஞ் சொல்லாச்சூத் திரமிரண்டும்
பேசுநீ அஷ்டகர்மஞ் செய்யுமார்க்கம்
பெருவானை நடுவில்வைக்க வசியமாமே. (15)

வசியமாம் படிநடுவில் வைத்தாற்றம்பம்
மயக்கிடுமோ கனமழைப்பு நீருள்ளானால்
வசியமாந் தீநடுவில் மரணம்பேதம்
மாருதத்தை நடுவிடவே டணையுச்சாடம்
வசியமாம் பூதங்க ளடைக்கும்போது
வந்துதித்த பூதமதை நடுவிலேவை
வசியமா மதின்சூழெட் டறையோர்பூதம்
மறுகவுஞ்சு ழறைபதினா றதிலொன்றிட்டே. (16)

ஈட்டதன்மேற் சுத்தறைமூ வெட்டோர்பூதம்
இதன்மேற்சுற் றறையதுவெண் ணான்கோர்பூதம்
போட்டதுகை நடுவதொன்றி லஞ்சேவீடு
புறஞ்சூழ்ந்த யெட்டறைநாற் பதுவேவீடு
வாட்டமறப் பதினாறி லெண்பதாகும்
மறுகவுமூ வெட்டறைநூற் றிருபானாகும்
ஒட்டமெண்ணாங் கறையினில்நூற் றறுபதாகும்
ஒக்கவறை நானூற்றஞ் சறையுமொன்றே. (17)

ஒன்றான முதல்வரியிற் றலைமுக்கோடு
வுற்றரண்டாம் வரித்தலையில் மூன்றுகோடு
அன்றாமூன் றாம்வரியிற் றலைமுக்கோடு
ஆகநவ கோடிரவி கண்டமாச்சு
என்றாலே முதல்வரியில் மூன்றுகோட்டில்
ஏறியகோள் நிற்கிறசூத் திரத்தைக்கேளு
குன்றாத முதலறையொன் றிரண்டிக்கீழ்
குறியான நடுமூன்றாங் கோளையேத்தே. (18)

ஏத்திரவி யடிசசியின் முடிமேலிட்டு
இரவிமுடி சசிநடுவி லிசையப்போடு
தோத்திரவி நடுவைமதி யடியிலேவை
துலக்கமதி யடிகுசன்தன் முடியிற்சூடு
ஆத்துமதி முடியாரல் நடுவேபோடு
அம்புவியின் நடுக்குசன்ற னடியிற்றாக்கு
பாத்தறிநீ வீடிருபத் தேழுமாச்சு
பானுமதி குசன்மூன்று கண்டமுற்றே. (19)

கண்டகுசன் முடிநடுவிட் டடிமூன்றுக்குட்
கருதிநடுக் கடைதலைமால் முடிமேலேற்று
துண்டமதி முடிநடுவிட் டடிமூன்றுக்குட்
டுலங்கநடுக் கடைதலைமால் நடுவிற்போடு
முண்டிரவி முடிநடுவிட் டடிமூன்றுக்குள்
முண்டுநடுக் கடைதலைமா வடியிற்சூடு
மண்டுபுத னடிதிரிபொன் முடிமேலேற்று
மால்முடியைக் குருநடுவில் வைத்திடாயே. (20)

வைத்திடுமால் நடுவைகுரு வடியின்கீழ்வை
மகிழ்ந்துகுரு வடிப்புகரின் முடிமேலேற்று
உத்தகுரு முடிப்புகரின் நடுவிலேவை
ஓங்குகுரு நடுப்புகரின் அடியிற்றாக்கு
மெய்த்தகண்ட மாறுக்கைப் பத்திநாலு
வீடுமுற்றுஞ் சனிகண்டம் விளம்பக்கேளு
தைத்தபுகர் முடிநடுவிட் டடிமூன்றுக்குட்
டானடுவுங் கடைத்தலையுஞ் சனிமேற்சாடே. (21)

சாடுகுரு முடிநடுவிட் டடிமூன்றுக்குட்
டானடுவுங் கடைதலைசுன் னடுவிற்சாற்று
பாடுபுதன் முடிநடுவிட் டடிமூன்றுக்குட்
பகர்நடுவுங் கடைதலைசுன் னடியிற்பாவு
கூடுசனி அடியரவின் முடியிற்போடு
கொம்பின்முடி ராகுவின்றன் நடுவிலேவை
தேடுசனி நடுஅரவின் முடியிற்போடு
செம்பாம்பின் மேற்கரும்பாம் படியைச்சேரே. (22)

சங்கரர் நவக்கிரக கக்கிஷம் 100.

சேரரவின் முடிகேது நடுவிற்போடு
 சினராகு நடுக்கேது அடியில்முற்றும்
சார்வாக நவக்கிரக மெண்பத்தொன்றும்
 தட்டேற்று நூல்வழியே தவறிடாமல்
வாரமுடன் பெரியோர்கள் நூலைப்பாரு
 மலப்பாண்டப் பசுக்களுடன் வசனியாதே
பார்மீதி லறிந்தபெரி யோரைக்காரு
 பகருவா ரிலக்கமிகும் பரீகைஷபாரே. (23)

பாரரவு இரவிபுகர் குசன்பொன்காரி
 பகர்புலவன் கேதுமதி கண்டம்நேர்கொள்
ஆரமுட ரைவுகண்ட மாதியாக
 அதுமுதலாய்ச் சசிகண்டத் தவரில்மட்டும்
வாரமுடன் சொன்னதெல்லா மரவுகண்டம்
 வைத்தெழுது அவரவர்வீ டாதியாக
ஓரமுடன் மதிகண்டத் தறிந்துவீடே
 ஒழிந்தவிட மெண்பத்தொன் றிலக்கங்கேளே. (24)

கேளுநீ அகாரமுத லைம்பத்தொன்றிற்
 கெடிநீக்கு ங ஞ ண ந விந்நான்காகும்
வாழுமிட ஷாஆகா வாறுமாகா
 வாங்கியும்பின் னெழுதுகிற வகையுஞ்சொல்வேன்
ஆளுநீ ரவிமுதலாய்க் கேதுமட்டும்
 அகரமுதல் உவரைகோட் டெழுத்தஞ்சாகும்
நாளுநீ பிரித்துவிட மதியிற்சேய்பொன்
 ஞாயிறுமால் புகர்காரி ராகுகேதே. (25)

கேதிரா யிரவிமுதற் சேரும்பீசம்
 கெடியஅறீ யிறீ-சிறீ-ஐயுங் கிலியுஞ்சவ்வும்
மீதுகிறாங் குறேங்-கிறீயொன் பதுபின்ராசி
 மிக்கதிதி நாள்யோகங் கரணங்கேளு
ஓதகர்பஞ் சானனம்பிர தமையினோடு
 உரையார லுத்திரமு முத்திராடம்
சூதருமா யுஷ்மானுந் துருவஞ்சித்தம்
 துலங்குகிரு மியும்ரவிக்குச் சூட்டிடாயே. (26)

சூட்டிடபந் துதிகைப்பூ ரணைபாரத்தம்
சோனைசவு பாக்யம்வியா காதஞ்சாத்தம்
காட்டில்வளர் புலிமதிக்கு மகரஞ்சட்டி
கனநவமி மான்றலைசித் திரையவிட்டம்
ஈட்டியசோ பனங்களரி ஷணஞ்சுபங்கள்
ஏனமுஞ்செவ் வாய்க்கெனவே யியம்பலாகும்
ஆட்டியாழ் திரிதிகையுந் திரையோதேசி
ஆயிலியங் கேட்டைரே வதியிந்நாளே. (27)

நாட்சூலம் வரியான்வை திருதியானை
நற்புலவர்க் கென்றிதனை நவின்றார்முன்னோர்
பூட்பான கற்கடக மேகாதேசி
புனர்தம்விசா கம்பூரட் டாதிமூன்றும்
தீட்பான சுகர்மமொடு சித்திபிராமீயம்
சேவினுட கரணம்பீ தகனுக்காகும்
பாட்பான மீனதுவா தேசிசத்தமியும்
பரணியுடன் பூரமும்பூ ராடமாமே. (28)

ஆம்பிரீதி விருத்திசிவங் கரணஞ்சீயம்
அங்கவிகோல் கும்பசதுர்த் தேசியோடு
ஒம்பூச மனுஷமுடன் உத்ரட்டாதி
உரைதிருதி விதிபாத மகேந்த்ரநாகம்
கோம்பியென்ற முடச்சனியன் றனக்கென்னாளும்
கூறுகன்னி சதுர்த்தியுமட் டமியினோடு
சோம்பிடா திரைசோதி சதயந்தானும்
சொல்லதிகண் டம்வச்ரஞ் சுப்ரந்தாக்கே. (29)

சுபகன்மப் பலன்

தாக்குமே சகுனியள லரவுக்காகும்
தனித்தேன்பஞ் சமிதசமி தன்னோடேதான்
காக்குமே குதிரைமக மூலங்கம்பம்
கடியகண்டம் பரிகமுங்கத் தபமுங்கேது
நோக்குமே யிந்தமுறை முற்றுஞ்சொன்னோம்
நுவலரிய சட்கோண முனைகடோறும்
வாக்குமே சொன்னகுக னெழுத்தைப்போடு
மயங்காதே சுபமதுசித் திக்கும்வாறே. (30)

சித்திக்க லாகாத அவகர்மந்தான்
செய்வதற்குஞ் சொன்னவர்க்குச் தோஷந்தோஷம்
முத்திக்கு யிடமான தன்மம்பண்ணு
முனையான கோபமன்றிப் பணிவுபண்ணு
சத்திக்குஞ் சிவனுக்கும் பூசைபண்ணு
சரரேச பூரககும் பகத்தைப்பண்ணு
எத்திக்குத் திரியலாம் பயமோதோன்றா
திடறுபிணி வறுமையென்ப தில்லைத்தானே. (31)

தானான சுபகன்ம வகையைச்சொன்னேன்
தன்மமில்லா அசுபகன்மஞ் சாற்றக்கேளு
லானான சக்கரத்துக் கிரகபீசம்
மந்திரங்கள் நாள்யோகம் வகுத்தபூதம்
ஊனான அட்சரங்க ளிலக்கமெல்லாம்
உள்ளபடி சொல்லிவிட்டே னொளித்திடாமல்
வேனான ராசிதிதி கரணமூன்றும்
விஷமான தொழில்வகைக்கு விதிக்கிறேனே. (32)

விதிதுலையுஞ் சதுர்த்திதுவா தேசிவிட்டி
வெய்யவர்க்குத் தேனேகா தேசிதானும்
பதிகணங்கள் பன்றியுமே மதிக்கேயாகும்
பகரலவன் பஞ்சமியும் பகரக்கேளு
துதிசெய்சிங்கக் கரணமிவை குசனுக்கென்னத்
துள்ளுகயல் துதிகைசதுர்த் தேசிகூகை
அதிபுதற்கு மகரம்பிர தமையினோடு
அட்டமியும் புழுக்கரணங் குருவுக்கென்னே. (33)

என்னகன்னி திரிதிகையுந் தசமியானை
எருதுடையோன் றனக்குமதி நவமியோடு
தன்னைநிகர் சத்தமியுஞ் சேவல்வேங்கை
சனிக்காகு மரிகுடமுந் திரையோதேசி
மன்னரிய கத்தபமும் ராகுக்கேசொல்
வளரிடப மிதுனசட்டி நாகங்கேது
முன்னுரைத்த நாள்யோக மிதனோடிட்டு
முகிந்தபின்பு கிரகபலன் மூட்டுவேனே. (34)

மூட்டுவே னிரவிநடு நின்றால்மோகம்
முளைத்தம்தி நடுநின்றாற் றம்பமாகும்
ஈட்டுவே னாரல்நடு நீன்றாலோட்டு
இனிதான புதனுமே டணையுமாகும்
ஆட்டுவேன் குருநடுவில் வசியஞ்செய்யும்
அழைப்புவித்தை சுக்கிரனா லாகும்பாரு
நாட்டுவேன் காரிநடுப் பேதஞ்செய்யும்
ராகுவொடு கேதுநடு மரணங்காணே. (35)

காணுநீ யலகன்மக் கோளையேற்றக்
கருதரிய வுபகேதை தனுவோடேற்று
பூணுநீ யிந்த்ரதனு மிதுனத்தோடே
புகழ்தூம கேதுவைக்கும் பத்திலேவை
நாணுநீ நுட்பத்தை விடையிலேற்று
நன்மையன்றித் தீமைக்கு நாலுங்கூட்டு
ஊணுநீ சாத்தியன்பேர் பட்சிதானும்
ஊணரசு சுபகர்ம முறுதிதானே. (36)

சுபகன்மயந்திரழ மெழுதுங் காலமும் ஐங்காயமும்

உறுதியாம் நடையென்றா லிரண்டாம்பட்சம்
உறக்கமென்றாற் பிணிசாவுக் குயிர்தான்போகும்
அறுதியிந்தப் படியெழுதித் தீர்ந்தபின்பு
ஐங்காய வகையிரண்டு வகையாய்ச்சொல்வேன்
சுருதியாங் கஸ்தூரி புழுகுபூரம்
சுத்தகோ ரோசனைகுங் குமப்பூத்தாரம்
பிருதியாந் தேன்முலைப்பா லாவின்பால்நெய்
பிசைந்தரைத்துப் பூசநன்மை பெருகும்பாரே. (37)

அவகன்ம ஐங்காயம்.

பார்மீதி லவகன்மந் தனக்கைங்காயம்
பகருகிறேன் மிருசொண்டி யசுணமிங்கு
பேர்மீறு மவ்வியந்தீ மூலமாறும்
பேயானை நுணுக்கிதில்லை யற்கசீரம்

நேராக விட்டரைத்துத் தகட்டிற்பூசி
நெருப்பிலே வாட்டுகன்மம் நிமிஷமாடும்
தீராத பாவகர்மஞ் செய்தாயானாற்
சித்தமா யுனக்குவரும் பலனைக்கேளே. (38)

பாவகன்மஞ் செய்யிற் பலன்.

பவனென்ன பெண்டுபிள்ளை யன்னைசுத்தம்
பதிமுதலாய் உடலுயிரும் பாழாய்ப்போகும்
குலம்பிரம க்ஷத்திரிய வசியசூத்ர
குலபுருட னானாலு மீனனாவாய்
புலனென்ன வுனக்குதவி தன்மமேசெய்
புத்ரமித்ர களத்ரசவு பாக்யமுண்டாம்
நலனென்ன கீர்த்தியுண்டாம் மோட்சமுண்டாம்
நன்மைகடைப் பிடியெனவவ் வைசொன்னாளே. (39)

சொன்னதெல்லா மேதென்றே யிகழ்ந்திடாதே
துன்மார்க்கர் சொற்கேட்டு மயங்கிடாதே
அன்னைபிதா குருதெய்வ மெல்லார்க்குந்தான்
அறிந்தவர்க்குத் தன்மனமே தெய்வந்தெய்வம்
முன்னமுள்ள பெரியோர்கள் நூலைப்பாரு
முத்திக்கு வழிபாரு புத்திசொன்னேன்
உன்னைவடுச் சொல்லாம லுலகத்தோடே
ஒத்துவா ழித்தனையும் உண்மைதானே. (40)

அஷ்டகன்மஞ் செய்வதற்கு வாரவிதாயம்.

தானான கர்மங்க ளெட்டுஞ்செய்யச்
சாற்றுகிறேன் வாரங்க ளோரைவேளை
கோனாதி வாரத்தில் மோகஞ்செய்வாய்
குளிர்மதியின் வாரமது தம்பமாகும்
ஊனான சேய்வார முட்சாடிக்கும்
உறுதியாம் புதன்வாரம் வித்வேசிக்கும்
தேனான குருவாரம் வசியஞ்செய்யும்
திரியழைக்கும் புகர்வாரத் திரமிதாமே. (41)

மூட்டுவே னிரவிநடு நின்றால்மோகம்
முளைத்தமதி நடுநின்றாற் றம்பமாகும்
ஈட்டுவே னாரல்நடு நீன்றாலோட்டு
இனிதான புதனுமே டணையுமாகும்
ஆட்டுவேன் குருநடுவில் வசியஞ்செய்யும்
அழைப்புவித்தை சுக்கிரனா லாகும்பாரு
நாட்டுவேன் காரிநடுப் பேதஞ்செய்யும்
ராகுவொடு கேதுநடு மரணங்காணே. (35)

காணுநீ யலகன்மக் கோளையேற்றக்
கருதரிய வுபகேதை தனுவோடேற்று
பூணுநீ யிந்த்ரதனு மிதுனத்தோடே
புகழ்தூம கேதுவைக்கும் பத்திலேவை
நாணுநீ நுட்பத்தை விடையிலேற்று
நன்மையன்றித் தீமைக்கு நாலுங்கூட்டு
ஊணுநீ சாத்தியன்பேர் பட்சிதானும்
ஊணரசு சுபகர்ம முறுதிதானே. (36)

சுபகன்மயந்திரழ மெழுதுங் காலமும் ஐங்காயமும்

உறுதியாம் நடையென்றா விரண்டாம்பட்சம்
உறக்கமென்றாற் பிணிசாவுக் குயிர்தான்போகும்
அறுதியிந்தப் படியெழுதித் தீர்ந்தபின்பு
ஐங்காய வகையிரண்டு வகையாய்ச்சொல்வேன்
சுருதியாங் கஸ்தூரி புழுகுபூரம்
சுத்தகோ ரோசனைகுங் குமப்பூத்தாரம்
பிருதியாந் தேன்முலைப்பா லாவின்பால்நெய்
பிசைந்தரைத்துப் பூசநன்மை பெருகும்பாரே. (37)

அவகன்ம ஐங்காயம்.

பார்மீதி லவகன்மந் தனக்கைங்காயம்
பகருகிறேன் மிருசொண்டி யகுணமிங்கு
பேர்மீறு மவ்வியந்தீ மூலமாறும்
பேயானை நுணுக்கிதில்லை யற்கசீரம்

நேராக விட்டரைத்துத் தகட்டிற்பூசி
  நெருப்பிலே வாட்டுகன்மம் நிமிஷமாடும்
தீராத பாவகர்மஞ் செய்தாயானாற்
  சித்தமா யுனக்குவரும் பலனைக்கேளே. (38)

பாவகன்மஞ் செய்யிற் பலன்.

பவனென்ன பெண்டுபிள்ளை யன்னைசுத்தம்
  பதிமுதலாய் உடலுயிரும் பாழாய்ப்போகும்
குலம்பிரம க்ஷத்திரிய வசியசூத்ர
  குலபுருட னானாலு மீனனாவாய்
புலனென்ன வுனக்குதவி தன்மமேசெய்
  புத்ரமித்ர களத்ரசவு பாக்யமுண்டாம்
நலனென்ன கீர்த்தியுண்டாம் மோட்சமுண்டாம்
  நன்மைகடைப் பிடியெனவவ் வைசொன்னாளே. (39)

சொன்னதெல்லா மேதென்றே யிகழ்ந்திடாதே
  துன்மார்க்கர் சொற்கேட்டு மயங்கிடாதே
அன்னைபிதா குருதெய்வ மெல்லார்க்குந்தான்
  அறிந்தவர்க்குத் தன்மனமே தெய்வந்தெய்வம்
முன்னமுள்ள பெரியோர்கள் நூலைப்பாரு
  முத்திக்கு வழிபாரு புத்திசொன்னேன்
உன்னைவடுச் சொல்லாம லுலகத்தோடே
  ஒத்துவா ழித்தனையும் உண்மைதானே. (40)

அஷ்டகன்மஞ் செய்வதற்கு வாரவிதாயம்.

தானான கர்மங்க ளெட்டுஞ்செய்யச்
  சாற்றுகிறேன் வாரங்க ளோரைவேளை
கோனாதி வாரத்தில் மோகஞ்செய்வாய்
  குளிர்மதியின் வாரமது தம்பமாகும்
ஊனான சேய்வார முட்சாடிக்கும்
  உறுதியாம் புதன்வாரம் வித்வேசிக்கும்
தேனான குருவாரம் வசியஞ்செய்யும்
  திரியழைக்கும் புகர்வாரத் திரமிதாமே. (41)

ஓரை விதாயம்.

திரமான சனிவாரம் மரணம்பேதம்
செய்வதுவே முற்றுமினி யோரைகேளு
உரமான ரவியோரை மோகமாகும்
உடுமதியி னோரையது தம்பமாகும்
பரமான குசனோரை யுட்சாடிக்கும்
பலபொருள்வித் வேசிக்கும் புந்தியோரை
வரமான குருவோரை வசியமாகும்
வருபுகரோ ரையிலழைப்பு வருமின்காணே. (42)

வேளை ஓரை விதாயம்.

காணுசனி யோரையிலே மரணபேதம்
கருதுமுட்சா டனங்களே டணையினோடே
பூணுவது மாரணபே தனமுமப்பா
புகழான தாமதவே ளையிலேசெய்ய
ஊணுதம்ப மோகனஞ்சாத் திபவேளைக்கு
உயர்வசியா கிருஷ்ணமிரா சதவேளைக்குத்
தாணுவருட் கோளதுநட் பாட்சியுச்சம்
தர்மதமாம் பகைநீசம் சாத்யந்தானே. (43)

நவக்கிரகத்தோடு அக்ஷரஞ்சேரில் பலன்.

சாத்துகிறேன் மதியோடு நகராஞ்சேரிற்
றம்பனமா மிரவியொடு மகாரஞ்சேரிற்
போத்துகிறேன் மோகனமா மிராகுகேதிற்
பூணவே சிகாரம்நின்றால் மரணஞ்செய்யும்
ஏத்துகிறேன் குசனோடு வகாரஞ்சேரில்
எப்பொழுதும் நினைத்ததெல்லா முட்சாடிக்கும்
தேற்றுகிறேன் குருவோடு யகாரஞ்சேரிற்
செகவசியம் பரவசியம் தெளிந்துபாரே. (44)

நவக்கிரகத்தோடு அக்ஷரநடுமாறில் பலன்.

பாருநீ புகரோடு மகாரநடுமாறிற்
பாருலகி லுள்ளதெல்லா மழைக்கலாகும்
சேருநீ மந்தனொடு சிகாரம்நடுமாறிற்
செப்பரிய பேதனமாம் பிசகோயில்லை
காருநீ மாலோடு வகாரநடுமாறிற்
காணரிய யேடணையாங் கண்டுகொள்ளு
சாருநீ குருபாதந் தினமுங்காத்தாற்
சாற்றுவார் கைமுறையச் சத்யந்தானே. (45)

சத்தியமா யெழுதிவைத்த யேந்த்ரந்தன்னைத்
தவறாமற் பூசிக்க வகையைக்கேளு
சுத்திசெய்த மனைதனிலுச் சிட்டம்நீக்கித்
தூபதீ பங்கொடுத்துப் பிறகுநீயும்
பத்தியுடன் நீராட்டிப் பட்டுஞ்சூடிப்
பரமகுரு வுபதேச நியாசம்பண்ணிச்
சித்திபெற நீறுமிட்டுச் சந்தம்பூசிச்
சிவயநம வென்றெழுத்தைத் தியானம்பண்ணே. (46)

பண்ணுவதங் கன்யாசச் சடங்குதீர்த்துப்
பரைமகன்றன் காயத்திரி தியானஞ்செய்து
நண்ணுமந்த மனையதனிற் புகுந்துநீயும்
நாற்சதுர மாய்மெழுகிச் சாணத்தாலே
எண்ணுமந்த வோமகுண்டந் தன்னைப்போடு
எத்திசைபார்த் திருந்தாலு மிடப்பாகத்தில்
வெண்ணிறமாஞ் சந்தபரி மளத்தினாலே
மெழுகியே நூலினிற்செஞ் சாந்துந்தோயே. (47)

தோய்த்துநீ சட்கோணங் கயத்தால்வீசித்
துலங்கவறு கோணமுமொன் றாகக்கீறி
ஏய்த்துநீ யாறுவரை யிடஞ்சாய்ந்தேறு
இப்படியே யாறுவரை வலஞ்சாய்ந்தோடு
வாய்த்துநீ குறுக்காறு வரைநேர்நிற்கும்
மறுகவந்த ரேகைதன்னை மடக்கிமூட்டு
பாய்த்துநீ நடுவாறு சுத்திலாறாய்ப்
பகர்நடுவிற் றிரிகோணம் பத்திமூன்றே. (48)

பீஜாக்ஷரவிதாயம்.

மூன்றான மண்டலமா தாரமாறாம்
மூவிரண்டு சந்தியுமாய் முகிந்தபின்பு
தோன்றாமல் நின்றநடுத் திரிகோணத்திற்
சுத்திவிந்திற் குகன்பீசங் குங்காங்கென்னை
ஈன்றவள்ளித் தாய்பீசம் வலம்வகாரம்
என்றாய்தெய் வானைக்கெங் கிடத்தேபோடு
ஊன்றாத அயிலுக்கும் வலத்தேபோடு
உருவிலிபீ ச்மும்மாயா பீசம்போடே. (49)

போட்டபின்னுள் மேற்கோணம் சகாரம்போடு
புகலவத னிடக்கோணில் ரகாரம்போடு
ஆட்டமென்ற அதன்கீழ்க்கோண் அகாரம்போடு
அதின்கீழுள் வலக்கோணில் ணகாரம்போடு
நாட்டமுடன் கீழிடக்கோண் பகாரம்போடு
நலமாக வதன்மேற்கோண் வகாரம்போடு
வாட்டமற வுள்ளறுகோ ணடைத்தபின்பு
மந்திரமே லாறும்வகை யாகச்சாத்தே. (50)

சாத்துகிறேன் சரஅணப வாவென்றேமேற்
றானிடத்திற் சயிலொளிப வாவென்றேதான்
ஏத்துங்கீழ் திரிபுரப வாவென்றேதான்
இதில்கீழே திகழொளிப வாவென்றேதான்
பார்த்துவலம் பரிபுரப வாவென்றேதான்
பண்பதன்மேற் பவவொளிப லாவென்றேதான்
தோற்றுகிற வுட்சந்தி வெளியாறுக்கும்
சூட்டுசிந்தா மணியிட்சு முரிஓமென்றே. (51)

என்றேமே லறுகோணில் அணசரபவாவென்
றிதனிடத்தி லறுகோணம் பவஅண சரவென்று
குன்றாம லிதன்வலத்தி லாறுகோணிற்
குறியறிந்து சரபவஅ ணவென்றுகீறி
நன்றாக ரவஅசண பவென்றுகீறி
ணரவசஅ பவென்றுவ்ண சரஅபஅவ்வாய்
ஒன்றான இதன்மேலும் உட்சந்தாறின்
உள்ளிடுவாய் கிறாமென்றுங் குறோங்கிறீயே. (52)

இறியோடு சிறிஅரியும் போட்டபின்பு
இதற்குமேல் ஆறாவது கோணத்துக்கும்
குறியான மேலாறு கோணமையம்
கூசாமல் அரனுடைய எழுத்தைப்போடு
மறியாமல் மேல்வைத்துள் ளாறுகோணில்
மாருதமிட் டதனுடைய பீசம்போடு
பிறியாமல் மேலிடம் தாறுகோணிற்
பெருந்தீயிட் டதன்பீசம் பிலக்கத்தாக்கே. (53)

எத்திர அக்ஷர அடைப்பு விதாயம்.

தாக்குகீழ் வலமாறு கோணமையம்
சலிலமிடு மதன்பீசந் தன்னைப்போடு
போக்குநீ யதன்வலமே லாறில்மையம்
புகழான அனலிடந்த பீசம்போடு
ஆக்குநீ யதன்மேலறு கோணமையம்
அழகான காலிலந்தப் பீசம்போடு
தேக்குநீ மேலாறு சோணந்தன்னிற்
சிறப்பான வானிலந்த பீசம்போடே. (54)

போடப்பா அதன்கீழறு கோணமையம்
புகழான விந்திட்டுக் கணேசன்பீசம்
நாடப்பா அதன்கீழறு கோணமையம்
நன்னிலத்தை நாட்டியந்தப் பீசம்போடு
சூடப்பா வெளியாறு கோணமையம்
சொன்னதெல்லாஞ் சடாதாரத் தீட்சையாச்சு
ஊடப்பா ஐம்பத்தோரட் சரமும்போடு
உரைக்கிறேன் முன்சொன்ன வெழுத்ததுள்ளே. (55)

உள்ளான விந்துதிரி கோணமையம்
உரைக்கிறேன் வங்சங்கங் கென்றேயூணு
தள்ளாத அகரமுத லொகாரமட்டும்
சட்கோணம் நடுவாறுள் முனையிற்போடு
கள்ளாயில் லோமுதலா யம்மட்டேழும்
காணரிய மேலாறு கோணிற்போடு
விள்ளாத மேல்வலம தாறுகோணில்
மிகஅகர முதச்சாயிம் மட்டும்போடே. (56)

போடுநீ மேலிடம தாறுகோணிற்
போடுரண்டாஞ் சாமுதல்டே காரமட்டும்
நாடுநீ கீழிடம தாறுகோணில்
டகரமுதல் நகரவரை நாடிப்போடு
பாடுநீ கீழ்வலம தாறுகோணிற்
பகரமுத லகரவரை பரிந்துபோடு
ஆடுநீ கீழடிய தாறுகோணில்
அதிலகர ளகரவரை யமைத்திடாயே. (57)

அமைத்திடுவா யைம்பத்தோ ரெழுத்துமெள்ள
அறையிலிடு சிறிஓமென் றதனைக்கட்டு
சமைந்தமுளை பதினெட்டுஞ் சூலம்போடு
சந்தியிலங் கிஷாவெனச்சக் கரத்தைச்சூழ
எமைத்தணையாள் பவனுடநாற் பத்துமுக்கோண்
இதன்மேலோர் விருத்தமிட்டெட் டிதழும்போடு
உமைத்தனுட வெழுத்தெட்டுந் திருமாற்கெட்டும்
உரைக்கிறேன் யரலவஸஷ க்ஷஹவென்னே. (58)

வேதனெடு மாலுடைய வெழுத்தைக்கேளு
மிகுசிறீ மதேதிருவா ராயாவென்னச்
சாதகமா யிதழுமித னிடையும்போடு
தான்மேலோர் விருத்தமிட்டு யிதழீரெட்டில்
ஓதரிய அகரமுத லகாரமீறாய்
உயிரெழுத்துப் பதினாறு மிதழிலூணு
ஆதரவா யிதழினிடை குறோமும்போடு
அதன்மேலே மூன்றுவரை கோட்டைபோடே. (59)

கோட்டையினால் வாசல்விட்டு வடலாசற்குட்
கொடிதான வீரபத்திரன் காளிதுர்க்கை
வாட்டமில்லாக் கீழ்வாசல் வீரவாகு
மயூரமொடு வீரமயேந் திரனுங்காக்க
வேட்டமதாய்த் தென்வாசற் கணங்கள்சாத்தான்
மிகுயமன்மேற் கணபதி குரூரசண்டன்
நாட்டமென்ற அட்டகெச மட்டநாகம்
நாலிரண்டு திசைபால ரெழுத்திட்டாட்டே. (60)

எந்திரத்துக்கு ஓமமிருத்திகை விபரம்.

ஆட்டியே யர்ச்சித்தெந் திரத்தைவைத்து
அதன்பிறகு ஓமமிர்த்தி யறைகிறேன்கேள்
கோட்டியகொல் லுலைமண் தம்பனத்துக்காகும்
குறிப்பாம்வஸ் தடுப்புமண்மோ கனத்துக்காகும்
மீட்டியசுண் ணாம்புலைமண் வித்வேசிக்கும்
மிகுகுயவன் சுள்ளையின்மண் பேதஞ்செய்யும்
சூட்டியவெள் ளாவியின்மண் ணுச்சாடிக்கும்
சுடுகாட்டு மண்மரணஞ் சுருக்குத்தானே. (61)

சுருக்காக அழைப்புகரும் பாலைமண்தான்
சுகமான கூவிளமண் வசியமாகும்
தருக்காமற் குலைத்திடுவர் யோமகுண்டம்
சட்கோண வட்டமிரு கோணமுக்கோண்
மறுக்காக நாற்கோணம் பூதமைந்தின்
வடிவுதனை யறிந்துநன்றாய் வகுத்தபின்பு
முறுக்காகப் புரத்தினிலீ ராறுவாழை
முளைத்ததுபோ லேநாட்டுங் கும்பஞ்சொல்லே. (62)

சுபகன்மஞ்செய்ய இராசியில் கிரக அடைப்பு விதாயம்

சொல்லுவேன் மேடரவி யிடபமிந்து
துர்ச்சனனா முபகேதை மிதுனத்தேத்து
வெல்லுவேன் கடகத்திற் குருவையேத்து
மிக்கசிங்கந் தூமமதாங் கணக்கன்பெண்ணாம்
செல்லுவேன் சனிதுலையிற் பாம்புதேளிற்
சிலைதனுவிற் கலையாறல் நுட்பஞ்சாடில்
புல்லுவேன் கயல்புகரீ ராறுதானம்
புகழான சுபகன்மஞ் செய்யும்வாறே. (63)

அவகன்மஞ்செய்ய இராசியில் கிரகஅடைப்பு விதாயம்

வாறான அவகன்மம் வகையைக்கேளு
மந்தனைமே டத்தினில்வை துலையிற்பானு
பேறான வெண்மதியைத் தேளிலேவை
பெருராகை விடையிலுப கேதுவில்லில்
வீறான சிலையதனை மிதுனத்தேவை
மிக்கபொன்னை மகரத்தில் வைசேய்நண்டில்
நூறான நுட்பம்அரி தூமங்கும்பம்
நுகர்கணக்கன் கயல்புகர்பெண் ணூணிச்சாத்தே. (64)

சாத்தியபின் னைங்கரனைக் கன்னிமூலை
தனிலிருத்தி யர்ச்சனைசெய் திதனைப்பின்செய்
ஏத்தரிய தூபதீ பங்களோடு
இலையடைக்காய் பால்பழந்தேங் காயெள்ளுண்டை
தோத்தரிய பலகாரங் குழல்தேன்நெய்யும்
தூயகனி வகைபடைத்துச் சுகந்தஞ்சாத்தி
நாத்திசையும் புரோட்சித்துப் பந்தம்பண்ணி
நான்மூன்று பேருடமந் திரத்தையோதே. (65)

ஓதிடுமுன் பிரதான கும்பமொன்றில்
ஒருமூன்று நூல்வளைத்துக் கும்பமீதில்
மோதுதொண்ணூற் றாறுசுத்துப் புனைந்தபின்பு
முப்புரிநூல் கழுத்திலிட்டுக் குறுக்கேமூன்று
ஏதென்று போகாமல் நூலைக்கட்டி
இதற்குவஸ்தி ராபரணஞ் சுகந்தஞ்சாத்தி
ஆதுரெம்பச் சலம்பூரி ரத்னம்போடு
அதன்மேல்மூ வேழுபுல்லின் கூர்ச்சைவையே. (66)

மூல மந்திர விதாயம்.

வைத்ததின்மேல் மாங்குழைதேங் காயும்வைத்து
மகத்தான கவுத்துவமாங் கூர்ச்சைசூடி
எய்த்துவிடா தோதிடமந் திரத்தைக்கேளு
இயல்பாக அம்-ஆதித் தாய-நமாவென்று

பொய்த்துவிடாச் சம்-சந்தி ராய-நமாவென்று
புகழாக உம்-உபகே தாய-நமாவென்று
நைத்துவிடாக் குங்குருநா தாய-நமாவென்று
நலமாகத் தும்-தூரம கேதென்றேற்றே. (67)

ஏற்றுவது பும்-புததே வாய-நமாவென்று
இயல்பாகச் சம்சனி-யீஸ்வ ராய-நமாவென்று
நாற்றிசையும் புகழந்திட-ரம் ராகு-நமாவென்று
நலமாக இம்-இந்த்ர தனுசு-நமாவென்று
போற்றிடவே யாவருங் குங் குசாய-நமாவென்று
புகழாக உம்-உற்ப தாய-நமாவென்று
சாற்றுவாய் சும்-சுக்கி ராய-நமாவென்று
தவறாமற் றொடுத்தோத வெழுத்தைக்கேளே. (68)

கேளுபிர ணவபீச முன்னேவைத்துக்
கெடிவாலை புவனைதிரி புரையின்பீசம்
நாளுமிந்த நாலுடனே கிரகபீசம்
நாட்டிநம சிவயமெனத் தியானம்பண்ணு
வாழுநீ யீசானம் வடுகன்பூசை
வங்குபின்முன் னாலெழுத்தை வைத்தங்கோது
சூழுநீ வடமாலை சுகந்தஞ்சாத்திச்
சுத்திவஸ்து அமுதுடன்நெய் வேத்தியஞ்செய்யே. (69)

அஷ்டகன்மத்திற்கு ஓமதிசை அறியும் விதாயம்.

செய்தபின்பு ஓமிக்க முகத்தைக்கேளு.
திரமான வசியமென்றாற் கிழக்கேபாரு
வய்தபின்பு மாரணத்துக் கங்கிபாரு
மறலிதிசை பேதனமாம் பிசகோயில்லை
வெய்தபின்பு நிருதியென்றாற் றம்பமாகும்
மேற்றிசைவித் வேடணையாம் வில்லுச்சாடம்
ஐயமில்லாக் குபேரனில்மோ கனமீசானம்
அழைப்புவித்தை யாந்திசையை அறிந்திடாயே. (70)

அங்டகன்ம மணிவிதாயம்.

அறிந்திடுவாய் ருத்ராட்சம் வசியமாகும்
அழைப்புவித்தை படிகமணி மிளகுமோகம்
செறிந்திடுவாய் துளபமணி யுட்சாடிக்கும்
செகத்திலுள்ள இலந்தைமணி வித்வேஷிக்கும்
பிறிந்திடுவாய் தம்பளந்தா மரைவித்தாகும்
பேரான நாவிமணி மரணமாக்கும்
முறிந்திடுவாய் எட்டிமணி பேதஞ்செய்யும்
முறையிதுதான் மணிவகைக்குப் பதினாறாச்சே. (71)

ஆசனவிதாயம்.

ஆச்சிதற்கு முகப்பில்ரச மணிதான்கட்டி
யாயிரத்தெண் ணுருச்செபிக்கச் சித்தியாகும்
வாச்சிருக்கு மாசனந்தான் வசியம்புள்ளி
மான்றோலுச் சாடனந்தான் கலைத்தோலாகும்
பேச்சிருக்குங் கடுவாய்த்தோல் மரணஞ்செய்யும்
பெருங்கரடித் தோல்தம்பம் பிலக்குஞ்சித்தி
ஏச்சிருக்கும் வரிப்புலித்தோல் வித்வேஷிக்கும்
எளிதல்ல ரத்தினகம் பளிதான்மோகம். (72)

மோகனிசம் பலகையது பேதஞ்செய்யும்
முறையோடே அழைப்புகொசு மெழுகுத்தூசு
ஆகவிரு நான்காச னத்தைச்சொன்னேன்
அவரவர்கள் நூலெல்லாம் ஆய்ந்துபார்த்துத்
தேகசித்தி யாயிருந்து மனமொன்றித்துத்
திரியாசை பொருளாசை ரண்டும்நீக்கி
வாகாக்கும் அரனங்கே யிருப்பதாக
மனதிலே தியானித்து மலரைத்தூவே. (73)

புஷ்பவித்ாயம்

மலர்முல்லை வசியஞ்செம் பருத்திமோகம்
மாரணத்துக் கிலுப்பைமல ரழைப்புத்தாழை
மலர்காட்டும் மல்லிகைதா னுச்சாடிக்கும்

வளர்ந்திரு வாத்திப்பூ பேதஞ்செய்யும்
மலர்வெள்ளை யரளிப்பூத் தம்பமாகும்
மகத்தாஞ்செவ் வரளிப்பூ வித்வேஷிக்கும்
மலர்கொண்டு அர்ச்சியா சனமீதேறி
மதுரமொழி யேபேசு சினம்போசாதே. (74)

நற்புத்தி சமித்துவிதாயம்.

பேசுதற்கு மணிக்கரத்திற் காப்புப்பூணு
பேர்பெற்ற முப்புரிநூல் மார்பிற்சாத்து
பேசுதற்குச் சாந்திசெய்யச் சமித்தைக்கேளு
பேரான தாம்வசிய வீரசந்தம்
பேசுதற்கு விலாமிச்சு வும்பர்தாரு
பெரிதான கூவிளைப லாவுஞ்சூதம்
பேசுதற்கு நாயுருவி யிவையொன்பானும்
பிசகில்லை மோகனத்துக் கியம்புவேனே. (75)

இயம்புகிறேன் வெள்ளெருக்கு வெள்ளைக்குன்றி
இருவேலி யாலையிக்குச் சித்ரமூலி
நயம்பெறா தழிஞ்சரசு சிறுகிளாவேர்
நல்லத்தி யிவையொன்பான் பேதங்கேளு
செயம்பெறுகத் திரிநெரிஞ்சி கண்டபங்காலி
சிறுகுறிஞ்சா மாவிலங்கு தோணிபாகல்
பயம்பெறும்நாய்ப் பாகலிலை பொன்னாங்காணி
பாரிளிலுச் சாடனத்தைப் பகருவேனே. (76)

பகருவேன் முன்னைகாஞ் சூரைவேம்பு
பருமுசுறுக் கூடுகவு தும்பைசீந்தி
நுகருபேய் மருட்டியுடன் சம்புவோடு
நுவலரிய சித்தகத்தி யிவைதானொன்பான்
புகருருதம் பனந்தனக்கு நத்தைச்சூரி
பொன்முசுட்டை பாற்குரண்டி யமுக்கிறாவால்
ககராரிய நீர்முள்ளி பூனைக்காலி
கட்டுகொடி பிடாரமுக்கி கருச்சொன்னேனே. (77)

சொன்னபின்பு வேடணைக்குச் சமிதைகேளு
தூயவெலு மிச்சுநா ரத்துமல்லி
முன்னைநின்ற விடந்தீஞ்சான் நச்சுப்பல்லு
முனிகடுகுக் காணம் நீர்மேல்நெருப்பு
வன்னபல் புல்லுருவி யாகவொன்பான்
மாரணத்துக் கெருக்குதழல் மூலிகள்ளி
பின்னைபிணஞ் சுமந்தகலி துளசிமூன்றும்
பிரண்டையுடன் செவ்வரளி வகையொன்பானே. (78)

வகையாக அழைப்புக்குச் சமித்துகேளு
மாதளைதூ துவளைமுச லமுக்கினோடு
தகையாத சூதமெட்டி வாகைநாரி
தாமரையின் தண்டுடனே பூகத்தாது
துகையிந்தச் சமிதைவகை யொன்பதாகச்
சூட்டினே னிவையெல்லா முலர்ந்தால்நன்று
பகையாகு முறையோடே செய்யாவிட்டாற்
பலிக்குமிந்த முறைசெய்தே பரிகைஷபாரே. (79)

பானான வோமத்தா குதியைக்கேளு
பதையாத தம்பனந்தான் வரகுமாகும்
கோனான பேதனங்கொள் கடலையாகும்
குறிப்பான வித்துவேட ணத்துக்கெள்ளு
தானான மோகனமோ முதிரைசாமை
தயவாக அழைப்புநெல் தினையுமாகும்
ஊனான கடுகுகொல்லம் மிளகுரண்டும்
ஓமிக்க மரணமுச்சா டனத்தைக்கேளே. (80)

நற்புத்தி.

கேள்நீகார் கோலரிசி குதிரைவாலி
கெடியான வசியமா குதியேசொல்வேன்
வாழ்பாசிப் பயறுடன்கோ தும்பைவீசம்
வகுத்தகன்ம மெட்டுக்கா குதிதரன்முற்றும்
தாழ்வான பாவகன்மஞ் செய்யவேண்டாம்
தனக்கொருவர் செய்யிலவர் தனக்கேயெய்தும்
மீள்வாய்நீ நரகத்தில் வீழ்ந்திடாதே
மேலட்ட கன்மத்தின் கிருதங்கேளே. (81)

அஷ்டகன்ம வோமத்தின் கிருதவிதாயம்

கேளுநீ பசுவின்நெய் வசியமாகும்
கெடியான மேதிநெய்தம் பனமேசெய்யும்
வாழுநீ வெண்டகர்நெய் யுட்சாடிக்கும்
வகையான மோகனமெள் ளெண்ணெய்யுந்தான்
தாழுநீ தேங்காய்நெய் யழைப்புக்காகும்
சகலமும்வித் வேஷிக்கு மிலுப்பைநெய்தான்
நாளுநீ யேரண்ட நெய்க்குப்பேதம்
நஞ்சான நிம்பநெய்மா ரணமாமென்னே. (82)

என்னையா சமித்தினுட துகையைக்கேளு
ஏதுகன்மஞ் செய்தாலும் வகைக்கொன்பானிற்
பின்னையொன்றுக் கொருநூற்றுப் பன்னிரண்டாய்ப்
பிசகாமல் நவகுச்சா யிரத்தெட்டாகும்
பொன்னையா லொக்கமந்தி ரத்தைக்கேளு
பூர்வபஞ்சாக் கரமுன்றெ முத்துங்கூட்டி
முன்னையா சாத்தியன்பேர் கன்மப்பேரு
முறைவழியே தவறாமற் செபித்துப்பாரே. (83)

பாருநீ யவபஞ்சாக்க ரத்தினோடு
பரைவாலை புவனைதிரி புரைதன்பீசம்
சேருநீ பிரணவமா பீசங்கூட்டிச்
செபியாதே செபித்தாக்காற் சித்தியாகும்
நேருநீ யுருவுமா யிரத்தெட்டானால்
நினைத்ததெல்லாம் சித்திக்கும் பிசகோயில்லை
காருநீ நிருவாணி யென்றுவாழ்த்திக்
கருணையுடன் வாரணமும் பெலிதாள்காட்டே. (84)

காட்டுவாய் வடுகாயா பெலிகாவென்று
கைகாட்டி நீரையள்ளிப் புரோஷித்தேதான்
ஆட்டுவாய் மணிதூப தீபந்தானும்
ஐந்துமுத் திரையுடனா லாத்திகாட்டு
நாட்டிலுள்ளோர் வெவ்வேறு தெய்வமென்பார்
நவக்கிரக மல்லால்பின் தெய்வமேது
சூட்டுவாய் குகன்பாதஞ் சென்னிமீதிற்
றொழுதுவுந்த னருள்தாவென் றேத்திப்போற்றே. (85)

போத்தியே கரங்குவித்துத் தெண்டநிட்டுப்
பூரணமே யென்குருவே சிவமேயென்று
கூத்துநின்ற கன்மவினைப் பிறப்பையெல்லாம்
கொடும்பாவம் நோய்வறுமை வினைகள்யாவும்
தூத்திவிடு காத்திலிட்ட பூளைப்பூப்போல்
துச்சமெல்லாம் நீக்கியுந்த னருள்தாவென்று
காத்திகைப்பெண் ணார்கள்முலை யுண்டவாயா
கரிமுகவன் தனக்கிளைய கந்தாவென்னே. (86)

கந்தனே ஆறுமுகக் கடவுளேசெங்
கதிர்வேலா வுமைபாலா கதிர்காமத்துச்
சந்தவரை பழனிதிருக் கழுக்குன்றத்தும்
சரவணையுந் திருமலையுந் தரித்தாயென்றும்
வந்தனைசெய் நற்கீரன் மனங்களித்த
வாய்மைபொய்யா மொழியருண கிரியுமோதும்
செந்தமிழுக் கிரங்கிவர மளித்தாயும்பர்
சிறைமீட்டிச் சூரைவென்ற தேவதேவே. (87)

தேவனே மூவருக்கு மேலாம்மூர்த்தி
சிற்பரனே தற்பரனே வொப்பில்லாத
தேவனே வள்ளிதெய்வ யானைமேவும்
செவ்வேளே மயிற்பரி சேவகனே விண்ணோர்
தேவனே குமரகுரு பரனேவேதன்
செப்பரிய அரிக்குரையப் பனுக்குச்சொன்ன
தேவனே ஆதியுமந் தமுமாய்நின்ற
சின்மயமே நாலாறுஞ் சேர்ந்தெட்டோனே. (88)

எட்டாகி ரண்டாகி மூன்றுமாகி
யேகமா யஞ்சாகி யாறுமாகி
வெட்டாத சக்கரமா யெழுத்தில்லாத
வெறும்பாழாய்த் தாபரசங் கந்தானாகி
ஒட்டாத பொருளுமரு வுருவமாகி
உள்ளாகிப் புறம்பாகிச் சமயமாகித்
தட்டாத சராசரமா யாறாதாரம்
சாற்றுமைம் பூதமும்நீ தானேயென்னே. (89)

தானவர்வா னவரறியா மூலநாயன்
சச்சிதா னந்தபர சிவத்தைநீயும்
மோனமிடை பிங்கலையுஞ் சுழினையாலே
மூட்டிப்பார் சண்முகமும் மயிலும்வேலும்
கானமலைக் குறமின்தெய் வானைத்தாயும்
கண்ணடுமூக் கின்முனையிற் காணுங்காணும்
ஓம்நமசி வாயமென்ற வெழுத்தோராறும்
உன்னுடனா றெழுத்துமெனக் குறுதிதானே. (90)

உறுதியா யெனக்குனருள் தருவாயெந்தன்
உடல்பொருளா வியுமுனக்கே விலையாய்த்தந்தேன்
மறதியாய்ப் போகாதுன் னெழுத்தோராறு
மனம்வாக்குக் காயம்விட்டே யகலாதென்றும்
பிரிதியாய் நினைத்ததெல்லாந் தருவாய்நாளும்
பேரின்ப மல்லால்சிற் றின்பம்வேண்டாம்
பொருதியா மனத்தோர்க்குக் கன்மஞ்சித்தி
பூரணமே யென்குருவே யென்றுபோற்றே. (91)

போற்றியே யெந்திரத்தைக் கையில்வாங்கிப்
பூரணகும் பக்கிரகக் கரகத்தீர்த்தம்
நேத்தியாய்த் தானஞ்செய் பானம்பண்ணு
நினைத்தகன்மஞ் செயமெனவெண் ணீறுசாத்து
காத்திகே யனைத்துதித்தெந் திரத்தைச்சுத்திக்
கரமருங்குற் களமூன்றிற் கபாடம்பண்ணு
வேத்துமையால் கன்மங்கள் செய்யவேண்டாம்
வேண்டிவினை செய்யெனுஞ்சொல் மிகத்தப்பாதே. (92)

தப்பாது யேந்திரம்வெள் ளாவிசுள்ளை
தன்னில்வை மோகனமாம் பேதங்கேளு
எப்போதுங் கலைத்துவிடுஞ் சுடுகாடானால்
இல்லையென்றால் வாய்வுவதிசை சாத்தான்கீம்வை
ஒப்பாத வேடணைக்குக் காளிதுர்க்கை
உள்ளடியில் வைத்திடுதம் பனத்தைச்சொல்வேன்
அப்பாத பாழ்கிணறாம் வண்ணான்கற்கீழ்
அழைப்புத்தீய்ப் பாஞ்சாளா லயமுமாமே. (93)

ஆமென்ற மாரணந்தான் பிரேதம்வேகும்
அனலிலிட வென்செயுமோ அறிந்துபாரு
ஓமென்ற யேந்திரத்தைப் பாலிற்போட்டு
உன்மனைவை வசியமா முலகெல்லாந்தான்
நாமென்ற ஆணுவத்தை விட்டுநீங்கி
நாதாக்கள் தமக்கடியே னென்றுசொல்லு
காமனையன் றெரித்தபிரா னுன்னைக்காப்பான்
கலிகால மிதுவறிந்து கருதிப்பாரே. (94)

பாரப்பா ஆதித்தன் தலையில்நின்றால்
பண்பான நடுச்செவ்வாய் மதிக்குராகு
சாரப்பா குசனுக்கு நடுப்பொன்னாகும்
தண்டமென்ற ராகுவுக்கு நடுவேமந்தன்
சேரப்பா குருவுக்கு நடுவேமாலாந்
திகழ்சனிக்கு நடுக்கேது புதற்குச்சுங்கன்
ஆரப்பா கேதுவுக்கு நடுவேபானு
அழகுசுங்கர்க் கிந்துநடுக் கண்டுகொள்ளே. (95)

கண்டுயான் சொன்னவதி காரங்கேளு
கபடனறி வரைசொன்னே னறையுஞ்சொன்னேன்
பண்டுமதற் குள்ளறைசுத் தறையுஞ்சொன்னேன்
பஞ்சபூத மதனுளுயி ரெழுத்துஞ்சொன்னேன்
விண்டுமைம்பத் தோரெழுத்துங் கிரகபீசம்
மேவியிடு லக்கமுங்கோ ளெழுத்துஞ்சொன்னேன்
துண்டுவிழ ராசிதிதி நாள்யோகங்கள்
துலங்குகர ணமுமுரைத்தேன் சுருக்கித்தானே. (96)

சுருக்கியே சூலமுஞ்சுற் றெழுத்துஞ்சொன்னேன்
சுபகன்ம மவகன்மம் பட்சிசொன்னேன்
உருக்கியதிற் பூசுதற்கைங் காயஞ்சொன்னேன்
உம்பர்க்கோ நாற்பான்முக் கோணஞ்சொன்னேன்

கருக்கியிடு மோமகுண்டப் பிரிதிசொன்னேன்
கற்கங்கள் கும்பகுர்ச்சை வகையுஞ்சொன்னேன்
பெருக்கியெரி சமித்தையுமா குதியுஞ்சொன்னேன்
பிரிவாக நெய்மலரா சனஞ்சொன்னேனே. (97)

சொன்னேனே நவக்கோட்கன் மூலமந்த்ரம்
கப்பிரமண்யர் பூசையுந்தோத் திரமுஞ்சொன்னேன்
முன்னேமா னதஞ்சடா தாரபூசை
முன்னெழுதும் மந்திரங்கள் யாவுஞ்சொன்னேன்
பின்னேயென் குருவடுகன் பூசைசொன்னேன்
பேர்வாரம் வேளையு மோரையுமேசொன்னேன்
பொன்னேகேள் தகடுவைக்குந் தலமுஞ்சொன்னேன்
புண்ணியபா வங்கட்குப் புத்தியுஞ்சொன்னேனே. (98)

புத்திசொன்ன லாறறிந்து பிழைப்பாயப்பா
பொல்லாத பாவிகட்கு நூல்விள்ளாதே
எத்திசையும் பிரபலமா யிந்தநூலை
யெவரேனும் படிப்பவர்கேட் பவர்க்குஞானம்
சித்தியாந் தத்துவசோ திடமுந்தோணும்
செகமெல்லா மட்டகன்மந் திரமாயாடும்
கத்தியிது பலவகையை வெட்டித்தள்ளு
கையில்நெல்லிக் கனியிதுதான் கருத்திலூணே. (99)

ஊணவென்றாற் சுழிமுனையி லூணவேணும்
ஊறவென்றால் மதியமுத மூறவேணும்
பேணவென்றாற் றன்னையல்லோ பேணவேணும்
பிலக்கவென்றால் மனக்குரங்கு பிலக்கவேணும்
தோணவென்றாற் றீபவொளி தோணவேணும்
சொல்லவென்றால் மெய்க்குருவே சொல்லவேணும்
காணவென்றா லொன்றாகக் காணவேணும்
காசினியி லனுபோகங் கண்டுதேறே. (100)

கண்டுபார் வேதியர்க்கும் பரதேசிக்கும்
கற்புளபெண் கற்றறிந்த பெரியோருக்கும்
தொண்டுசெய்யு மடியார்க்கும் புவியாள்வோர்க்கும்
துன்மார்க்கத் தொழில்கள்செய்ய நினைத்திடாதே
பண்டுசொன்ன குருமொழியை மறந்திடாதே
பாமரா ளுடன்வீண்வாய் பறைந்திடாதே
விண்டுசொன்ன நவக்கோள்கக் கிஷத்தையெல்லாம்
மெய்யென்றால் மெய்வேலு மயிலுமுற்றே. (101)

சங்கரர் நவக்கிரக கக்கிஷம் 100.
முற்றிற்று.

சாத்தூர்த்தாலூகா நடுவிற்பட்டி கர்னம், சோதிடம் எம். சுப்பிரமணிய பிள்ளையவர்களிடமிருந்து வ்ாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

குருவே துணை.

வரரிஷி திருவாய் மலர்ந்தருளிய

கலைக்கியானம் 22.

ஆதியந்த மில்லாசின் மயத்தின்பாதம்
அகண்டபரி பூரணமா மாத்தாள்பாதம்
சோதிநிற மாகநின்ற கணேசன்பாதம்
சொல்லுதற்கு மெட்டாத சூட்சாசூட்சம்
வீதியென்ற பராபரத்தின் நந்திபாதம்
வேதாந்த சாஸ்திரத்தின் வெளியின்மார்க்கம்
சோதியெனும் பராபரத்தில் நடனஞ்செய்த
சுடரொளியின் பாதமது காப்புத்தானே. (1)

தானென்ற ஞானிக்குக் குளிகையொன்று
சாத்துகிறே னென்மகனே சார்ந்துகேளு
தேனென்ற விந்துவல்லோ ரசமுமாகும்
சேர்ந்துநின்ற வாசியல்லோ மூலியாகும்
மானென்ற அக்கினியே பீடமாகும்
மக்களே ரசமணியின் மார்க்கத்தாலே
ஊனென்ற ரசமல்லோ ரசத்தைக்கட்டி
உத்தமனே கெவுனத்தி லோடலாமே. (2)

ஓடலாம் பராபரத்தி னடியினுள்ளே
ஓகோகோ சொக்கிவிடும் மணியின்மார்க்கம்
காடெலாந் திரிந்தலைந்து ரசத்தைவாங்கிக்
கட்டியொரு மணியாகச் செய்வேனென்று
நாடெலாம் அலைகின்ற வுலுத்தமாந்தர்
நாடாதே அவரிடத்தில் நரகமெய்வாய்
பாடெலாம் பயனலவோ விந்தைக்கட்டப்
பரப்பிரம மணியாகும் பாருபாரே. (3)

பாரப்பா விந்துவைத்தான் மணியாய்ச்செய்யப்
பாடுகிறேன் சிந்தைதெளிந் தையாகேளு
வீரப்பா வுன்னிடத்தில் வாசிதன்னை
விதமாகப் பீசத்துள் அடக்கிக்கொண்டு
காரப்பா வாசிதன்னைப் பதனஞ்செய்து
காட்டுகிறேன் கபாலத்திற் கண்டுகொள்ளு
வேரப்பா நுனிநாக்கண் ணாக்கிலேத்தி
விளங்குகின்ற தமர்தனையு மடைத்துப்பாரே. (4)

அடக்கையிலே கும்மென்று இருட்டுக்காணும்
அலைத்துவிடுந் தேகத்தை மலைக்கவேண்டாம்
உடக்கையிலே அவ்விடத்திற் சத்தங்காணும்
ஒடுங்கிநின்ற சுடரொளியுந் திரும்பவீசும்
படக்கையிலே விழியிரண்டும் அரைக்கண்பாரு
பருமூக்கின் சுழிமீதின் குறிப்புப்பூணும்
கடக்கையிலே காதிரண்டும் அசைவுகாணும்
கண்டத்தேழ் வாசல்கத வடைக்கும்பாரே. (5)

பாரப்பா அடைத்துவிடும் வாசலேழும்
பண்பான வாசியது கீழேநோக்கும்
சேரப்பா வாசியது இரங்கும்போது
சிவாவென்று சுழிவயிற்றை யழுத்திக்கொள்ளும்
தாரப்பா நந்தியுட பீடமாகும்
தமர்விடா வாசியைத்தா னிருத்திக்கொள்ளு
ஆரப்பா லிங்கவட்டம் அபானவாசல்,
அடைக்குமடா நந்தியுட வேகந்தானே. (6)

தானென்ற வாசியது பீசஞ்செல்லச்
சரிவரவே சென்றபின்பு சொல்லக்கேளு
மானென்ற கபாலமெல்லாம் விம்மலாகும்
மயங்காமற் கவனத்தா லுள்ளேசெல்லும்
தேனென்ற சுடர்கம்பங் கொதிப்புக்கொள்ளும்
செல்லவென்றால் மனமங்கே மயக்கங்காணும்
ஊனென்ற மனத்தாலே ஐம்பத்தொன்றாம்
ஒதுங்கிநீ பீசத்தில் மனதையூணே. (7)

ஊணவே வாசியது மேலே நோக்கும்
உட்புகுந்து தண்டுவழி யோடும்பாரு
காணவே சுடர்க்கம்பம் போலநிற்கும்
காணாது சுத்தகம்பம் போலநிற்கும்
ஏணவே யதுவழியே வாசியோடி
யேகுமடா க்மலத்தி னண்டத்துள்ளே
ஆணவே அமுதத்தில் வாசிசிக்கும்
அப்பவல்லோ அக்கினியு மதிகமாமே. (8)

அதிகமென்ற அக்கினியிற் கதிரோகோடி
ஐயையோ கண்ணிமைக்குள் ளடங்குமோசொல்
பதிகமென்ற விந்துவைத்தான் வாசிதானும்
பம்பரம்போற் சுற்றியல்லோ மணிபோற்பண்ணும்
கதிகமென்ற விந்துவைச்சா ரணையேசெய்யக்
காட்டுகிறேன் கண்மணியே கருதிக்கேளு
அதிகமென்ற நுனிநாக்கை அணுப்போல்நீக்கி
அருண்டுவரும் மணியுடனே வாசிபாரே. (9)

பாரப்பா விந்துவாம் மணியுங்கூடப்
படீரென்று இரங்கிவிடும் பீசத்துள்ளே
காரப்பா நந்தியுட வழியிற்செல்லுங்
காணாது அதுக்குள்ளே சிக்கிக்கொள்ளும்
ஆரப்பா அவ்விடத்தக் கிளியின்வீடு
அப்பவல்லோ அண்ணாக்கைத் திறந்துமூடு
சேரப்பா நூறுதரம் திறந்துமூடில்
சிவந்துருகி வலுவாஞ்சா ரணையாமெண்ணே. (10)

எண்ணவே நூற்றெண்சா ரணையீதாகும்
ஏகுமடா அண்டத்தில் மணியின்வேகம்
உண்ணவே நுனிநாக்கை யரையாய்வாங்கி
ஒடுங்கிவருங் கபாலத்தின் மனுதானப்பா
கண்ணவே அண்டத்தின் மணியைவைத்துக்
கபாலவரை பெருவாசல் மூடும்போது
நண்ணவே சடலத்தை யுயரத்தூக்கும்
நாலுரெண்டு வரைவரைக்குஞ் சொக்கும்பாரே. (11)

சொக்கவே அண்டமுதற் றிசைகளெட்டும்
சுழன்றுவரும் நிமிஷத்தில் மணியின்வேகம்
தக்கவே முன்போலே கதவைமூடிச்
சணத்திலே கம்பநுனி மேலேசெல்லும்
சிக்கவே கதவுநுனி சற்றேநீக்க
க்ஷணத்திலே ஓடிவரும் மணிதானப்பா
கக்கவே ரசமணியின் மார்க்கஞ்சொன்னேன்
கண்டுகொள்ளு மிதனாலே சாட்சியாமே. (12)

ஆமென்ற ரசமணியீன் வேகத்தாலே
அண்டர்களும் முனிவர்களும் மயங்கினார்கள்
தேமென்ற இம்முறையைச் சொன்னேன்யானும்
சிவஞான மவுனிக்குச் சொன்னதல்லால்
ஊமென்று பிறந்திறக்கும் மாண்பருக்கும்
உலுத்தருக்கும் இம்முறையைச் சொன்னாயானால்
காமென்ற கழுதையுட ஜென்மமாகிக்
கடைப்பிறப்பாய்ப் பிறந்திடுவாய் கருதிப்பாரே. (13)

பார்க்கவே இம்முறையைச் சொன்னாயானாற்
பாழான நரகமெய்தும் பாருபாரு
காக்கவே சீஷனுட மனதைக்கண்டு
கைமுறையைச் சொல்லிவிடு ஞானமார்க்கம்
ஏர்க்கவே ரசமணியின் மார்க்கந்தானும்
என்மக்காள் சொல்லிவிட்டேன் நிசமதாகச்
சேர்க்கவே இம்முறையை யுனக்குச்சொன்னேன்
செழுங்கருணை யாய்க்கண்டு தேறுவாயே. (14)

தேறிடவே கற்பமுறை யொன்றுசொல்வேன்
தெளிவுறவே நீநன்றா யறிந்துகொள்ளு
சீருடனே செங்கடுக்காய் கொண்டுவந்து
சிறுநீரி லுறவைத்துச் சுத்திசெய்து
பாருலகிற் பொடித்துப்பாண் டத்திலிட்டுப்
பண்பான வெருகடியி னளவதாக
நேருடனே வெந்நீரில் மண்டலந்தான்
நீயுண்டு மாநிலத்தி லூய்குவாயே. (15)

உய்யவே அதன்பின்பு மிளகுதன்னில்
உற்றதொரு பெரிதாகப் பார்த்தெடுத்து
செய்வாழைக் கன்றமுரி தன்னிலேதான்
சீராக வூறினபின் மிளகைந்தாக
ஐயமிலா துண்டிடுநாட் கைந்துகூட்டி
அவ்விதம்நா ளிருபதுக்கு நானூறாகும்
பையமற்ற தினங்கட்கைந் தாய்க்குறைத்துப்
பக்குவம தாகவுண்டு பதத்தைப்பாரே. (16)

பாரப்பா இந்தவித முண்ணும்போது
பண்பான மிளகுடனே அமுரிசேர்த்துக்
காரப்பா முன்சொன்ன வுப்புச்சுண்ணம்
கனிவாயோர் விராகனிடை கூடப்போட்டு
சீரப்பா தேத்தாவித் ததையுமிட்டுத்
தேய்த்திடவே கற்பமது தெளிந்துபோகும்
சேரப்பா பீங்கானி லெடுத்துக்கொள்ளத்
தெளிவான கற்பமது சித்தியாமே. (17)

சித்தியுள்ள கற்பமதி லொருவீசந்தான்
சிறப்பாகக் காலையிலே வுண்டுவாநீ
புத்தியுடன் மாலையிலே சூரணந்தான்
புசித்துப்பின் னின்னமொரு பாகங்கேளு
வெத்தியுள்ள கரிசாலை குப்பைமேனி
விடத்தலையும் பெரியசெருப் படையினோடு
சத்தியுள்ள பொற்கொண்டை சிவகரந்தை
சமூவமடா தூதுவனை வேருந்தானே. (18)

தானென்ற வல்லாரை அழிஞ்சிவித்து
சாதிக்காய் பத்திரியும் லவங்கமோடு
மானென்ற சரக்கெல்லா முலரவைத்து
மைந்தனே மந்தாரை வெள்ளைப்பூவும்
கோனென்ற நிலப்புனையின் கிழங்கினோடு
கொடிமல்வி கைப்பூவும் வகைவகைக்கு
ஏனென்ற பலமொன்றாய்ச் சூரணித்து
இனியகற் கண்டுமெட்டி லொன்றுகூட்டே. (19)

கூட்டியொன்றாய்ச் சேர்த்துவெரு கடியதாகக்
கொள்முள்ளம் பன்றியின்நெய் தன்னிலேதான்
நாட்டியே மண்டலந்தான் மாலைநேரம்
நலமாக நீயுண்டு வந்தாயானால்
தாட்டிகமாய்ச் சடத்திலுள்ள நீரையெல்லாம்
தங்காம லோட்டிவிடுந் தடையொன்றில்லை
தேட்டமுள்ள கற்பமதைச் சொன்னேனப்பா
செய்திகனைக் கண்டறிந்தால் விந்தையாமே. (20)

ஆமேதான் வாதமொடு பித்தந்தானும்
அப்பனே யிவைரெண்டு மகன்றுபோகும்
வாமேதான் சிரசிற்கற் பகத்தைச்சாடும்
மைந்தனே கோழையது நீங்கியோடும்
தாமேதா னமுதமது பெருகியூறும்
தானாக நரம்பெல்லா மிறுகும்பாரு
சோமேதான் விந்ததுவும் மணியதாகும்
தொல்லுலகின் மாயையதிற் சொக்கிடாதே. (21)

சொக்கினால் மோசமப் புறத்தேநின்று
சுந்தரமாம் வாசியுட பழக்கம்பண்ணப்
பக்குவமாம் சிவயோக ஞானந்தானும்
பலித்துதப்பா வுன்றனக்கு வுண்மையாகத்
திக்கிலுள்ளோ ரறியாது கெட்டாரப்பா
திறமாக மனதைமெல்ல லயமேசெய்து
இக்குவல யந்தனிலே சித்தறிந்து
இலங்கிடவே சித்தனென்ற பேருண்டாமே. (22)

வரரிஷி கலைக்கியானம் 22.
முற்றிற்று.

சாத்தூர்த்தர்லூகா நடுவிற்பட்டி கர்னம், சோதிடம் எம். சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் குமாரன் மாதுசாமிபிள்ளையிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ
கணபதி துணை.

சமதக்கினிமஹாரிஷிதிருவாய்மலர்ந்தருளிய

வஸ்துதெரிசனம் 31.

உலகமெனு மூடியதனில் மறையாமின்போ
லுற்றசுடர்க் கொடியடர்கா வணமதாகி
நிலவுகதி ரிருகலையு மொன்றதாகி
நேராகப் பின்னலென்ற தோற்றமாகி
பலபேத மானவுரு சீவசெந்தைப்
படைத்துக்காத் தமுதளிக்கு மன்னையாகி
இலகிடுமெய்ஞ் ஞானிபணி வஸ்துவாகி
எப்பொருளு மானபரன் பாதங்காப்பே. (1)

அப்பனே முப்பூவை யறியவென்றால்
அன்புடனே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
இப்புவியில் யாவருக்குந் தெரியாதப்பா
இயல்பான பிறப்பிறப்பை யகற்றுமூலி
செப்பமுள்ள அடிமுடியும் நடுவுமாகிச்
சித்தாந்த நாதாந்த வேதமாகி
ஒப்புவமை யில்லாத புவனையாகி
ஒகோகோ திரிபுரைக்குக் கண்மூன்றாமே. (2)

திரிபுரையி னருளாலே பூநீரைத்தான்
தெளிவான சுத்தசலந் தனிற்கரைத்து
உரியபடி வைந்துதரங் காச்சியேதான்
உத்தமனே அதையெடுத்து வைத்துக்கொண்டு
தெரியவே வெடியுப்புப் பலந்தான்நாலு
திட்டமுள்ள சீனமது பலமிரண்டு
அரியதொரு சத்தியெட்டு சோடசந்தான்
அப்பனே கல்வமதி லிட்டுக்கொண்டே. (3)

கொண்டவுடன் வெண்கருவி லெருக்கம்பால்வார்
குறிப்பாகப் பழச்சாற்றி லரைத்துக்கொண்டு
கண்டதொரு காசிடையாஞ் சூடன்றானும்
கருவான சரக்கெல்லா மொன்றாய்ச்சேர்த்து
விண்டயிரு சாமம்வரை யிலுமரைத்து
வில்லைசெய்து ரவிதனிலே யுலர்ந்தபின்பு
துண்டாகச் சுண்ணாம்புக் குள்ளேவைத்துத்
தூண்டியேய் வொருசாம மெரிப்பாய்நீயே. (4)

எரித்தப்பா வாங்கிமெள்ளப் புடத்தைப்போட்டு
இனிமையா யப்புடந்தான் குளிர்ந்தபின்பு
பிரித்துப்பார் வெண்மைநிற மாகநீறும்
பேரான மால்தேவி யருளுண்டாகும்
பெருத்ததொரு வாதிகட்கும் ஞானிகட்கும்
பிரியமுற்ற குருவாகு மிதுதானப்பா
பொருத்தமுள முப்பூவை யாருஞ்சொல்லார்
புகழாகச் சொல்லிவிட்டே னுனக்காய்த்தானே. (5)

தானென்ற மவுனமடா மவுனஞானம்
தானறிவாய் போதமென்ற ஞானந்தன்னை
நானென்ற மனதடங்கி ஞானப்பாலை
நலமான கலையறிந்து வூதிவாங்கித்
தேனென்ற பானமடா மதுரபானம்
திகழ்ஞான பூரணமாய் நின்றுபாயும்
கோனென்றதலமறிந்து வாயுவாலும்
குறிப்பறிந்து வாசிகொண்டு வாயில்வாங்கே. (6)

வாயில்நீ வாங்கியிரு கலையறிந்து
மவுனமென்ற மாங்கனியை மகிழ்வாயுண்ண
நேயமுடன் வெகுபெலந்தா னிதிலுண்டாகும்
நேர்மையுடன் மனக்காலா லூணிப்பாரு
தூயநல்ல தேகமது வலுத்துக்காணும்
துப்பரவாய் வாசியது தங்கம்போல
மாயமுள்ள கனியுண்ட கெதியுண்டாச்சு
மகத்தான சூட்சமென்ற வழியைப்பாரே. (7)

பாரேதான் சூட்சத்தின் காலைப்பாரு
பரிவான ஞானகதி யிருகாலப்பா
நேரேதான் சூட்சாதி தன்னைக்காண
நிர்மலமாய்க் கால்தன்னைப் பாச்சியப்பா
தேரேதான் காட்சியதா யமுதமுண்ணத்
திருவான கண்காட்சி தானேதோன்றும்
கூரேதான் சூட்சமது பின்னொன்றில்லை
குறிப்பறிந்த வனுபோகி யறிவானென்னே. (8)

என்னப்பா யிவளாட்டம் பார்க்கத்தோணா
தினிமையுடன் கண்டுபிடி வாதஞ்சித்தி
சொன்னேனே வுப்பாலு மப்பினாலும்
சுருக்கமாய்க் கண்டறிநீ வாதத்தாயைக்
கன்னலென முப்பூவாற் கண்டவித்தை
கைகண்டாற் பிடிவாதங் கொள்ளையாச்சு
அன்னையென்றாய் மனமதனை யாவர்காண்பார்
அன்புடனே கண்டவர்கள் நூற்றுக்கொன்றே. (9)

நூறிலே ஒருவர்கண்டோ ருண்டுமப்பா
நுண்ணறிவாய்ப் பார்ப்பவர்க்குத் தெரியும்பாரு
தேறுதலாய் நிராமயத்தின் சோதிப்பாலை
திறமாகக் கருவறிந்து கொண்டோன்றானும்
வேறுவிதஞ் செலமாட்டான் கண்டாற்றானும்
வேண்டியே கண்டபடி தொண்டுசெய்வான்
கோரும்வித மவனுக்குச் சித்தியாகும்
குறிப்பறிந்து கொண்டவனே சித்தனாவான். (10)

சித்தறிந்து நிற்பதற்கு விதிதான்வேண்டும்
சித்தான பொருளறிந்தோர் விண்டதுண்டோ
முத்தனென்றே மனம்பூண்டு காலைப்பார்க்க
முயலுமனம் நிலையாது மூலமார்க்கம்
நித்தனென்ற மும்மூல மகன்றுபோகும்
நிராமயத்தின் சக்கரத்தை யறிந்துகொள்வாய்
மெத்தவுமே யோகவழி சூட்சஞ்சூட்சம்
மெய்யாகத் தெரிந்துகொள்ளக் காட்டினேனே. (11)

காட்டியே சொல்லிவிட்டே னறிந்துகொள்ளு
கருவான கருவூரிற் கால்தான்தோணும்
நீட்டியே காலதனை யின்னதென்று
நேர்மையுட ன்றிந்துகொண்டாற் பூரணந்தான்
கூட்டியதார் பூரணத்தைத் தெரிந்துகொண்டால்
குறியான சிவயோக முடிவுமாச்சு
நாட்டியதோர் சிவயோக முடிந்ததானால்
நல்லதொரு ஞானமுந்தான் சித்தியாச்சே. (12)

ஆச்சப்பா வுன்தேசஞ் சித்தியாச்சு
அப்பனே பரப்பிர்ம சொரூபமாச்சு
பேச்சப்பா கண்டறிந்து கொள்வாய்நீதான்
பேரறிவாற் பூரணமுங் கூடப்பேசும்
வாச்சுதென்று சோதிதெரி சனமுங்கண்டு
மகத்தான சித்தனென்ற பேரும்பெற்று
ஏச்சின்றி யுகயுகமா யிருந்துவாழ்க
இனிமையுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளே. (13)

கேளப்பா ஆதாரச் சொரூபந்தன்னைக்
கிருபையுடன் தெரிசித்துத் தியானஞ்செய்து
நாளப்பா மயேந்திரகிரி பீடந்தன்னில்
நலம்பெறவே பிர்மாவைப் பூசித்தாக்கால்
வாளப்பா ஞானக்கண் திறந்துகாட்டும்
மனங்களித்து ஓங்-றீங் அங்கென்றோத
கோளப்பா வாராத தாரபூசை
குறிப்பாகச் செய்தறிந்த வகையொன்றாமே. (14)

ஒன்றான மனம்நிலைக்க வுறுதிகேளு
ஓமென்ற பிரணவமே மூலபீடம்
குன்றாத பீடம்-றீங் காரவாலை
குறையாத அகாரமது சிவமுமாச்சு
அன்றேதா னெழுந்தனை வாசியாக்கி
அறிந்துநின்ற இருவாசி யம்மாவாசி
சென்றேதான் அகாரமமா வாசிதன்னைத்
தீரமுடன் தானறிந்து பூசைசெய்யே (15)

செய்யப்பா அந்திசந்தி பூசைபண்ணித்
தேசிகன்போற் காயாதி கற்பங்கொண்டு
உய்யப்பா பூரணத்தைத் தினமும்போற்ற
உன்தேக மழியாமல் நிலைத்துப்போகும்
மெய்யப்பா பாசத்தை விலக்கிப்போட்டு
மெதுவாக அகாரமென்றாற் சத்தியாச்சு
பையவப்பா சத்திசிவ மூலந்தானும்
பார்க்கவே தனக்குள்ளாய்த் தோணும்பாரே. (16)

பாரப்பா மயேந்திரமாங் கிரியடுத்துப்
பட்சமுள்ள கணநாதர் பூசைசெய்தால்
தேரப்பா அம்மலையில் வாழுஞ்சாரை
தெவிட்டாத வெண்சாரை நிலத்திற்பாயும்
சீரப்பா பூமியிலே பாய்ந்தபின்பு
தீரமுடன் மத்தியினிற் பிடித்துக்கொள்ளு
காரப்பா பிடித்தபிடி கையிற்பாரு
கருத்துடனே ரெண்டுதுண்டு மொன்றாய்ப்போமே. (17)

போமேதான் பூமிக்குள் ளோடிப்போகும்
பூரணமாய்ப் பிடித்ததைநீ யுள்ளேகொள்ளு
நாமேதா னந்திசந்தி வருஷமொன்று
நலமாகக் கொண்டுவருஞ் சமயந்தன்னில்
வாமேதான் வாசியது பாயாதப்பா
மைந்தனே காயமது சித்தியாச்சு
நேமமுள்ள கடுகொடுநல் லெண்ணெய்தானும்
நிதானமுட னிச்சாபத் தியமுந்தள்ளே. (18)

பத்தியமா யிருந்துகொண்டு சிவத்தைப்பூசி
பாலகனே சத்தியுட கற்பங்கேளு
நித்தியந்தான் மூலகிரி தன்னில்நீயும்
நிர்மலமாய் நின்றுதவஞ் செய்தாயானால்
சத்தியுட வருளாலே யாகாசத்திற்
றானிருந்து வூசியைப்போ லந்திரத்தில்
வெத்தியுடன் கருஞ்சாரை பாயுமுன்னே
வேகமுடன் உம்மெனுமந் திரமுமோதே. (19)

மந்திரந்தா னோதியே சானாதன்னை
மனமொன்றாய் நடுமத்தி பிடித்துக்கொண்டு
தந்திரமா யாண்டடொன்று அந்திசந்தி
தானுள்ளே கொண்டுவரக் குணத்தைக்கேளு
விந்தையுடன் மூலத்தில் அனலுங்கண்டு
மீறியே பித்தமது சாஸ்தியாகி
சந்ததமுந் தேகமது யிளைத்துக்கண்டால்
சமர்த்தாக மூதண்டக் கசாயங்கொள்ளே. (20)

கொள்ளப்பா உகாரமதைப் பூசைசெய்தால்
குறிப்பான வியாதிநரை திரையும்போகும்
விள்ளப்பா சுழிமுனையில் நாட்டம்வேணும்
விளங்குகின்ற நடுமனையிற் றீபந்தோன்றும்
மெள்ளப்பா பூரணத்தின் தீபங்கண்டால்
மெலிவான தேகமது. வலுத்துப்போகும்
தள்ளாத சிவசத்தி பூசைசெய்தால்
தப்பாது ஞானசித்தி யின்னங்கேளே. (21)

கேளப்பா இரண்டுகற்பங் கொண்டபின்பு
கிருபையுடன் காலையிலே சிவத்தைப்பூசி
வாளப்பா மாலையிலே உகாரங்கொள்ளு
மகத்தான கற்பத்தா லநேகஞ்சித்தி
ஆளப்பா ஆண்டுமொரு மூன்றுசென்றால்
அப்பனே சட்டையது மூன்றுநீங்கும்
பாளப்பா போகாது யோகஞ்சித்தி
பரிவான நித்திரைதான் நீங்கிப்போமே. (22)

நீங்கிப்போம் வள்ளலார் நடனந்தன்னை
நீயறியத் தெரியுமப்பா விதற்குள்ளாக
வாங்கியதோ ரிரவிமதி யொன்றாய்க்காணும்
வளமையுள்ள வாசியென்ற குதிரையேறி
தாங்கியதோர் போதகிரி யுச்சிதன்னில்
தன்மையுடன் கற்பூர தீபம்போலே
பாங்குடனே சதாசிவமுந் தெரியுமப்பா
பதிவாகச் சித்தருமங் கிருப்பார்பாரே. (23)

பாரேதான் போதகிரி தன்னிலேறிப்
பட்சமுடன் வந்துகண்டா லின்பமாக
நேரேதான் அச்சமதை யகற்றியப்பா
நிலையான பதவியுன்ற னுக்களிப்பார்
சீரேதான் போதகிரி யாருங்காணார்
சிறப்புடைய சித்தரல்லோ காணவேணும்
கூரோதான் போதமென்றாற் சிவபோதந்தான்
குறிப்பான போதங்கொண் டவன்காண்பானே. (24)

கொண்டதொரு உச்சமென்ற போதங்கண்டு
கூறலொண்ணா மேலான பதவிபெற்றால்
விண்டதொரு சதரநந்தி மணிதான்தோன்றும்
விருப்பமுடன் கண்டறிந்தால் மேன்மையாகும்
கண்டதொரு ரகசியத்தை வெளிவிடாதே
கருத்துடனே யெந்நூல்தான் முக்காண்டத்திற்
பண்டுசொன்னே னதைப்பார்த்தால் வெளியாய்த்தோணும்
பண்புடனே மனதுகந்து யாருபாரே. (25)

பருநீ சிவராஜ ே:பாகமப்பா
பாருலகிற் செய்தறிந்த பின்புதானும்
தேருநீ முச்சுடரு மொன்றாய்க்காண்பாய்
தெளிவான பிறப்பிறப்பும் நீங்கிப்போகும்
நேருநீ ஞானவழி கண்டுமைந்தா
நேர்மையுடன் முக்கோணத் தறுகோணத்துள்
கேருநீ நாற்கோணம் ஐங்கோணத்துள்
சீரான வெளிகண்டா லொளிகண்டோரே. (26)

ஒளிகண்டால் நாதவொலி காதிற்கேட்கும்
உண்மைதனை யறிந்தவர்க்குக் கீதங்கேட்கும்
சுழிதெரியா மடையருக்குத் தோணாதப்பா
தொல்லுலகி லவனிருந்தும் பயன்றானில்லை
வழிதெரிந்தோர்க் குண்டுசிவ யோகந்தானும்
மானிலத்தில் வீணருக்குச் சொல்லொணாதே
அழியாத பரம்பொருளைக் கண்டுகொள்ள
ஆதிமுத லந்தம்வரை யறிவாற்காணே. (27)

அறிந்துகொள் காலைதனிற் சிவனைப்பூசி
அன்பாக மாலைசத்தி தன்னைப்பூசி
தெரிந்துநீ நடுச்சாலை நடந்துபாரு
சித்தமாய்ப் பூரணத்தின் சார்புதோணும்
பரிந்துபார் பூசையென்றால் வாமபூசை
பண்பாக யெட்டிரண்டும் மகிழந்துகண்டால்
சொரிந்தமுத மூலவழிப் பாதைகாணும்
சுருக்கமாய்க் கண்டுமெள்ள விழித்துப்பாரே. (28)

பாரேதான் மேல்மூலப் பொறிதான்வீசும்
பலத்தமுச் சந்திநடு வீதிதோன்றும்
நேரேதா னொருமன்தாய் நின்றாயானால்
நீதியென்ற நாதவொலி காதிற்கேட்கும்
பேரேதா னிழுத்துதென்று கூடப்போனால்
பேசவொண்ணாப் பிறப்பிறப்பு மெய்தும்பாரு
சேரேதான் பூரித்துப் பார்த்தாயானால்
சிவசிவா சிவசத்தி யாட்டமாமே. (29)

சத்தியுட ஆட்டத்தை யறிந்துகொண்டு
சதாசிவத்தி னாட்டத்தில் நாட்டங்கொள்ளு
பத்தியுடன் திரிந்ததினா லொன்றுமில்லை
பரிவான சதாசிவத்தைக் காணவேணும்
சித்தியென்றால் வாசிதான் சித்தேசித்து
சிறப்பான சுடர்கண்டு தேறுதேறு
முத்தியென்றாற் சதாசிவத்தின் முத்திமுத்தி
முடிவான தறியநாட் செல்லும்பாரே. (30)

செல்லுமப்பா யிதுவரைதான் மறைத்ததெல்லாம்
சிறப்புடனே தேன்மாரி பெய்தாற்போல
அல்லுபக லுந்தனுக்கு வெளியதாக
அப்பனே சொல்லிவிட்டே னருமையாக
வல்லதொரு சித்தர்கட்கு முனக்குமேதான்
மகிழ்வாகச் சொன்னதல்லால் மற்றோருக்குச்
சொல்லவில்லை யிந்நூலைக் கற்றறிந்து
சுகமாகச் சதாகாலம் வாழ்குவாயே. (31)

சமதக்கினிமகாரிஷி வஸ்துதெரிசனம் 31.

முற்றிற்று.

உ
குருவே துணை.

சச்சிதாளந்தர் திருவாய்மலர்ந்தருளிய

சுழிமுனை சூஸ்திரம் 31.

குண்டலிக்குள் ளிருந்துமுளைத் தெழுந்தசோதி
குருக்கிடையும் கருக்கிடையும் கிடந்துவீணாய்த்
தண்டதனிற் கழிமுனையாய் வந்துநின்ற
சச்சிதா னந்தமென்ற தாய்தான்பெய்த
அண்டபிண்ட நிலையதனை வகுத்துப்பாட
அரிபிரம ரிஷிகள்சித்தர் கொண்டேயாட
எண்டிசையுந் தமிழ்விளங்க யெனக்குநீயும்
இயல்புரிவா யைங்கரனே யெம்பிரானே. (1)

சடலமது எண்சாணாய் நின்றபின்பு
சதிரமதாய் நாற்சாணு மகலமாகி
உடலெனவு மதுக்குள்ளே உயிரதாகி
உற்பனமாய் நின்றாடு முண்மைகேளாய்
குடமதிலே பருத்தபூச னிக்காய்போல
குண்டலியைப் பத்திதிரி முதுகெலும்பு
அடவுடனே ஆயிரத்தெட்டிதழ்பூப்பூத்து
அருவுருவாய்ப் புருவமையத் தமர்ந்தவாறே. (2)

வாறான வாழைப்பூப் போலேகூம்பி
வளைந்தமுனைத் தமர்வாச லிதுதானென்பர்
தேறான அக்கினியாங் கதவால்மூடித்
திறமான புருவமையம் பிரமத்தீயாய்க்
கூறான இடையும்பிங் கலையில்முட்டிக்
கொடுங்கனலுந் காற்றாமற் றலைகீழ்வீழ்ந்து
நூறான சீவகலை ராசிபாய்ந்து
நாலுமிறந் துயிர்யுக்கு மிருநான்காமே. (3)

இருநான்காய் வருவதோர் முடிச்சாய்நின்று
இடையும்பிங் கலைமாறிக் கீழ்மேலாகப்
பெருவிரலாம் நாடிவழி யோடிமீண்டு
பின்புவரு மதுவெளியாய் நாசிபாய்ந்து
அருபமா யிருபத்தோ ராயிரத்து
அறுநூறு மப்படியே யியங்கியாடி
வருகிறதும் போகிறதும் பார்த்தறிந்த
மகத்தான குருபதத்தை வணங்கிப்போற்றே. (4)

போத்தியே குருபதத்தை வணங்கிக்கேட்டால்
புத்திச்சொல்லி அவரவர்தன் குணத்தைப்பார்த்துச்
சாத்துவார் சாஸ்திரத்தை யெடுத்துக்கையிற்
றான்கொடுத்துப் பாரென்று தயவாய்ப்பேணி
ஆத்துமம்நின் றாடும்வகை நிலையாதாரம்
அன்புடனே தூலவுடற் குக்ஷஞ்சொல்வார்
நேத்தியாய்க் குறிப்பறிந்து பார்த்தாயானால்
நெடுங்கால மசையாது தேகம்பாரே. (5)

பாரப்பா ஆதாரத் தடுக்கைக்கேளு
பண்பாக வந்தவகை பரிவாய்ச்சொல்வேன்
பேரப்பா குருவாகிப் பரமுமாகிப்
பிலத்ததொரு சிவமாகிச் சத்தியாகி
நேரப்பா விந்துசதா சிவமுமாகி
நிலைத்தமயே சுரனாகி ருத்ரனாகிச்
சீரப்பா மாலாகி அயனுமாகிச்
சித்திரமாய்ப் பரம்படைத்த திறத்தைக்காணே. (6)

காணப்பா அதிற்பிறந்த அட்சரத்தைக்
கருத்துறவே பிரித்துயான் சொல்லக்கேளு
ஆணப்பா ஆஈயும் உவ்வும்ஏயும்
அதீதமாய் ஒவ்வுமது அஞ்சுமாகி
பேணப்பா அதிலிருந்து அகாரந்தோன்றிப்
பிலத்தஉகா ரந்தனிலே மகாரந்தோன்றி
நீணப்பா பஞ்சாக்ர நாதவிந்தாய்
நிறைசிவபஞ் சாட்சரத்தின் நிலமைகேளே. (7)

கேளப்பா அகாரத்திற் சிகாரந்தோன்றி
கெடியான உகாரத்தில் வகாரந்தோன்றி
வாளப்பா மகாரத்தில் யகாரந்தோன்றி
வளமான விந்துவிலே நகாரந்தோன்றி
வேளப்பா நாதத்தில் மகாரந்தோன்றி
விளைந்தஞ்சுஞ் சிவயநமா வென்று சொல்லி
நாளப்பா அதிலிருந்து அஞ்சுமாறி
நாடினதோ ரிதுநமசி வாயமாச்சே. (8)

அஞ்செழுத்தும் பூதமஞ்சாய்ப் பொறிகளஞ்சாய்
ஆனபுல னஞ்சாயிந் திரியம்பத்தாய்த்
தஞ்சமெனுங் கரணம்நான் கறிவுமொன்றாய்த்
தயவான நாடிபத்தாய் வாய்வுபத்தாய்ச்
சஞ்சரிக்குஞ் சயங்களுமே யைந்துகோசம்
தானஞ்சு ஆதார மாறுமாகி
மிஞ்சினமண் டலமூன்று மலமூன்றாகி
மேலான தோஷமுமே மூன்றதாமே. (9)

ஆமப்பா குணமூன்றே டணையுமூன்று
அப்பனே வினையிரண்டு ராகமெட்டு
நேமப்பா அவத்தைஅஞ்சு தொகையாய்க்கூடில்
நிலைத்ததொரு கருவியது தொண்ணூற்றாறாய்ச்
சேமப்பா அதுகள்செய்யுந் தொழிலேபார்த்தால்
செடமெடுத்த படியனைத்துந் தெளியொட்டாது
நாமப்பா அறிந்தமட்டுஞ் சொன்னோங்கேளு
நன்மைபெறக் குருபதத்தை நாடிப்பாரே. (10)

நாடியவர் பதம்பணிந்து வணங்கிக்கேட்டால்
நலந்தீங்கு மிரண்டினுட வகையுஞ்சொல்வார்
கூடியிடை பிங்கலையில் வகுத்துப்பாயுங்
குண்டலியின் குணங்குறியுங் கூர்ந்துசொல்வார்
தேடியெங்கே பார்த்தாலும் உம்மைப்போலே
தேசிகர்தா னடியேற்குச் செகத்திற்காணேன்
குடினே னுன்பதமென் றலைமேற்கொண்டேன்
தூலமுடன் சூக்குமகா ரணமுஞ்சொல்லே. (11)

சொல்லென்று கேட்டமா ணாக்காகேளு
தூலமொடு சூட்சகா ரணத்தைச்சொன்னால்
வல்லபமா யறிவாயோ உனக்குக்கேளு
மகத்தான கோவில்குளந் தீர்த்தமென்றால்
செல்லுமது மனதுக்கே தேனும்பால்போல்
தெவிட்டாம லிருக்குமனந் திடந்தான்கண்டாய்.
அல்லலெல்லாந் தவிர்த்தாண்ட குருவேநீதான்
அடியேற்கு அறிவிப்பா யெனப்பணிந்தான். (12)

பணிந்தமா ணாக்கனுட முகத்தைபார்த்துப்
பரமகுரு வானநல்ல தேசிகன்றான்
துணிந்தேநாம் சொல்லுகிறோம் நன்றாய்க்கேளு
தூலவுடல் ஓம்நமசி வாயமதுசரியை
அணிந்தநெஞ்சில் வாசியது கிரியையாகும்
அதின்மேலே கண்டத்தில் யோகமாகும்
தணிந்ததொரு புருவமையம் மவுனமாகும்
சாதகமாய்த் தூலவுடல் நானுந்தானே. (13)

தானென்ற தூலத்தைச் சொன்னீரையா
சாதகமாய்ச் சூட்சமதே கத்தைச்சொல்லும்
நானென்ற மனம்புத்தி சித்தமந்தக்கரணம்
நல்லஆங் காரமா ணவமாயைகாம்யம்
ஊனென்ற தட்டுமது சூட்சவுடலாச்சு
உற்பனமாய்ச் சொல்லுகிறே னுண்மைகேளு
தேனென்ற சித்தமது காரணமாய்நின்ற
தெளிவையொளி வெளியாகத் தெரிசிப்பாயே. (14)

தெரிசிக்க அடிதொடுத்துச் செப்பவேணும்
தெளிவான யென்குருசின் மயமாமூர்த்தி
பரிசிக்க கருநெல்லிக் கனிபோற்கையிற்
பார்த்துமகிழ்ந் திடவெனக்குப் பரிசுகாட்டி
வரிசைக்கு வைப்பதுன்மேற் கடன்றான்கண்டாய்
வாழ்த்திடுவே னுன்மலர்த்தாள் போற்றிசெய்வேன்
உருசிக்க நீரெனக்கு வேணுமையா
உடல்பொருளா விவுந்தாரை வார்த்தேன்யானே. (15)

தாரைவார்த் தேனுனக்கு முழுதுமென்ற
தன்மைசொன்ன பிள்ளாய்நாம் சொல்லக்கேளு
ஓரையுடன் முந்திமுந்தி மூலம்பாரு
உண்மைதாயப் பிரமனுட வீட்டைப்பாரு
நேரேதான் மாலுடைய வீட்டைப்பாரு
நின்றருத்தி ரன்விசுத்தி மயேசன்பாரு
ஊரையுமுன் மனையறியச் சதாசிவத்தை
உற்றுப்பார் சுழிமுனையுந் திறக்குங்காணே. (16)

காணப்பா சுழிமுனையுந் திறந்துபோது
கனிந்தமுத் மொழுகுமுண் ணாக்கின்சார்பு
ஏணப்பா யிருகடைவாய் வழியேபாயும்
யிதையமுத மென்றவகை யிதுதானையா
தோணப்பா யிதுக்குமேல் நாதங்கேளு
தொனியுடனே முழங்குகிற வகையைக்கேளு
ஆணப்பா முந்திமுந்தி மணியினோசை
அதன்மேலே கடலோசை யடுத்துபாரே. (17)

அடுத்துப்பா ரதன்மேலே யானைநாதம்
அதன்மேலே பனையென்ற சங்குநாதம்
தொடுத்துப்பா ரதன்மேற்சீங் குழலின்நாதம்
தொகுத்ததன்மேல் துடியுடைய இடியின்நாதம்
கொடுத்துப்பார் செவியதனைப் பாம்புநாதம்
குமரனே மணிவபிரத் தும்பிநாதம்
எடுத்துப்பார் யாழுடன்பே ரிகையின்நாதம்
இத்துடனே துகையதுதான் பத்துமாச்சே. (18)

ஆச்சப்பா யிலுவரைக்கும் யார்தான்பார்ப்பார்
அரிபிரம னுருத்திரனு மயேசுமனோடு
மூச்சத்த யிடத்தில்சதா சிவனோடைவர்
முப்பத்து முக்கோடி தேவர்பார்த்துக்
காச்சத்த பொன்போலே கோடிகாலம்
கனிவாக வாழ்ந்திருந்தார் கனிவாய்த்தானே
பேச்சத்த யிடமறிந்த பெரியோர்பேரைப்
பிரபலமாய்ச் சொல்லுகிறேன் பிரித்துத்தானே. (19)

தானென்ற திருமூலர் புண்ணாக்கீசர்
சட்டைமுனி மச்சமுனி புசுண்டரோடு
கோனென்ற கலைக்கோட்டு முனிவசிஷ்டர்
கும்பமுனி கமலமுனி யிடைக்காட்டாரும்
வானென்னற கொங்கணரும் விசுவாமித்ரர்
வளமட்ட கோணமுனி சனகரோடு
தேனென்ற சனக்குமரர் முதலாயுள்ள
சிறந்தகோ ரக்கர்கரு வூரார்தானே. (20)

கருவூரா ரெனைப்பெற்ற போகநாதர்
காட்சியாம் பதினெட்டுச் சித்தர்கண்டாய்
ஒருகோடி சித்தருண்டு அவர்கள்பேரை
ஒகோகோ எழுதிடவே டடங்காதையா
தருவான சிவயோகந் தன்னைப்பார்த்துத்
தவத்திலே மிகுத்துமகத் துடையோராகித்
திருவான பூரணத்தைத் தெரிசித்தேதான்
சித்திமுத்தி பெற்றிறவா திருக்கின்றாரே. (21)

முத்திபெற்ற தெதினாலே அடியேனுக்கு
மொழிந்தருள்வா யென்குருவே ஞானமூர்த்தி
பத்தியுடன் பார்த்தாக்காற் றெரியுங்கண்டாய்
பாராத பேர்களுக்குத் தெரியாதப்பா
புத்திவரச் சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
புகழாக மூதண்டக் குளிகைசேர்த்து
நித்தியங்கை விட்டகூத் திரத்தைப்பாரு
நேசமாய்ச் சாம்பவிகே சரியும்பாரே. (22)

கேசரியைக் கடந்தபின்பு வெளியைப்பாரு
கிருபையுட னப்பாலே ஒளியைப்பாரு
ஈசுவரி யென்றுமந்த வானைப்பாரு
ஏறியதுக் கப்பால்நிர்க் குணத்தைப்பாரு
தாசரியாம் நிரஞ்சனத்தைப் பார்த்தப்பாலே
தனித்ததொரு நிராதாரந் தன்னைப்பாரு
வாசரிதான் கேளாதே நிர்மலத்தை
வகைசொல்லப் போகாது வஸ்துதானே. (23)

வகைசொல்லப் போகாது யென்றுசொன்ன
மாநிதியே யென்குருவே ஞானதேசி
துகைதுகையாய்ச் சொன்னாக்கால் வகைதோணாது
தூண்டியிது வென்றுநில வரந்தான்சொல்லும்
நகைபுரிந்து மூலமுதற் சுவாதிஷ்டானம்
ரண்டுமே அக்கினிமண் டலந்தான்பாரு
திகையாதே மணிபூ ரகத்தினோடு
சிறந்தவனா கதமிரண்டுஞ் சூரியமண்டலமே. (24)

சூரியமண் டலங்கடந்து விசுத்தியாக்கினையும்
சொற்பெரிய சந்திரமண் டலந்தான்கண்டாய்
நேரியமாயச் சுழிமுனையுந் திறந்துஅப்பால்
நின்றவஸ்து தெரிசனங்கை விட்டசூத்ரம்
காரியமாய்ச் சொல்லுகிறேன் நாதமதுதானே
கலங்காதே சாம்பவிமுத் திரைதானப்பா
ஊரியதோர் விந்துவுட னாதமுமக்கினியும்
ஒன்றாகக் கூடினது கேசரிதானாமே. (25)

ஆமப்பா யிதுமூன்றும் முப்பாழாகும்
அதுக்கப்பாற் சொல்லுகிறே னப்பாழ்மூன்றும்
தாமப்பா வெளிபாழா மதுதானொன்று
தற்பரமா மொளிபாழா மதுதானொன்று
வேமப்பா வெளியொளிபாழ் மூன்றுந்தாண்டில்
வெட்டவெளி யொன்றுமிலை விரைந்துபாரு
நேமப்பா நிர்க்குணம்நிட் களந்தான்ரெண்டும்
நிரஞ்சணமும் நிராதார மிரண்டுந்தானே. (26)

தானென்ற பதினாறு தலமுந்தாண்டி
தற்பரசிற் பரனார்தா னிருக்கும்வீடு
நானென்ற ஆணவத்தை மலமாய்நீக்கி
நற்குருவின் பதந்தொண்டு பண்ணிக்கேட்டால்
தேனென்ற மொழியுடைய சீஷர்க்கேதான்
செப்புவா ருற்பனங்கள் தெரியநன்றாய்
வேனென்ற பெரியோர்கள் தன்னைத்தேடி
வியனாதப் பணிந்துதெண்டம் பண்ணிக்கேளே. (27)

தெண்டனிட்டுக் கேளென்ற குருவே ஐயா
தேடியெங்கே யான்பார்ப்பேன் தேசமெங்கும்
கண்டகுறி போலவுந்தன் கையில்வெண்ணையிருக்கக்
காசினியில் நெய்தேடுங் கதையதுபோலுன்னை
அண்டினே னுனக்கடிமை யாகிப்பின்னும்
ஆண்டுகொள்ளு மென்றுமொரு நாயன்தேடி
விண்டுரைக்க மாட்டேனா னென்றுசொல்லி
வீழ்ந்தடியில் வணங்கிமனம் விரும்பிநின்றான். (28)

நின்றதொரு மாணாக்கன் நிலையைப்பார்தது
நிறைந்ததொரு நிர்மலத்தைக் கரைகாண்பாரோ
ஒன்றான ஆண்டவனைச் சொல்லச்சொன்னால்
ஒகோகோ மனம்வாக்குக் கெட்டாமூர்த்தி
என்றபொரு ளினைச்சொல்ல வாய்கூசுதையா
யிப்போது என்செய்வோ மென்றுமனமுருகி
நன்றுநன்று இரும்பிள்ளா யென்றுஅடியேற்கு
நாட்டினார் வஸ்துநிலை நாட்டினாரே. (29)

நிலையறிந்து தெரிசித்தேன் மனம்பூரித்தேன்
நிர்மலமாங் கயிலாச தேகமானேன்
மலையெல்லாந் தான்தீர்ந்தேன் மோக்ஷம்பெற்றேன்
வணங்கினேன் குருபதத்தைத் தலைமேற்கொண்டேன்
உலையாதே அகந்தேற்றிக் கொண்டபிள்ளாய்
உனக்கீடிங் கொருவருண்டோ வென்றுசொல்லி
அலையாதே எந்தனக்கு மைந்தர்நீதான்
அப்பனெனை யருகழைத்து வைத்தார்காணே. (30)

காணப்பா யெனைப்போலே மோக்ஷம்பெற்றோர்
காசினியிற் காணேன்கேட் டதுதானில்லை
வீணப்பா வுலகத்தோர் திரிந்துகெட்டார்
வியனான சுழிமுனைசூஸ் திரத்தைப்பார்த்தால்
தோணப்பா சுருக்கிடையும் குருக்கிடையுந்தெரியும்
சூக்ஷாதிசூக்ஷமொலாந் தொகுத்துக்காணும்
பூணப்பா மறைத்தபூட் டெலாந்திறந்து
பொருள்சொன்னார் குருவின்முறை பார்த்துத்தானே. (31)

சச்சிதானந்தர் சுழிமுனை சூஸ்திரம் 31.

முற்றிற்று.

உ

கணபதி துணை.

கடைப்பிள்ளை திருவாய்மலர்ந்தருளிய

மவுன தீட்சை 12.

முத்திகொண்ட மோட்சமது மவுனதீட்சை
முனையறிந்து செல்லுதற்கு வாலைகாப்பு
வெத்திகொண்ட நந்தீசர் பாதங்காப்பு
வேதாந்தத் திருமூலர் பாதங்காப்பு
பத்திகொண்ட காலாங்கி பாதங்காப்பு
பரமகயி லாசகுரு போகர்காப்பு
எத்திசைகொண் டண்டரண்டங் கண்டுவந்த
யேகாந்தக் கொல்கணவர் பாதங்காப்பே. (1)

ஆமப்பா ஆதியென்ற மவுனமார்க்கம்
ஆதிகுரு கொங்கணவர் அருட்கண்ணீய்ந்தார்
நாமப்பா கண்டபடி விண்டுசொன்னோம்
நல்லோர்க்கும் நாதாந்த முத்தியோர்க்கும்
காமப்பால் கானற்பால் கரைகண்டோர்க்கும்
கயிலாசம் அடிநடுவும் முடிகண்டோர்க்கும்
சோமப்பா லுண்டுவந்த கெதியினாலே
சொல்லுகிறேன் சூட்சாதி மவுனங்கேளே. (2)

கேளப்பா மவுனமதுக் குறுதிகேளு
கிருபையுள்ள மூலமதில் உங்கென்றொட்டி
வேளப்பா வாசிகொண்டு அழுத்தியூது
மெய்ஞ்ஞானச் சூரியனில் நின்றுபாயும்
வாளப்பா கண்டமதில் அங்கென்றொட்டி
மகத்தான வாசியினால் மனைக்கண்டேறி
சூளப்பா சந்திரனில் நின்றுபாயும்
சுத்தமுள்ள மகாரமதின் சூட்சங்காணே. (3)

காணப்பா மகாரத்தைச் சுழினைதன்னிற்
கண்ணறிந்து சுழிமுனையில் மங்கென்றொட்டி
தோணப்பா வாசிகொண்டு ஊதிப்பார்க்கத்
துவாதசாந் தந்தனிலே துலங்கிநிற்கும்
பேணப்பா யிந்தவிதம் அறிந்துகொண்டு
பெருமைவிட்டு உரிமையதாய்த் தியானஞ்செய்தால்
தோணப்பா சொல்லுகிறேன் மூன்றுமொன்றாய்த்
துலங்கிநின்ற ஓங்காரக் கம்பமாச்சே. (4)

ஆச்சப்பா கம்பமென்ற ஓங்காரந்தான்
ஆதிதொடுத் தந்தம்வரை ஒன்றாய்நின்று
காச்சப்பா மூச்சதற்கு உயிராய்நின்ற
கருணையச் சரமேகாச் சரமதாச்சு
பேச்சப்பா பேசாத மவுனமாச்சு
பேருலகெ லாம்நிறைந்த சோதியாச்சு
நீச்சப்பா யெட்டும்ரெண்டு மிதுதானாச்சு
நின்றிலங்கும் மந்த்ரமெலாம் இதனுட்பாரே. (5)

பாரப்பா பாதாதி கேசமட்டும்
பத்திகொண்டு அந்தநிலை பார்க்கும்போது
கேரப்பா ஓங்கார ரூபமாகி
நின்றதடா அந்தநிலை சுழினைக்குள்ளே
காரப்பா காலறிந்து சுழினைகாக்கச்
கம்பமென்ற ஓங்கார மூலங்கொண்டு
சேரப்பா நாவறிந்து விண்ணென்றூணத்
திருகுசுழி மணிவாசல் திறக்குந்தானே. (6)

தாணப்பா சுழினைவழி தேர்ந்துகொண்டு
சதானந்த பூரணமா யிருந்தாயானால்
மாணப்பா அண்டவெளி தன்னிலேதான்
மகத்தான தீபவொளி மகிழ்ந்துகாணும்
பூணப்பா மனமகிழ்ச்சி தன்னால்மைந்தா
பொருந்திநின்ற அஷ்டசித்துங் கைக்குள்ளாடும்
பேணப்பா ரவிமதியைச் சுழினைக்குள்ளே
பிரணவமாய் நின்றதிரு வாசியாரே. (7)

கடைப்பிள்ளை மவுன தீட்சை 12.

லாசியென்ற பிரணவமே யேகமாச்சு
மகத்தான சற்குருவு மதுவேயாச்சு
தேசியென்ற குருதேசி மவுனதேசி
சிவசத்தி யொன்றான அம்மாவாசி
வாசியென்ற வாசிஅம்மா வாசிதன்னை
மனமகிழ்ந்து அனுதினமும் மனதிற்பாரு
நாசிமுனை நடுவறிந்து நன்றாய்ப்பாரு
நந்திசுழிக் கண்ணறிந்து விண்ணைக்காரே. (8)

விண்ணறிந்து சுண்ணதனாற் பார்க்கமைந்தா
வேதாந்த மூலமொன்று சொல்லக்கேளு
கண்ணறிந்து ஓங்கார மூலங்கொண்டு
கண்மணியைத் தானறிந்து சமலம்நோக்கி
ஒண்ணறிந்து உன்னிநடு அண்டமேவி
ஓங்காரக் கம்பமதிற் றீபமேத்தி
முன்னறிந்து முன்முகப்பில் நின்றாயானால்
மூவுலகுந் தன்வசமாய் முனையைக்காரே. (9)

முனையறிந்து காராட்டா லென்னஞானம்
மூக்குநுனி அடிவார முகப்பிற்சென்று
மனையறிந்து மணியசைத்து மணிநாவுன்னி
மகத்தான குகையறிந்து வாசமானால்
தனையறிந்த மூலமடா அங்கேநின்று
தகையகற்ற அமுதரச பானம் ஈய்வாள்
அனையறிந்து காலறிந்து அமுதங்கொண்டால்
அமுதரசச் கெவுனாதி மவுனிதானே. (10)

தானான யோகமடா மவுனஞானம்
தனையறிந்த ஞானமடா யோகதீபம்
கோனான யோகமடா வாசியோகம்
குறியறிந்து காராட்டால் யோகம்போச்சு
ஊனான உடம்பெடுத்தா லெல்லாம்வேணும்
உன்னுடம்பு சத்திசிவ சத்தியாச்சு
வானான சத்தியமே பிர்மமாச்சு
மகத்தான கண்காட்சி அதுதானாச்சே. (11)

ஆச்சப்பா அண்டமெல்லா மதுதானாச்சு
அஷ்டமா சித்துகளு மதுதானாச்சு
பேச்சப்பா மூச்சான அண்டமெல்லாம்
பிரணவத்தின் மூலமதாற் பேசலாச்சு
காச்சப்பா பிரணவங்கொண் டாறாதாரக்
கருத்தறிந்து சூஸ்திரமுந் நான்குதன்னை
மூச்சப்பா தானறிந்து முனைகண்டோர்க்கு
மூவுலகுக் கரசாக முனைதான்முற்றே. (12)

கடைப்பிள்ளை மவுன தீட்சை 12.

முற்றிற்று.

மதுரை புதுமண்டபம் புஸ்தகசாலைசோதிடம் ந. கூடலிங்கம் பிள்ளையவர் களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானது.

உ

கடவுள் துணை.

கடைப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளிய

பஞ்சாட்சரச் சுருக்கம் 32.

ஆதியென்ற அச்சரமே பிர்மமூலம்
அருட்பெருகும் மூலமதி லடங்கிநின்ற
நீதியென்ற அக்கினியே சோதியாக
நிலையறிந்து ஆதாரம் நன்றாய்பார்த்துச்
சோதிபஞ்சாட் சரக்சுருக்கம் நேர்மைகாணத்
துலங்குநந்தி மூலர்கா லாங்கிநாயன்
சாதிமுத லானகுரு போகநாதர்
சந்ததியாங் கொங்கணவர் பாதங்காப்பே. (1)

பாதமென்ற அடிமுடியே ஆதியந்தம்
பரிவான அகாரமுடன் உகாரம்ரெண்டும்
பேதமன்றி யொன்றாகி நின்றபோது
பெருகிநின்ற அட்சரமே பஞ்சபூதம்
நீதமென்ற பூதமதுக் குயிராய்நின்ற
நிசமான ஓங்கார வாசியாகும்
நாதமென்ற மூலமடா ஆதாரத்துள்
நடனமென்ற சடாட்சரத்தை நயந்துபாரே. (2)

பாரடா மனங்குவிந்து நயந்துபார்க்கப்
பதிவான நமசிவய மஞ்சுமாச்சு
நேரடா அஞ்சில்ஓங் காரஞ்சேர்த்தால்
நிசமான சடாட்சரமா றெழுத்துமாச்சு
தூரடா சூட்சமஞ்சும் தூலமாச்சு
சூட்சமாய் நின்றஅஞ்சைச் சொல்லக்கேளு
பேரடா ஆரறிந்து கூடப்போறார்
பிரியமுடன் ஆதார பிலத்தைக்கேளே. (3)

பிலமான சூட்சப்ஞ்சாட் சரத்தைக்கேளு
பேர்பெரிய கொங்கணவர் வீரத்தாலே
நலமான அகாரமுடன் உகாரங்கூட்டி
நாடிநின்ற மகாரமடா மவுனஞ்சேர்த்துத்
தவமான சிகாரமுடன் வகாரங்கூட்டித்
தான்பார்க்க அஞ்செழுத்தே அஞ்சுமூலம்
குலமான அஞ்சில்ஓங் காரஞ்சேர்த்துக்
கூர்மையுடன் றான்சுருக்கிக் குணமாய்நில்லே. (4)

குணமாகத் தான்சுருக்கிச் செபமேசெய்யக்
கூடுறுதி யாகவொரு கருவைக்கேளு
மணமாக மூலமதில் ஓமென்றூணி
மார்க்கமுடன் நடுமனையில் உகாரங்கூட்டிக்
கனமாகக் கண்டமதில் அங்கென்றூணி
கடாட்சமுடன் புருவமையத் தமரில்நின்று
இனமாக வாசிவா ஓமென்றூணி
இன்பமுடன் நூற்றெட்டு வுருவைச்செய்யே. (5)

உருவறிந்து உருவேத்தி நயன்சூட்சம்
உறுதியுடன் பார்க்கையிலே சோதிகாணும்
திருவிருந்த சோதியைநா னென்னசொல்வேன்
தீர்க்கமுடன் சூரியன்போல் வட்டங்காணும்
குருவிருந்த வட்டமதி னுள்ளேபார்த்தால்
குளிர்ந்தமதி பூரணச்சந் திரனேகாணும்
கருவிருந்த பூரணச்சந் திரனுக்குள்ளே
காணுதடா கற்பூர தீபந்தானே. (6)

தானான கற்பூர தீபந்தன்னைத்
தடையறவே வொருமுகமாய்ப் பார்க்கும்போது
கோனான தீபவொளி வெளிச்சத்தாலே
குருவான பரவெளியைக் கண்டேனப்பா
வானான பரவெளியைக் கண்டால்மைந்தா
மகிமைதா னென்னசொல்வேன் நீநானாச்சு
ஊனான உலகமெல்லாம் நீநானாக
ஒடுங்கிநின்ற சிலம்பொலியைக் கண்டேன்பாரே. (7)

கடைப்பிள்ளை பஞ்சாட்சரச் சுரக்கம் 32.

பாரப்பா கண்டுகொண்டு நிலையில்வந்தேன்
பதியறிந்து அகாரமடா சிவமுமாச்சு
நேரப்பா உகாரமது சத்தியாச்சு
நிசமான மகாரமடா வாலையாச்சு
சாரப்பா சிகாரமுடன் வகாரம்ரெண்டும்
தன்னுணர்வாய் நின்றதொரு வாசியாச்சு
காரப்பா வாசியைநீ யறிவின்கண்ணாற்
கலந்துநின்ற காரணத்தைக் கருவாய்க்கேளே. (8)

கருவான தூலமுடன் சூட்சஞ்சொன்னேன்
காரணபஞ் சாட்சரத்தைக் கருவாய்க்கேளு
உருவான அகாரமுடன் உகாரங்கூட்டி
உரிமையுடன் ஓங்காரஞ் சுத்திக்கட்டித்
திருவான அதின்கீழே மகாரம்போட்டுத்
தீர்க்கமுடன் மகாரமதின் நடுவிலேறிக்
குருவான அகாரம்றீங் காரமிட்டுக்
கும்பமென்ற சுழிமுனையிற் சூலம்போடே. (9)

சூலமிட்டு ஆதியந்தஞ் சிங்குவங்கு
சூரியகலை சந்த்ரகலை வாசிபூட்டி
ஆலவட்ட மானசுழி முடியொன்றாக
அமர்ந்தொன்றாய் நின்றகா ரணந்தானப்பா
சூலமிட்டுச் சூட்சமிட்டு ஸ்தூலசூட்சம்
துலங்கிநின்ற காரணந்தா னநேகமாச்சு
மூலவட்ட மானகுறி யேகமான
மூன்றெழுத்தும் இரண்டெழுத்தும் அஞ்சுமாச்சே. (10)

அஞ்சுபஞ்சாட் சரச்சுருக்கம் ஆர்தான்காண்பார்
அரிதரிது சொல்லுகிறே னறிவாய்க்கேளு
அஞ்சுரெண்டாய் நின்றதொரு நாதவிந்து
அடங்கியுருத் திரண்டுவொரு மணியுமாச்சு
அஞ்சுமுக மானமணி ஓங்காரத்தால்
ஆறுமுக மானசடாட் சரமேயாச்சு
அஞ்செழுத்தும் ஆறெழுத்தும் ஒன்றேசூட்சம்
அருமையுள்ள சொரூபமணி யானவாறே. (11)

வாரான சொரூபமணி நாதவிந்து
மதிகதிரு மொன்றானால் மணிக்குமைந்தா
பேரான சத்திசிவ பானந்தன்னைப்
பெருகிநின்ற மணிதனக்குத் தானேயூட்ட
நேரான சொரூபமணி கமலியாச்சு
நிறைந்துநின்ற கமலிமணி தனக்குமைந்தா
பேரான வாலைரசந் தானேயூட்டப்
பெருகிநின்ற அஷ்டசித்து மணியுமாச்சே. (12)

ஆச்சப்பா அஷ்டசித்து மணிக்குமைந்தா
அரகரா பஞ்சகண தீட்சையோது
மூச்சப்பா அசையாமல் நிலைநின்றாடும்
முத்தியுள்ள முக்குளிகை சித்துகேளு
நீச்சப்பா சத்திசிவ பூசையாலே
நிசமான வாய்வேக மணியுமாச்சு
காச்சப்பா வாய்வேக மாக்கிமைந்தா
கருணையுள்ள வாலைரசமூட்டிப்பாரே. (13)

பாரப்பா வாலைரச மூட்டும்போது
பதிவான மணிவேக மென்றும்பேரு
நேரப்பா மனவேகம் மணிக்குமைந்தா
நேர்மையுடன் பஞ்சகண தீட்சையோது
காரப்பா கெவுனரசக் குளிகையாச்சு
கனகமணிக் குளிகையா தாரமாச்சு
சாரப்பா ஆதார சொரூபமைந்தா
சகலகலை சொரூபமணி யென்றும்பேரே. (14)

பேரான சொரூபமணி தன்னைமைந்தா
பேருலகிற் கோடியிலே யொருவன்கண்டு
நேரான கண்டமணி தான்தானென்று
நிசமான சற்குருவாற் கடாக்ஷம்பெற்றுக்
கூரான சத்திசிவ களையைப்பூட்டிக்
கூர்மையுள்ள வாலைரசச் சேனையோட்டி
மாரான பஞ்சகண தீட்சைவைத்தால்
மகத்தான சொரூபமணி சித்தியாச்சே. (15)

சித்திமுறை யறியாம லுலகத்தோர்கள்
தீனியின்மே லாசைகொண்டு திறமுங்கெட்டு
வித்தான சத்திசிவந் தனைமறந்து
வேதாந்த அமுதமதை மதியாமற்றான்
பத்தாசை விட்டவர்போற் பேசிக்கொண்டு
பலருசியின் மனமமுழுந்தும் பாவிமாரே
செத்தாலும் மோட்சமுண்டோ உங்களுக்குச்
சிவசத்தி வாலைபதந் தெளிந்துகொள்ளே. (16)

தெளிந்துகொண்டு பஞ்சகண தீட்சைதன்னிற்
சிவசிவா சதாகாலம் மனத்தைநாட்டி
நெளிந்துமனம் போகாம லுருவேசெய்தால்
நீடுழி காலம்வரை நிலைநின்றாடும்
குளிர்ந்தபஞ்சாட் சரச்சுருக்கங் குறியாய்நிற்கும்
குருநெறியைக் குருவருளாற் கடாட்சம்பெற்று
வழிந்தொழுகும் மதுரரச பானந்தன்னை
மதிகதிருஞ் கழிதிறக்க வகையாயூட் டே. (17)

ஊட்டிமிக வுண்டான சத்தைவாங்கி
ஓம்நமசி வாயமென்று உள்ளேகொள்ளு
வாட்டமென்ன அறுபதுக்குட் சித்தியாகும்
வரிசையுள்ள சொரூபமணி மங்காதையா
நாட்டமுள்ள கேசரியைத் தாமென்றெண்ணி
நாதாந்த சின்மயமாய் வாசியேறி
தாட்டிகமாய்ச் சக்கரத்தில் நின்றுகொண்டு
தடையறவே சுண்டிவிடு ஆடுந்தானே. (18)

ஆடாமற் சாருகிற வெளியைப்பார்த்து
அசாரமுடன் றீங்காரம் அழுத்தியூது
வாடாமல் மனம்நிறுத்தி யூதினாக்கால்
வாய்வேக லகிரியினால் நிலைநின்றாடும்
சூடான லகிரிதனைச் சூட்டிப்பாரு
சுழிதிறந்து அமுதமது அங்கேபாயும்
வீடான யில்லறத்திற் பாய்ந்துதானால்
வேகமென்ற மனவேகக் குளிகையாச்சே. (19)

ஆச்சப்பா குளிகைவலு வறியாமற்றான்
அறுசுவைமே லாசைகொண்டு அசந்துபோனார்
மூச்சப்பா தானசைந்து போகாமற்றான்
முத்தியுள்ள மனிதனுக்கு லகிரியூட்டிக்
காச்சப்பா மூலமென்ற நெருப்பினாலே
காய்ச்சினால் திரோதாயின் கசடுநீங்கும்
போச்சப்பா கசடதுதான் நீங்கிப்போனாற்
போமென்ற ஞானநெறி புனிதமாமே. (20)

ஆமப்பா புனிதமுட னிருந்துகொண்டு
ஆதார நிலமைதனை யங்கேபார்த்துக்
காமப்பால் கொண்டுமனக் கசடைப்போக்கிக்
கருவான கானற்பாற் களையைப்பூட்டி
வாமப்பா வென்றுபிர ணவத்தைநாட்டி
மனங்களியச் சத்திசிவ வாலைபூசை
தாமப்பா வென்றுமன துறுதிகொண்டால்
தங்கமென்ற அங்கமதிற் சோதிபாரே. (21)

சோதிபஞ்சாட் சரச்சுருக்க மூலமார்க்கம்
சொல்லவெண்ணா தோரெழுத்துமங்கேகண்டேன்
ஆதியென்ற ஆறெழுத்து மங்கேகண்டேன்
அங்கமாம் முப்பத்தி ரெண்டேஅங்கம்
சாதியென்ற அங்கமடா சத்திசத்தி
சத்திமய மானசிவ வாசியாச்சு
நீதியுடன் வாசிமலர் தானேசூட்டி
நேசமுடன் வாசமில்லா மலரைத்தள்ளே. (22)

தள்ளுவது யென்னவென்று யெண்ணவேண்டாம்
தன்னறிவுயில்லாத சமயத்தோரே
உள்ளுணர்வுயில்லாத உருப்பேதன்னை
உறுதியுள்ள வாசிநிலை அறியாமற்றான்
கள்ளுடனே அபினருத்தி மோகங்கொண்டு
கால்பதறி வாய்புலம்புங் கசடர்தம்மை
எள்ளளவு மனந்தனிலே நினைக்கவேண்டாம்
எள்ளுடனே மீனிறைச்சி சுண்ணந்தள்ளே. (23)

தள்ளடா சத்துருவாய் நின்றதெல்லாம்
தன்மனமே சாட்சியதாய்த் தள்ளுதள்ளு
அள்ளடா தள்ளுவது யேதென்றாக்கால்
அப்பனே அவமிருத்துத் அகன்றுபோகும்
செல்லடா அவமிருத்துத் தீர்ந்துதானால்
சிவசிவா சிவயோக தேகமாச்சு
உள்ளடா உள்ளுணர்வாய்த் தன்னைப்பார்த்து
உத்தமனே பரமதிலே வொடுங்கிநில்லே. (24)

நில்லாடா நிலையறிந்து குறிகண்ணாட்டி
நிலையான நாமத்தி னூடேகூட்டிச்
சொல்லடா ஓம்ஆம் உங்கென்றேதான்
சொன்னபின்பு ஆம்றீம் கிலியென்றேத்து
அல்லடா அஷ்டசித்து மானேனென்று
அஞ்செழுத்துந் துஞ்சாம லகாரம்ஓது.
நில்லடா யிந்த அஞ்சில் அந்தமூன்றும்
நின்றநிலை யெட்டதுதான் திட்டம்பாரே. (25)

திட்டமுடன் ஓம்றீம்அங் கிலிசவ்வென்று
தீர்க்கமுடன் பூரணமாய் புருவத்தேகி
இட்டமுடன் றானிருந்து உருநூற்றெட்டு
ஏகாந்த மர்யிருந்து செபித்தாயாகில்
அட்டாங்க யோகமது சித்தியாகும்
அன்புவைத்து அனுபூதி கடாட்சித்தாக்கால்
சட்டமுடன் நின்றதொரு பீடையெல்லாம்
தான்பயந்து தலைகவிழ்ந்து போகும்பாரே. (26)

பாரப்பா யிடகலையில் வங்கென்றூணு
பரிவான பிங்கலையிற் சிங்கென்றூணு
நேரப்பா கழிதனிலே மங்கென்றூணு
நிசமாக ஓம்றீம்அங் கிலிசவ்வென்று
சாரப்பா சிவயோகத் திருந்தாயாகிற்
சந்திரனுஞ் சூரியனு மொன்றாய்நிற்கும்
காரப்பா யிருகலையு மொன்றாய்நிற்கக்
கயிலாச வாசியென்ற யோகிமாச்சே. (27)

ஆச்சப்பா மூலமது ஆத்தாள்பீடம்
அடங்கிநின்ற வாயுவுநிர் மலமேயாச்சு
மூச்சப்பா அக்கினிநீர்க் குணமேயாகும்
முத்திகொண்ட அப்புசரா சரங்களாச்சு
நீச்சப்பா பிருதிவியாற் கெந்தமாச்சு
நிலையான ஆகாசம் சாட்சியாச்சு
காச்சப்பா அஞ்சையுமே ஒன்றாய்க்கூட்டக்
கருவான பஞ்சகண தீட்சையாச்சே. (28)

ஆச்சப்பா பிருதிவியி லப்புங்கூட்டி
அடங்கிநின்ற வச்சிரமாங் குகையில்வைத்து
மூச்சப்பா தானடங்கி யூதும்போது
முத்தியுள்ள அப்பும்உப்பும் உருகும்பாரு
காச்சப்பா அப்புஉப்பு உருகும்போது
கதிர்மதியும் ராகுடனே கலந்துகூடும்
பேச்சப்பா தானடங்கி யூதும்போது
பிலமான பஞ்சகர்த்தாள் குருவுமாச்சே. (29)

குருவான களங்கதனை யெடுத்துக்கொண்டு
கூர்மையுட னதுக்குநிகர் கெந்திசேர்த்துத்
திருவான கல்வத்திற் பொடித்துமைந்தா
திறமாகப் பொற்றலையின் சாற்றாலாட்டி
உருவான காரோட்டிற் பதனம்பண்ணி
உத்தமனே புடம்போட்டு யெடுத்துப்பாரு
கருவான செந்தூரங் காரமெத்தக்
கருவறிந்து செந்தூரங் கொண்டுபாரே. (30)

பாரப்பா செந்தூர மறிந்துகொண்டால்
பருதிமதி சுடர்மூன்றும் பதிவாய்க்காணும்
நேரப்பா கண்குளிரக் கண்டாயானால்
நின்னுருவம் பிர்மமடா நீதான்பாரு
சாரப்பா சகலமுமே பிர்மமாகத்
தன்னுணர்வாய்த் தானறிந்து தான்தானாகிச்
சேரப்பா அகண்டபூ ரணமேயென்று
சிவசிவா பரவெளியிற் சேருந்தானே. (31)

தானாகி நின்றதுவே பரசொரூபம்
சகலகலை யமுதரச மாவானந்தம்
வானாகி நின்றபதம் வெளிதானாச்சு
மந்திரபஞ் சாட்சரமும் வெளிதானாச்சு
கானாகி கண்காட்சி வெளிதானாச்சு
கற்பூர தீபவொளி வெளிதானாச்சு
கோனாகி குருபாதம் வெளிதானாச்சு
குருவான பரவெளியைக் குவியமுற்றே. (32)

கடைப்பிள்ளை பஞ்சாட்சரச்சுருக்கம் 32.
முற்றிற்று.

திருச்சி மேட்டுச்சிந்தாமணி, வைத்தியம் தி.க. சுப்பிரமணியபிள்ளை அவர்களிடமிருந்து வாங்கிய ஏட்டுப்பிரதியின்படி இந்த சாஸ்திரம் அச்சிடலானாது.

தாமரை
நூலகம்